# உலக அறிஞர்

# சிந்தனைக் களஞ்சியம்

ப. ராமஸ்வாமி

நாதன் பதிப்பகம்
1, இரண்டாவது முதன்மைச்சாலை
சி.ஐ.டி. நகர், சென்னை-600 035.

1634/05
3

## நூல் விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | உலக அறிஞர் சிந்தனைக் களஞ்சியம் |
| ஆசிரியரின் பெயர் | : | ப. ராமஸ்வாமி (தொகுப்பாளர்) |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | அறிஞர்களின் கருத்துத் தொகுப்பு |
| பதிப்பு | : | முதற்பதிப்பு : 2004 |
| நூலின் உரிமை | : | பதிப்பகத்தாருக்கு |
| நூலின் அளவு | : | கிரவுன் 1×8 |
| பயன்படுத்திய தாள் | : | 11.6 கிலோ வெள்ளைத்தாள் |
| பக்கங்கள் | : | 320 |
| அச்சுப்புள்ளிகள் | : | 11 புள்ளிகள் |
| ஒளி அச்சு | : | லேசர் லிங்க் சிஸ்டம், சென்னை - 17. |
| அச்சகத்தார் | : | பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை. |
| நூல் கட்டு | : | சாதா அட்டை |
| விலை | : | ரூ.100-00 |

ULAGA ARINGNAR CHINTHANAI KALANCHIYAM :
B. RAMASAMY : PRICE Rs. 100-00

PUBLISHER : NATHAN PATHIPPAGAM, CHENNAI - 35


595718
080
RAM

# பதிப்புரை

உலகம் புகழும் அறிஞர் பலருடைய கருத்துகளைத் தொகுத்து, இந்தக் கருவூலத்தை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இது எங்கள் புது முயற்சி. நாளடைவில் இதை மேலும் மேலும் விரிவாக்கி, இன்னும் சிறந்த முறையில் வெளியிட வேண்டுமென்பது எமது அவா.

இது சிந்தனைக் களஞ்சியம். இத்துடன் 'உலகப் பழமொழிகள்' என்ற பழமொழிக் களஞ்சியத்தையும் வெளியிட்டுள்ளோம். தமிழகத்து இளைஞர்களும், பெண்களும், மாணவர்களும், மாணவிகளும் இந்த இரண்டு அரிய நூல்களையும் இரண்டு கைகளிலும் வைத்துக்கொண்டு, போற்றிப் பயன் அடைவதே எமது நோக்கம்.

— ந. பழநியப்பன்

# பொருளடக்கம்


[illegible] — 9
[illegible] — 10
[illegible] — 10
[illegible] — 12
[illegible] — 16
[illegible] — 16
[illegible] — 18
[illegible] — 18
[illegible] — 19
[illegible] — 20
[illegible] — 21
[illegible] — 24
[illegible] — 25
[illegible] — 27
[illegible] — 29
[illegible] — 31
[illegible] — 32
[illegible] — 33
[illegible] — 37
[illegible] — 38
[illegible] — 39
[illegible] — 40
[illegible] — 41
[illegible] — 43
[illegible] — 46
[illegible] — 48
[illegible] — 49
[illegible] — 50
[illegible] — 50
[illegible] — 51
[illegible] — 52
[illegible] — 56
[illegible] — 57
[illegible] — 58
[illegible] — 61
[illegible] — 65
[illegible] — 66
அறிவாற்றல் — 67
அறிவுக் கூர்மை — 68
அறிவுடைமை — 69
அற்ப விஷயம் — 75
அற்புதங்கள் — 77
அன்பு — 78
அன்னை — 81
ஆகாயக் கோட்டைகள் — 82
ஆசை — 83
ஆசையின் தூண்டுதல் — 85
ஆடம்பரம் — 86
ஆதாயம் — 87
ஆராயாத செயல் — 88
ஆரோக்கியம் — 88
ஆலோசனை — 90
ஆழ்ந்த சிந்தனை — 92
ஆறுதல் — 92
ஆற்றல் — 93
ஆனால் — 95
ஆன்மா — 96
இசை — 97
இச்சகம் — 99
இடர் — 99
இடுக்கண் — 100
இதயம் — 101
இந்திரிய சுகர்ச்சி — 102
இயலாமை — 102
இயற்கை — 102
இரகசியம் — 103
இரக்கம் — 104
இரட்டுற மொழிதல் — 104
இராஜ்யம் — 105
இலக்கியம் — 105
இலட்சியங்கள் — 106
இல்லம் — 107
இழிதொழில் — 108
இழிந்த மனப்பான்மை — 108

இளக்காரம் ............ 108
இளமை ............ 109
இறுமாப்பு ............ 109
இறை நம்பிக்கையின்மை ............ 110
இறையருள் ............ 110
இறைவன் ............ 111
இன்பமூட்டுதல் ............ 113
இன்பம் ............ 113
இன்பம் துய்த்தல் ............ 114
இன்னலும் துன்பமும் ............ 115
இன்னாச் சொல் ............ 116
ஈகை ............ 116
உடல் ............ 117
உடற்பயிற்சி ............ 117
உடைகள் ............ 117
உணர்ச்சிகள் ............ 118
உணர்ச்சித் தூண்டுதல் ............ 120
உணர்ச்சியின்மை ............ 120
உணவு வகைகள் ............ 121
உண்ணல் ............ 122
உதவி ............ 122
உபதேசம் ............ 123
உயிர்த் தியாகிகள் ............ 123
உயில் ............ 124
உரிமை ............ 125
உருவகக் கதைகள் ............ 125
உரையாடல் ............ 126
உலகம் ............ 127
உலோபி ............ 128
உழைப்பு ............ 128
உள்ளத்தின் உரம் ............ 129
உள்ளுணர்வு ............ 130
உள்ளூக்கம் ............ 130
உறக்கம் ............ 131
உறுதி ............ 132
உற்சாகப்படுத்துதல் ............ 132
ஊதாரித்தனம் ............ 132
எங்கும் நிறைந்தவர் ............ 133
எதிர்காலம் ............ 133
எதிர்பார்த்தல் ............ 134
எதிர்ப்பு ............ 134
எதிலும் ஐயம் ............ 135
எல்லாம் அறிந்தவர் ............ 135
எல்லாம் வல்லவர் ............ 136
எழுத்தாளர் ............ 136
எழுத்து நடை ............ 136
எளிய வாழ்க்கை ............ 137
ஏகாந்தம் ............ 137
ஏமாற்றம் ............ 139
ஏளனம் செய்தல் ............ 139
ஒப்பிட்டுப் பார்த்தல் ............ 140
ஒப்புக்கொள்ளல் ............ 140
ஒழுக்கம் ............ 141
ஒழுக்க வரம்பின்மை ............ 141
ஒழுங்கு ............ 142
ஒளி ............ 142
ஓய்வு ............ 142
ஓய்வு பெறுதல் ............ 144
கடமை ............ 144
கடமையில் வழுவுதல் ............ 145
கடன் ............ 145
கடன் கொடுத்தல் ............ 146
கடன் வாங்குதல் ............ 147
கடிதங்கள் ............ 147
கடினம் ............ 148
கட்சிகள் ............ 148
கஷ்டங்கள் ............ 149
கட்டடக் கலை ............ 149
கட்டுப்பாடு ............ 150
கண்டனம் ............ 150
கண்டுபிடிப்புகள் ............ 151
கண்ணீர் ............ 151
கபடம் ............ 151
கருத்துகள் ............ 152
கருத்து[illegible]ன் ஆற்றல் ............ 153
கலைகள் ............ 154
கல்லறை ............ 155
கல்வி ............ 155

கல்விச் செருக்கு — 157
கவலை — 157
கவனம் — 157
கவிதை — 157
களியாட்டம் — 158
கற்பனை — 158
கற்பித்தல் — 158
கனவுகள் — 159
காதல் — 159
கிளர்ச்சி — 160
கீழ்ப்படிதல் — 160
குடியரசு — 160
குடும்பம் — 161
குணம் — 161
குழந்தைகள் — 162
குறித்த நேரம் — 162
குறை கூறுதல் — 162
குறைபாடுகள் — 163
குற்றமுள்ள நெஞ்சு — 163
குற்றம் — 164
கேலி — 164
கேவலம் — 165
கொடுங்கோன்மை — 166
கொடுமை — 167
கொலை — 167
கொள்கை — 168
கொள்கை வெறி — 168
கோபம் — 168
கோழைத்தனம் — 169
கௌரவம் — 170
சகிப்பின்மை — 170
சகிப்புத்தன்மை — 171
சகோதரத்துவம் — 171
சட்டம் — 171
சந்தேகம் — 174
சமத்துவம் — 174
சமய போதனைகள் — 175
சமயமும் நம்பிக்கையும் — 175
சமுதாயம் — 177
சரித்திரம் — 177
ஜனக் கூட்டங்கள் — 178
ஜனநாயகம் — 179
சாட்சியம் — 179
சார்ந்து வாழ்தல் — 180
சிக்கனம் — 180
சித்திரக் கலை — 181
சிந்தனை — 181
சிந்தித்து ஆராய்தல் — 182
சிரத்தை — 183
சிரிப்பின்றி வினைகருதல் — 183
சிரிப்பு — 183
சிறுபான்மையோர் — 184
சீர்கேடு — 184
சீர்திருத்தம் — 184
சுதந்தரம் — 185
சுருங்கச் சொல்லல் — 187
சுவர்க்கம் — 188
சுறுசுறுப்பு — 188
சூதாட்டம் — 189
சூழ்நிலைகள் — 190
செயல் — 190
செய்ததற்கு வருந்துதல் — 191
செய்திகள் — 191
செய்முறை — 192
செருக்கு — 192
செலவுகள் — 194
செல்வம் — 194
செல்வாக்கு — 197
செழுமை — 198
சொற்கள் — 198
சொற்பொழிவுக் கலை — 199
சோகம் — 200
சோம்பல் — 202
சோஷலிஸம் — 202
தகுதி — 203
தண்டனை — 203
தத்துவங்கள் — 204
தத்துவஞானம் — 204
தருக்க நூல் — 205
தவறுகள் — 206

தற்கொலை — 206
தற்புகழ்ச்சி — 207
தன்னம்பிக்கை — 207
தனிப்பெருமை — 208
தன்மானம் — 208
தன்னடக்கம் — 208
தன்னலமின்மை — 209
தன்னலம் — 209
தாமதம் — 209
தாராளம் — 210
தானே முன்னேறுதல் — 211
திடநம்பிக்கை — 212
தியாகம் — 212
தியானம் — 213
திருந்தி முன்னேறுதல் — 214
திருப்தி — 215
திருமணம் — 216
திறமை — 218
தீங்குகள் — 218
நகரங்கள் — 218
நடத்தை — 220
நடனம் — 220
நடுநிலைமை — 221
நடைமுறைக் கொள்கை — 222
நஷ்ட ஈடு — 223
நஷ்டங்கள் — 224
நட்பு — 224
நம்பாமை — 227
நம்பிக்கை — 227
நம்பிக்கையிழத்தல் — 229
நரகம் — 229
நவீனங்கள் — 230
நன்மை செய்தல் — 231
நன்றி மறத்தல் — 232
நாகரிகம் — 233
நாகரிக நடை — 233
நாடகக் கொட்டகை — 234
நாட்டுப்பற்று — 235
நாணயம் — 236
நாத்திகம் — 236
நிகழ்காலம் — 237
நிதானம் — 237
நிறைவுடைமை — 238
நினைவு — 238
நினைவுச் சின்னங்கள் — 239
நீதி — 239
நீதிக் கதைகள் — 242
நீதி வாக்கியங்கள் — 242
நூலாசிரியர் — 244
நூல் நிலையங்கள் — 244
நெருக்கமான பழக்கம் — 245
நேரம் — 245
நேரம் தவறாமை — 246
நேர்மை — 247
நோக்கங்கள் — 247
நோய் — 248
பகுத்தறிவு — 248
பகைவர்கள் — 249
பகை வன்மம் — 250
பக்தி — 250
படித்தல் — 251
பணம் — 252
பணியாளர்கள் — 253
பத்திரிகைகள் — 254
பத்திரிகைத் தொழில் — 254
பயிற்சி — 255
பரம்பரை — 256
பரிசுகள் — 256
பரணி பாடுதல் — 257
பரிதானம் — 257
பரோபகாரம் — 258
பல தொழில் — 258
பலாத்காரம் — 259
பழக்கம் — 260
பழமை — 262
பழமொழிகள் — 263
பழிக்குப் பழி — 264
பாராட்டுதல் — 264
பாவம் — 265
பாவனை — 266

| | |
|---|---|
| பிடிவாதம் | 266 |
| பிணையாதல் | 267 |
| பிராயச்சித்தம் | 268 |
| பிரபுக்கள் | 268 |
| பிரயாணம் | 269 |
| பிரார்த்தனை | 269 |
| பிரிவு | 271 |
| புகழ் | 271 |
| புதியன படைத்தல் | 273 |
| புதுமை | 273 |
| புத்தகங்கள் | 274 |
| புன்மையான உணர்ச்சிகள் | 276 |
| புன்னகை | 277 |
| பூமி | 278 |
| பெண் | 278 |
| பெண் வேட்டல் | 281 |
| பெருந்தீனி | 282 |
| பெருமை | 282 |
| பெற்றோர் | 283 |
| பேச்சு | 284 |
| பேராவா | 284 |
| பேரறிவாளர் | 285 |
| பேனா | 286 |
| பொது அறிவு | 286 |
| பொய்மை | 287 |
| பொழுதுபோக்கு | 289 |
| பொறாமை | 290 |
| பொறுமை | 291 |
| பொறுமையின்மை | 292 |
| பொன் | 292 |
| போர் வீரர் | 292 |
| மகிழ்ச்சி | 293 |
| மக்களிடம் செல்வாக்கு | 294 |
| மக்கள் | 294 |
| மடமை | 295 |
| மதிப்பீடு | 295 |
| மரணம் | 296 |
| மரியாதைகள் | 297 |
| மருந்து | 298 |
| மன உறுதியின்மை | 299 |
| மன எழுச்சி | 300 |
| மனித சமூகம் | 300 |
| மனச்சாட்சி | 300 |
| மனிதனும் மனிதர்களும் | 302 |
| மனைவி | 303 |
| மன்னிப்பு | 303 |
| முயற்சி | 303 |
| முணங்குதல் | 303 |
| முன்யோசனை | 304 |
| மூட நம்பிக்கை | 304 |
| மெய்யறிவு | 305 |
| மை | 306 |
| மொழி | 306 |
| மௌனம் | 307 |
| யுத்தம் | 307 |
| வக்கீல்கள் | 309 |
| வம்பளப்பு | 310 |
| வழக்கம் | 310 |
| வள்ளன்மை | 310 |
| வறுமை | 311 |
| வாணிபம் | 311 |
| வாழ்க்கை | 312 |
| வாழ்க்கை வரலாறுகள் | 313 |
| விஞ்ஞானம் | 313 |
| விதி | 314 |
| விவகாரம் | 314 |
| விவசாயம் | 314 |
| விளம்பரம் | 31 |
| வினைத் திட்பம் | 31 |
| வீரம் | 31 |
| வெறியாட்டயர்தல் | 31 |
| வெற்றி | 31 |
| வேதங்கள் | 31 |
| வேலை | 31 |
| வைகறை | 31 |

1 மார் 20
சென்னை-600 008

# உலக அறிஞர் சிந்தனைக் களஞ்சியம்

## அக்கறை

☆ அக்கறை இருந்தால். அது எல்லா பொழுதுகளிலும் போகும்; எல்லா முறைகளிலும் நடிக்கும்; சுயநலமோ இல்லாதது போலவும் நடிக்கும்.
*— ராச்ஃபோகால்டு*

☆ ஆர்வம் கொள்வதில் ஒரு தந்திரம் இல்லை. ஆனால், பாதுகாப்பு உண்டு.
*— பேகன்*

☆ நியாயம் தனக்கு விரோதமாயிருந்தாலும் ஒரு மனிதனைத் தன் நலத்திற்கு எதிராக ஆராய்ந்து பார்க்கும்படி செய்வது எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது?
*— டிரஸ்லர்*

☆ நல்ல குணமோ, கௌரவமோ இல்லாதவர்களைப் புண்படுத்துவது எளிதாகத் தோன்றுகிறது. அவர்களுடைய நலத்திற்கு எதிராகக் கை வைத்தால் போதும்
*— ஜூனியஸ்*

☆ அக்கறை ஏற்பட்டுவிட்டால்தான் நற்குணங்களும் தீக்குணங்களும் - எல்லாம் இயங்கத் தொடங்குகின்றன.
*— ராச்ஃபோகால்டு*

☆ சுயநலம் சில ஜனங்களைக் குருடாக்குகின்றது; மற்றவர்களை அதிகச் சூட்சுமமாகப் பார்க்கச் செய்கின்றது.
*— பீமாண்ட்*

☆ அக்கறையும் மனச்சான்றும் மாறுபட்டால், அவைகளைச் சமரசப்படுத்த எந்தத் தந்திரம் செய்தாலும் சிலருக்குத் திருப்தியாயிருக்கும்.
*✍ ஹோம்*

## அசீரணம்

☆ குற்றமுள்ள வயிற்றினால் பசிமந்தம் என்ற வருத்தம் தோன்றுகின்றது.
*✍ ஏ. கெர்*

☆ எத்தனை பெரிய குடும்பச் சண்டைகள், விவாகச் சண்டைகள், உயில்களை மாற்றி எழுதுதல் முதலியவைகளைச் சீரண மாத்திரை கொடுத்தால் நிறுத்தியிருக்கலாம்! வயிற்று மந்தத்தை நீக்கி, வெறியூட்டும் மது வகைகளையும் சமூகத்திலிருந்து ஒழித்துவிட்டால், குற்றங்கள் இல்லாமற்போகும் அல்லது மிகவும் குறைந்து போகும் .
*✍ சார்லஸ் கிங்ஸ்லே*

☆ மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.
*✍ திருவள்ளுவர்*

## அச்சம்

☆ மனச்சான்று குற்றத்திற்காகச் செலுத்தும் அபராதமே அச்சம்.
*✍ புளுடார்க்*

☆ தீமையிலிருந்து நம்மைக் காக்கவே நம்முன் அச்சம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அது அறிவுக்கு உதவியா யிருக்க வேண்டுமேயன்றி, அதை அடக்கிவிடக் கூடாது. கற்பனையான பயங்கரங்களைத் தோற்றுவிக்கவோ, வாழ்க்கைப் பாதையில் எண்ணற்ற கஷ்டங்களை உண்டாக் கவோ அதை அனுமதிக்கக்கூடாது.
*✍ ஜான்ஸன்*

☆ நாம் வெறுக்கின்ற விஷயங்களைக் கண்டு அஞ்சுவதாகப் பாவனை செய்கிறோம். உண்மையில் நாம் அஞ்சுபவைகளை வெறுப்பதற்காகவும் பாவனை செய்கிறோம். ✍ *கோல்டன்*

☆ நன்றியைக்காட்டிலும் கடமையைச் செய்ய அச்சமே தூண்டுகின்றது. ஒழுக்கத்தை விரும்பியோ, எல்லாப் பொருள்களையும் அளித்துள்ள ஈசனுக்கு நன்றி செலுத்தவோ நேர்மையாக நடப்பவன் ஒருவன் என்றால், தண்டனைக்கு அஞ்சி நேர்மையாக நடப்பவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். ✍ *கோல்டுஸ்மித்*

☆ நாம் அடிக்கடி அஞ்சுவதையே சில சமயங்களில் வெறுக்கிறோம். ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ குற்றத்தையும், இருள் நிறைந்த செயல்களையும் தொடர்ந்து அச்சம் வரும்; நேர்மையான உள்ளத்திற்கு அச்சமே தெரியாது. ✍ *ஹாவர்டு*

☆ அச்சமே, வருவதை அறிவுறுத்தும் தாய். ✍ *டெய்லர்*

☆ உண்மை வீரத்திற்கு மரணத்தினால் வரும் வேதனையைவிட, கோழைத்தனத்திற்கு அச்சத்தால் அதிக வேதனை ஏற்படுகின்றது. ✍ *ஸர். பி. ஸிட்னி*

☆ ஆதாரமில்லாமல் தோன்றும் பயங்கரங்களையெல்லாம் விரட்டிவிட்டால், மனித சமூகம் அதிக இன்பமடையும். ✍ *ஜான்ஸன்*

☆ நல்ல மனிதர்களுக்கு அச்சங்கள் குறைவு. ✍ *போவீ*

☆ தன்னை (எதிரி) வென்றுவிடுவானோ என்று அஞ்சுபவன் நிச்சயமாய்த் தோல்வியுறுவான். ✍ *நெப்போலியன்*

☆ பயத்தை வெளிக்காட்டினால் அபாயத்தை எதிர்கொண்டு அழைப்பதாகும். ✍ *செஸ்டர்ஃபீல்டு*

☆ கவலையோ, பயமோ இல்லாமல் வாழ்க்கையை நடத்துவதில் மிகுந்த அழகு இருக்கின்றது. நம்முடைய அச்சங்களில் பாதி ஆதாரமற்றவை; மறுபாதி நம்பத்தகாதவை. ✍ போவீ

☆ ஒருவன் எந்த மனிதனுக்கு அஞ்சுகிறானோ அவனை நேசிப்பதில்லை. ✍ அரிஸ்டாட்டல்

☆ ஒழுக்கத்தில், எது அச்சத்தில் தொடங்குகின்றதோ, அது அயோக்கியதையில் முடிகின்றது; மதத்தில், அச்சத்தில் தொடங்குவது வழக்கமாக வெறியிலே போய் முடிகின்றது. அச்சத்தை ஒரு தத்துவமாகவோ, தூண்டுதலாகவோ கொண்டால், அதுவே எல்லாத் தீமைகளுக்கும் ஆரம்பமாகும். ✍ திருமதி. ஜேம்ஸன்

☆ ஒருவன் கொண்டுள்ள நன்னம்பிக்கை காரணமாக ஏற்படும் அச்சம் நேர்மையானது; ஐயத்தினாலும் அவநம்பிக்கையினாலும் ஏற்படும் அச்சம் தீமையானது. முதலாவது அச்சம் கடவுளை நம்பி நன்மையைப் பெறலாம் என்ற நம்பிக்கையளிப்பது. பிந்திய அச்சம் கடவுளிடம் நம்பிக்கையில்லாத ஏக்கத்தை உண்டாக்குவது; முதல் கூட்டத்தார் இறைவனை இழந்துவிடக்கூடாதே என்று அஞ்சுகின்றனர். இரண்டாவது கூட்டத்தார் இறைவனைக் கண்டுகொள்ளக்கூடாதே என்று அஞ்சுகின்றனர். ✍ பாஸ்கல்

☆ தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். ✍ திருவள்ளுவர்

☆ அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். ✍ திருவள்ளுவர்

## அடக்கமும் பணிவும்

☆ அடக்கம் என்ற பொன்னில் பதித்த அறிவு இருமடங்கு ஒளியுடன் பிரகாசிக்கும். திறமையோடு அடக்கத்தையும்

பெற்றுள்ள மனிதன் ஓர் இராஜ்யத்திற்கு ஈடாகவுள்ள மணியாகும். ✍ *பென்*

☆ பிறரை இழிவாகப் பார்த்தல் எளிது; நம்மையே இழிவாகப் பார்த்துக்கொள்வதுதான் கஷ்டம். ✍ *பீட்டர்பரோ*

☆ செருக்கு, தேவர்களை அசுரர்களாக மாற்றுவது; அடக்கம் மனிதர்களைத் தேவர்களாக்குவது. ✍ *அகஸ்டின்*

☆ அறிவாளியாயிரு; உயரத்தில் பறந்து கீழே விழாதே. உயர்வதற்காகத் தாழ்மையுடன் இரு. ✍ *மான்ஸ்பீல்டர்*

☆ தாழ்ந்து கிடக்கும் அடக்கம் என்ற வேரிலிருந்துதான் தெய்விகக் குணங்கள் கிளைத்து வளர்கின்றன. ✍ *மூர்*

☆ சுவர்க்கத்தின் வாயில்கள், அரசர்களுடைய அரண்மனை வாயில்களைப் போல உயரமாக அமைந்திருக்கவில்லை; அங்கே நுழைபவர்கள் முழங்கால் பணிந்து சார்ந்து செல்ல வேண்டும். ✍ *ஜே. வெப்ஸ்டர்*

☆ அடக்கம் என்பது தன்னைத்தானே சரியாக மதிப்பிட்டுக் கொள்ளலாகும். ✍ *ஸ்பார்ஜியன்*

☆ எல்லோரும் பணிவைப்பற்றி உபதேசம் செய்கின்றனர். எவரும் அதன்படி நடப்பதில்லை. ஆனால், செவியால் மட்டும் கேட்டுத் திருப்தியடைகின்றனர். எசமானன் அது தன் வேலைக்காரனுக்கு ஏற்றது என்று எண்ணுகிறான். ஜனங்கள் அது பாதிரிமார்களுக்கு ஏற்றது என்று எண்ணுகின்றனர். பாதிரிமார்கள் அது ஜனங்களுக்கு ஏற்றது என்று எண்ணு கின்றனர். ✍ *செல்டென்*

☆ இறைவனை அடைய ஒரே பாதைதான் உண்டு. அதுதான் பணிவு. மற்ற பாதைகள் வேறிடங்களுக்குக் கொண்டுபோய் விடும். ✍ *பாய்லியோ*

☆ உன்னைத் தாழ்த்திப் பேசும்போது, நீ அடக்கமாயிருத்தல் பெரிய காரியமன்று; உன்னைப் புகழ்ந்துரைக்கும் பொழுது அடக்கமாயிருத்தல் அரிய பெரிய வெற்றியாகும்.

*✍ அர்ச். பெர்னார்டு*

☆ கிறிஸ்தவன் முதிர்ந்து வரும் கதிரைப் போன்றவன்; அவன் முதிர முதிரத் தன் தலையை அதிகமாகத் தாழ்த்திக் கொள்வான். *✍ கத்ரீ*

☆ நீ இறைவனுடைய அருளையும், மனிதனுடைய அன்பையும், அமைதியையும் பெற வேண்டுமானால், உன் கண்முன்பே உன்னைத் தாழ்த்திக்கொள். உன் குற்றங்களுக்காக உன்னை மன்னித்துக்கொள்வதைக் குறைத்துப் பிறரை அதிகமாக மன்னித்து வரவேண்டும். *✍ லெய்ட்டன்*

☆ உண்மையான பெரிய மனிதனுக்கு முதல் அடையாளம் பணிவு என்று நான் நம்புகிறேன். *✍ ரஸ்கின்*

☆ அடக்கம், இருளைப்போல் தெய்விக ஒளிகளைக் காண்பிக்கின்றது. *✍ தோரோ*

☆ சமயத்தில் முதல் விஷயம் என்ன என்று நீங்கள் என்னிடம் கேட்டால், முதலாவது, இரண்டாவது, மூன்றாவது ஆகிய எல்லா விஷயங்களுமே அடக்கம் ஒன்றுதான் என்று நான் கூறுவேன். *✍ அகஸ்டின்*

☆ கஷ்டங்கள், நஷ்டங்கள் அடைந்த பின்பு மனிதர் அதிக அடக்கத்தையும் அறிவையும் பெறுகின்றனர். *✍ ஃபிராங்க்லின்*

☆ ஆண்டவனுக்கு உகந்தவர்கள் ஏழைகளைப்போன்ற அடக்கமுள்ள செல்வர்களும், செல்வர்களைப் போன்ற பெருந்தன்மையுள்ள ஏழைகளுமே ஆவர். *✍ ஸா அதி*

☆ அடக்கமில்லாமல் நற்பண்புகளைச் சேகரிப்பதில் பயனில்லை அடக்கமுடையவர்களின் இதயங்களில் தங்கியிருப்பதிலேயே ஆண்டவனுக்கு மகிழ்ச்சி. *✍ எரர்ஸ்மஸ்*

☆ அடக்கமும் அன்பும் உண்மையான சமயத்தின் சாரம். அடக்கமுள்ளவர் போற்றுகின்றனர். அன்புள்ளவர் நித்தியமான அன்புடன் கலந்துகொள்கின்றனர். ✍ லவோட்ஸ்

☆ நாம் இல்லாமல் உண்மையில் இந்த உலகம் இயங்க முடியும். ஆனால், நாம் அப்படிக் கருதவேண்டும். ✍ வாங்ஃபெலோ

☆ சைத்தான் ஒருவரை அண்டாமலிருப்பதற்கு அடக்கத்தைப் போல வேறு எதுவுமில்லை. ✍ ஜோனாதன் எட்வர்ட்ஸ்

☆ அடக்கமுடையவர்களுக்கு ஒரு பொழுதும் கோபம் வராது என்பதில்லை; அப்படியானால் அவர்கள் உணர்ச்சியற்றவர்கள் என்றாகிவிடும். ஆனால், அவர்கள் கோபம் வரும்பொழுது அதை அடக்கிக்கொள்வார்கள். எப்பொழுது கோபிப்பது உசிதமோ அப்பொழுதுதான் கோபிப்பார்கள். பழிக்குப் பழி வாங்குதல், எரிச்சல், புலனுணர்ச்சிகளில் திளைத்தல் ஆகியவை அடக்கத்தோடு சேர்ந்தவை அல்ல. தற்பாது காப்பும், அமைதியாகவும் நிதானமாகவும் உரிமையைப் பாதுகாப்பதும் அடக்கத்தில் அடங்கும். ✍ தியோபிலாக்ட்

☆ அடக்கம் அமரருள் உய்க்கும். ✍ திருவள்ளுவர்

☆ எல்லார்க்கும் நன்றாம் பணிதல். ✍ திருவள்ளுவர்

☆ காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு. ✍ திருவள்ளுவர்

☆ கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக. ✍ திருவள்ளுவர்

☆ தன்னைத்தன் நெஞ்சம் கரியாகத் தான்அடங்கின்
பின்னைத்தான் எய்தா நலன்இல்லை. ✍ அறநெறிச்சாரம்

☆ அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல். ✍ வெற்றிவேற்கை

☆ முழுவதூஉம் கற்றனம் என்று களியற்க. ✍ நீதிநெறி விளக்கம்

★ சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர் ஆன்றமைந்த முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே. ✍ நீதி வெண்பா

## அடிக்கடி மாறுதல்

★ உண்மையான குற்றங்கள் என்று கருத முடியாதவைகளில், அடிக்கடி மாறும் இயல்பைப் போல், ஒரு மனிதனை அருவருக்கத்தக்கவனாயும், உலகோர் அற்பனாயும் கருதும் படி செய்வது வேறு எதுவுமில்லை. முக்கியமாகச் சமய மாறுதலோ கட்சி மாறுதலோ இத்தகையது. இந்த இரண்டு விஷயங்களிலும் ஒரு மனிதன் தான் மாறுவது கடமை என்று உணர்ந்த போதிலும், அவன் விட்டுப் பிரியும் பழைய நண்பர்கள் அவனை வெறுப்பார்கள். அவன் போய்ச் சேரும் புதிய நண்பர்களும் அவனை ஆர்வத்துடன் வரவேற்ப தில்லை. ✍ அடிஸன்

☆ கடிகாரங்கள் நாம் திருப்பிவைக்கிற நிலையில் முறையாக ஓடிக்கொண்டிருக்கும்; ஆனால், மனிதன், முறையற்ற மனிதன், ஒரு போதும் நிலையாக நிற்பதில்லை; ஒருபோதும் உறுதி கொள்வதில்லை. ✍ ஒட்வே

☆ மனிதன் மட்டும் நிலையாக நிற்பானானால், அவன் பூரண ஒழுங்குள்ளவனாவான்; அவ்வாறு நிற்காததால், அந்த ஒரு தவறு அவனிடம் பல குறைகளைச் சேர்த்துவிடுகின்றது; அவனைப் பல பாவங்களுக்கு உள்ளாக்குகின்றது.

✍ ஷேக்ஸ்பியர்

☆ வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்.

✍ திருவள்ளுவர்

## அடிமைத்தனம்

☆ மனிதனை எது அடிமையாக்குகின்றதோ அது அவன் தகுதியில் பாதியை அழித்துவிடுகின்றது. ✍ போப்

☆ சுதந்தரமாயிருந்து பின் ஒழுங்கீனமானவர்களே அடிமைகளில் கடையானவர்களாய் இருக்கிறார்கள். — கார்லிக்

☆ அடிமைகளை வைத்துக்கொள்ளல் முற்றிலும் அநீதியான முறையாகும். — பிளேட்டோ

☆ இயற்கையான சுதந்தரம் மனிதசமூகம் அனைத்தையும் படைத்த திரு அருளாளர் அளித்த பரிசாகும். — அலெக்சாண்டர் ஹாமில்டன்

☆ அடிமை முறை அக்கிரமமும் கொள்ளையுமாகும். — [illegible]

☆ தன் மனத்தைச் சுதந்தரமாக வைத்துக்கொள்பவன் எவனும் அடிமையில்லை. — [illegible]

☆ ஆங்கிலேயர் ஒருபோதும் அடிமைகளாய் இருக்க மாட்டார்கள்; அரசாங்கமும், பொது மக்கள் அபிப்பிராயமும் அனுமதிக்கும் எதையும் செய்வதற்கு அவர்களுக்குச் சுதந்தரம் இருக்கின்றது. — பெர்னார்டு ஷா

☆ மனிதன் தான் அடிமையாகும் தினத்திலேயே தன் ஒழுக்கத்தில் பாதியை இழந்துவிடுவான் என்று ஹோமர் கூறியுள்ளார். மனிதன் அடிமைகளை வைத்துக்கொள்ளத் தொடங்கினால், ஒழுக்கத்தில் பாதிக்கு [illegible] இழந்துவிடுவான் என்பதையும் அவர் சேர்த்துச் சொல்லியிருக்கலாம். — ஜெபர்ஸன்

☆ அடிமை முறை மாபெரும் ஒழுக்கக்கேடு. அரசியல் சாபத்தீடு என்று நான் இளமையிலிருந்தே கருதி வந்திருக்கிறேன். அது அநீதியானது; மனித சமூகத்தின் இயற்கையான சமத்துவத்திற்கு விரோதமானது; அது அதிக வல்லமையை மட்டும் ஆதாரமாகக் கொண்டது என்று நான் கருதுகிறேன்; மெலியாரை வலியார் வென்று நிரந்தரமாக ஆண்டு அடக்குவதாகும். - (ஆண்டான்களும் அடிமைகளும்) வெவ்வேறு இனத்தவர்கள் என்று போலிக்காரணம் காட்டுவதையும் நான் கண்டித்திருக்கிறேன். கறுப்பு இனத்தார் (நீக்ரோக்கள்)

பலவீனமாக இருந்தால் அவர்களை அடிமைப்படுத்திக் கொடுமை செய்யக்கூடாது என்பதற்கே அது ஏற்ற காரணம் என்றும் நான் சொல்லியிருக்கிறேன். ✍ *டேனியல் வெப்ஸ்டர்*

## அட்டவணை

☆ நல்ல புத்தகத்திற்கு அகர வரிசையில் பூரணமான அட்டவணை இல்லாவிட்டால், அதன் பயனில் பாதி போய் விடுவதாக நான் கருதுகிறேன், தேவைப்படும் பொழுது அந்நூலில் அமைந்துள்ள அரிய கருத்துகளையோ உண்மைகளையோ எடுத்துக்காட்ட அட்டவணையில்லாமல் முடியாது.

✍ *ஹொரேஸ் பின்னி*

☆ அட்டவணையில்லாத நூல், ஊசியில்லாத திசைகாட்டும் கருவி போன்றது; அதனால் திகைப்பு அதிகமாகுமேயன்றி திசை தெளிவாகத் தெரியாது.

☆ அட்டவணை அவசியமான உதவி; அது இல்லாவிட்டால், ஒரு பெரிய ஆசிரியரின் நூல் உள்ளே நுழைய முடியாத காடாகவே இருக்கும். ✍ *ஃபுல்லர்*

## அணிகள்

☆ அணிமணிகள் எல்லாம் அற்பத்தனத்தின் அறிகுறிகளாம்.

✍ *லவேட்டர்*

☆ கன்னிமாடப் பெண்களுக்கு அணியாவது ஒழுக்கமே தவிர உடையன்று. ✍ *ஜஸ்டின்*

☆ நாம் அனைவரும் ஆதியில் வனத்திலிருந்து வந்தவர்கள் பச்சை குத்திக்கொள்ளல், போருக்காக உடலில் வர்ணம் பூசிச்

கொள்ளல் ஆகியவைகளிலுள்ள பழைய ஆசையை நாம் அழிப்பது கஷ்டம்; நம் பைகளில் பணம் வந்து சேர்ந்ததும் அது எப்படி நகைகளாக மாறி, நம்மீது தொங்கத் தொடங்கு கின்றது; நகைகளால் நம் நடத்தைகள் செம்மைப்படுவதில்லை.

✍ *இ.பி. விப்பிள்*

☆ கூடுதலாக ஆடைகள் அணிதல், செலவு மிகுந்த ஒரு தவறு. அந்த ஆடைகளைக் குறைத்துக் கத்தரித்தால், வெட்டிய துண்டுகள், உடையில்லாமல் தவிப்பவர்களுக்கெல்லாம் உடையாகிவிடும்.

✍ *பென்*

☆ வெளிப்பகட்டில் பயனில்லை; அறிவாளிகள் உண்மையான விஷயங்களைக் கொண்டு வாழ்க்கையை வகுத்துக்கொள்வர்.

✍ *பென்*

## அதிகாரம்

☆ மனிதன், ஆணவமுள்ள மனிதன்! சொற்ப அதிகாரத்தை அணிந்துகொண்டு, அவன் இறைவனின் முன்னிலையில், கற்பனைக்கு அடங்காத தந்திரங்களையெல்லாம் செய்கிறான். அதைக் கண்டு தேவர்களும் கண்ணீர் வடிக்கின்றனர்.

✍ *ஷேக்ஸ்பியர்*

☆ அதிகாரத்தில் நிலையாக அமர்ந்துள்ள ஒருவன், முன்னேற்றத்தைவிட அதை நிலைநிறுத்திக்கொள்வதே தலைசிறந்த இராஜதந்திரம் என்று தெரிந்துகொள்கிறான்.

✍ *லோவெல்*

☆ அதிகாரத்தை அடிக்கடி பயன்படுத்துவதும், ஆராயாமல் உபயோகிப்பதும் அதிகாரத்திற்கே குழி தோண்டுவதாகும். இடைவிடாமல் இடி இடித்து வந்தால், ஏதோ ஓர் ஆலையின் ஓசையைப்போல், அதிலே பயம் தெளிந்துவிடும்.

☆ அரசன் ஓர் அதிகாரத்தைப் படைத்தால், அதை விலை கொடுத்து வாங்க இறைவன் உடனே ஒரு மூடனைப் படைக்கிறான். ✍ கோல்பெர்ட்

☆ சுதந்தரமான நம் ஜனங்களோ இந்த அரசாங்கமோ எப்பொழுதாவது ஒழுக்கத்தில் நிலைகுலைந்தால், அதற்குக் காரணம், பதவிக்காக இடைவிடாமல் நடக்கும் போட்டியும் போராட்டமுமேயாகும். பதவி என்பது வேலை செய்யாமலே வாழ்க்கையை நடத்துவதாகும். ✍ ஆபிரகாம் லிங்கன்

☆ உயர்ந்த உத்தியோகம் ஒரு கோபுரம் போன்றது; இரண்டு வகையான ஜந்துக்களே அதன் உச்சியை அடைய முடியும். அவை பாம்புகளும் கழுகுகளுமேயாம். ✍ டி. அலெம்பர்ட்

☆ புனிதமற்ற மனிதர்கள் அதிகாரம் செலுத்தும்பொழுது கௌரவமான பதவி தனி உடைமையாகிவிடுகின்றது. ✍ ஷேக்ஸ்பியர்

☆ முறைமைக்கு மூப்பு இளமையில். ✍ பழமொழி

☆ உடைப்பெரும் செல்வத்து உயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்த னாகி - நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல். ✍ பழமொழி

## அதிருப்தி

☆ தன்னம்பிக்கையின் குறைவே அதிருப்தி; அது நெஞ்சுறுதியின் குறைபாடு. ✍ எமர்ஸன்

☆ நம் நிலை நமக்கு ஒருபோதும் திருப்தியளிப்பதில்லை; நிகழ்காலம் எப்பொழுதும் ஆகக் கழிவானதாகத் தோன்றும். ✍ ஃபான்டெயின்

☆ இறைவன் ஒவ்வொருவருக்கும் தேவையானதை அளித்த போதிலும், நாம் பின்னும் குறையிரந்து நின்றுகொண்டிருப் போம். ✍ ஃபான்டெயின்

☆ அதிருப்திகளுக்கெல்லாம் வேர், சுயநலமே. ✍ கிளார்க்

☆ நம்முடைய அதிருப்திக்குச் சிறந்த மருந்து நமக்குக் கிடைத்துள்ள பேறுகளை எண்ணிப்பார்த்தல். ✍ குவிவர்

☆ நம்மிடம் இல்லாதவை மற்றவர்களிடம் இருந்தால், அவை களுக்காக அவர்களை நாம் நேசிக்கிறோம். நாம் நாமாக இருக்க மட்டும் விரும்புவதில்லை. ✍ ஸ்டாடர்டு

☆ மற்றவர்களுடைய மகிழ்ச்சியைப்பற்றி மக்கள் கற்பனையாக எண்ணமிடுவதே அவர்களுடைய நிலைமையில் அதிருப்தி உண்டாகக் காரணம். ✍ தாம்ஸன்

☆ நல்ல மனிதனும் அறிவாளியும் சில சமயங்களில் உலகத்தின் மேல் கோபம் கொள்ளக்கூடும்; உலகத்திற்காக இரங்கவும் கூடும். ஆனால், தன் கடமையை நிறைவேற்றும், எந்த மனிதனும் உலகத்தின்மீது அதிருப்தி கொள்ள மாட்டான். ✍ ஸ்தே

## அதிர்ஷ்டம்

☆ அதிர்ஷ்டங்களை உண்டாக்கிக்கொள்வது நாம். ஆனால், அதை விதி என்று சொல்லுகிறோம். ✍ ஆல்ராய்

☆ அதிருஷ்ட சக்கரம் இடைவிடாமல் சுற்றிக்கொண்டேயிருக் கின்றது. இன்று நான் மேலே வந்துவிடுவேன் என்று எவன் சொல்லிக்கொள்ள முடியும்? ✍ கன்ஃபூஷியஸ்

☆ மானிட வாழ்க்கை பகுத்தறிவைக்காட்டிலும் அதிருஷ்டத் தாலேயே ஆளப்பெறுகின்றது. ✍ ஹியூம்

☆ அதிர்ஷ்டம் மனிதர்களை மாற்றுவதில்லை. அவர்களை வெளிப்படையாகத் தெரியும்படி திறந்து காட்டுகிறது.
✍ ரிக்கோபோனி

☆ ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் அதிர்ஷ்டம் வந்து ஒரு முறை கதவைத் தட்டும். ஆனால், பல சந்தர்ப்பங்களில் மனிதன் அப்பொழுது பக்கத்தில் வெளியே எங்காவது போயிருப்பான். அது தட்டுவது அவன் காதில் விழுவதில்லை.
✍ மார்க் டுவெயின்

☆ உண்மையில் எது நல்லதிருஷ்டம், எது துரதிருஷ்டம் என்பது நமக்குத் தெரியாது.
✍ ரூஸோ

☆ நல்லவர்களுடைய துரதிருஷ்டம் அவர்களை வானைநோக்கி முகங்களைத் திருப்பும்படி செய்கின்றது. கெட்டவர்களுடைய துரதிருஷ்டம் அவர்கள் தரையை நோக்கித் தலைகளைத் தொங்கவிட்டுக்கொள்ளும்படி செய்கின்றது.
✍ ஸாஅதி

☆ அதிர்ஷ்டம் மெலிந்தவர்களைத் தண்டிக்கும் தடி; தைரியமுள்ளவர்களுக்கு அது ஊன்றுகோல்.
✍ லோவெல்

☆ அதிர்ஷ்டத்தை நம்பியிருக்க வேண்டாம் ஒழுக்கத்தை நம்பியிருங்கள்.
✍ பப்ளியஸ் ஸிரஸ்

☆ தானே தன் நிலைமையைச் செம்மைப்படுத்திக்கொள்ளும் பொறுப்பு ஒருவனுக்கு ஏற்பட்டால், அதுவே அவன் அதிருஷ்டத்தின் மடியில் தவழ்வதாகும். அப்பொழுதுதான் நம் அறிவு ஆற்றல்களெல்லாம் வளர்ச்சியடைந்து முன்பு கண்டிராத அளவுக்கு வலிமை பெறுகின்றன.
✍ பிராங்லின்

☆ அநேகருக்கு அதிருஷ்டம், அளவுக்கு அதிகமாய்க் கொடுக்கின்றது. ஆனால், எவருக்கும் போதிய அளவு அளிப்பதில்லை.
✍ மார்ஷியல்

☆ அதிருஷ்டம் எப்பொழுதும் சுறுசுறுப்பைத் தொடர்ந்தே சென்றுகொண்டிருப்பதைக் காணலாம். ✍ கோல்ட்ஸ்மித்

☆ துயரப்படுவோர்தாம் அதிருஷ்டத்தின் ஆற்றலை ஒப்புக் கொள்வர். இன்பமாயிருப்பவர்கள் தங்களுடைய வெற்றி களுக்குத் தங்கள் முன்யோசனையும் தகுதியுமே காரணங்கள் என்பர். ✍ ஸ்விஃப்ட்

☆ அதிகாலையில் எழுந்திருந்து கடுமையாக உழைத்து முன் யோசனையுடன் நடந்துகொள்ளும் மனிதன் தன் வரு மானத்தில் கவனமுள்ளவனாகவும், கண்டிப்பான ஒழுக்க முடையவனாகவும் இருந்தால் அவன் துரதிருஷ்டம்பற்றிக் குறை சொல்வதை நான் கண்டதேயில்லை. நல்ல ஒழுக்கம், நல்ல பழக்கங்கள், இடைவிடாத ஊக்கம் ஆகியவைகளால் அமைந்த கோட்டைக்குள் துரதிருஷ்டம் செல்ல முடியாது. மூடர்களே துரதிருஷ்டம்பற்றிக் கனவு காண்பார்கள். ✍ அடிஸன்

☆ வாழ்க்கையில் வெற்றியடைந்த மனிதர் அனைவரும் காரண காரிய இயல்பை நம்புபவர்; எந்த விஷயமும் அதிருஷ்டத் தால் நேரிடுவதில்லை. நியதியின்படியே நிகழ்கின்றது என்று அவர்கள் நம்புகின்றனர். சங்கிலியின் முதலாவது கண்ணி யிலிருந்து கடைசிக் கண்ணிவரை எதுவும் பலவீனமாகவோ, அறுந்தோ இருக்கவில்லை என்றும் அவர்கள் நம்புகின்றனர். அதுவே காரண காரியத் தொடர்பு. ✍ எமர்ஸன்

☆ ஏதாவது ஏற்படும் என்று அதிருஷ்டம் எப்பொழுதும் காத்துக் கொண்டேயிருக்கின்றது. உழைப்பு, கூர்மையான பார்வை யுடனும், உறுதியான உள்ளத்துடனும் எதையாவது உற்பத்தி செய்யும். அதிருஷ்டம், கட்டிலில் படுத்துக்கொண்டு, தனக்கு ஏதாவது சொத்து வந்து சேர்ந்ததாகத் தபால்காரர் கடிதம் கொண்டுவருவார் என்று எதிர்பார்த்திருக்கும். உழைப்பு, காலை ஆறுமணிக்கே எழுந்து, ஊக்கமுள்ள பேனாவாலோ,

'டணார், டணார்' என்று ஒலிக்கும் சம்மட்டியாலோ தனக்கு வேண்டியதைத் தேடிக்கொள்ளும். அதிருஷ்டம், நொந்து அழும். உழைப்பு, சீட்டியடித்துக்கொண்டு உல்லாசமா யிருக்கும். அதிருஷ்டம், தற்செயலாக நன்மை வரும் என்று நம்பும். உழைப்பு, ஒழுக்கத்தையே நம்பியிருக்கும்.
✍ காப்டென்

☆ அதிருஷ்டமில்லாத இடத்திலோ, ஆளிடமோ நெருங்க வேண்டாம். மிகவும் சாமர்த்தியசாலிகளான பலரை எனக்குத் தெரியும். அவர்களுடைய கால்களுக்குக்கூடச் செருப்புக் கிடைப்பதில்லை. நான் அவர்களுடன் சேருவதில்லை. அவர்களுடைய ஆலோசனை நல்லதாகத்தான் தோன்றும். ஆனால், அவர்கள் தாங்களே முன்னேற முடியவில்லை. தங்களுக்குத் தாங்களே நன்மை செய்துகொள்ள முடியா தவர்கள் எனக்கு என்ன நன்மை செய்யப் போகின்றனர்?
✍ பாத்ஸ்சைல்டு

☆ ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையான் உழை.
✍ திருவள்ளுவர்

## அநித்தியம்

☆ மனிதனுடைய தேவைகள் சுருக்கம். அவையும் அதிக நாள் தேவையில்லை. இயற்கை அவனுக்கு ஒரு மணி நேரம் அளித்துள்ள உடலைக்கூட அவன் மண்ணிலே சேர்த்துவிட வேண்டியிருக்கின்றது.
✍ யங்

☆ நம் எதிரிகளும் நண்பர்களும் நம் கண் முன்பே ஊர்ந்து சென்றுவிடுகின்றனர். நாமும் மரிக்க வேண்டிய பொதுவான சட்டத்திற்கு அடங்கியவர்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. விரைவிலே நாம் போய்ச் சேருமிடத்தில் நம்முடைய கதி நிரந்தரமாக உறுதி செய்யப்படும்.
✍ ஜான்ஸன்

☆ மரணம் வாழ்வின் சிகரம்; மரணம் இல்லையென்றால், வாழ்வது வாழ்வாகாது. மூடர்கள்கூடச் சாகவே விரும்புவர்.

✍ யங்

☆ ஓ! அநித்தியமான வாழ்வு காற்றைப் போன்றது; அது ஒரு முனகுதல், ஒரு பெருமூச்சு, ஓர் அழுகை அல்லது ஒரு புயல், ஒரு போராட்டம்.

✍ எட்வின் ஆர்னால்டு

☆ நல்லவர்கள் முன்னதாக இறந்துவிடுகின்றனர்; கோடை காலத்துப் புழுதி போல உலர்ந்த இதயங்களையுடையவர்கள் விளக்கில் திரி தீருகிறவரை எரிந்துகொண்டிருப்பார்கள்.

✍ வோர்ட்ஸ்வொர்த்

☆ யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையால் ஆய பயன்கொள்க -- யாக்கை
மலையாடு மஞ்சுபோல் தோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும்.

✍ நாலடியார்

☆ நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

✍ திருவள்ளுவர்

☆ உறங்குவது போலும் சாக்காடு.

✍ திருவள்ளுவர்

## அநீதி

☆ அநீதியிழைப்பவன் அநீதிக்கு உட்பட்டவனைவிட அதிகத் துயரடைவான்.

✍ பிளேட்டோ

☆ அநீதியைத் தாங்குவதைவிட, அநீதியிழைப்பது மேல் என்று எவரும் சொல்லத் துணியார்.

✍ அரிஸ்டாட்டல்

☆ உனக்கு அநீதி செய்யப்பட்டால் பொறுத்துக்கொள்; நீ அதைச் செய்வதில்தான் துக்கம் ஏற்படும்.

✍ டெமாக்ரிடஸ்

☆ அநீதியானது எதுவும் தெய்வத்தின் திருவுளத்திற்கு எதிரானது; ஆகவே, அநீதியாக நடப்பவர்கள் உண்மையான நிலையான இன்பம் அடைய முடியாது என்பது அதிலிருந்து தெரிகின்றது.
*✍ ஸ்டிரெச்*

☆ பெருங்கூட்டமான மக்கள் தங்களை ஆள்பவர்களின் சுயநலத்தையும் அநீதியையும் தெரிந்துகொண்டால், எந்த அரசாங்கமும் ஓராண்டுகூட நிலைத்திருக்காது. உலகமே புரட்சியில் கொந்தளிக்கும். *✍ தியோடோர் பார்க்கெர்*

☆ அரசனாயினும் சரி, மக்களுள் ஒருவனாயினும் சரி, எவனிடம் அதிகாரம் உளதோ, அவன் உண்மையையும் ஒழுக்கத்தையும் போற்றிக்கொள்ளாவிட்டால், அதிகாரத்தை நிச்சயம் துர் விநியோகம் செய்வான். *✍ லாஃபான்டெயின்*

☆ அநாதைக் குழந்தைகளின் செல்வங்களை அநீதியாக விழுங்குபவர்கள் நிச்சயமாக நெருப்பையே விழுங்கித் தங்கள் வயிறுகளில் இறக்க வேண்டியிருக்கும், கொழுந்து விட்டெரியும் நெருப்பிலே அவர்கள் வேகவேண்டியிருக்கும்.
*✍ குர் ஆன்*

☆ அநீதிக்கு ஏற்ற அமைச்சன், ஏமாற்று. *✍ பார்க்*

☆ முறை தவறிச் சேர்த்த செல்வம் முட்கம்பிகளுள்ள அம்பு போன்றது. அதை உடலிலிருந்து வெளியே எடுப்பதில் பயங்கரமான வேதனை ஏற்படும். இல்லையெனில் அதுவே உனக்கு அழிவை உண்டாக்கிவிடும். *✍ ஜெரிமி டெய்லர்*

☆ அவசரத்தாலோ அல்லது சோம்பலாலோ அல்லது இரண்டும் சேர்வதாலோ அநீதி ஏற்படுகின்றது. ஆத்திரக்காரரும் அயர்வுடையவரும் நீதியாக நடப்பது அரிது; அநீதியாளர் சிறிதுகூடப் பொறுத்திருக்க மாட்டார் அல்லது அதிகக் காலம் காத்திருப்பார். *✍ விவேட்டர்*

☆ அநீதிகள் அனைத்திலும், சட்டத்தின் பெயரால் இழைக்கப் படுவதே மிகவும் அநீதியானது; கொடுமைகள் அனைத்திலும்

நியாயத்தைப் பாராமல் சட்டத்தின் எழுத்தை மட்டும் பார்த்துத் தண்டித்தலே சிறிதுகூட ஆதரிக்கத் தகாதது.

*✍ லா எஸ்டிரேஞ்ச்*

☆ கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு. *✍ திருவள்ளுவர்*

☆ துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே, வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு. *✍ திருவள்ளுவர்*

☆ மண்ணி(ல்) நின்று மண்ணோரம் சொல்ல வேண்டாம்.

*✍ உலகநீதி*

☆ இருவர்தம் சொல்லையும் எழுதரம் கேட்டே,
இருவரும் பொருந்த உரையா ராயின்,
மனுமுறை நெறியின் வழக்கிழந் தவர்தாம்,
மனமுற மறுகிநின்(று) அழுத கண்ணீர்,
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்,
வழிவழி ஈர்வதோர் வாளா கும்மே. *✍ வெற்றிவேற்கை*

## அநுதாபம்

☆ மனித உள்ளத்தில் அன்புக்கு அடுத்தபடியான தெய்விக உணர்ச்சி அநுதாபமே. *✍ பர்க்*

☆ மற்றவர் துயரத்தைப் பகிர்ந்துகொண்டு உருகாத கல்நெஞ்சங்கள் மிகக் கேவலமானவை. *✍ ஏ. ஹில்*

☆ எல்லா ஞான உபதேசங்களைக்காட்டிலும், ஆலோசனைகளைக்காட்டிலும் அதிக உதவி செய்வது ஒரு துளி மானிட இரக்கமாகும்; அது நம்மைக் கைவிடாது *✍ ஜியார்ஜ் எலியட்*

☆ தாராளமான இதயம் என்றால், அது பிறருக்கு வேதனை அளிக்கக்கூடிய இன்பத்தை ஒதுக்கித் தள்ளவேண்டும்.

*✍ தாம்ஸன்*

☆ தானம் அளிப்பதைவிடச் சில சமயங்களில் இரக்கப்படுதல் மேலாகும். ஏனெனில், பணம் மனித இயல்புக்கு வெளியே யுள்ள பொருள்; ஆனால், அநுதாபத்தை அளிப்பவன் தன் ஆன்மாவால் தொடர்பு கொள்கிறான்.

☆ மனிதன் முதலாவது கற்கவேண்டிய சிறந்த பாடம் அநுதாபம். தன் சொந்த நன்மை அல்லாத பிற விஷயங்களுக்காக மனம் இளகாதவரை, ஒருவன் தாராளமான அல்லது பெருந்தன்மை யான காரியம் எதையும் சாதிக்க முடியாது. ✍ டால்போர்டு

☆ அநுதாபத்தைப் போற்றி வளர்ப்போம். அது நல்ல பண்புகள் வளர்வதற்கு மனத்தைப் பண்படுத்துகின்றது. அநுதாப மில்லாமல் மரியாதை இல்லை. மனிதன் தன்னையும் தன் விஷயங்களையுமே பெரியனவாக எண்ணி, அவைகளாலான போர்வையால் தன்னை மூடிக்கொண்டு, மற்றவருடைய இன்பங்களிலோ துன்பங்களிலோ பங்கு கொள்ளாமல் உணர்ச்சியற்றுக் கிடப்பதைப் போல் இழிவானது வேறெதுவும் இல்லை. ✍ பீட்டி

☆ பண்போடு பொருந்தாத அநுதாபமெல்லாம் மறைமுகமான சுயநலமேயாகும். ✍ காலெரிட்ஜ்

☆ அநுதாபம் இல்லையென்றால் எதுவும் இல்லை.

✍ ஏ.பி. ஆல்காட்

☆ ஃபாரடே என்பவர் எல்லா உலோகங்களிலும் காந்த சக்தி இருப்பதாகக் கண்டுபிடித்தார்; அதுபோல், எல்லா உள்ளங் களிலும் அநுதாபம் இருக்கத்தான் செய்கிறது என்று சொல்லலாம். ஆனால், மறைந்து நிற்கும் அந்தக் குணம் வெளிப்பட்டு வருவதற்கு, உலோகமானாலும் சரி, உள்ள மானாலும் சரி, ஓரளவு சூடேற வேண்டியிருக்கிறது.

✍ புல்வெர்

☆ நண்பன் ஒருவன் என் துயரத்தில் பங்குகொண்டு, அதை அற்பமாகக் குறைத்துவிடுகிறான்; ஆனால், அவன்

மகிழ்ச்சியில் பங்கு கொள்ளும்பொழுது அது இரட்டிப்பாகி விடுகின்றது. ✍ ஜெரிமி டெய்லர்

☆ கையால் அளிப்பவை வெள்ளியும் பொன்னும். ஆனால், இதயம் அளிப்பதை வெள்ளியாலோ பொன்னாலோ விலைக்கு வாங்க முடியாது. ✍ பீச்செர்

☆ துக்கம் என்ற கல் ஒருவனைக் கீழே ஆழ்த்திவிடும். ஆனால், இருவர் சேர்ந்தால் அதை எளிதில் தாங்கலாம்.

✍ டபுள்யு ஹாஃப்

☆ அருட்செல்வம் செல்வத்துள் செல்வம். ✍ திருவள்ளுவர்

☆ பேர் இல் பிறந்தமை ஈரத்தின் அறிப. ✍ முதுமொழிக்காஞ்சி

☆ ஈரமில் லாதது கிளை நட்பு அன்று. ✍ முதுமொழிக்காஞ்சி

☆ பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய் கண்(டு) உள்ளம்
எரியின் இழுதாவர் என்க - தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறஉறுப்பைக்
கண்டு கலுழுமே கண். ✍ நன்னெறி

## அநுபவம்

☆ அநுபவம் ஒரு நம்பகமான விளக்கு. அதைத் துணையாகக் கொண்டு வழி நடக்கலாம்; ஒரு மனிதன் வெற்றியடைவதற்குத் தான் முன்னால் கையாண்ட வழிகளையே எதிர் காலத்தில் பயன்படுத்த எண்ணினால், அவனை ஆலோசனையில்லாதவன் என்று சொல்ல முடியாது. ✍ வெண்டல் ஃபிலிப்ஸ்

☆ பழமைகளின் கனி, அநுபவம், அதுவே எதிர்காலங்களையெல்லாம் உருவாக்குகின்றது. ✍ ஆர்னால்டு

☆ அநுபவம் மெதுவாகத்தான் கற்பிக்கும்; தவறுகள் அதற்குரிய செலவுகள். ✍ ஃப்ரூடு

☆ உனக்குப் பழமை தெரியும். அதிலிருந்து எதிர்காலத்திற்( வேண்டிய எச்சரிக்கையைப் பெறமுடியும்; மனிதன் த( தவறுகளிலிருந்து படிக்கிறான். அவைகளிலிருந்தே அ( பவம் பெறுகிறான்.

✍ ஷெல்வ

☆ வாழ்க்கையில் படித்தலும், படித்ததை மறத்தலும் அட( கியுள்ளன; ஆனால், பெரும்பாலும் படிப்பதைவிட மறந்( வருதலே அறிவுடைமையாகும்.

✍ புல்வெ

☆ கஷ்டப்பட்டதன் சாரமே அநுபவம்; ✍ ஏ. ஹெலப்ஸ்

☆ அனுபவத்தைப் பிறருக்குக் கற்றுக் கொடுக்க முடியாத ஒ( மனிதன் மற்றொருவனுடைய கஷ்டத்திலிருந்து பாடம் கற்று( கொள்ளமாட்டான்; அவன் தானே கஷ்டப்பட வேண்டும்.

☆ கப்பலின் பின்பகுதியிலுள்ள விளக்குகளால் கப்பல் கடந்( வந்த வழிக்குத்தான் வெளிச்சம் தெரியும். இதைப் போலவே தான் பெரும்பாலான மனிதர்களுக்கு அநுபவமும்.

✍ காலெரிட்ஜ்

☆ அநுபவம் என்ற பள்ளிக்கூடம் செலவு மிகுந்தது; ஆனால் மூடர்கள் வேறு எங்கும் படிக்க மாட்டார்கள்; அந்தப் பள்ளியில் படிப்பதும் அரிதுதான்; ஏனென்றால், நாம் ஆலோ சனை சொல்லமுடியுமே அன்றி, ஒழுக்கத்தை அள்ளி ஊட்ட முடியாது.

✍ ஃபிராங்க்லின்

☆ வயதையும் அனுபவத்தையும் கொண்டு புதிய அறி( பெறாமல், எந்த மனிதனும் வாழ்க்கையை நடத்தத் தேவை யான திறமை அனைத்தையும் பெற்றிருக்கவில்லை.

✍ டெரென்ஸ்

☆ உலகத்தின் சோதனைகளுக்கு உட்படாமலும், அதனிடம் பாடம் படிக்காமலும், ஒருவன் நிறைவுள்ள மனிதனாக விளங்க முடியாது. அநுபவம் ஊக்கமாக உழைப்பதிலிருந்த கிடைக்கின்றது. காலத்தின் வேகம் அதைச் செம்மைப் படுத்துகின்றது.

✍ ஷேக்ஸ்பியர்

☆ அநுபவம் தெரிவிக்கும் விதிகள், தத்துவம் பேசுவோர் தங்கள் நூல் நிலையங்களில் இருந்துகொண்டு கூறும் விளக்க உரைகளைவிட மேலானவை. ✍ *ஆர். எஸ். ஸ்டோர்ஸ்*

☆ நான் சிறுவனாயிருந்த பொழுது ஒவ்வொரு விஷயத்தையும் உறுதியாக நம்பி வந்தேன். சில ஆண்டுகளுக்குப் பின்னால், ஆயிரம் தவறுகளைக் கண்டறிந்தபின், நான் முன்போல் பெரும்பாலான விஷயங்களைப் பாதியளவுகூட நம்ப வில்லை. இப்பொழுது கடவுள் அருள் கூர்ந்து தெளிவாக்கி யுள்ளதைத் தவிர, வேறு எந்த விஷயத்தையும் நான் நம்புவதில்லை. ✍ *ஜான் வெஸ்லி*

☆ பிடிவாதமுள்ள மனிதர்களுக்கு அவர்கள் அடையும் கஷ்டநஷ்டங்களே ஆசிரியர்கள். ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ அநுபவம் ஓர் உயர்ந்த நகை. அது அவ்வளவு அரிய தாகத்தான் இருக்கும்; ஏனெனில், மிகவும் கூடுதலான விலை கொடுத்தே அது வாங்கப்பட்டிருக்கின்றது. ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ ஒவ்வொரு நாளும் அதற்கு முன்னால் கழிந்து சென்ற நாளின் சீடனாகும். ✍ *பப்ளியஸ்ஸைரஸ்*

☆ அநுபவத்திற்கு அளவு கடந்த சம்பளம் கொடுக்க வேண்டி யிருக்கின்றது. ஆனால், அதற்கு நிகராகச் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர் வேறில்லை. ✍ *கார்லைல்*

☆ அறிவிலிகளுக்கும் அயோக்கியர்களுக்கும் அநுபவமே பொதுவான பள்ளிக்கூடம் அறிவும் ஒழுக்கமுமுள்ள மனிதர்கள் வேறு முறையில் பயிற்சி பெறுகின்றனர். ✍ *எராஸ்மஸ்*

## அந்தரங்க நேர்மை

☆ அந்தரங்க நேர்மை ஆன்மாவின் திருமுகமாகும், பாசாங்கு செய்தல் ஆன்மாவை மறைக்கும் திரையாகும் ✍ *எஸ். டூபே*

☆ ஆழ்ந்த. உண்மையான இதயபூர்வமான நேர்மை உண்மையும் பெருந்தன்மையுமுள்ள மானிடப் பண்பாடாகும்.

நாம் நினைப்பது போலப் பேசுதலும், நாம் பாவனை செய்வது போல உண்மையில் செய்வதும், நாம் வாக்களிப்பதை நிறைவேற்றுவதும், வெளித்தோற்றத்தில் நாம் எப்படி இருக்கிறோமோ அப்படியே அக ஒழுக்கத்தில் இருப்பதும் அந்தரங்க நேர்மையாகும். ✍ *டில்லோட்ஸன்*

புறத் தோற்றத்தில் நாம் தோன்ற விரும்புவது போலவே உண்மையாகவும் இருந்துவிட வேண்டும். அதுவே உலகில் நாம் கௌரவமாக வாழ்வதற்கு ஏற்ற சுருக்கு வழி. அடிக்கடி உபயோகிக்கும் அநுபவத்தின் மூலமே மானிடப் பண்புகள் வலிமை பெறுகின்றன. ✍ *சாக்ரடீஸ்*

☆ அவனுடைய சொற்கள் உறுதிமொழிப் பத்திரங்கள், அவன் கூறும் ஆணைகள் அசரீரி வாக்குகள், அவன் சிந்தனைகள் தூய்மையானவை. அவனுடைய கண்ணீர்த் துளிகள் அவன் இதயத்தின் தூதர்கள். அவனுடைய இதயத்திற்கும் ஏமாற்றுக்கும் உள்ள தூரம் வானத்திற்கும் பூமிக்கும் உள்ள தூரம் போன்றது. ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ நேர்மையும் சத்தியமும் ஒவ்வொரு பண்புக்கும் அடிப்படையாகும். ✍ *கன்ஃபூஷியஸ்*

☆ மனமொன்று, சொல்லொன்று, வான்பொருளும் ஒன்றே; சுனமொன்று மேலவர்தம் கண். ✍ *நீதிவெண்பா*

## அபாயம்

☆ கூச்சமுள்ளவன் அபாயம் வருமுன்பே நடுங்குவான்; கோழை அது வரும்பொழுது நடுங்குவான் தைரியமுள்ளவன் வந்த பிறகு அஞ்சுவான். ✍ *ரிச்டெர்*

☆ அபாயத்திற்கு அஞ்சுதல் அதைத் தடுக்கத் தூண்டுகோலாக வேண்டும்; அச்சப்படாதவன் அபாயத்தை வெல்வது அரிது.
✍ குவார்லெஸ்

☆ அபாயம் மனிதனையும் விலங்கையும் ஒரே நிலைக்குக் கொண்டுவருகின்றது; அவசியம் வரும்பொழுது எல்லோரும் ஒன்றுதான்.
✍ பைரன்

☆ அபாயத்தை அறவே விலக்குவதில் நாம் உறுதியில்லாத கோழைகள் என்று காட்டும்படி நாம் ஒரு போதும் செய்யக்கூடாது; ஆனால், அதே சமயத்தில், தேவையில்லாத முறையில் நாம் அபாயத்திற்கு உள்ளாகும்படியும் நடக்கக் கூடாது; அதைவிட அறிவீனம் வேறில்லை. ✍ ஸிஸெரோ

## அபிப்பிராயம்

☆ நமது மன ஆர்வங்கள் எப்படியோ அப்படியே நம் அபிப்பிராயங்களும் இருக்கும்.
✍ கதே

☆ பெருங்கூட்டமான பொதுமக்களின் அபிப்பிராயம் என்பது (நமக்கு) இரண்டாவது மனச்சாட்சி போன்றது; சிலர் அதையே முற்றிலும் நம்பியிருப்பர்.
✍ டபுள்யு. ஆர். ஆல்கெர்

☆ எல்லா அதிகாரமும் - உச்ச நிலையிலுள்ள எதேச்சாதிகாரம் உட்பட - இறுதியாக அபிப்பிராயத்தையே சார்ந்து நிற்கின்றது.
✍ ஹியூம்

☆ நேற்று நான் சொன்னவைகளுக்கெல்லாம் மாறுபாடாயிருப்பினும், இன்று நான் எதை நம்புகிறேனோ அதைச் சொல்லியே தீருவேன்.
✍ வெண்டல் ஃபிலிப்ஸ்

☆ எதேச்சாதிகாரத்தை அலைத்து ஆட்டக்கூடிய சக்தி ஒன்று மக்களிடம் இருக்கின்றது. அது மின்னல், புயல், பூகம்பம் ஆகியவைகளைவிட மேலான ஆற்றலுள்ளது; அது நாகரிக

உலகம் முழுவதும் கோபிக்கக்கூடும் என்று உணரு அச்சமேயாகும். ✍ டேனியல் வெப்ஸ்ட

☆ அபிப்பிராயம் படைகளைவிட வல்லமையுள்ளது.
✍ பாமர்ஸ்டன் பிர

☆ உலகில் நன்மையோ தின்மையோ செய்வதில் முக்கியமா விஷயம் அபிப்பிராயம். விஷயங்களைப்பற்றிய தவறா அபிப்பிராயங்களே நம் அழிவுக்குக் காரணமாக இரு கின்றன. ✍ மார்க்கஸ் அன்டோனிய

☆ சட்டங்களைப் பார்க்கினும் உலகை அதிகமாக ஆட்சி புரிவ அபிப்பிராயமே. நம்முடைய சொத்துகளையும் உயிரையு காத்து நிற்கும் முக்கியமான கோட்டை தனிமனிதர்களு மக்கள் கூட்டங்களும் கொண்டுள்ள ஒழுக்க சம்பந்தமா முடிவுகளே அன்றி, நீதித் தலங்களின் முடிவுகள் அல் வளர்ச்சி பெற்று வரும் சமூகத்தில் ஆயுதங்களுக்குப் பதிலா அபிப்பிராயமே மேலோங்கி நிற்கும். ✍ சான்னி

☆ பெரும்பாலான மனிதர்களுக்கு அபிப்பிராயமே கிடையா சிலருக்கு மட்டுமே சொந்த அபிப்பிராயம் என்று இருக்கு அது சிந்தனை செய்து அறிவை அடிப்படையாக கொண்டிருக்கும். ✍ ஸ்யூ

☆ உலகிலேயுள்ள முதன்மையான பொய், பொது மக்களி அபிப்பிராயம் என்பது. ✍ கார்லை

☆ தாராள மனப்பான்மையுள்ள ஒருவன், மற்றொருவன் த அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டால், அவன்மீது குற்ற சாட்டமாட்டான். ✍ ஸிஸெரே

☆ பெரிய நான்கு சக்கர வண்டியை ஓட்டுபவன், லகான்களை கையில் பிடித்துக்கொண்டு, குதிரைகளையே கவனித்திருந் ஓட்டுவது போல, இராஜதந்திரி பொதுஜன அபிப்பிராயத்தை தொடர்ந்து செல்ல வேண்டும். ✍ ஜே. ஸி. ஹே

☆ மற்ற மனிதர்களின் கண்களே நம்மைக் கெடுக்கும் கண்கள். என்னைத்தவிர மற்ற யாவரும் குருடர்களாயிருந்தால், எனக்கு நேர்த்தியான உடைகளோ, பெரிய வீடுகளோ, உயர்ந்த நாற்காலிகள் முதலியவைகளோ தேவையில்லை.

✍ ஃபிராங்க்லின்

☆ ஓர் ஆசிரியரின் நூலில் என் கருத்துப்படியே எழுதியுள்ள பகுதியை நான் பாராட்டிப் புகழ்கிறேன். அவர் என் கருத்துக்கு மாறுபடும் இடங்களில் அவர் கூற்றுகள் தவறானவை என்று நான் முடிவு கட்டுகிறேன். ✍ ஸ்விஃப்ட்

☆ சொந்த அபிப்பிராயம் எதுவுமின்றி, பிறருடைய அபிப் பிராயத்தையும் விருப்பத்தையுமே சார்ந்திருப்பவனை அடிமையென்று கருதலாம். ✍ கிளாப்ஸ்டாக்

☆ காலியாயுள்ள தோல் பைகளைக் காற்று புடைக்கச் செய்யும்; மூடர்களை அபிப்பிராயம் புடைக்கச் செய்யும். ✍ சாக்ரடீஸ்

☆ தனி மனிதரின் அபிப்பிராயம் பலவீனமானது; ஆனால், பொது மக்களின் அபிப்பிராயம் அநேகமாகச் சர்வ வல்லமை உள்ளது. ✍ பீச்சர்

☆ ஓர் அபிப்பிராயம் உண்மைக்குப் பொருத்தமாயில்லா விட்டாலும், அது உன்னுடையது என்பதற்காக அதைப் பிடிவாதமாகப் பற்றிக்கொண்டிருந்தால், உண்மையைவிட நீயே மேலானவன் என்று கருதுவதாகும். ✍ வென்னிங்

☆ இரண்டு உரோமங்களோ, இரண்டு தானியங்களோ ஒன்று போல் இருந்ததில்லை; இதுபோல, உலகத்தில் ஒரே மாதிரியான இரண்டு அபிப்பிராயங்கள் என்றுமே இருந்த தில்லை. உலகம் அனைத்திற்கும் பொதுவான இயல்பு பல வகைகளாகப் பிரிந்திருத்தலாகும். ✍ மாண்டெயின்

☆ மனிதர்கள் நம்மை நிந்திக்கும் பொழுது, நாம் நம்மையே சந்தேகித்துக்கொள்ள வேண்டும்; அவர்கள் நம்மைப் புகழும்

பொழுது, நாம் அவர்களைச் சந்தேகிக்க வேண்டும் என்று சொல்வது தெளிவாகக் கண்ட ஓர் உண்மையாகும்.

✍ கோல்டன்

☆ மானிட வர்க்கத்தின் அபிப்பிராயம் பற்றிய வரலாறு என்பது மக்களுடைய தவறுகளின் வரலாறேயாகும். ✍ வால்டே

☆ அபிப்பிராய வேற்றுமைக்காக நான் ஒரு மனிதனை விட்டு விலக மாட்டேன், அவனுடைய முடிவைக் கண்டு கோப மடையவும் மாட்டேன். ஏனெனில், நானே சில நாள்களுக்குப் பின் என் கருத்துக்கு எதிராக முடிவு செய்யவும் கூடும்.

✍ ஸர். தாமஸ் பிரௌன்

☆ ஓர் அபிப்பிராயம் புதுமையானது என்பதற்காக அதை உதறித் தள்ள வேண்டா; ஆனால், அதைக் கவனமாக ஆராய்ந்து அது தவறாயிருந்தால் தள்ளிவிடவும், அது உண்மையாயிருந் தால் ஏற்றுக்கொள்ளவும். ✍ லக்ரீஷியஸ்

☆ ஒரு மனிதன் தன்னைப்பற்றிய உலக அபிப்பிராயத்தை மதிக்காமலிருந்தால், ஆணவமாயிருப்பதோடு, ஒழுக்கக் கேடும் ஆகும். ✍ ஸிஸெரோ

☆ உலக அபிப்பிராயத்தைத் தழுவிக்கொண்டு உலகிலே வாழ்தல் எளிது; ஏகாந்தமான இடத்தில் நம் சொந்த அபிப்பிராயப்படி வாழ்தல் எளிது; ஆனால், மக்கள் கூட்டத்தின் நடுவில் ஏகாந்தத்திலுள்ள சுதந்தரத்துடன் இனிதாக வாழ்பவனே பெரிய மனிதன். ✍ எமர்ஸன்

☆ நாம் நம்முடைய நண்பர்களின் அபிப்பிராயங்களை வாங்கி வைத்துக்கொள்வதற்காக நம் மூளைகளில் ஒரு பகுதியை எப்பொழுதும் காலியாக வைத்திருக்கவேண்டும். இதயத்திலும் மூளையிலும் விருந்தினருக்கும் இடம் கொடுப்போம்.

✍ ஜோப

☆ பிடிவாதமுள்ள மனிதன் அபிப்பிராயங்களைப் பெற்றிருப்ப தில்லை. அவைகளே அவனைப் பற்றியிருக்கின்றன.
✍ பிஷப் பட்லர்

## அமரத்துவம்

☆ வேறு வாழ்க்கையில் நம்பிக்கையில்லாதவர்கள் இந்த வாழ்விலேகூட இறந்தவர்களாவர். ✍ கதே

☆ வித்து ஒரு புது வாழ்வில் மறைந்துவிடுகின்றது. அதுபோல் தான் மனிதனும். ✍ ஜி. மாக்டொனால்டு

☆ மண்கட்டியாகிய இந்த உடலுடன் இறைவன் அருளிய ஆன்மா அழிந்துவிடுவதில்லை. ✍ மில்டன்

☆ எல்லா மனிதர்களுடைய ஆன்மாக்களும் நித்தியமானவை. ஆனால், நேர்மையாளர்களின் ஆன்மாக்கள் நித்தியமாயும் தெய்விகமாயும் இருக்கின்றன. ✍ சாக்ரடீஸ்

☆ நமக்கு உள்ளேயிருந்து உணர்வதும், சிந்திப்பதும், விரும்பு வதும், எழுச்சியளிப்பதும் எதுவோ அது தெய்விகமானது. ஆதலால் அழிவற்றது. ✍ அரிஸ்டாட்டல்

☆ மண்ணுலகைச் சேர்ந்தவை மறுபடி மண்ணுக்குள்ளே கரைந்து விடுகின்றன. வானிலிருந்து வந்தவை அங்கேயே சென்று விடுகின்றன. ✍ மார்க்ஸ் அண்டோனியஸ்

☆ மனிதன் நித்தியமானவன் என்ற நம்பிக்கையில்லாத மதம், ஒற்றைத் தூணில் நிற்கும் வளைவு போலவும், இறுதியில் படுகுழியைக் கொண்டுள்ள பாலம் போலவும் உள்ளது.
✍ மாக்கஸ்முல்லர்

☆ தத்துவ ஞானத்தின் நுணுக்கங்கள் எல்லாம் சேர்ந்தும். ஆன்மா நித்தியமானது என்று நான் நம்புவதையும், தெய்வம்

கருணையுள்ளது என்பதையும் ஒரு கணநேரங்கூட ஐயுறச் செய்ய முடியாது. நான் இவ்வாறு உணர்கிறேன், நம்புகிறேன், விரும்புகிறேன், எதிர்பார்க்கிறேன். என் மூச்சு உள்ளவரை நான் இந்தக் கொள்கையைக் கைவிடேன். *ரூஸோ*

☆ சிறு துயிலுக்குப் பின்னால் நாம் விழிப்படைந்து அமரராகி விடுகிறோம், அப்பால் மரணம் என்பதில்லை. *டோன்*

## அமிதமான நடை

☆ அமிதமான கருத்துகள் நியாயமாயிருப்பதில்லை.
*டாங்க்ரெட்*

☆ ஒவ்வொரு விஷயத்திலும் நடுவான நிலை ஒன்றுண்டு. நல்ல பண்புக்குக்கூட எல்லைகளுண்டு. அவைகளைத் தாண்டிச் செல்வது பண்பாகாது. *ஹொரேஸ்*

☆ அமிதமானவை, ஒன்றுக்கொன்று மாறுபட்டிருந்தாலும் பயனில் ஒன்றுபோலிருக்கின்றன. அமித உஷ்ணம் மான முண்டாக்குகின்றது, அது போலவேதான் அதிகக் குளிர்ச்சி யும். அமிதமான காதல் தெவிட்டிவிடுகின்றது. அதுபோலவே தான் அதிகமான வெறுப்பும். அளவுக்கதிகமான கட்டுப்பாடு கற்புக்கே சோதனையாகின்றது. அது போலவேதான் விருப் பம்போல் திரிவதும். *சாப்மென்*

☆ எல்லாவற்றையும் நல்லனவாகவும், எல்லாவற்றையும் தீயனவாகவும் பார்க்கும் மனிதரை நம்ப வேண்டாம்; எதையும் இலட்சியம் செய்யாமலிருப்பவனைச் சிறிதும் நம்பவே வேண்டாம். *லாவேட்டர்*

☆ மிகப்பெரிய வெள்ளமும் விரைவிலே வடிந்துவிடுகின்றது; மிகவும் கோரமான புயலும் திடீரென்று அமைதியாகி விடுகின்றது; அளவற்ற அன்பும் அவிந்து அடங்குவதில்

முடிகின்றது; மிகவும் ஆழ்ந்த ஆசையும் அளவற்ற துவேஷமாக மாறுகின்றது. ✍ சாக்ரடீஸ்

அதிக வறுமைப்பட்டவரும், அதிகச் செல்வமுடையவரும் நியாயத்தைச் சொன்னால் கேட்க மாட்டார்கள். ✍ ஃபீல்டிங்

## அமைதி

அமைதி மனிதனுக்கு இயற்கையாயுள்ள இன்பநிலை; போர் அவனுக்கு இழிவு, அவமானம். ✍ தாம்ஸன்

அமைதி மதிப்புயர்ந்த ஒரு நகை. சத்தியத்தைத் தவிர வேறு எதைக் கொடுத்தாவது நான் அதை வாங்க விரும்புகிறேன். ✍ எம். ஹென்றி

பகைகொள்ளல் எனக்கு மரணம் போன்றது; நான் அதை வெறுக்கிறேன். எனக்கு நல்லார் அனைவருடைய அன்பும் தேவை. ✍ ஷேக்ஸ்பியர்

அமைதியாயுள்ளவர்களுக்கு அமைதி மறுக்கப்படுவதில்லை. ✍ ஷில்லர்

உன்னைத் தவிர உனக்கு அமைதியை வேறு எதுவும் கொண்டுவர முடியாது; தத்துவங்களின் வெற்றியாலேயே அமைதி ஏற்படும். ✍ எமர்ஸன்

அமைதிக்கும் வெற்றிகள் உண்டு. அவை போரின் வெற்றி களைவிடப் புகழில் குறைந்தவை அல்ல. ✍ மில்டன்

அமைதியே கலைகளை வளர்த்து, செழிப்பை உண்டாக்கி, இன்பமான புத்துயிரளிக்கும் செவிலித்தாய். ✍ ஷேக்ஸ்பியர்

போருக்கு ஆயத்தமாயிருத்தல் அமைதியைக் காக்கத் தலை சிறந்த வழியாகும். ✍ வாஷிங்டன்

☆ நான் அமைதியான மனிதன். அமைதியை நான் எவ்வளவு விரும்புகிறேன் என்பதை ஆண்டவர் அறிவார். ஆனால், நான் கொடுமையைக் கண்டு அதுவே அமைதி என்று தவறாகக் கருதும் கோழையல்லன். ✍ *கோஸத்*

## அயோக்கியதை

☆ வேண்டுமென்றே தன் நண்பனை ஏமாற்றும் ஒருவன், தன்னைப் படைத்த கடவுளையே ஏமாற்றுவான்.

✍ *லாவேட்டர்*

☆ நிரந்தரமான நன்மையைக் கைவிட்டுத் தாற்காலிக நன்மைகளை நாடுவது அயோக்கியதை. ✍ *போவி*

☆ தீயவர் நம்மை நேருக்கு நேராக நின்று பார்க்கக் கூசுவர் என்றெல்லாம் அறிவில்லாமல் பேசப்படுகின்றது. அந்தக் கருத்தை நம்ப வேண்டாம். ஆதாயம் ஏதேனும் கிடைக்குமானால், வாரத்தில் எந்த நாளிலும் அயோக்கியதை நம்மை ஏறிட்டுப் பார்த்து, நேர்மையைக்கூட விரட்டிவிடும்.

✍ *டிக்கன்ஸ்*

☆ ஒவ்வொரு மனிதனும் தன் அண்டையில் இருப்பவர்கள் தன்னை ஏமாற்றாமலிருக்க வேண்டும் என்று கவனமாய்ப் பார்த்துக்கொள்கிறான். ஆனால், பின்னால் ஒரு காலம் வருகின்றது; அப்பொழுது அவன் தான் எவரையும் ஏமாற்றாமலிருக்க வேண்டுமே என்று கவனமாயிருக்கத் தொடங்குகிறான். அது முதல் எல்லாம் சரியாக நடந்து வருகின்றது.

✍ *எமர்ஸன்*

☆ தீய வழியில் வந்தது எதுவும் தேய்ந்து போகின்றது. ஏனெனில் அதிலேயே அழிவுக்குரிய சாபத்தீடு அமைந்திருக்கின்றது; தீய வழிகளில் வந்த பொருள்களைத் தீய வழிகளிலே விரயம் செய்யவே ஆசையுண்டாகும். ✍ *எம். ஹென்றி*

☆ அயோக்கியதை யாரையும் விடாது; நண்பரையும் ஏமாற்றும், பகைவரையும் ஏமாற்றும்; முடிந்தால், கடவுளையும் ஏமாற்றும்.
*✍ பாங்கிராஃப்ட்*

☆ நியாயமான விலை கொடாமல் பொருள்களை அடித்துப் பேசிக் குறைந்த விலைக்கு வாங்குதல், கடைக்குள் புகுந்து பொருள்களைத் திருடுவது போன்றதே. *✍ பீச்சேர்*

☆ தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். *✍ திருவள்ளுவர்*

☆ மறந்தும் பிறன்கேடு சூழற்க. *✍ திருவள்ளுவர்*

☆ வினைப்பகை வீயாது பின்சென்று அடும். *✍ திருவள்ளுவர்*

☆ தீயசெயல் செய்வார் ஆக்கம் பெருகினும்,
தீயன தீயனவே வேறல்ல. *✍ நீதிநெறிவிளக்கம்*

☆ அறம் புரிந்து அல்லவை நீக்கல் இனிது. *✍ இனியவை நாற்பது.*

☆ அடல்வேண்டும் ஆக்கம் சிதைக்கும் வினை.
*✍ நான்மணிக்கடிகை*

☆ அல்லவை செய்வார்க்(கு) அறம் கூற்றம்.
*✍ நான்மணிக்கடிகை*

## அரசர்

☆ குடிகளின் இதயங்களிலே தங்கள் அரியணைகளை அமைத்துக்கொண்ட அரசர்கள் இன்பமடைவார்கள்.
*✍ ஃபோர்டு*

☆ அரசருக்குரிய பெருமை வீண் ஆடம்பரத்திலில்லை, ஆழ்ந்த பண்புகளில் இருக்கின்றது. *✍ அகிஸிலாஸ்*

☆ ஆண்டவன் அருளால் செங்கோல் ஏந்துபவன், அதை ஏந்தும்வரை அதன் பளுவை உணரான். *✍ கார்னிலி*

☆ முடி புனைந்த தலையில் துயரம் தங்கியிருக்கும்.

✍ ஷேக்ஸ்பியர்

☆ அரசனுடைய கடமைகளைக் கவனமாகச் சிந்தனை செய்து பார்ப்பவன், ஒரு மணிமுடியைக் கண்டதும் அஞ்சி நடுங்குவான்.

✍ லெவிஸ்

☆ அரசர்க்குப் பரம்பரை உரிமை இருப்பது தவறு என்பதற்குத் தகுதியுள்ள சான்றுகளுள் ஒன்று, இயற்கை அதை நிரூபிக்கின்றது என்பது; இல்லாவிட்டால், இயற்கை மனிதரை ஆள்வதற்கு ஒரு சிங்கத்திற்குப் பதிலாக ஒரு கழுதையை அடிக்கடி முடுசூடும்படி வைக்குமா?

✍ தாமஸ் பெயின்

☆ அரசன் செல்லும் வழியிலேயே குடிகளும் செல்வர்; அரசனுடைய கட்டளைகளைப்பார்க்கினும், அவன் வாழ்க்கையில் நடந்து காட்டும் முறையே அதிக வலிமையுள்ளது.

✍ கிளாடியன்

☆ அரசர்க்கு வேண்டிய நீதிகள் எல்லாம் இவைகளில் அடங்கியுள்ளன; நீ ஒரு மனிதன் என்பதை நினைவில் வைத்துக்கொள்; நீ ஆண்டவனின் பிரதிநிதி என்பதையும் நினைவில் வைத்திரு.

✍ பேக்கன்

☆ வான்நோக்கி வாழும் உலகெல்லாம், மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.

✍ திருவள்ளுவர்

☆ குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

✍ திருவள்ளுவர்

☆ நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்.

✍ திருவள்ளுவர்

☆ உடைப்பெரும் செல்வத்(து) உயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்த னாகி - நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்.

✍ பழமொழி

# அரசாங்கம்

☆ நம்மை நாமே ஆண்டுகொள்ளக் கற்பிக்கும் அரசாங்கமே அரசாங்கங்களுள் தலைசிறந்தது. ✍ *கதே*

☆ அரசாங்கம் என்பது, வெறும் ஆலோசனை கூறுவது மட்டுமன்று; அதற்கு அதிகாரம் உண்டு. தன் சட்டங்களை அமல் நடத்தும் ஆற்றலும் உண்டு. ✍ *வாஷிங்டன்*

☆ நல்ல சட்டங்களும் நல்ல ஆயுதங்களுமே எல்லா அரசாங் கங்களுக்கும் முக்கியமான அடிப்படை. ✍ *மாக்கியவில்லி*

☆ அரசாங்கத்தில் அங்கம் வகிக்க மறுக்கும் அறிவாளர் அனுபவிக்கும் தண்டனை, தீய மனிதர்களின் ஆட்சியின்கீழ் வாழ்வதாகும். ✍ *பிளேட்டோ*

☆ அரசாங்கம் அவசியமான ஒரு தீமை, அது நடைவண்டிகள், ஊன்றுகோல்களைப் போன்றது. நமக்கு அது அவசியம் என்பது நாம் இன்னும் எவ்வளவு குழந்தைப்பருவத்திலிருக் கிறோம் என்பதைக் காட்டுகின்றது. அதிகமாக ஆட்சி புரிதல் மக்களுடைய சக்தியையும் , தாங்களே தங்களுக்கு உதவிக் கொள்வதையும் மாய்த்துவிடும். ✍ *வெண்டெல்ஃபிள்ப்ஸ்*

☆ ஆண்டு அடக்குதல் குறையக் குறைய நமக்கு நல்லது. சட்டங்கள் குறைவாயிருப்பதும் அளிக்கப்படும் அதிகாரம் குறைந்திருப்பதும் நலம். சாதாரணமான அரசாங்கத்தால் விளையும் தீமைக்கு மாற்று, தனிப்பட்டவரின் ஒழுக்கமும், தனி மனிதரின் வளர்ச்சியும். ✍ *எமர்ஸன்*

☆ நன்றாக ஆளப்பெறும் மக்கள், வேறு சுதந்தரம் எதையும் தேடக்கூடாது. ஏனெனில், நல்ல அரசாங்கத்தைப்பார்க்கினும் அதிகமான சுதந்தரம் வேறு இருக்க முடியாது.

✍ *ஸர் வால்டர் ராலே*

☆ மனிதர்கள் ஆண்டவனிடத்திலும் அறிவினிடத்திலும் நம்பிக்கை வைத்திருந்தால், அவர்களிலே பெரும்பாலோரைக் கொண்ட அரசாங்கம், இறுதியில் அறிவாளர்களையும் பெரியோர்களையும் முதன்மையாகக்கொண்டு விளங்கும்.

✍ *ஸ்பால்டிங்*

☆ மிகத்தாழ்ந்த நிலையிலுள்ள ஒருவருக்கு நேர்ந்த தீங்கை எல்லோருக்கும் ஏற்பட்ட அவமதிப்பாகக் கருதும் நிலையில் ஆட்சி புரியும் அரசாங்கமே தலைசிறந்ததாகும். ✍ *ஸோலன்*

☆ அரசாங்கங்கள் அமைக்கப்பெறுவதில்லை, ஒட்டு வேலைகளால் உண்டாக்கப்பெறுவதில்லை. அவை வளர்ந்து உருவாகின்றன; பல நூற்றாண்டுகளாகப் பல துயரங்களை அநுபவித்துக்கொண்டு அவை மெதுவாக வளர்ந்து வந்துள்ளன.

✍ *ஜான் மாஸ்ஃபீல்டு*

☆ அரசர்கள், ஏகாதிபத்தியங்களின் உண்மையான வலிமை சேனைகளிலும் உணர்ச்சிகளிலும் இல்லை. ஆனால், அவர்கள் கபடமில்லாமலும், உண்மையாகவும், சட்டப்படியும் நடக்கிறார்கள் என்று மக்கள் கொள்ளும் நம்பிக்கையிலேயே அது அமைந்துள்ளது. அந்த உயர் நிலையிலிருந்து ஓர் அரசாங்கம் விலகியவுடன், அது 'ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டுள்ள ஒரு கூட்ட'த்தைத் தவிர வேறில்லை. அதன் முடிவு காலமும் நெருங்கி நிற்கும். ✍ *எச். ஜி. வெல்ஸ்*

☆ இறைவனுக்குக் கீழ்ப்படிந்துள்ள இந்தத் தேசிய சமூகம் சுதந்தரத்துடன் புதுப் பிறவியை அடைய வேண்டும்; அதனால், மக்களுடைய, மக்களால் நடத்தப்பெறும், மக்களுக்கான அரசாங்கம் பூமியிலிருந்து மறைந்துவிடாமல் இருக்க வேண்டும். ✍ *ஆபிரகாம் லிங்கன்*

☆ தாழ்ந்த நிலையிலுள்ள மக்களுக்கு ஜனநாயகம் ஓரளவு நல்வாழ்வை அளித்து வருவதுதான், அது அடைந்துள்ள வெற்றியாகும். முற்றிலும் நல்வாழ்வை அளிக்காவிட்டாலும் அது அளிக்க முயற்சி செய்கின்றது. இந்தக் காரணத்

திற்காகவே நம்முள் பெரும்பாலோர் அதை அரசியல் கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்று நான் கருதுகிறேன்.

✍ ஸர். ஜேம்ஸ் ஜீன்ஸ்

☆ உலகில் ஜனநாயகத்திற்கு அபாயம் ஏற்படாமல் காக்க வேண்டும்.

✍ உட்ரோ வில்ஸன்

☆ மக்கள் நன்மை செய்வதற்கு உதவியாகவும், தீமைசெய்வதைத் தடுப்பதாகவும் இருப்பதே அரசாங்கத்தின் முறையான கடமையாகும்.

✍ கிளாட்ஸ்டன்

☆ மக்கள் நீதிபதிகளுக்கு அடங்கியும், நீதிபதிகள் சட்டங்களுக்கு அடங்கியும் உள்ள நிலையில், சமூகம் நன்றாக ஆளப் பெறுவதாகக் கொள்ளலாம்.

✍ ஸோலன்

☆ அரசாங்கத்தை அமைக்க மக்களுக்கு அதிகாரமும் உரிமையும் உண்டு என்று கருது முன்பு, ஒவ்வொரு தனி மனிதனும் அரசாங்கத்திற்கு அடங்கி நடக்க வேண்டியது கடமை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

✍ வாஷிங்டன்

☆ எந்த அரசாங்கமும், அதன் அதிகார விஸ்தீரணமும் எந்த உருவத்தில் இருந்த போதிலும், அது அன்பை அடிப் படையாகக் கொள்ளாமலும், அறிவைத் துணைக்கொள்ளா மலும் இருந்தால், அது கொடுங்கோன்மையேயாகும்.

✍ திருமதி ஜேம்ஸன்

☆ பலாத்காரத்தின் துணைகொண்டு வளர்ந்துவரும் அதிகாரம் நீடித்து நிற்பது அரிது. ஆனால், அமைதியும் நிதானமும் எல்லா விஷயங்களையும் நீடித்து நிற்கச் செய்யவல்லவை.

✍ செனிகா

☆ நீதியில்லாத எந்த அரசாங்கமும் மதிக்கத்தக்கதன்று. அப்பழுக்கில்லாத மக்கள் நம்பிக்கையைப் பெறாமலும், பொது மக்களுக்கான புனிதக் கொள்கை, விசுவாசம், கௌரவம் ஆகியவை இல்லாமலும் இருந்தால், வெறும்

அரசாங்க அங்கங்களும், சட்ட நிர்வாகமும் மட்டும் அரசியல் சமூகத்திற்குப் பெருமையுண்டாக்க முடியாது.

✍ *டேனியல் வெப்ஸ்டர்*

☆ ஒரு நகரம், நல்ல சட்டங்களால் ஆளப்பெறுவதைக் காட்டிலும், ஒரு நல்ல மனிதனால் ஆளப்பெறுதல் மேலாகும்.

✍ *அரிஸ்டாட்டில்*

☆ ஆட்சி செய்வதை மிகச்சிலருடைய வசத்தில் விட்டு விடக்கூடாது; சட்டம் இயற்றுவதை மிகப்பலருடைய கையில் ஒப்படைக்கவும் கூடாது. ✍ *ஸ்விஃப்ட்*

☆ அஞ்சாமை, ஈகை, அறிவு,ஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு. ✍ *திருவள்ளுவர்*

☆ அறனிழுக்காது அல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடையது அரசு. ✍ *திருவள்ளுவர்*

## அரசியல்

☆ அரசியலைப் போன்ற சூதாட்டம் வேறில்லை. ✍ *டிஸ்ரேலி*

☆ ஒழுக்க முறைப்படி தவறாயுள்ளது, அரசியல் முறையில் சரியானதாக ஆகிவிடாது. ✍ *ஓ'கானல்*

☆ சமுதாய வாழ்க்கையில், ஒழுக்க முறைப்படியுள்ள வாழ்க்கையில், அரசியல் மிகவும் சுருக்கமான அளவிலேயே பாதிக்கின்றது. தனியான ஒரு நல்ல புத்தகம் இதைவிட அதிகமாக மக்களிடத்தில் ஆதிக்கம் பெற்று விளங்குகின்றது.

✍ *கிளாட்ஸ்டன்*

☆ நாட்டுக்குச் சிறந்த சேவை செய்பவனே தன் கட்சிக்குச் சிறந்த சேவை செய்பவனாவான். ✍ *பி. ஹேய்ஸ்*

☆ சமூகம் முறையாக முன்னேறுவதற்கும், அந்த முன்னேற்றம் தலைசிறந்த பயன் விளைப்பதாகவும், தனக்கு வசதியாகவும் உள்ள வழிகளில் நடைபெறுவதற்கும் உரிய அறிவே அரசியல் என்று நான் கருதுகின்றேன். *✍ உட்ரோ வில்ஸன்*

☆ சில அரசியல்வாதி கடவுளையும் ஏமாற்றக்கூடியவன்.
*✍ ஷேக்ஸ்பியர்*

☆ இரசாயன நிபுணனாயிருக்க வேண்டுமானால் நீ இரசாயன சாத்திரத்தைக் கற்க வேண்டும், வக்கீலாயிருக்கச் சட்டம் பயிலவேண்டும்; வைத்தியனாயிருக்க மருத்துவம் பயில வேண்டும். ஆனால், அரசியல்வாதியாவதற்கு, உனக்குத் தேவையான நலன்களை மட்டும் அறிந்துகொண்டால் போதும். *✍ மாக்ஸ் ஓ'ரெல்*

☆ பாவத்தை நான் வெறுப்பது போலவே, குளறுபடி செய்வதை, அதிலும் அரசியலில் குளறுபடி செய்வதையும் நான் வெறுக்கிறேன்; அந்தத் தவற்றினால் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மக்களுக்குத் துயரமும் அழிவும் ஏற்படு கின்றன. *✍ கதே*

☆ அரசாங்க விஷயத்தில் தனிமனிதர் தலையிடக்கூடாது என்று யாரோ சொல்லியிருக்கின்றனர். துணிந்து கூறப்பட்டிருப் பினும், இது ஒழுங்கீனமானது. இதை ஒரு கொடுங்கோலனோ, அடிமையோதான் சொல்லியிருக்க முடியும். தனிமனிதர் அரசாங்க விஷயத்தில் தலையிடக்கூடாது என்று சொல்வது, அவர்கள் தங்கள் சொந்த நன்மை தீமைகளில் தலையிடக் கூடாது என்றும், தாங்கள் நிர்வாணமாயிருக்க வேண்டுமா அல்லது உடைகள் கிடைக்குமா என்றும், தங்களுக்கு உணவு கிடைக்குமா அல்லது பட்டினியாய்க் கிடக்கவேண்டுமா என்றும், தங்களை ஏமாற்றுகிறார்களா அல்லது உண்மையான விஷயங்களைத் தெரிவிக்கிறார்களா என்றும், தங்களுக்குப் பாதுகாப்பு உண்டா அல்லது தாங்கள் அழியவேண்டியது

தானா என்றும் அவர்கள் கவனிக்கக்கூடாது என்றும் கூறுவதாகும்.

✍ கேட்டோ

★ உண்மையான அரசியல் பிரச்சினைகளைக் கட்சித் தலைவர்கள் உற்பத்தி செய்ய முடியாது; அவைகளை ஒதுக்கவும் முடியாது. அவை வெளிப்பட்டே தீரும். பொதுஜன அபிப்பிராயம் என்ற ஆழ்ந்த கடலிலிருந்து அவை மேலெழுந்து வருகின்றன.

✍ கார்ஃபீல்டு

★ அரசியல்வாதி அடுத்த தேர்தலையே எண்ணுகிறான் அரசியல் நிபுணன் அடுத்த தலைமுறையையே எண்ணுகிறான். அரசியல்வாதி தன் கட்சியின் நன்மையை நாடுகிறான் அரசியல் நிபுணன் தன் நாட்டின் நன்மையை நாடுகிறான் அரசியல் நிபுணன் கப்பலை ஓட்ட விரும்புகிறான்; அரசியல்வாதி கப்பல் தானாக எங்கு வேண்டுமானாலும் செல்லட்டும் என்று திருப்தியுடன் இருக்கிறான்.

✍ ஜே. எப். கிளார்க்

## அரசியல் நிபுணர்

☆ அரசாங்கத்தின் மதிப்பு. நாளடைவில். அதில் அங்கம் வகிக்கும் தனி நபர்களின் தகுதியேயாகும்.

✍ ஜான் ஸ்டுவர்ட் மில்

☆ கண்ணியமான இராஜதந்திரம் என்பது. தனிப்பட்டவர் களுடைய தாழ்ந்த மனப்பான்மையைப் பொது நன்மைக்காகச் சாதுரியமாகப் பயன்படுத்தலாகும்.

✍ லிங்கன்

☆ உண்மையான இராஜதந்திரம். ஒரு தேசிய சமூகத்தை அது இன்றுள்ள நிலையிலிருந்து அது இருக்கவேண்டிய நிலைக்கு மாற்றும் கலையாகும்.

✍ ஆல்ஜெர்

☆ உண்மையான அரசியல் நிபுணனுக்கும் போலியானவனுக்கும் உள்ள பெரும் வேற்றுமைகள் இவை: ஒருவன் எதிர்காலத்தை ஊடுருவிப் பார்க்கிறான்; மற்றவன் நிகழ்காலத்தை மட்டும் பார்க்கிறான். ஒருவன் நிலையான தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டு முடிவற்ற காலத்திற்காக உழைக்கிறான்; மற்றவன் சமயோசித தந்திரத்தைக் கையாண்டு, இன்று ஒரு நாளைக்காக வேலை செய்கிறான். — பர்க்

☆ நன்னெறிக்கு எவை தேவையோ, அவைகளை உண்மையான இராஜதந்திரம் ஏற்றுக்கொள்ள வேண்டும். — பர்க்

☆ இராஜதந்திரிகளுக்கு இருக்கவேண்டிய மூன்று இலட்சியங்களாவன; உடைமைகளைப் பெற்றிருப்பவர்களுக்குப் பாதுகாப்பு, புதிதாக உடைமைகள் தேடுவோருக்கு வாய்ப்பு, மக்களுக்குச் சுதந்தரமும் நம்பிக்கையும். — காப்டென்ட்டீஸ்

☆ அறன்அறிந்து, ஆன்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்
திறன்அறிந்தான் தேர்ச்சித் துணை. — திருவள்ளுவர்

☆ முறைப்படச் சூழ்ந்து, முடிவிலவே செய்வார்
திறப்பாடு இலாஅ தவர். — திருவள்ளுவர்

☆ கோல்அஞ்சி வாழும் குடியும் குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும் - வேலின்
கடைமணிபோல் திண்ணியான் காப்பும்இம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல். — திரிகடுகம்

## அராசகம்

☆ தெய்விக ஆட்சியை வெறுப்பது நாத்திகம், மானிட ஆட்சியை வெறுப்பது அராசகம். — மாக்ஃபெர்ஸன்

☆ 'மனிதனின் உரிமைகள்' என்ற நூலைப்பற்றி அது அராசகத்தின் சாரம் என்று பர்க் பேசியுள்ளார். — ஆலிஸன்

☆ அராசகம் என்பது ஆட்சியில்லாமையின் ஆட்சி. அது மூச்சு முட்டச்செய்யும்; புழுங்கச் செய்யும்; உயிருக்கு இடையூறுண்டாக்கும்; உயிரையே வதைக்கும். கீழ்த்தரமான ஆசைக்கு முடிசூட்டி, மனிதர் சம்பந்தப்பட்ட பெரும்பாலான விஷயங்களில் மடமையும் மௌட்டியமும் இழிவும் சேர்ந்து ஊளையிடச் செய்வது அராசகம். ✍ கார்லைல்

## அலட்சியம்

☆ ஒரு கண்ணில் பெருமையையும், மறு கண்ணில் மரணத்தையும் வைத்திருந்தாலும், நான் இரண்டையும் வேற்றுமையில்லாமல் பார்ப்பேன். ✍ ஷேக்ஸ்பியர்

☆ உடலை நெடுங்காலம் காத்துக்கொள்ள இதயமே இல்லாதிருத்தல் நலம். ✍ ஜே. பி. ஸெவ்

☆ உலகில் அடக்கமுடியாத அசுரன், அலட்சியம். ✍ ஒயிட்

☆ அலட்சியம் பெரிய நூல்களை எழுதியதில்லை; புதிய அற்புதக் கருவிகளைக் கண்டுபிடித்ததில்லை; ஆன்மாவைத் திகைக்க வைக்கும் 'மாபெரும்' கட்டடங்களை நிறுவியதில்லை; உள்ளத்தை உருக்கும் இசையைப் பாடியதில்லை; உயர்ந்த சித்திரங்களைத் தீட்டியதில்லை; மக்களுக்குப் பணிசெய்யும் உன்னதமான தர்மங்களை மேற்கொண்டதுமில்லை. மேன்மைக்குரிய இந்தச் செயல்களெல்லாம் ஊக்கத்தினாலும் உற்சா கத்தினாலும் இதயபூர்வமாகச் செய்யப்பெறுகின்றன. ✍ ஆனல்

## அவசரம்

☆ எப்பொழுதும் அவசரம் அதிகமானால், வேகம் குறையும். ✍ சர்ச்சில்

☆ நான் எப்பொழுது அவசரப்பட்டாலும் ஒரு பொழுதும் பரபரப்படைவதில்லை. - ஜான்வெஸ்லி

பெறப்பட்டது
சென்னை-600 ...
595718
080
RAM



☆ பரபரப்புக்கும் விரைவுக்கும் உள்ள வேற்றுமைபோல் வேறு எந்த இரு பொருள்களுக்கும் கிடையாது. பரபரப்பு பலவீனமான மனத்திற்கு அறிகுறி, விரைவு வலிமையுள்ள மனத்திற்கு அறிகுறி. — கோல்ட்டன்

☆ வேகமாக ஓடுகிறவர்கள் தடுமாறி விழுவார்கள்; அறிவோடு மெதுவாகச் செல்ல வேண்டும். — ஷேக்ஸ்பியர்

☆ பொருத்தமில்லாத அவசரம் தவறுக்கு நேர்பாதை. — மோலியர்

☆ அவசரப்படுவதால் வழக்கமாகத் தாமதமே உண்டாகும். நெல்ஸன் பிரபுவைப் போல் வழக்கப்படுத்திக்கொண்டால், அவசரத்தைத் தவிர்க்கலாம். அவர் எதற்கும் பத்து நிமிடம் முன்கூட்டியே சென்றுவிடுவார். இதுவே அவர் வாழ்க்கையில் வெற்றிக்குக் காரணம் என்று கூறியிருக்கிறார். — போவீ

☆ ஓடுவதால் பயனில்லை; குறித்த நேரத்திற்கு முன்பே புறப்படுவதுதான் அவசியம். — லாஃபான்டெயின்

☆ ஏமாற்றும் பித்தலாட்டமும் எப்பொழுதும் அவசரப்படுவது வழக்கம். எல்லா விஷயங்களுக்கும் போதிய நேரம் வேண்டும். அதிக அவசரம் அதிக நஷ்டம். — ஃபிராங்க்லின்

☆ எவன் அவசரப்பட்டாலும், அது அவன் மேற்கொண்டுள்ள காரியம் அவன் சக்திக்கு மிகவும் மேற்பட்டது என்பதைக் காட்டுகின்றது. அவசரம் வேறு, பரபரப்பு வேறு. — செஸ்டர்ஃபீல்டு

☆ மரியாதைகளுக்கு நேரம் வேண்டும். அவசரத்தைப் பார்க்கிலும் அநாகரிக — எமர்ஸன்

CPL595718

## அவசியம்

☆ ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய தலைசிறந்த ஆசிரியர் அவசியம் என்பதுதான். — ஹாதோர்ன்

★ அவசியத்தைப்பார்க்கினும் நல்ல பண்பு வேறில்லை.

✍ ஷேக்ஸ்பியர்

★ அவசியமே புதுக்கண்டுபிடிப்புகளுக்குத் தாயாகும்.

✍ ஃபார்குஹர்

★ அவசியத்தால் ஆதாயம் குறையும். ✍ ஃபிராங்க்லின்

★ விதியையும் அவசியத்தையும் நாம் வெல்ல முடியாது.

✍ லாண்டர்

★ செயலுக்கு அவசியம் நேர்ந்தால், அச்சம் போய்விடும் தைரியமான உறுதி தோன்றி, அதிருஷ்டத்திற்கு ஆதரவா கின்றது. ✍ குவார்லெஸ்

★ அவசியம் என்பது மனிதனின் பலவீனத்திற்கு அடைக்கலமும் மன்னிப்புமாகும்; அது சட்டங்கள் அனைத்தையும் ஊடுருவிச் சென்றுவிடும். வேறு வழியின்றி, அவசியத்தால் ஒருவன் பிழைசெய்தால், அவன் குற்றவாளியாகான். ✍ பாஸ்கல்

★ அவசியந்தான் எப்பொழுதும் தொழிலுக்கு முதல் தூண்டுகோல்; அதைக் கவனத்துடனும், விடாமுயற்சியுடனும் ஆற்றலுடனும் பயன்படுத்துவோர் தோல்வியடைவது அரிது

✍ சாமுவேல் ஸ்மைல்ஸ்

## அவதூறு

★ நீ பனிக்கட்டி போல் குற்றமில்லாதிருந்தாலும், பனிபோல் பரிசுத்தமாயிருந்தாலும், நீ பழிச்சொல்லிலிருந்து தப்ப முடியாது. ✍ ஷேக்ஸ்பியர்

★ தூய வெண்மையான பண்பையும் பின் நின்று புண்படுத்தும் அவதூறு தாக்கிவிடும். ✍ ஷேக்ஸ்பியர்

★ என் பெயரை வாளால் குத்துவோன் (மாசு படுத்துவோன்) என் உடலையும் குத்துவான்; ஆனால், தூக்கு மரத்திற்கு அஞ்சுகிறான். ✍ கிரவுச்

☆ மனச்சான்று பரிசுத்தமாயிருக்கையில், அது கடுமையான துவேஷத்தையும், கடுமையான பழியையும் வென்றுவிடும். ஆனால், அதில் ஒரு மாசு அல்லது மறு இருந்துவிட்டால், வசைமொழிகள் செவிகளிலே சம்மட்டிகளைப் போலத் தாக்கும்.
✍ அலெக்ஸாண்டர் புஷ்கின்

☆ ஒருவன் தன் கடமையை விடாமல் செய்துகொண்டு மௌனமாயிருப்பதே பழிக்குச் சரியான பதிலாகும்.
✍ வாஷிங்டன்

☆ எதிரே இல்லாதவனைப்பற்றிப் புறங்கூறுவோன் பழி சொல்லி அவனுக்குத் தீங்கு செய்கிறான்; அந்தப் பழி உண்மையானதா என்று தெரியுமுன்பே அதை நம்புவோனும் குற்றவாளியே.
✍ ஹிரோடோட்டஸ்

☆ அசட்டையாக விடப்பெற்ற அவதூறு தானே மறைந்துவிடும்; உனக்கு அதனால் வருத்தம் ஏற்பட்டதாகக் காட்டிக் கொண்டால், அது உண்மையாயிருக்கும் என்று நம்பும்படி செய்துவிடும்.
✍ டாஸிடஸ்

☆ மற்றொருவனைப்பற்றி உன்னிடம் ஒருவன் வாயைத் திறந்தால், நீ உன் செவியை அடைத்துக்கொள்.
✍ குவார்லெஸ்

☆ ஒரு பாவமும் அறியாதவர்களைக்கூடத் தைரியத்தை இழக்கும்படி செய்யும் சில அவதூறுகளும் இருக்கின்றன.
✍ நெப்போலியன்.

☆ அவதூறுகளைக் கவனிப்பது அவசியம் என்று நான் ஒருபோதும் கருதுவதில்லை; அவை நெருப்புப் பொறிகள், நாம் அவைகளை ஊதிக் கனிய வைக்காவிட்டால் அவை தாமாகவே அவிந்து போகும். - போர்ஹேவ்

☆ அவதூறு கடல்களையும், மலைகளையும், பாலைவனங்களையும் எளிதில் தாண்டிச் செல்லும். ✍ கோல்டன்

☆ பொய்யைத் துரத்திக்கொண்டு ஓடாதே; நீ அதை விட்டுவிட்டால், அது விரைவில் தானாகவே செத்துவிடும்.

✍ *இ. நாட்*

☆ என்னைப்பற்றித் தவறாக எண்ணும்படி செய்ய முயன்றதற்காக அவதூறுக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அது என்னை அதிக எச்சரிக்கையாயிருக்கும்படியும், என் செயல்களில் அதிகக் கவனமாயிருக்கும்படியும் செய்துள்ளது.

✍ *பென் ஜான்ஸன்*

☆ தீயவனும் புரட்டனுமே போலிப் புகழில் மகிழ்ச்சியடைவர், அவதூறுக்கு அஞ்சி நடுங்குவர்.

✍ *ஹொரேஸ்*

☆ மற்றவர்களின் தீய நாவுகளை அடக்கி வைக்க நம்மால் இயலாது; ஆனால், நாம் முறையாக வாழ்ந்தால், அவர்களை அலட்சியமாக ஒதுக்கிவிடலாம்.

✍ *கேட்டோ*

☆ பழிச்சொல்லை எவரும் அழைத்து வந்து இருக்க இடம் கொடாமலிருந்தால், அது தானாகவே வாடி மடிந்துவிடும்.

✍ *லெய்ட்டன்*

☆ உண்மையாயிருக்கத் தகாத விஷயத்தைப் பொய்யென்றே நம்பு.

✍ *ஷெரிடன்*

☆ துவேஷமூட்டும் வதந்திகளையும், ஆராய்ந்து பாராத செய்திகளையும், புறம் கூறித் திரிபவனை உன் கொடிய பகைவர்களுள் முதன்மையானவனாக எண்ணிக்கொள்.

✍ *லவேட்டர்*

☆ புறங்கூறுவோனையும், அவனுக்குச் செவி சாய்ப்பவனையும் சேர்த்துத் தூக்கிலிடவேண்டும். ஒருவன் நாவிலே கயிற்றைக் கட்டியும், ஒருவன் செவிகளிலே கயிற்றையும் கட்டித் தொங்கவிட வேண்டும்.

✍ *ஸௌத்*

☆ திருட்டுச்சொத்தை வாங்குதல் தானே திருடியது போன்ற குற்றமாவது போல, அவதூறைக் கேட்டுக்கொண்டிருப்பதும் குற்றமாகும். ✍ செஸ்டர்ஃபீல்டு

☆ தகுதியில்லாத புகழ்ச்சி மறைமுகமான அவதூறாகும். ✍ போப்

☆ கோழை வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் முறைதான் அவதூறு. அதைப் பரப்புதலே அவனுக்குப் பாதுகாப்பு. ✍ ஜான்ஸன்

☆ வன விலங்குகளுள் அவதூறு பேசுவோனுடைய கடியும், வீட்டில் வளர்க்கும் விலங்குகளுள் இச்சகம் பேசுவோனுடைய கடியும் மிகவும் அபாயகரமானவை. ✍ டயோகினிஸ்

☆ மனப்பகையிலிருந்து அவதூறு தோன்றுவது போலச் செருக்கிலிருந்தும் தோன்றும். புறங்கூறுவோனை ஒரு நாகம் தீண்டினால், நாகமே மடியும். பல செவிகள் திறந்திராவிட்டால், பல வாய்களும் திறந்திருக்க மாட்டா. ✍ பிஷப் ஹால்

☆ கோள் சொல்பவன் புறங்கூறுவோனுக்குச் செவி சாய்க்க வேண்டாம்; அவன் மற்றவர்களின் அந்தரங்கங்களைக் கண்டுபிடித்து வெளியிடுவது போலவே உன்னிடத்தும் அடுத்த தடவை செய்வான். ✍ சாக்ரடீஸ்

☆ அவதூறை அடக்குவதற்கு அதை அலட்சியமாகத் தள்ளிவிடுவதே முறை; அதை எட்டிப் பிடித்து மறுக்க முயன்றால், ஓட்டத்தில் அது உன்னை முந்திவிடும். ✍ அ. டூமாஸ்

☆ தன் எதிரியை இழிவு செய்வதற்காக ஏதாவது கதைகளைக் கட்டுவதற்குத் தேவையான கற்பனா சக்தி இல்லாதவன் எவனுமில்லை. ✍ அடிஸன்

☆ அறம்கூறான், அல்ல செயினும், ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது. ✍ திருவள்ளுவர்

☆ புறம்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின், சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும். ✍ திருவள்ளுவர்

☆ பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும். ✍ திருவள்ளுவர்

☆ கொலைஒக்கும் கொண்டுகண் மாறல். ✍ நான்மணிக்கடிகை

☆ கோள்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு.

✍ கொன்றைவேந்தன்

## அவநம்பிக்கை

☆ வாழ்க்கை ஒரு போராட்டம். ஒருவன் நம்பிக்கையை எளிதில் இழந்துவிட்டால், அவன் இரண்டு கடமைகளிலிருந்து வழுவியவனாகிறான். மனிதனுக்குரிய தலைசிறந்த பண்பாகிய மனஉறுதியை அவன் இழக்கிறான். உலகிற்கு வழிகாட்டி ஆள்கின்ற பரம கருணாமூர்த்தியான இறைவனையும் மறுத்தவனாகிறான். ✍ ஜென்போர்ட்டர்

☆ ஒரு தொழிலை அது நடக்காது என்று நம்புதல், அதை நடவாமற் செய்வதற்கு வழி. ✍ கால்லியர்

☆ ஒரு காரியத்தை நாம் செய்யமுடியும் என்று உணர்வதே அதன் வெற்றியாகும். ஐயப்பட்டு அவநம்பிக்கை கொள்வதே தோல்விக்கு நிச்சயமான வழியாகும்.

☆ 'எமக்குத் துணையாவார் வேண்டும்'என்று எண்ணித்
தமக்குத் துணையாவார்த் தாம்தெரிதல் வேண்டா;
பிறர்க்குப் பிறர்செய்வது உண்டோமற்று இல்லை
தமக்கு மருத்துவர் தாம். ✍ பழமொழி

☆ 'இனியாரும் இல்லாதார் எம்மின் பிறர்யார்?
தனியேம்யாம்' என்றுஒருவர் தாம்மடியல் வேண்டா
முனிவில ராகி முயல்க. முனிவில்லார்
முன்னியது எய்தாமை இல். ✍ பழமொழி

☆ எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின். ✍ திருவள்ளுவர்

☆ கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல். ✍ திருவள்ளுவர்

☆ துன்பம் உறவரினும் செய்க. துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. ✍ திருவள்ளுவர்

☆ இசையாது எனினும், இயற்றியோர் ஆற்றல்
அசையாது நிற்பதாம் ஆண்மை. ✍ நாலடியார்

## அவமரியாதை

☆ அவமரியாதையாக நடப்பதற்கு ஒருவனுக்கு எப்படி உரிமையில்லையோ, அதுபோலவே அவமரியாதையாய்ப் பேசவும் உரிமை கிடையாது; மற்றொருவனை அடித்துக் கீழே தள்ள ஒருவனுக்கு எப்படி உரிமையில்லையோ, அதுபோலவே முரட்டுத்தனமாய்ப் பேசவும் அவனுக்கு உரிமையில்லை.
✍ ஜான்ஸன்

☆ முன்னதாகத் திட்டமிட்டுச் செய்த அவமரியாதைக்கு நஷ்டஈடு பெறவேண்டாம்; அதை மறந்துவிடு; அதை மன்னித்துவிடு. ஆனால், அப்படிச் செய்தவனிடமிருந்து வெகுதூரம் ஒதுங்கிவிடு. ✍ லவேட்டர்

☆ ஒருவன் சந்தர்ப்பம் அறியாமல் பேசுதலும், பேசிக்கொண்டிருக்கும் மற்றவர்களின் கவனத்தைத் தன்பால் இழுத்தலும், தன்னைப்பற்றியே பேசுதலும், தான் எவர்களுடன் இருக்கிறானோ அவர்களை மதியாமலிருத்தலும் அவனை அவமரியாதை என்ற குற்றமிழைத்தவனாகச் செய்யும். ✍ ஸிஸெரோ

☆ வெட்கத்தை உணர முடியாதவனும், அச்சத்தை அறியாதவனுமான ஒருவன் அவமரியாதையின் சிகரத்தை அடைந்தவனாவான். ✍ மினாண்டர்

☆ உலகை அறிந்தவன் வெட்கப்படமாட்டான்; தன்னை அறிந்தவன் ஆணவமாயிருக்க மாட்டான். ✍ *ஸி. ஸிம்மன்ஸ்*

☆ ஆணவம் என்ற குற்றச்சாட்டுக்கு இடம் கொடாமலிருக்க வேண்டுமானால், நாம் செய்கின்ற வேலையில் வெட்கப்படக் கூடாது; நாம் வெட்கப்பட வேண்டிய வேலை எதையும் ஒரு போதும் செய்யக்கூடாது. ✍ *ஸிஸெரோ*

☆ அவமரியாதைக்கு உட்பட்டிருந்தால், மேலும் அதைச் செய்ய இடம்கொடுப்பதாகும். ஒருவன் (பிறரிடமிருந்து) எவ்வளவு மரியாதையைப் பெற முடியுமோ, அந்த அளவுக்குத்தான் அவனுக்கு மரியாதை கிடைக்கும். ✍ *ஹாஸ்லிட்*

☆ மனித சமூகத்தில் பெரும்பாலோர், அநீதியான செயல்களைக் காட்டிலும், அவமரியாதையான பேச்சையே அதிகமாக வெறுப்பர்; அவர்கள் தீமையைத் தாங்குதல் எளிது; ஆனால், அவமரியாதையைத் தாங்குதல் அரிது. ✍ *புளுடார்க்*

☆ மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம். ✍ *உலகநீதி*

☆ பெருமை யுடையாரைப் பீடுஅழித்தல் இன்னா
✍ *இன்னா நாற்பது*

☆ பொறுப்பர்என்று எண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும். ✍ *நாலடியார்*

# அழகு

☆ அழகின் சிறந்த பகுதி என்பது எந்தச் சித்திரமும் வெளிப்படுத்த முடியாத ஒன்று. ✍ *பேக்கன்*

☆ ஒருவர் பார்க்கும் அழகில் ஒரு பகுதி அவர் பார்வையில் இருக்கின்றது. ✍ *போவீ*

☆ தலைசிறந்த அழகியைக்காட்டிலும், புற அழகிலே குறைந்த, ஆனால், அறிவும் புத்திக் கூர்மையும் மிகுந்த ஒரு பெண் என்னை அதிகமாய்க் கவர்ந்துவிடுகிறாள்; உள்ளேயிருக்கும் தெய்வத் தன்மையே வெளியேயுள்ள தெய்வத் தன்மைக்குக் காரணமாயுள்ளது. ✍ *வாஷிங்டன் இர்விங்*

☆ அழகைப் போற்றுவதே விகாரமான புலனுணர்ச்சிகளுக்குச் சிறந்த மாற்றாகும். உயர்ந்த ரகமான உருவப் படங்கள் யாவும் பரிசுத்தமாகவே உள்ளவை. அவை சிந்தனைகளைத் தூய்மைப்படுத்துகின்றன. சோகத்தில் முடியும் துன்பியல் நாடகம் மன உணர்ச்சிகளைத் தூய்மைப்படுத்துகின்றன என்று அரிஸ்டாட்டல் கூறியுள்ளதைப் போன்றவை அந்தச் சித்திரங்கள். ✍ *ஷிலிகெல்*

☆ அழகின் ஊற்று இதயத்திலுள்ளது. மேலான ஒவ்வொரு சிந்தனையும் உன் இதயத்தின் சுவர்களை அழகு செய்யும் சித்திரங்களாக அமைகின்றன.

☆ அழகோடு ஒழுக்கமும் சேர்ந்தால், அது இதயத்தின் சுவர்க்கமாகும்; தீயொழுக்கம் அதனுடன் சேர்ந்துவிட்டால், அதுவே ஆன்மாவின் நரகமாகும். ✍ *குவார்லெஸ்*

☆ அழகு இயற்கை அளித்துள்ள பேறு. ✍ *பிளேட்டோ*

☆ அழகு அமைதியான ஓர் ஏமாற்று. ✍ *தியோஃபிராஸ்டஸ்*

☆ அழகு இன்பமான கவர்ச்சி. ✍ *தியோகிரிடஸ்*

☆ அழகு உலகிலுள்ள எல்லாச் சிபாரிசுக் கடிதங்களையும்விட மேலானது. ✍ *அரிஸ்டாட்டல்*

☆ அழகு இயற்கையின் உன்னதமான ஒரு பரிசு. ✍ *ஹோமர்*

☆ அழகு தெய்வங்களின் அருளாகும். ✍ *ஓவிட்*

☆ அழகு சிறிதுகாலம் நிலைத்திருக்கும் ஒரு கடுமையான ஆட்சி. ✍ *சாக்ரடீஸ்*

☆ ஆகா! உண்மை என்ற அணியைப் புனைந்துகொண்டால் அழகு எவ்வளவு பேரழகாகத் தோன்றுகின்றது.

✍ ஷேக்ஸ்பியர்

☆ அழகுள்ள எதையும் பார்க்கும் வாய்ப்பை ஒருகாலும் இழந்துவிட வேண்டாம். ✍ எமர்ஸன்

☆ செல்வச் செழிப்புடனுள்ள ஒரு மனிதனை நேசிப்பதிலுள்ள பெருமையே அழகுள்ள ஒரு பெண்ணிடம் அன்பு கொள்வதிலும் இருக்கின்றது. இரண்டும் மாறக்கூடியவை.

✍ போப்

☆ அழகு மனிதர்களை இழுக்கின்றது; அத்துடன் தங்கமோ வெள்ளியோ சேர்ந்துவிட்டால், கவர்ச்சி பத்து மடங்காகி விடும். ✍ பிக்கெட்

☆ உண்மையான அழகின் அளவுகோல் எதுவென்றால், ஆராய ஆராய அந்த அழகு கூடிக்கொண்டிருக்க வேண்டும்; போலியாயிருந்தால், அழகு குறைந்துகொண்டேயிருக்கும்.

✍ கிரேவில்லி

☆ எல்லா அழகும் காதலைத் தூண்டுவதில்லை. சில அழகுகள் கண்ணுக்கு இனிமையாய்த் தோன்றுவரே ஒழிய அன்புணர்ச்சிகளை எழுப்புவதில்லை. ✍ செர்வான்டிஸ்

☆ இறைவனை நான் அகத்தில் அழகுடன் விளங்க அருள்வாய் என்று வேண்டிக்கொள்கிறேன். ✍ சாக்ரடீஸ்

☆ அழகு புறத்தில் தெரியும்படியான ஒரு பரிசு. அது எவர்களுக்கு மறிக்கப்பட்டுள்ளதோ அவர்களைத் தவிர வேறு எவரும் வெறுப்பதில்லை. ✍ கிப்பன்

☆ இயற்கை அளிக்கும் முதல் பரிசு, அழகு. அது முதலாவது பறித்துக்கொள்வதும் அதைத்தான். ✍ மொரே

☆ அழகு பஞ்சாங்கத்தைப் போன்றது; அது ஒரு வருடம் நிலைத்திருந்தால் நல்லதுதான். ✍ டி. ஆடம்ஸ்

☆ பகுத்தறிவைக்காட்டிலும் வலிமையுள்ள ஓர் உள்ளுணர்ச்சியால், அழகுடன் உண்மையைச் சேர்த்தே ஆன்மா காணுகின்றது.

✍ டக்கர்மான்

☆ ஆண்டவன் நல்லொழுக்கத்தின்மீது வைக்கும் முத்திரையே அழகு. இயற்கையான எந்தச் செயலும் எழிலுடையது; ஒவ்வொரு வீரச்செயலும் நேர்த்தியானது. அது நிகழும் இடத்தையும், அருகில் நிற்பவர்களையும் ஒளிமயமாக்குகின்றது.

✍ எமர்ஸன்

☆ கிளியோபாட்ரா ராணியின் மூக்கு சற்றுக் குட்டையாக அமைந்திருந்தால், அது உலகத்தின் சரித்திரத்தை வேறு விதமாக மாற்றியிருக்கும்.

✍ பாஸ்கல்

☆ கவர்ச்சியாயும் அழகாயும் உள்ளது எப்பொழுதுமே நல்லதாக இருப்பதில்லை; ஆனால், நல்லது எதுவும் எப்பொழுதும் அழகுள்ளது.

✍ லா' என்கிளாஸ்

☆ அழகான ஒருவரிடம் காணும் நல்ல பண்புகூட அதிக எழிலுடன் விளங்குகின்றது.

✍ வர்கில்

☆ அழகு நன்மையானதுதான்; ஆனால், வீணானது, அதன் பயனும் சந்தேகமானதுதான்; அது திடீரென்று வாடும் வெளிப் பகட்டு; அரும்பத் தொடங்கும் பொழுதே மடியக்கூடிய மலர்; சந்தேகமான தன்மை; ஒரு மினுக்கு; ஒரு கண்ணாடி; ஒரு மலர்; அது ஒரு மணி நேரத்திற்குள் இழக்கப்பெறுவது; வாடக்கூடியது; உடையக்கூடியது; அழியக்கூடியது.

✍ ஷேக்ஸ்பியர்

## அறம்

☆ ஆன்மாவில் உலகின் கறை படியாமல் உனது நற்குணத்தால் தூய்மையாக வைத்துக்கொள்ளவும்.

✍ பெய்லி

☆ ஆரோக்கியமில்லாமல் நீ சுகமாக வாழ முடியுமானால் ஒழுக்கமில்லாமல் இன்பமாக வாழவும் முடியும். ✍ பர்

☆ நல்லொழுக்கம் மட்டுமே புயலுக்கு அசையாமல், உறுதியாக நிற்கும் என்பது இறைவனின் சட்டம். ✍ பிதாகோரஸ்

☆ நல்லொழுக்கம் என்பது போர்நிலை. அதில் வசிப்பதற்கு நாம் நம்மையே எதிர்த்துப் போராடிக்கொண்டேயிருக்க வேண்டும்.

✍ ரூஸோ

☆ அறம் எனப்படுவது நாம் நமக்கும், நம்முடன் வாழும் மக்களுக்கும், இறைவனுக்கும், அவர்களுடன் கொண்டுள்ள உறவுகளுக்குத் தக்கபடி நம் கடமையைச் செய்வதாகும். அக்கடமை நமது பகுத்தறிவாலும் இறைவனுடைய வெளிப் பாடுகளாலும், இறைவனாலும் நமக்கு அறிவுறுத்தப் படுகின்றன. ✍ ஏ. அலெக்சாண்டர்

☆ ஒரு மனிதனுடைய பண்பை அவனுடைய அசாதாரண முயற்சிகளைக்கொண்டு அளவிட வேண்டாம். அவனுடைய தினசரி நடத்தையைக்கொண்டே பார்க்க வேண்டும்.

✍ பாஸ்கல்

☆ எல்லோரும் தர்மத்திற்குத் தலை வணங்குவார்கள். ஆனால் பிறகு விலகிப் போய்விடுவார்கள். ✍ டிஃபினோட்

☆ நல்லவன் நிச்சயமாக மேலும் நல்லவனாவான். தீயவன் அவ்வாறே மேலும் தீயவனாவான்; ஏனெனில், பண்பு, தீமை காலம் ஆகிய மூன்றும் ஒரு பொழுதும் அமைதியாக நிற்பதில்லை. ✍ கோல்ட்டன்

☆ எந்த மனிதனும் அறவினையைச் செய்ய விரும்பும் போதுதான் அவன் விருப்பப்படி செய்யலாம். மற்ற விஷயங்களில் அவனுடைய இஷ்டப்படி நடக்க உரிமை கிடையாது. ✍ ஸி. சிம்மன்ஸ்

☆ நன்மை என்பது செயலில் காணும் அன்பு. ✍ ஜே. ஹாமில்டன்

☆ ஏதாவது ஒரு கொள்கைக்காக வாழுங்கள்; நன்மையைச் செய்யுங்கள்; காலத்தின் புயல்கள் அழிக்க முடியாத நினைவுச் சின்னங்களை உங்களுக்குப் பின்னால் விட்டுச் செல்லுங்கள்.
✍ சால்மர்ஸ்

☆ உன் செயல்கள் மாய்ந்து ஒழிந்து போவதில்லை. நல்ல செயல் எதுவும் நித்தியமான வாழ்வுக்குரிய விதையாகும்.
✍ பெர்னார்டு

☆ மனிதர்களுக்கு நன்மையைச் செய்வதில் மனிதர்கள் அநேகமாகத் தெய்வங்களுக்கு நிகராக ஆகின்றனர். வேறு எதிலும் இப்படி ஆக முடியாது. ✍ ஸிஸெரோ

☆ பணக்காரனாயிருந்து தர்மம் செய்யாதவன் அயோக்கியன்; அவன் மூடன் என்பதையும் எளிதில் நிரூபித்துவிடலாம்.
✍ ஃபீல்டிங்

☆ நாம் சேர்த்து வைக்கும் உண்மையான சொத்துகள் நம்முடைய தர்மங்கள்தாம். நாம் எவ்வளவு கொடுக்கிறோமோ அந்த அளவுக்கே ஆதாயம் பெறுகிறோம். ✍ ஸிம்ஸ்

☆ நல்ல செயல் ஒவ்வொன்றும் தர்மமாகும். உன் சகோதரனைக் கண்டால் புன்னகை செய்தல் தர்மம்; உன்னுடன் வாழ்பவன் ஒருவனை நற்செயல்கள் புரியும்படி தூண்டுதல் தானம் செய்வதற்கு ஈடாகும்; வழிதவறியவனை நீ வழியில் கொண்டு சேர்த்தல் தர்மம். குருடர்களுக்கு நீ செய்யும் உதவி தர்மம். சாலையில் கிடக்கும் கற்களையும், முட்களையும் நீ நீக்குதல் தர்மம். தாகமுள்ளவருக்குத் தண்ணீர் அளித்தல் தர்மம். மறுமையில் ஒரு மனிதனுக்கு உண்மையான செல்வம், இவ்வுலகில் அவன் தன் சகோதர மனிதனுக்குச் செய்யும் நன்மைதான். அவன் இறந்த பிறகு, 'அவன் என்ன சொத்து வைத்துவிட்டுப் போயிருக்கிறான்?' என்று மக்கள்

கேட்பார்கள். ஆனால், அவன் என்ன நற்செயல்களைத் தான், வருமுன்னால் அனுப்பியிருக்கிறான்?' என்றே தேவதூதர்கள் கேட்பார்கள்.

*✍ முகம்மது நபி*

☆ மற்றொருவனுக்கு நன்மை செய்வதில் ஒருவன் தனக்கும் நன்மை செய்துகொள்கிறான்; முடிவான பயனில் மட்டுமன்றி அந்தச் செயலிலேயே நன்மை இருக்கின்றது; 'நன்மையைச் செய்கிறோம்' என்ற எண்ணம் போதிய சன்மானமாகும்.

*✍ செனிகா*

☆ துயரத்தைக் கண்டு இரங்குதல் மனித சுபாவம்; அதை நீக்குதல் தெய்விகமாகும்.

*✍ ஏ. மான்*

☆ மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்,
ஆகுல நீர பிற.

*✍ திருவள்ளுவர்*

☆ அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

*✍ திருவள்ளுவர்*

☆ ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.

*✍ திருவள்ளுவர்*

☆ இன்றுகொல், அன்றுகொல், என்றுகொல் என்னாது,
பின்றையே நின்றது கூற்றம் என்றுஎண்ணி
ஒருவுமின் தீயவை, ஒல்லும் வகையான்
மருவுமின் மாண்பார் அறம்.

*✍ நாலடியார்*

☆ இன்சொல் விளைநிலமா, ஈதலே வித்தாக,
வன்சொல் களைகட்டு, வாய்மை எருஅட்டி,
அன்புநீர் பாய்ச்சி, அறக்கதிர் ஈன்றன் ஓர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

*✍ அறநெறிச்சாரம்*

☆ அறிவது அறிந்தார் அறத்தின் வழுவார்,
நெறிதலை நின்றுறு ஒழுகுவார்.

*✍ அறநெறிச்சாரம்*

☆ தருமத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம். ✍ உலகநீதி

## அறிவின்மை

☆ கல்லாமையைவிடப் பிறவாமலிருத்தல் மேலாகும். ஏனெனில், அறிவின்மைதான் எல்லாத் துயரங்களுக்கும் வேர்.
✍ பிளேட்டோ

☆ அறியாதாரிடம் அனுதாபம் கொள்வது தலைசிறந்த பண்பாட்டிற்கு அறிகுறி. ✍ எமர்ஸன்

☆ தன் அறியாமையைத் தான் அறியாதிருத்தலே அறியாமையின் துயரமாகும். ✍ ஆல்காட்

☆ அறியாமையால் ஆணவம் வளரும்; ஆகக் குறைவான அறிவுடையவரே அதிகம் தெரிந்ததாகப் பாவனை செய்வர்.
✍ கே

☆ அறிவிலி கழுகுச் சிறகுகளையும், ஆந்தைக் கண்களையும் பெற்றிருக்கிறான். ✍ ஜியார்ஜ் ஹெர்பர்ட்

☆ கல்வியில் செருக்கடைதல் முதன்மையான அறியாமை.
✍ ஜெரிமி டெய்லப்

☆ அறிவிலி மௌனமாயிருப்பதைப் போல் அவனுக்கு நன்மை வேறில்லை; இதை அவன் உணர்வதனால் அவன் அறிவிலியாயிருக்க மாட்டான். ✍ ஸாஅதி

☆ அறிவிலியாயிருப்பதைவிடப் பிச்சைக்காரனாயிருப்பது மேல்; பிச்சைக்காரனுக்குப் பணம் ஒன்றுதான் தேவை. ஆனால், அறிவிலிக்கு மானிடப் பண்பே தேவை. ✍ அரிஸ்டிப்பஸ்

☆ அறியாமை இறைவனின் சாபத்தீடு. அறிவுடைமை நாம் வானத்திற்குப் பறந்து செல்ல உதவும் சிறகு. ✍ ஷேக்ஸ்பியர்

☆ அறிவின்மை உள்ளத்தின் இரவு. ஆனால், அந்த இரவில் மதியுமில்லை. தாரகையுமில்லை. ✍ கன்ஃபூஷியஸ்

☆ அறிவிலிகளின் நடுவிலுள்ள அறிவாளி, குருட்டு மனிதர்கள் நடுவிலுள்ள ஓர் அழகிய பெண்ணுக்கு ஒப்பிடப்பெற்றிருக்கிறான். ✍ ஸாஅதி

☆ குழந்தைப்பருவம் அதிகக் காலம் நீண்டுவிடுவதுதான் அறியாமை. ஆனால், அதில் குழந்தைப்பருவத்தின் கவர்ச்சி தான் இருப்பதில்லை. ✍ போஃபெர்ஸ்

☆ அறியாமையே பேரின்பமாயிருந்தால் அறிவுடன் இருப்பது தவறு. ✍ கிரே

☆ 'புல்லறிவுள்ள மூடர்கள் தாமே தமக்குப் பகைவர்; அவர்கள் பாவ கருமங்களைச் செய்துகொண்டு திரிகின்றனர்; அவை கசப்பான துன்பக்கனிகளையே அளிக்கின்றன. ✍ புத்தர்

☆ அறிவிலார் என் உடையரேனும் இலர். ✍ திருவள்ளுவர்

☆ அஞ்சுவது அஞ்சாமை பேதைமை. ✍ திருவள்ளுவர்

☆ அறிவுடையார் அன்றி அதுபெறார் தம்பால்
செறிபழியை அஞ்சார் சிறிதும். ✍ நன்னெறி

அச்சமும் நாணமும் அறிவிலோர்க்கு இல்லை. ✍ வெற்றிவேற்கை

## அறிவதில் ஆத்திரம்

☆ ஒன்றைத் தெரிந்துகொள்ள ஆத்திரப்படுதல் அல்லது அவாவினால் தூண்டப்படுதல் என்பது, விலக்கப்பட்ட கனியுள் இருக்கும் கொட்டை போன்றது. இயற்கையாக மனிதனின் தொண்டையில் அது ஒட்டிக்கொள்கின்றது. சில சமயங்களில் அவன் மூச்சையும் அது அடைத்துவிடுகின்றது. ✍ ஃபுல்லர்

☆ பழங்காலத்தில் 'உன்னை அறிந்துகொள்' என்ற வாக்கியமே மிகவும் பிரபலமாயிருந்தது; தற்காலத்தில் 'உன் அண்டை வீட்டுக்காரரைத் தெரிந்துகொள்வதோடு, அவரைப்பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்துகொள்ளவும்' என்ற வாக்கியம் பழைய வாக்கியத்திற்குப் பதிலாக வந்துவிட்டது.

*✍ ஜான்ஸன்*

☆ ஆத்திரமாக அறிய விரும்புகிறவர்களிடம் பேசினால், அப்பேச்சின் விஷயத்தை அவர்கள் சொந்தத்திற்கு உபயோகிப்பதில்லை. புனலைப்போல, வேறு ஒருவருக்கு அதை அளிப்பார்கள். (புனல்-ஏந்து குழல்) *✍ ஸ்டீல்*

## அறிவாற்றல்

☆ அறிவாற்றல் என்பது மூளையின் ஆற்றல். *✍ ஷில்லர்*

☆ நாம் மரிக்கும்வரை நமது அறிவாற்றலைப் பயன்படுத்திக் கொள்வதில் ஆண்டவர் வரையறை எதுவும் விதிக்கவில்லை.

*✍ பேக்கன்*

☆ அறிவாற்றலுக்கு ஒரே குறை உண்டு. அது மிகப்பெரிய குறையாகும்; அதுவே மனச்சான்று இல்லாமை. நெப்போலியனை இதற்கு ஏற்ற உதாரணமாகக் கொள்ளலாம். அவனுடைய மூளையின் ஆற்றலில் ஒரு சிறிதளவாவது அவன் இதயத்திற்கு இருந்திருந்தால் அவன் எக்காலத்திய சரித்திரத்திலும் தலைசிறந்த பெரியோர்களுள் ஒருவனாகத் திகழ்ந்திருப்பான். *✍ ஜே. ஆர். லோவெல்*

☆ அறிவாற்றலை ஒருவன் மேசைமேல் உள்ள விளக்கைப் போல், தனக்கு மட்டும் பயன்படுத்திக்கொள்ளாமல் ஒரு கலங்கரை விளக்கத்தைப்போல, பிறருக்கும் பயனளிக்கச் செய்ய வேண்டும். - பீச்சர்

☆ அறிவாற்றலுள்ள மனிதன், அத்துடன் நற்குணத்தையும் பெற்றிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவனால் பயனில்லை.
✍ *சாம்ஃபோர்ட்*

☆ ஞானிகளின் அறிவாற்றல் கண்ணாடி போன்றது. அது தெய்விக ஒளியை உள்ளே வாங்கிக்கொண்டு அதைப் பிரதிபலிக்கவும் செய்கின்றது.
✍ *ஹேர்*

☆ இதயத்தில் சமயப்பற்றில்லாமல் அறிவாற்றலை மட்டும் வளர்த்துக்கொள்ளல் நாகரிகமான அநாகரிகம், அது மறைமுகமான மிருகப்பான்மை.
✍ *பன்ஸென்*

☆ அறிவாற்றல் மிகுந்தவர்களின் கருவிகளே பெரும் செயல் வீரர்கள். ஆனால், அவ்வீரர்கள் இதை அறிந்திருக்க மாட்டார்கள்.
✍ *ஹீய்ன்*

☆ உலகம் உள்ளவரையும், கதிரவன் முதலில் மலைகளின் உச்சியில்தான் பிரகாசிப்பான். பிறகுதான் சமவெளிகளில் ஒளி வீசுவான்.
✍ *புல்வெர்*

☆ அறிவாற்றல், தொலைவிலுள்ள நாடுகளை விரும்புகின்றது. சில்லறை வியாபாரி தன்னைச் சுற்றியிருப்பவர்களிடமே வாணிபம் செய்கிறான். ஆனால், பெரிய வணிகன் உலகத்தின் நாலு திசைகளையும் ஒன்றாகச் சேர்த்துத் தொழில் நடத்துகின்றான்.
✍ *புல்வெர்*

## அறிவுக் கூர்மை

☆ ஒரு மனிதன் தன் பணப்பையில் இருப்பதையெல்லாம் மூளைக்குள் ஏற்றிக்கொண்டுவிட்டால், அந்த நிதியை அவனிடமிருந்து எவரும் கவர முடியாது. ✍ *ஃபிராங்க்லின்*

☆ அறிவுக் கூர்மை ஒரு தீவட்டி அல்லது கொள்ளிக் கட்டை போன்றது; அதன் தன்மை அதை உபயோகிப்பவன் செயலில் இருக்கின்றது.
✍ *காபல்ரோலே*

☆ உயர்ந்த மனிதன் ஒழுக்கம், அறிவு, உடல்நிலை ஆகிய மூன்று இயற்கைகளிலும் ஒரே மாதிரியான அளவில் வளர்ச்சி பெறுவான்.
✍ ஜெர்ரால்டு

☆ ஒளி பரவியுள்ளது, துப்பாக்கிகளில் மாட்டியுள்ள சனியன்கள் கூடச் சிந்தனை செய்கின்றன.
✍ கோஸத்

☆ எத்தகைய அறிவுத் திறன்களையும் நாம் பழிக்கக்கூடாது. அவை தனித்தனிப் பயன்களையும் கடமைகளையும் பெற்றிருக்கின்றன; மனிதனின் இன்பத்தையே அவை அனைத்தும் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. அவை நம்மை முன்னேறச் செய்கின்றன, உயர்த்துகின்றன, வாழ்க்கைக்கு இன்பமளிக்கின்றன.
✍ ஸிட்னி ஸ்மித்

## அறிவுடைமை

☆ அறிவைப் பெற்றிருந்தால் அதை உபயோகிக்க வேண்டும். உனது அறியாமையை ஒப்புக்கொள்வது போல, அறிவை அடைந்திருந்தால் போதாது.
✍ கன்ஃப்யூஷியஸ்

☆ அறிவுடைமைக்கு முதற்படி நாம் அறியாமையில் இருக்கிறோம் என்பதை உணர்தல்.
✍ ஸெஸில்

☆ பூரணமாகத் தெரிந்துகொள்ளாத விஷயம் நம் அறிவில் சேராது.
✍ கதே

☆ என்னைவிட அதிகமாய்த் தெரிந்துகொண்டுள்ள மனிதனிடம் நான் பொறாமை கொள்வதில்லை. ஆனால், என்னைவிடக் குறைவாகத் தெரிந்தவர்களிடம் இரக்கம் கொள்கிறேன்.
✍ ஸர். டி. பிரௌன்

☆ அறிவுடைமையே வலிமை என்று பேக்கன் சொல்லியிருக்கிறார், ஆனால், வெறும் அறிவு வலிமையாகிவிடாது. அது, வலிமையாகக் கூடும். செயல்தான் வலிமை; அதிலும்

அறிவினால் வழிகாட்டப்பெறும் செயலே தலைசிறந்தது.

*✍ டி. டபுள்யு. பால்மெர்*

☆ அறிவில் உண்மையான முன்னேற்றம் பெற விரும்புவோன் தன் முதுமையையும் இளமையையும் பின்னால் பெற்ற நன்மைகளையும், முன்னால் அடைந்த பலன்களையும் உண்மையின் பலிபீடத்தில் சமர்ப்பிக்க வேண்டும். *✍ பெர்க்லி*

☆ எல்லா விஷயங்களையும் நாம் அறிந்துகொள்ள வேண்டுவது அவ்வளவு முக்கியமில்லை. ஆனால், அதனதன் மதிப்பை உணர்ந்துகொள்வதுதான் அவசியம். நாம் கற்றுக் கொண்டதைப் போற்ற வேண்டும். நமக்குத் தெரிந்தவைகளை முறைப்படுத்தி வைத்துக்கொள்ளவேண்டும். *✍ எச். மூர்*

☆ நாம் சொற்ப விஷயங்களைப்பற்றி மட்டும் அறிந்திருந்தால் எதையும் துல்லியமாகத் தெரிந்திருக்க முடியும்; அறிவு பெருகும் பொழுது ஐயமும் பெருகுகின்றது. *✍ கதே*

☆ அரசாங்கத்திற்கு உண்மையான அடிப்படை, அறிவுடைமை; அறியாமை அன்று. கல்வியைப்பற்றியோ, கலாசாரம் பற்றியோ மனித சமூகத்தின் அறிவுப் பொக்கிஷங்களான நூல்களைப் படிப்பதுபற்றியோ ஏளனம் செய்தல், அறிவு நுட்பத்தோடு சுதந்தரமாயிருப்பதை ஏளனம் செய்தல் தேச சமூகம் தாழ்மையுற்று அழிவடைய வழியாகும்.

*✍ ஜி. டபுள்யு கர்ட்டிஸ்*

☆ செல்வம் பெருகப்பெருக அதில் ஆசை அதிகமாவது போல, அறிவு பெருகப்பெருக அதில் ஆர்வம் அதிகமாக வளரும்.

*✍ ஸ்டெர்னி*

☆ அறிவுடைமையால் வரும் இன்பமும் மகிழ்ச்சியும் இயற்கையில் கிடைக்கும் மற்றவைகளைவிட மிகவும் மேலானவை. மற்ற இன்பங்களிளெல்லாம் தெவிட்டுதல்

உண்டு. இதில் தெவிட்டுதலே இல்லை. மற்றவைகளில் புதுமைதான் இன்பமளித்ததே தவிர அவைகளின் தன்மை அன்று. தெவிட்டுதலால், காம விகாரமுற்றவர்கள் துறவிகளா வதையும், பேராசையுள்ள அரசர்கள் வெறுப்புற்று வருந்து வதையும் நாம் காண்கிறோம். ஆனால், அறிவுடைமையில் தெவிட்டுதலில்லை. அதைப்பற்றிய திருப்தியும் ஆவலும் எளிதில் மாறிமாறி ஏற்படுகின்றன. ✍ *பேக்கன்*

☆ ஒவ்வொரு வழியிலும் அறிவைப் பெறுவது புத்திசாலித் தனமாகும். ஒரு குடிகாரன், ஒரு பானை, கையில் அணியும் உறை அல்லது பழைய செருப்பு ஆகியவற்றிலிருந்தும் அறிவு பெறலாம். ✍ *ராப்லே*

☆ மனிதன் பிரபஞ்சத்தின் பிரச்சினையைத் தீர்த்து வைப்ப தற்காகப் பிறந்தவனில்லை; தான் செய்ய வேண்டியதைக் கண்டுகொள்வதே அவன் கடமை; அவன் தனக்குத் தெரிந்த அளவின் எல்லைக்குள் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். ✍ *கதே*

☆ அறிவுடைமை வலிமையைவிடப் பெரிது. இயந்திர நுணுக்கங்கள் தெரிந்தவன் வெறும் வலிமையைக் கண்டு சிரிக்கிறான். ✍ *ஜான்ஸன்*

☆ அறிவை அளித்திருப்பதன் நோக்கம் அதை அடைத்து வைத்திருப்பதற்காக அன்று. ஆனால், பிறருக்கு அளிப் பதற்காக இந்த அரிய ஆபரணத்தை மறைத்து வைத்திருந் தால் அதன் பெருமையை இழந்ததாகும். ✍ *பிஷப்ஹால்*

☆ ஒரு மனிதனுடைய வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்கு அவன் என்ன செய்கிறான் என்பதைமட்டும் தெரிந்து கொண்டால் போதாது. அவன் எதை வேண்டுமென்றே செய்யாது விடுகிறான் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். ✍ *கிளாட்ஸ்டன்*

☆ அறிவின் ஒவ்வொரு துறையிலும் ஆர்வம் கொள்வது மனம் வளர்ச்சியடைவதற்கு அவசியமாகும். அதன் மூலமே மிக உயர்ந்த அளவுக்குத் தெளிவு பெறமுடியும். *— லாக்*

☆ மனப்பாடம் செய்து தெரிந்துகொள்வது அறிவுடைய செயல் அன்று; அதை ஞாபகத்தில் பதிய வைத்தலே. *— மாண்டெயின்*

☆ நாம் பெற்றுள்ள அறிவு, சாமான்கள் கண்டபடி சிதறிக் கிடக்கும் ஒரு பெரிய கடையைப் போல இருக்கக்கூடாது. இருப்புச் சாமான்களுக்கு ஒரு பட்டியல் இல்லாமலும் இருக்கக்கூடாது. நமக்கு என்னென்ன தெரியும் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். அவசியம் ஏற்படும்பொழுது அவைகளை நாம் பயன்படுத்திக்கொள்ளவும் திறமை பெற்றிருக்க வேண்டும். *— லீப்னிட்ஸ்*

☆ நமக்கு முன்னால் தினசரி வாழ்க்கையில் காணப்பெறும் பொருள்களைத் தெரிந்துகொள்வதே முக்கியமான அறிவு. இதற்கு மேற்பட்டனவெல்லாம் புகை அல்லது வெறுமை அல்லது அதிகம் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமேயாகும். இவை நமக்கு முக்கியமாகத் தேவையுள்ள விஷயங்களில் நமக்குப் பழக்கமில்லாமலும் நம்மைத் தயாரித்துக்கொள்ள வாய்ப்பில்லாமலும் செய்துவிடும். *— மில்டன்*

☆ நம் காலத்தில் அறிவு தவறான எண்ணங்களையும் துவேஷத்தையும் வென்று வருகின்றது. உலகமே நம் அறிவுக் கூர்மையைப் பயன்படுத்தத்தக்க களனாக மாறி வருகின்றது. உள்ளத்தின் ஆற்றலும், மேதா விலாசமும் வலிமையும் எந்த இடத்திலும், எந்த மொழியிலும் பேசலாம். உலகம் அதைக் கேட்கும். *— டேனியல் வெப்ஸ்டர்*

☆ செய்து முடித்த காரியங்களைப்பற்றி ஒரு மனிதன் எவ்வளவு விரிவான அறிவு பெற்றிருக்கிறானோ, அந்த அளவுக்கு

அவன் செய்ய வேண்டிய காரியங்களை அறிவதற்கு அது உதவியாகும்.
— டிஸ்ரேலி

☆ உலக அமைதிக்கு நிலையான பயனுள்ள ஒரே வழி உண்டு. ஓயாமல் சோதனைகள் நடக்கும் உலகத்தைப் பற்றி அதிகமாய்த் தெரிந்துகொள்வதே அது. — [illegible]

☆ வாழ்க்கைத் தத்துவத்தின் முக்கியமான பகுதி நம் கடமைகளைப்பற்றித் தெரிந்துகொள்வது. கடமையிலிருந்து நீங்கள் வழுவினால், உலகம் அதன் பயனை எதிர்பார்த்து நிற்கும்.
— [illegible]

☆ நீ அறிவு பெற்றிருந்தால், அந்தச் சுடரில் மற்றவர்களும் தங்கள் விளக்குகளை ஏற்றிக்கொள்ளட்டும். — ஃபுல்லர்

☆ நாம் கஷ்டப்பட்டுச் சேர்த்துள்ள அறிவு ஓர் உடைமையாகும். அது முற்றிலும் நமக்கே சொந்தமான உடைமை.
— [illegible]

☆ அறிவையும் உத்திரக் கட்டையையும், அவைகள் பக்குவமடையும் வரையில், அதிகமாக உபயோகிக்கக்கூடாது. — [illegible]

☆ முற்காலத்தில் உலகை ஆண்டவர்களுக்குக் கிடைக்காத ஓர் ஆயுதத்தைக் கையில் ஏந்திக்கொண்டு நாம் எதிர் காலத்தை நோக்கி நிற்கிறோம். அந்த ஆயுதமே விஞ்ஞான அறிவும், ஆராய்ச்சி மூலம் அதை எல்லையற்ற அளவில் பெருக்கிக் கொள்ளும் ஆற்றலும். — ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ்

☆ அற்ப அறிவு அபாயகரமானது என்றால், அந்த அபாயத்திலிருந்து தப்பும் அளவுக்கு அதிக அறிவு பெற்ற மனிதன் எங்கேயிருக்கிறான்? — டி. எச். ஹக்ஸ்லி

☆ நமது முதுமையில் நாம் ஒதுங்கியிருந்து இதமடைய இன்றியமையாத பாதுகாப்பு அறிவுடைமையே. இளமையிலேயே நாம் அதை நட்டு வைக்காவிட்டால், நாம்

முதுமையடையும் பொழுது. அதனால் நிழல் எதுவும் தர முடியாது. ✍ செஸ்டர்ஃபீல்டு

☆ இங்கே நாம் தெரிந்துள்ளது சொற்பம். நாம் அறியாதது அளவற்றது.. ✍ லாப்லேஸ்

☆ நான்கு மொழிகள் கற்றவன் நான்கு மனிதர்களுக்கு ஈடாவான் என்று ஐந்தாவது சார்லஸ் மன்னர் கூறினார். தமக்கு வாழ்வளித்த தம் தந்தை ஃபிலிப்பைக்காட்டிலும். தமக்கு அறிவளித்த குரு அரிஸ்டாட்டலுக்கே தாம் கடமைப் பட்டிருப்பதாக அலெக்சாண்டர் கூறியுள்ளார்.

☆ பல கலைகளையும் பருக முயல்பவன் ஒரு கலையையும் பருகான். ✍ ஃபுல்லர்

☆ மனிதனை அறிவாளியாகச் செய்ய முடியாத அறிவின் பெரும் பகுதி. அவனை ஆணவம் பிடித்தவனாயும் பயனற்றவனாயும் செய்துவிடுகின்றது. ✍ அடிஸன்

☆ அறிவின் பெருக்கத்திற்காகப் போடும் விடுமுதல் எப் பொழுதும் மிக உயர்ந்த வட்டியையே கொடுக்கும்.

✍ ஃபிராங்க்லின்

☆ மானிட அறிவு. இறைவனின் ஆசியைப் பெற்று. நம்மைத் தெய்விக அறிவுக்கு அழைத்துச் செல்கின்றது.

✍ பிஷப் ஹார்ன்

☆ அறியத் தகாத விஷயங்களை அறியாதிருத்தல் அறிவுடைமை யின் ஒரு பகுதியாகும். ✍ கிரேட்ஸ்

☆ அறிவுடையார் எல்லாம் உடையார். ✍ திருவள்ளுவர்

☆ சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு. ✍ திருவள்ளுவர்

☆ எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. ✍ திருவள்ளுவர்

☆ அறிவது அறிந்து அடங்கி, அஞ்சுவது அஞ்சி,
உறுவது உலகுஉவப்பச் செய்து - பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது. ✍ நாலடியார்

☆ அறிவினால் மாட்சி ஒன்றுஇல்லா ஒருவன்
பிறிதினால் மாண்டது எவனாம்? ✍ பழமொழி

☆ மேதைக்கு - உரையாமை செல்லும் உணர்வு.
✍ சிறுபஞ்சமூலம்

☆ ஒட்டிய - காட்சி திரியின் அறம் திரியும். ✍ அறநெறிச்சாரம்

☆ கற்றது உடைமை காட்சியின் அறிப. ✍ முதுமொழிக்காஞ்சி

## அற்ப விஷயம்

☆ இப்பொழுது சிறு விஷயங்களைச் செய்; நாளடைவில் பெரிய விஷயங்கள் உன்னை நாடி வந்து, தம்மை நிறைவேற்றி வைக்கும்படி கேட்கும். ✍ பாரசீகப் பழமொழி

☆ மிக மெல்லிய உரோமத்திற்கும் நிழலுண்டு. ✍ கதே

☆ அற்ப மனிதர்களுக்கு அற்ப விஷயங்கள் பெரிதானவை.
✍ கோல்டுஸ்மித்

☆ பெரிய ஆசைகளின் தொந்தரவு இல்லாவிட்டால் பெரும்பாலான மக்கள் சிறு விஷயங்களிலும் வெற்றி பெறுவார்கள்..
✍ லாங்ஃபெல்லோ

☆ சிறு விஷயங்களைக் கீல்களாகக் கொண்டு பெரும்பயன்கள் சுற்றி வருகின்றன. கடிகாரத்திலுள்ள பெரிய உறுப்புகளிலும், சிறு உறுப்புகளிலும், ஏதாவது ஒன்று சரியாக வேலை செய்யாவிட்டால், கடிகாரமே நின்றுவிடும். ✍ ஆர். ஸ்மித்

☆ வாழ்க்கை பெரிய தியாகங்கள் அல்லது கடமைகளால் ஆக்கப்படுவதன்று; ஆனால், சிறு விஷயங்களே அதை அமைக்கின்றன; புன்னகைகள், அன்பு, அடிக்கடி செய்யும் சிறு உதவிகள் ஆகியவைகளே வெற்றியடைகின்றன; இதயத்திற்கு ஆறுதலளிக்கின்றன; இன்பமளிக்கின்றன.

✍ *ஸர். எச். டேவி*

☆ மிகச்சிறிய ஜந்துவாகிய மனிதனுக்கு மிகவும் அற்பமானது என்று எதுவுமில்லை. சிறு விஷயங்களை அறிவதனாலேயே நாம் இயன்றவரை நம் துயரத்தைக் குறைத்துக்கொண்டு அதிக அளவு இன்பத்தை அடைகிறோம்.

✍ *ஜான்ஸன்*

☆ அற்ப விஷயங்கள் நிறைவை உண்டாக்கும். ஆனால், நிறைவு அற்பமானதன்று.

✍ *மைக்கேல் ஏஞ்சலோ*

☆ அற்பம் என்று ஒதுக்கத்தக்கது எதுவுமில்லை - எதுவுமே இல்லை.

✍ *காலெரிட்ஜ்*

☆ அற்பமான, பயனற்ற விஷயங்களில், அவைகளுக்கு உரிய நேரத்திற்குக் கூடுதலாகச் செலவழிப்பதைவிட, ஓர் அறிவாளிக்குத் தகுதியில்லாததும், வருத்தப்படத்தக்கதும் வேறு எதுவுமில்லை.

✍ *பிளேட்டோ*

☆ இறைவனுடைய நன்னெறி என்ற உலகில் அற்ப விஷயங்கள் என்பவையே கிடையா. இன்று உண்மையான ஒரு வார்த்தை கூறினால், அது யுகக்கணக்காக ஒலித்துக்கொண்டே இருக்கும்.

✍ *புன்ஷான்*

☆ நாம் அற்பமானவை என்று ஒதுக்கித்தள்ளும் செயல்களிலேதான் இன்பத்தின் விதைகள் அமைந்திருப்பதால் அவை வீணாகின்றன.

✍ *ஜியார்ஜ் எலியட்*

☆ 'பெரிய அளவில் நல்ல காரியத்தை உடனே செய்ய வேண்டுமென்று காத்திருப்பவன் ஒரு போதும் எதையும் செய்யப்போவதில்லை.' என்று ஜான்ஸன் கூறியிருப்பது

உண்மையாகும். வாழ்க்கை சிறுசிறு விஷயங்களைக் கொண்டது. பெருங்காரியத்தை உடனே செய்யும்படியான சந்தர்ப்பம் ஏற்படுவதே அரிது. அற்ப விஷயங்களிலும் பெருந்தன்மையோடு விளங்குவதே உண்மையான பெருமை.

*ஸி. ஸிம்மன்ஸ்*

☆ நீரோ மன்னனைப் போலக் குதிரைகளுக்குத் தங்கத்தினாலான லாடங்கள் கட்டுதல் பெரிய அறிவீனமாவது போன்றது, அற்ப விஷயங்களில் நேரத்தைக் கழிப்பதும். *ஜே. மேஸன்*

☆ பெரும் தகுதியால் உன்னைப் பிறர் மதிப்பார்கள். பெரும் குறைபாடுகளால் உன்னை வெறுப்பார்கள்; ஆனால், அற்ப விஷயங்கள், சொற்ப உபகாரங்கள், ஒன்றுமில்லை என்று சொல்லத்தக்க சாதாரண விஷயங்களைக்கொண்டே உலக வாழ்க்கையில் மக்கள் உன்னை விரும்புகிறார்கள், அல்லது வெறுக்கிறார்கள். *செஸ்டர்ஃபீல்டு*

☆ மனிதர்கள் அற்ப விஷயங்களாலேயே இழுத்துச் செல்லப் படுகின்றனர். *நெப்போலியன்*

☆ ஆயிரம் காடுகளை உண்டாக்கும் ஆற்றல் ஒரு விதையில் அடங்கியிருக்கின்றது. *எமர்ஸன்*

## அற்புதங்கள்

☆ அற்புதம் எதுவும் அதைப் பார்க்கிறவருக்குப் புரியாததாலும், இயற்கையான முறைக்கு மாறாக இருப்பதாலும், அது தெய்விகமானது என்று கருதப்பெறுகின்றது; *லாக்*

☆ ஆத்திகர் ஒவ்வொருவரும் ஆண்டவரின் அற்புதம்.

*பெய்லி*

☆ முற்கால உலகில் அறிவைப் புகட்டுவதற்கு அற்புதங்கள் பயன்பட்டு வந்தன. எனவே, அவை தெய்விகமாயிருந்தன;

ஆனால், அவைகளால் ஏற்படவேண்டிய பயன்கள் முடிந்துவிட்ட பிறகும், இன்னும் நம்மிடம் அற்புதங்கள் இருப்பதாகப் பாவனை செய்தல் மடமையாகும். ✍ *பீச்செர்*

☆ படைக்கப்பெற்ற எவருடைய சக்திக்கும் மேலான ஒரு சக்தியின் வேலைதான் அற்புதம் என்பது. ஆகவே, அது தெய்விகச் சர்வ வல்லமையின் பயனாக விளைவது.

✍ *ஸவுக்*

## அன்பு

☆ அன்புணர்ச்சி இருந்தால், சாதாரணச் செயல்களும் பெருமையுள்ளவைகளாக விளங்குகின்றன. ✍ *தாக்கரே*

☆ நன்மை செய்ய வேண்டும் என்ற உணர்ச்சியிருந்தால், அத்துடன் தீயகுணங்கள் அதிகமான அளவில் சேர்ந்திருக்க முடியாது; சுயநலத்தோடு சில நற்குணங்கள்கூடச் சேர்ந்திருப்பதில்லை. ✍ *ஹோம்*

☆ இந்த உலகத்தில் நாம் கொடுப்பதுதான் நம்மைச் செல்வராக்குமே தவிர, நாம் பெற்றுக்கொள்வதன்று.

✍ *பீச்சர்*

☆ உலகத்தின் நல்ல பொருள்களைத் தேவையுள்ளவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதில் எனக்குக் கிடைக்கும் இன்பத்தைப் பார்க்கினும் எனக்கு அதிக மகிழ்ச்சியளிப்பது வேறில்லை.

✍ *ஸெனீகா*

☆ அன்பைப் போல் பெருகி வளர்வது வேறில்லை. ஒரு கையால் வாரி இறைப்பவர்கள், இரு கைகளால் அள்ளியெடுக்கிறார்கள். ஆனால், எப்பொழுதும் அது பணமாயிராது, வேறு நன்மையாகவும் இருக்கும். ✍ *ரே*

☆ நமக்கு நன்மை செய்துகொள்ளச் சிறந்த வழி பிறர்க்கு அதைச் செய்வதாகும்; இறைத்தால்தான் சேகரிக்க முடியும். சமூகத்தை

ஒன்றாகக் கட்டிச் சேர்த்து வைத்திருப்பது அன்பு என்னும் பொற்சங்கிலி. ✍ கதே

☆ பெண்களின் அழகிய தோற்றத்தைக்காட்டிலும், அவர்களுடைய அன்பே என் காதலைப் பெறும்.

✍ ஷேக்ஸ்பியர்

☆ நல்ல மனிதனுடைய வாழ்க்கையில் சிறந்த பகுதி எதுவென்றால், அவ்வப்போது அவன் அன்புடன் சிறுசிறு செயல்களைச் செய்வதுதான், அவை அற்பமானவைகளாயும், குறிப்பிட முடியாதவைகளாயும், நினைவில் வைத்துக் கொள்ள வேண்டாதவைகளாயும் இருக்கும். ✍ வோர்ட்ஸ்வொத்

☆ அன்புள்ள இதயத்தின் ஊற்று, அதைச் சுற்றியுள்ளவர்களின் முகங்களெல்லாம் புன்னகையுடன் விளங்கும்.

✍ வாஷிங்டன் இர்விங்

☆ அன்பு என்ற மொழியை ஊமையர் பேச முடியும். செவிடர் கேட்டுப் புரிந்துகொள்ள முடியும். ✍ போவீ

☆ ஓர் எதிரியை உண்மையான உயர்ந்த முறையில் கொல்ல வேண்டும் என்றால், அவனை வதைப்பது வழியன்று. அன்பினால் நீ, அவன் பகைவனாயிருப்பதை மாற்றிவிட முடியும். அதனால் பகைவன் ஒழிந்துவிடுவான் ✍ அலேய்ன்

☆ அன்புள்ள இதயம் இன்பத்தின் எல்லாவற்றிற்கும் வானுலகம் திறந்தேயிருக்கின்றது. ✍ பெராங்கர்

☆ நம்முள் ஒவ்வொருவரும் நம்மைச் சுற்றியிருக்கும் சிறு கூட்டத்தாரை அதிக மகிழ்ச்சியுடனும், மேலான நிலையிலும் வாழச்செய்வது கடமையாகும். ✍ ஏ.பி. ஸ்டேன்லி

☆ பிறரை இன்புறச்செய்தல் நம்மை மேல்நிலைக்கு உயரச் செய்யும். ✍ என். எம். சைல்டு

☆ நல்ல உதவிகளை விதைத்தால், அவைகளிலிருந்து இனிய நினைவுகள் வளர்ந்து பெருகும். ✍ திருமதி. டி. ஸ்டேயல்

☆ உதவி செய்பவன்தான் அதை உடனே மறந்துவிட வேண்டும் ஒருவனுக்குச் செய்த உதவியை அவனுக்கு நினைவுறுத்தலும் அதைப்பற்றிப் பேசுதலும். அவனை அவமானப்படுத்துவது போலாகும். ✍ டெமாஸ்தனிஸ்

☆ இதயங்களை அன்பால் வசப்படுத்திக்கொள். எல்லோரும் உனக்குப் பணி செய்வார்கள். எல்லாப் பணப்பைகளும் உன்னுடையவையாகும். ✍ பர்லே

☆ ஒருவருக்கொருவர் வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டத்தைக் குறைத்துக்கொள்ள உதவி செய்யாவிட்டால், நாம் எதற்காக வாழ்கிறோம்? ✍ ஜியார்ஜ் எலியட்

☆ அன்புள்ள இதயம் இல்லாவிட்டால், நாம் நீதியாக இருக்க முடியாது. ✍ வாவினார் கூஞ்

☆ மனிதர்கள் தாங்கள் எல்லாரும் அனுபவித்து வரும் துயரத்தைக் குறைத்துக்கொள்வதற்குத் தமக்குள் அன்பு பரோபகாரம், இரக்கம் ஆகியவைகளைக் கைக்கொண்டால் மானிட வாழ்க்கையிலுள்ள பாதித் துயரம் குறைந்துவிடும். ✍ அடிஸன்

☆ மதிப்பை அடிப்படையாகக் கொண்டதே அன்பு. ✍ பக்கிங்ஹாம்

☆ உண்மையாக அன்பு செலுத்துவோனுடைய இதயம் பூவுலகில் ஒரு சுவர்க்கம் அவனிடம் இறைவர் தங்குகிறார். ஏனெனில் இறைவர் அன்பு மயமானவர். ✍ லாமென்னெய்ஸ்

☆ வாழ்க்கையில் தலைசிறந்த இன்பம் அன்பு. ✍ ஸர் வில்லியம் டெம்பிள்

☆ அன்பு தானாக வருவது. அதை விலைக்கு வாங்க முடியாது ✍ லாங்ஃபெல்லோ

☆ நாம் எவைகளில் அன்பு வைக்கிறோமோ அவைகளாலேயே உருவாக்கப்பெறுகிறோம். ✍ கதே

☆ இதயத்தில் இடமிருந்தால், வீட்டிலும் இடமிருக்கும். ✍ மூர்

☆ தெய்வத்தைப்பற்றிய தியானமும், அன்பும் மனிதனுக்கு இருந்தால் போதும் - அவன் மலைகளைப் போல் நெடுங் காலம் நிலைத்திருத்தலைப் போன்றது. ✍ வாட்ஸ்

☆ பணிவுள்ள அன்புதான் சுவர்க்க வாயிலைக் காத்து நிற்கின்றது; செருக்குள்ள விஞ்ஞான அறிவன்று. ✍ யங்

☆ அன்பின் வழியது உயிர்நிலை. ✍ திருவள்ளுவர்.

☆ அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப; வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு. ✍ திருவள்ளுவர்

☆ அன்புடையார் - என்பும் உரியர் பிறர்க்கு. ✍ திருவள்ளுவர்

☆ அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்! ✍ திருவள்ளுவர்

☆ ஈரம் இல்லாதது கிளை, நட்பு அன்று. ✍ முதுமொழிக்காஞ்சி

## அன்னை

☆ உலகம் அனைத்தையும் ஒரு தட்டிலும், என் தாயை மறு தட்டிலும் வைத்து நிறுத்தால், உலகின் தட்டுத்தான் மேலேயிருக்கும். ✍ லாங்டேல் பிரபு

☆ அன்னையின் இதயமே குழந்தையின் பள்ளிக்கூடம். ✍ பீச்சர்

☆ அன்னையின் மடியிலிருந்துகொண்டு முதல் முறையாகக் கேட்ட கதைகள் முழுதும் மறக்கப்பெறுவதில்லை. வாழ்க்கைப் பாதையில் கொடுமையான வெப்பத்தால் வெந்து தவிக்கும் நமக்கு இது ஒன்றே வற்றாத நீரூற்று. ✍ ரஸ்கின்

☆ தாயின் நற்குணங்களும், தந்தையின் பாவங்களும் குழந்தைக்கு வந்து சேரும் என்று எங்காவது எழுதி வைத்தல் நலம். ✍ டிக்கன்ஸ்

☆ குழந்தையின் எதிர்காலக் கதி எப்பொழுதும் தாயின் வேலையால் அமைகின்றது. ✍ *நெப்போலியன்*

☆ நான் இப்பொழுதுள்ள நிலைமைக்கும், இனி அடைய நம்பிக் கொண்டிருப்பதற்கும், நான் என் தெய்விகத் தாய்க்கே கடமைப்பட்டிருக்கிறேன். ✍ *லிங்கன்*

☆ சமூகத்தின் எதிர்காலம் தாய்மார்களின் கைகளில் இருக்கின்றது. ✍ *டியூஃபோர்ட்*

☆ 'ஃபிரான்ஸ் தேசத்து இளைஞர்கள் நல்ல முறையில் கல்விப் பயிற்சி பெறுவதற்கு என்ன தேவை?' என்று நெப்போலியன் ஒரு சமயம் வினவினார். 'நல்ல தாய்மார்கள்' என்று பதில் வந்தது. சக்கரவர்த்தி அதை ஆர்வத்துடன் மனத்தில் வாங்கிக் கொண்டு' 'ஒரே வார்த்தையில் இதோ ஒரு (கல்வித்) திட்டமே அமைந்திருக்கின்றது' என்று கூறினார். ✍ *ஆபட்*

☆ தாய்மார்கள் உருவாக்கிய முறையிலேதான் மனிதர்கள் இருப்பார்கள். முரட்டுத் துணிகளை நெய்யும் தறியில் காஷ்மீரப் பட்டை எதிர்பார்ப்பதும், பொறியியல் நிபுணரிடம் கவிதையை எதிர்பார்ப்பதும், தரகுக்காரனிடம் புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பை எதிர்பார்ப்பதும் வீணாகும். ✍ *எமர்ஸன்*

☆ ஃபிரான்ஸ் நல்ல தாய்மார்களைப் பெற்றிருந்தால் அவள் நல்ல பிள்ளைகளையும் அடைவாள். ✍ *நெப்போலியன்*

☆ மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம். ✍ *உலக நீதி*

## ஆகாயக் கோட்டைகள்

☆ நீ ஆகாயத்தில் கோட்டைகள் கட்டியிருந்தால் உன் வேலை வீணாய்ப் போகாது; அவை இருக்க வேண்டிய இடம் அது தான். இப்பொழுது அவைகளின் அடியில் அடிப்படைகளை அமைத்துவிடு. ✍ *தோரோ*

☆ நாம் பனிக்கட்டிமீது கட்டடம் அமைக்கிறோம், கடலின் அலைகள்மீது எழுதி வைக்கிறோம். அலைகள் உறுமிக் கொண்டு பாய்ந்து செல்லுகின்றன. பனிக்கட்டி உருகி, நாம் கட்டிய மாளிகை, நம் சிந்தனைகளைப் போல், மறைந்து விடுகின்றது.
*— ஹொர்டர்*

☆ மேகங்களையே பார்த்துக்கொண்டு நாம் கட்டடத்தை மேலும் மேலும் உயரமாய்க் கட்டிக்கொண்டே போகிறோம். கீழேயுள்ள மாபெரும் தூண்கள் போதிய அடிப்படை யில்லாமல் ஆடிக்கொண்டிருப்பதைப்பற்றி நாம் சிந்திப்பதே யில்லை.
*— ஷில்லர்*

☆ இளமைதான், அல்நாஷரைப் போல, இன்பமயமான கனவுகள் காண ஏற்ற காலம்.
*— தாக்கரே*

# ஆசை

☆ ஆசையின் வேட்கையை அடக்கவும் முடியாது, தீர்த்து வைக்கவும் முடியாது.
*— ஸிஸெரோ*

☆ ஆசைகளைக் குறைத்துக்கொள்வதிலேயே அமைதி இருக்கின்றது, அவைகளைத் திருப்தி செய்வதிலன்று.
*— ஹீபர்*

☆ ஒரு மனிதனுடைய ஆசைகள் எல்லையற்றவைகளாக இருந்தால், அவனுடைய முயற்சிகளும் எல்லையற்றவை களாக ஆகிவிடும்.
*— பால்கி*

☆ நம்முடைய தற்போதைய நிலைக்குத் தக்கபடி நாம் நம் ஆசைகளைச் சுருக்கிக் கொள்ள வேண்டும். இது வாழ்க்கையின் அவசியமான ஒரு விதியாகும். எதிர்பார்ப் பவைகள் எப்படியிருப்பினும், நம்மிடம் உள்ளவைகளுக்குத் தக்கபடி நாம் வாழ்ந்து வர வேண்டும்.
*— அடிஸன்*

☆ முறையற்ற ஆசைகள் பூர்த்தியான பிறகு தண்டனை அனுபவிக்கிறோம்; நிறைவேற முடியாத ஆசைகள் தோன்று போதே தண்டனையும் வந்துவிடுகின்றது.

✍ *ஸவிப்ர் ஃபிஸிட்*

☆ நாம் எவ்வளவு செல்வம் பெற்றிருப்பினும், எவ்வளவு உயர்ந் பதவியிலிருப்பினும், குறைவாகத் தோன்றும் நம் செல்வத்தை நிறைவுபடுத்தப் பெயரில்லாத ஏதோ ஒன்று மேலு தேவையாகத் தோன்றுகின்றது. ✍ *ஹொரேஸ்*

☆ ஆசைகளும் உணர்ச்சிகளும் ஒரு கயிற்றின் இரண் பிரிகளைப் போல, ஒன்றோடு ஒன்று பின்னிக்கொண் இதயத்தைச் சுற்றி இறுக்கமாகப் பிணைந்துகொள்கின்ற நாம் அவைகளை நிதானமாகப் பயன்படுத்திக்கொண்ட நன்மை விளையும், அளவுக்கு அதிகமானால் அழி நிச்சயமாகிவிடும். ✍ *பார்டன்*

☆ ஆசைகளை அறவே அவித்துவிட்டால், மனமு அவிந்துவிடும். உணர்ச்சிகளே இல்லாத மனிதன் செயலு குரிய தூண்டுகோலோ, தத்துவமோ இல்லாமல் போ விடுவான். ✍ *ஹெல்விடியஸ்*

☆ நம் ஆசைகளை வெட்டிக் குறைத்துக்கொண்டு, நடுநிலையா முறைகளால், சில ஆசைகளை மட்டும் நிறைவேற்றி கொள்ளல் என்பது, செருப்புகள் தேவை என்பதற்காகக் கா பாதங்களையே வெட்டிவிடுவது போலாகும். ✍ *ஸ்விஃப்ட்*

☆ அவசியம் என்பது முடிவடையும் பொழுது, ஆசையு மேலும் அறியவேண்டுமென்ற துடிப்பும் தொடங்குகின்ற இயற்கையின் தேவையை அனுசரித்து நமக்கு வேண்டிய யாவும் கிடைத்துவிட்ட பிறகு, என்னென்ன வேண்டும் என் செயற்கையாக ஆசைகளை வளர்த்துக் கொள்கிறோம்.

✍ *ஜான்ஸ*

★ அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம். ✍ திருவள்ளுவர்

★ தூஉய்மை என்பது அவா இன்மை. ✍ திருவள்ளுவர்

★ குருடனைக்காட்டிலும் குருடன் எவன்? ஆசையுள்ளவன்.
✍ ஆதிசங்கரர்

★ ஆசையற்றவனே அகில உலகிலும் மிகப்பெரும் பணக்காரன்.
✍ சுவாமி சிவானந்தர்

★ அவாவினால் உந்தப்பட்ட மனிதர்கள், வேட்டையில் விரட்டப்பட்ட முயலைப் போல், ஓடித் திரிகிறார்கள். ஆதலால், மோக பந்தங்களிலிருந்து விடுதலை பெற விரும்பும் பிக்கு அவாவை ஒழிப்பானாக. ✍ புத்தர்.

## ஆசையின் தூண்டுதல்

★ சயித்தான் நம்மைத் தூண்டுவதில்லை. நாம்தாம் அவனைத் தூண்டுகிறோம் அவனுடைய திறமைக்கு வாய்ப்பளிக்கிறோம்.
✍ ஜியார்ஜ் எலியட்

★ ஓர் ஆசைத் தூண்டுதலை எதிர்த்து அடக்குதல், பல பிரார்த்தனைகள் செய்வதைவிட, ஆண்டவனுக்குச் சிறந்த வழிபாடாகும். ✍ பென்

★ நம் முன்னேயே தீமை இல்லாதிருந்தால், வெளியேயிருந்து எவ்வித ஆசைத் தூண்டுதலும் ஏற்பட முடியாது.

★ ஆசையின் தூண்டுதல் நமது தன்னம்பிக்கையின்மீது படர்ந்துள்ள துருவைத் தேய்த்து அராவும் அரமாகும்.
✍ ஃபெனிலான்

★ ஆசைத் தூண்டுதலை எதிர்த்து நிற்கும் ஒவ்வொரு கணமும் ஒரு வெற்றியாகும். ✍ ஃபேபர்

☆ வேடன் விரித்துள்ள வலையில் சிக்கிக்கொண்டு உழலாமல் ஆசைத் தூண்டுதலை விலக்குதலே மேல். ✍ டிரைடன்

☆ சயித்தானுடன் வியாபாரம் செய்ய விரும்பாதவன் அவனுடைய கடைக்குப் போகாமலே இருந்துவிட வேண்டும்.

☆ ஊரூராய்ச் சுற்றும் காலாடிகள் பாழடைந்த மாளிகையில் போய்த் தங்குவதுபோல், காலியாயுள்ள மனத்திலும் பல காலாடி எண்ணங்கள் குடி புகுந்துவிடும். ✍ ஹில்லியர்டு

☆ ஆசைத் தூண்டுதலே ஏற்படாத மனிதன் எவனுமில்லை. அது ஏற்படாத இடமோ, கூட்டமோ காலமோ கிடையாது.

✍ இ. எச். சேபின்

☆ ஆசைத் தூண்டுதலே இல்லாமற்போனால், நற்குணமும் இல்லாமற்போகும். ✍ கதே

## ஆடம்பரம்

☆ ஆடம்பரத்தின் மென்மையான மெத்தையின்மீதுதான் பெரும்பாலான இராஜ்யங்கள் மாய்ந்தொழிந்தன ✍ யங்

☆ ரோஜா மலர்களின்மீது படுத்துறங்குவோன், கழிவிரக்கம் கொண்டு மனம் இரங்கும்போது முட்களின்மீது அமர்ந் திருப்பான். ✍ குவர்லெஸ்

☆ யுத்தம் மனிதர்களை அழிக்கின்றது. ஆனால், சொகுசான வாழ்க்கை மனித சமூகத்தையே அழிக்கின்றது. உடல் களையும் உள்ளங்களையும் அரித்துவிடுகின்றன.

✍ கிரௌன்

☆ நம்முடைய ஆடம்பர வாழ்க்கையால் ஏழைகளுக்குத் (தொழில் மூலம்) உணவு கிடைக்கலாம். ஆனால், அந்த ஆடம்

பரம் இல்லாதிருந்தால், ஏழைகளே இருக்க மாட்டார்கள்.
✍ ஹோம்

☆ ரோம் மக்களுக்கு ஏராளமான செல்வங்களையும் கேளிக்கைகளையும் அளித்தவனே முதன் முதலாக அவர்களுடைய அழிவுக்குக் காரணமானவன் என்று எவரோ சொல்லியிருக்கிறார்; அவர் யாராயிருந்தாலும், அவருடைய கூற்று உண்மையானது. ✍ புளூடார்க்

☆ ஆடம்பரங்கள் ஒழுக்கங்களைக் கெடுத்துவிடுகின்றன அல்லது அரசாங்கத்தை அழித்துவிடுகின்றன. ✍ ஜோபெர்ட்

☆ பேராசையும் சொகுசும் பெருமை மிக்க அரசாங்கம் ஒவ்வொன்றையும் அழிக்கும் தொற்று நோய்கள். ✍ லிவி

☆ சொகுசு மனிதனை மென்மையாக்கிவிடுகின்றது. அவனைத் திருப்தி செய்வது கஷ்டம்; எதுவும் அவனுக்குத் தொந்தர வாகத் தோன்றும்; அவனுடைய இன்பங்களே இறுதியில் அவனுக்குப் பாரமாகின்றன. ✍ மெகின்ஸி

## ஆதாயம்

☆ சில சமயங்களில் இழப்பதுதான் பெரிய ஆதாயமாயிருக்கும்
✍ ஹெர்பெர்ட்

☆ அதிக ஆதாயம் பெறுவதற்கு உண்மையான வழி, அளவுக்கு அதிகமாகப் பெறுவதற்கு ஆசை கொள்ளாதிருத்தல். அதிக மாக வைத்திருப்பவன் செல்வனல்லன், மேற்கொண்டு அதிகம் வேண்டுமென்று ஆசைப்படாதவனே செல்வனாவான்; சொற்பத்தைக்கொண்டு வாழ்க்கை நடத்துவோன் ஏழை யல்லன்; அளவுக்கதிகமாக விரும்புப்வனே ஏழை. ✍ மீமாண்ட்

## ஆராயாத செயல்

☆ ஆராய்ச்சியின்மை, மூடத் துணிவு, பொய்மை, கட்டுப்பாட வாழ்க்கை, துவேஷம் ஆகியவற்றுள் ஒன்றிலிருந்து விளை தாகும்.
✍ லவேட்ட

☆ மூன்று விஷயங்கள் மிகையானால் மனிதனுக்குக் கேடுகளா மூன்று குறைந்தாலும் கேடுகளாம். அதிகமாகப் பேசுத ஆனால், சொற்பமாக அறிந்திருத்தல். அதிகமாய்ச் செல செய்தல்; ஆனால், கையிருப்புச் சுருக்கமாயிருத்த அதிகமாக எதிர்பார்த்தல்; ஆனால், சொற்பத் தகுதியுட இருத்தல் ஆகியவையே அவை.
✍ செர்வான்டி

☆ தீய குணம் படைத்தவனைவிட ஆராய்ச்சியில்லாதவ அதிகக் கேடு செய்துவிடுவான். முதலாமவன் தன் பகைவ மட்டும் தாக்குவான்; மற்றவன் பகைவர், நண்பர் எல்லாருக்கு வேற்றுமையின்றிக் கேடு செய்வான்.
✍ அடிஸ

## ஆரோக்கியம்

☆ ஆரோக்கியமில்லாத வாழ்க்கை வாழ்வன்று. அது அயர்வு துன்பமும் நிறைந்ததாகும். அது மரணத்தின் நிழ
✍ ராபலே

☆ உங்களுடைய ஆரோக்கியத்தைக் கவனித்துக்கொள்ளு கள்; அதைப் புறக்கணிக்க உங்களுக்கு உரிமை கிடையாது புறக்கணித்தால் உங்களுக்கு நீங்களே ஒரு சுமையாக விடுவீர்கள். ஒரு வேளை, பிறருக்கும் பாரமாயிருப்பீர்கள். உங்களுடைய உணவு சாதாரணமாயிருக்கட்டும்; ஒருபோது அமிதமாக உண்ண வேண்டாம்; போதிய உடற்பயிற் செய்யவும்; எல்லா விஷயங்களையும் முறையாகச் செய்ய

உடல் நலமில்லையானால், மீண்டும் நலமடையும்வரை உபவாசமாயிருக்கவும். இப்படி வாழ்ந்தால் கவலை உங்களை அண்டாது. மருந்துகளை நாய்களுக்குக் கொட்டிவிடலாம்.

*✍ டபுள்யு ஹால்*

☆ ஆரோக்கியத்தைக் காத்துக்கொள்வது ஒழுக்க முறையிலும் சமய முறையிலும் கடமையாகும். ஏனெனில், உடல் நலமே சமூக ஒழுக்க முறைகளுக்கும் அடிப்படையானது. உடல் நலமில்லாதபோது நாம் யாருக்கும் பயன்பட முடியாது.

*✍ ஜான்ஸன்*

☆ வாழ்க்கை வாழ்வதற்கன்று, ஆரோக்கியமாக இருப்பதற்கே.

*✍ மார்ஷியல்*

☆ முதலாவது செல்வம், ஆரோக்கியம். *✍ எமர்ஸன்*

☆ ஆரோக்கியத்திற்கும், நீண்ட கால வாழ்வுக்கும் அவசிய மானவை மதுவை விலக்குதல், திறந்த வெளியிலுள்ள காற்று, எளிதில் செய்யக்கூடிய வேலை, கவலையின்மை ஆகியவை.

*✍ ஸர் பி. ஸிட்னி*

☆ மகிழ்ச்சி, மிதமான உணவு, போதிய ஓய்வு ஆகியவை வைத்தியரை வீட்டுக்குள் விடமாட்டா. *✍ லாங்ஃபெல்லோ*

☆ ஆரோக்கியத்தைப்பற்றி இன்னும் அறிய வேண்டியவை ஏராளமாயுள்ளன. ஆயினும் இதுவரை சிலருக்கு மட்டும் தெரிந்துள்ள விஷயங்கள் எல்லா மக்களுக்கும் தெரிந்திருந் தால், நம் சராசரி வயது இன்னும் சுமார் பத்து ஆண்டுகள் கூடக்கூடும். *✍ ஜே.பி.எஸ். ஹால்டேன்*

☆ ஆரோக்கியமுள்ளவனுக்கு நம்பிக்கை இருக்கும்; நம்பிக்கை யுள்ளவனுக்கு எல்லாம் இருக்கும். *✍ அரபுப்பழமொழி*

☆ முறையான உணவும், பழக்கங்களும் மருந்தைவிட மேலானவை. ஒவ்வொருவரும் தமக்குத் தாமே மருத்து

வராயிருக்க வேண்டும். நாம் இயற்கைக்கு உதவி செய்ய வேண்டுமே தவிர, அதைக் கட்டாயப்படுத்தக்கூடாது. உங்கள் உடல்நிலைக்கு ஒத்துவரக்கூடிய உணவுகளை நிதானமாக உண்ணவும். நாம் சீரணித்துக்கொள்ள முடியாதது எதுவும் உடலுக்கு நல்லதன்று. ஜீரண சக்தியை அளிக்கக்கூடியது எது? உடற்பயிற்சி, வலிமையளிப்பது எது? உறக்கம். தீர்க்க முடியாத நோய்களையும் குறைக்கக்கூடியது எது? பொறுமை.

✍ வால்டேர்

☆ இந்தக் காலத்தில் தோன்றும் பிணிகளில் பாதி, உடலைக் கவனியாமல், மூளையால் அதிக வேலை செய்வதாகும்.

✍ புல்வெர்

☆ ஆரோக்கியமிருந்தால்தான் வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்க முடியும். இல்லையெனில், அவை ருசியில்லாமல் வாடிவிடும்

☆ மிகினும், குறையினும் நோய்செய்யும், நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. ✍ திருவள்ளுவர்

(மூன்று வாதம், பித்தம், சிலேத்துமம்)

☆ அற்றால், அளவு அறிந்து உண்க. ✍ திருவள்ளுவர்

## ஆலோசனை

☆ நல்ல ஆலோசனையைக் கேட்பது நம் திறமையை அதிகப் படுத்தும்.

✍ கதே

☆ உணர்ச்சி தணிந்துவரும் சந்தர்ப்பம் பார்த்து, நல்ல உபதேசங்களைச் சொல்ல வேண்டும். ✍ ஷேக்ஸ்பியர்

☆ நாம் வாளி வாளியாகப் பிறருக்கு ஆலோசனை சொல்லுவோம். ஆனால், பிறருடைய ஆலோசனையில் நாம் குண்டுமணி அளவே எடுத்துக்கொள்வோம். ✍ ஆல்ஜெர்

☆ நண்பர்களுக்கு அவர்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆலோசனைகளைச் சொல்லவேண்டாம். அவர்களுக்கு மிகுந்த நன்மையளிப்பவைகளையே சொல்லுங்கள்.

✍ டக்கர்மன்

☆ ஆலோசனைகளும், கண்டனமும் மென்மையாயிருக்க வேண்டும். வருத்தமுண்டாக்கும் உண்மைகளை, இதமான சொற்களில் கூற வேண்டும். பயனளிக்க வேண்டிய அளவுக்கு மேல் கூறவும் கூடாது. ✍ பெர்சிவல்

☆ உங்களிடம் ஆலோசனை கேட்கவருபவன் நீங்கள் அவனைப் புகழ்ந்து பேசவே விரும்புகிறான்.

✍ செஸ்டர்ஃபீல்டு

☆ நல்ல ஆலோசனைமட்டும் சொல்பவன் ஒரு கையால் கட்டடம் கட்டுகிறான்; நல்ல ஆலோசனையுடன் தன் நடத்தையையும் மாதிரியாகக் காட்டுபவன் இரு கைகளால் கட்டுகிறான்; நல்ல முறையில் கண்டித்துவிட்டுத் தனது தவறான நடத்தையைக் காட்டுபவன் ஒரு கையால் கட்டியதை மறு கையால் உடைப்பவனாவான். ✍ பேக்கன்

☆ நாம் செழிப்புடன் சுகமாயிருக்கும் பொழுது துயரத்தில் வாடுபவர்களுக்கு ஆலோசனை கூறுதல் எளிது.

✍ ஈஸ்ச்சிலன்

☆ சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். திருவள்ளுவர்

☆ பொழிந்துஇனிது நாறினும், பூமிசைதல் செல்லாது
இழிந்தவை காமுறூஉம் ஈப்போல் - இழிந்தவை
தாம்கலந்த நெஞ்சினார்க்கு என்னாகும் தக்கார்வாய்த்
தேன்கலந்த தேற்றச்சொல் தேர்வு. ✍ நாலடியார்

## ஆழ்ந்த சிந்தனை

☆ உணவுக்குச் சீரண சக்தி எப்படியோ அப்படி. அறிவுக்கு ஆழ்ந்த சிந்தனை. ஒன்றன் பயனைப் பூரணமாக அநுபவிப் பதற்கு மற்றது உதவுகின்றது. ✍ *டி. எட்வர்ட்ஸ்*

☆ ஆழ்ந்து சிந்திப்பதில் இனிய மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஒரு மனிதன் நேர்மைக்கு மாறுபாடாகச் செருக்குடன் வாழ்ந்த பிறகு, அவன் சிந்திக்க முடியாவிட்டால், தான் என்ன செய்ய வேண்டும் என்பதையே அறிய முடியாமலிருப்பான். ✍ *பிலெளன்ட்*

☆ ஆழ்ந்த சிந்தனையை நாம் செயலுடன் ஐக்கியப்படுத்த வேண்டும். இரண்டும் சேர்வதில் நற்குணம் பூர்த்தியாக அமைகின்றது. அவை ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல, ஒன்றுக்கொன்று உதவியானவை. சிந்தனை செயலுக்குரிய வலிமையை அளிக்கும். செயல் மீண்டும் ஆழ்ந்து சிந்திக்கும்படி செய்யும். இவ்வாறு அகவாழ்வும் புறவாழ்வும் ஒன்று சேர்ந்து வளர்ச்சியடையும். ✍ *ஃபூட்*

☆ உள்ளத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்கு, நாம் கற்பதைக் குறைத்துக்கொண்டு ஆழ்ந்து சிந்திப்பதை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். ✍ *டெஸ்கார்டிஸ்*

## ஆறுதல்

☆ துக்கப்படுவோர்க்குக் காலம் ஆறுதலளிக்கும்படி கடவுள் கட்டளையிட்டிருக்கிறார். ✍ *ஜோபர்ட்*

☆ கேடு வரும்பொழுது, அதைவிடக் கேடும் இருக்கும். ஒருவனுடைய கால் முறிந்து போனால், கழுத்து முறிய வில்லையே என்று ஆறுதல் பெறவேண்டும். ✍ *பிஷப்ஹால்*

★ நாம் துயரத்தால் அல்லற்பட்டுக்கொண்டிருக்கும் பொழுது, சந்தர்ப்பம் தெரியாமல் கூறப்படும் ஆறுதல் நம் வேதனையை அதிகப்படுத்துவதுடன், துயரத்தையும் கூர்மையாக்கும்.

✍ ரூஸோ

★ துன்பம் ஒன்று ஏற்பட்டால் அதை ஒருவர் விவரம் தெரிந்து துயருறுவதற்கு முன்பே அளிக்கும் ஆறுதல் காலம் தவறி முன்கூட்டியே வருவதாகும்; இந்த இரண்டுக்கும் நடுவில் ஓர் உரோம இழை போன்ற இடமேயுள்ளது. ஆறுதல் கூறுவோர் அதை அறிந்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

✍ ஸ்டெர்னி

## ஆற்றல்

★ இந்த உலகம் ஆற்றல் நிறைந்தவர்களுக்கு உரியது.

✍ எமர்ஸன்

★ நம்மால் முடியும் என்று எண்ணுவதே முடிக்கும் ஆற்றலைப் பெற்றதாகும்; ஒரு பயிற்சி கைவரப்பெற வேண்டும் என்று உறுதியாகத் தீர்மானித்துவிட்டால், அது வந்தது போலத்தான்.

✍ சாமுவேல் ஸ்மைல்ஸ்

★ இந்த உலகில் செய்யக்கூடிய எந்தக் காரியத்தையும் ஆற்றல் செய்து முடித்துவிடும்.

✍ கதே

★ நமக்கு வேண்டிய பரிகாரங்கள் நம்மிடமே இருக்கின்றன. அவை வானின் விதி என்று நாம் கூறுகின்றது விதிக்குக் காரணமான வானம் நம் விருப்பம் போல் செய்ய உரிமை யளிக்கின்றது. நாம் சோம்பலாகவும் திட்டமிடுவதில் தாமத மாகவும் இருப்பதே நம்மைப் பின்னால் இழுக்கின்றது.

✍ ஷேக்ஸ்பியர்

☆ பொதுவாகத் தலைசிறந்த அறிவு என்னவென்றால் உறுதி யாகத் தீர்மானித்தலே — ✍ நெப்போலியன்

☆ ஆற்றலுடன் ஊக்கமாக உழைப்பதைப்போல வாழ்க்கையில் வேறு அறிவுக்கூர்மை எதுவுமில்லை. — ✍ மிச்செல்

☆ உறுதி சர்வ வல்லமையுள்ளது. உலகில் ஒரு ஸ்தானத்தை அடையவேண்டும் என்று நீ உறுதி செய்துகொண்டால், அதை நீ நிச்சயமாக அடைவாய். — ✍ ஜே. ஹாஸ்

☆ போரிலேகூடப் புற ஆற்றலினும் மன ஆற்றல் மூன்று மடங்காகும். — ✍ நெப்போலியன்

☆ பொறுப்புகள் தம்மைத் தாங்கக்கூடியவனைத் தேடிச் செல்கின்றன; எப்படிச் செய்வது என்பதை அறிந்தவனிடம் ஆற்றல் பாய்ந்து செல்கின்றது. — ✍ இ. ஹப்பார்டு

☆ சர்வதேசக் குழப்பம் ஏற்படுவதற்கு அடிப்படையாக உள்ள மனிதர்கள் அச்சத்திற்கும் துவேஷத்திற்கும் இடம் கொடுப்பதாகும். பொருளாதாரத்தகராறுகளுக்கும் இதுவே அடிப்படை; பலத்தைப் பெருக்கிக்கொள்ளும் ஆசைக்கும் அச்சமே காரணம். மனிதர்கள் ஆதிக்கம் பெற விரும்புகின்றனர். ஏனெனில், மற்றவர்களுடைய ஆதிக்கம் தங்களுக்கு எதிராக அநீதியாக உபயோகிக்கப்படும் என்று அவர்கள் அஞ்சுகின்றனர். — ✍ பெர்ட்ராண்ட் ரஸ்ஸல்

☆ அதிகாரமும் சுதந்தரமும் சூடும் குளிர்ச்சியும் போன்றவை; இரண்டும் தக்க அளவில் நன்றாகக் கலந்திருந்தால், எல்லாம் நன்மையாகும்; இரண்டனுள் ஒன்று தனித்திருந்தால், அது அழிவை உண்டாக்கும். — ✍ ஸவில்லி

☆ அக்கிரமத்தின் மூலம் பெற்ற அதிகாரம், எந்த நன்மையான காரியத்திற்கோ, பயனுள்ள வேலைக்கோ உபயோகிக்கப் படுவதில்லை. — ✍ டாஸிடஸ்

☆ மது தலைகளைக் கிறங்கச் செய்வது போல, அதிகாரம் சிறந்த இதயங்களைக்கூட வெறிகொள்ளச் செய்யும். எல்லையற்ற அதிகாரத்தை ஒப்படைப்பதற்கு எந்த மனிதனும் போதிய அளவு அறிவைப் பெற்றிருக்கவில்லை. அந்த அளவுக்கு நல்லவனும் கிடையாது.

*— கோல்டன்*

☆ அதிகாரமில்லாத நீதி திறமையற்றது; நீதியில்லாத அதிகாரம் கொடுமையாகும்... ஆதலால், நீதியும் அதிகாரமும் சேர்ந்திருக்கும்படி செய்யவேண்டும். அதன் மூலம் நீதியானது எதுவும் வலிமை பெற்றிருக்கவேண்டும், வலிமையுள்ளது எதுவும் நீதியாயிருக்க வேண்டும்.

*— பாஸ்கல்*

☆ அநீதி, ஏமாற்று, துரோகம் ஆகியவற்றின் மீது நிலையான அதிகாரத்தை அமைக்க முடியாது.

*— டெமாஸ்தனீஸ்*

☆ உங்களுடைய ஆற்றல்கள் வீணாவதில் எச்சரிக்கையாயிருங்கள்; அவைகளை ஒன்றுசேர்த்து வைத்துக்கொள்ள இடைவிடாது முயற்சி செய்யுங்கள். பேரறிவுள்ளவர்கள் மற்றவர்கள் செய்வனவற்றையெல்லாம் தாங்களும் செய்ய முடியும் என்று கருதுவார்கள்; ஆனால், பின்னால் வருந்துவார்கள்.

*— கதே*

☆ பலர் கையிலுள்ள அதிகாரம் சிலர் கையில் போய்க் குவிந்து கொண்டே இருக்கும். பொதுமக்களின் சுதந்தரத்தில் நாள்தோறும் கண்ணும் கருத்துமாயிருந்து கவனிக்க வேண்டும்; இல்லாவிடில் அது உளுத்துப்போகும்.

*— வெண்டல் பிலிப்ஸ்*

## ஆனால்

☆ ஒரு மனிதனை முதலில் புகழ்ந்து பேசிவிட்டு, பின்னர் 'ஆனால்' என்று கூறத் தொடங்கினால், அந்தப் புகழ்ச்சியைப் போல இழிவானதும் வெறுக்கத்தக்கதும் வேறில்லை.

*— பீச்செர்*

☆ 'ஆனால்' என்னும் வெறுக்கத்தக்க சொல் வந்துவிட்டால் முன்னால் சொன்னவையெல்லாம் வீணாகிவிடும். இல்லை என்று மறுப்பதோ, அவமானப்படுத்துவதோ மேலாகும்.

✍ டேனியல்

☆ 'ஆனால்' என்ற சொல் இரக்கத்தின் துடிப்புகளை நிறுத்திவிடும். அன்பு ததும்பும் சிந்தனைகளை அடைத்து விடும். சகோதரப்பான்மையுடன் செய்யும் வேலைகளை, அடியோடு நிறுத்திவிடும்; 'ஆனால்', 'ஆனால்' என்ற சொற்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தால், எவனும் தன் அண்டை வீட்டுக்காரனைக்கூடத் தன்னைப்போல எண்ணி, நேசிக்கமாட்டான்.

✍ புல்வர்

## ஆன்மா

☆ உடல் வெறும் மண்; ஆன்மா நித்தியமான முகை.

✍ என். கல்வெர்வெல்

☆ இந்த வாழ்க்கையுடன் நாம் தீர்ந்துவிடுவதில்லை; மரணத் திற்குப் பின் ஒவ்வொன்றும் தன் முந்திய முறைமையை அடைகின்றது.

✍ ரூஸோ

☆ ஷேக்ஸ்பியரின் கற்பனையும், பேக்கனின் கல்வியும் கலிலியோவின் கனவும் எங்கே இருக்கின்றன? இத்தகைய பொருள்கள் அழிந்து ஒழியக்கூடாது என்று நான் கருதுகிறேன். ஆனால், ஓர் உரோமம் பல நூற்றாண்டுகள் இருக்கின்றது. எகிப்து தேசத்துச் செங்கல் மூவாயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்கின்றது. மனிதனின் மனம் அவனுடைய (உடலாகிய) களிமண்ணுக்குப் பின்னால், எஞ்சி வாழ்கின்றது என்று நம்புவதே எனக்குப் போதும்.

✍ பி. கார்ன்வால்

☆ ஆன்மா அழிவற்றது என்றும், அதன் வேலை எக்காலத்தும் நித்தியமாகத் தொடர்ந்து நடந்து வருமென்றும் நான் பூரண மாக நம்புகிறேன். இரவில் மறைவதாக நம் கண்களுக்குத் தோன்றும் கதிரவனைப் போன்றது அது; வேறிடத்திற்குத் தன் ஒளியைப் பரப்பவே அது சென்றுள்ளது. ✍ கதே

☆ வாழ்க்கை ஆன்மாவின் பயிற்சிக்கூடம்; அதன் காலம் நித்தியமானது. ✍ தாக்கரே

☆ எது சிந்தனை செய்கின்றதோ, புரிந்துகொள்கின்றதோ, தீர்மானம் செய்கின்றதோ, செயல் புரிகின்றதோ, அது தெய்விகமானது. அக்காரணத்தால் அது அவசியம் நித்திய மானதாகும். ✍ ஸீஸரோ

☆ நாம் நித்தியமான ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும் அல்லது பெறாமலிருக்க வேண்டும். பெறாமலிருந்தால் நாம் விலங்குகள். ஆதலால், நம் உள்ளே ஆன்மாவைப் பெற்றிருப் பதுதான் நமக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேற்றுமை என்று நான் கருதுகிறேன். ✍ காலெரிட்ஜ்

## இசை

☆ புலனுணர்ச்சியோடு கூடிய வாழ்க்கைக்கும் ஆன்மிக வாழ்க் கைக்கும் இணைப்பாக இருந்தது இசை. ✍ பீதோவன்

☆ இசை, கவிதையை ஒத்தது. இவை ஒவ்வொன்றிலுமுள்ள எண்ணற்ற மென்மைப் பண்புகளை எந்த வழியிலும் கற்றுக் கொள்ள முடியாது. ஆனால், வல்லவன் ஒருவன் தானாகவே அவைகளைப் பெற்றுவிடுவான். ✍ போப்

☆ வாத்தியங்களின் இசை மனிதனைப் போரில் முன்னணியில் கொண்டுபோய் நிறுத்திவிடும். விவாதம் செய்வதைவிட இசை அதிக விரைவில் காரியத்தை நிறைவேற்றிவிடுகின்றது; காரண

காரியத் தொடர்புடன் உபதேசம் செய்வதைவிட ஒரு நல்ல கீதம் மனிதனின் இதயத்தை உருக்கிப் பக்தி கொள்ளச் செய்துவிடும். ✍ டக்கர்மன்

☆ உயர்ந்த ஒழுக்க முறையையும் ஆன்மிகக் கருத்துகளையும் வெளிக் காட்டுவதற்குச் சித்திரக் கலை மிகவும் குறைந்த ஆற்றலுள்ளது. ஆனால், இசை நிகரற்ற ஆற்றலுள்ளது. ✍ திருமதி ஸ்டோ

☆ உயர்ந்த கருத்தில், இசை எனப்படுவது புதுமையாயிருக்க வேண்டிய அவசியமில்லை; அத்துடன் அது எவ்வளவு பழமையாயுள்ளதோ, எவ்வளவு நமக்குப் பழக்கமாயுள்ளதோ, அவ்வளவுக்கு அதிகமாக அதன் பயன் இருக்கும் ✍ கதே

☆ தன்னுள்ளே இசை அமைந்திராதவனும், இனிய ஒலிகள் ஒத்து இசைப்பதில் உருகாதவனுமான மனிதன் துரோகங்களும் தந்திரங்களும், கொள்ளைகளும் செய்யக்கூடியவனாவான்; அவனை எவனும் நம்ப வேண்டாம். ✍ ஷேக்ஸ்பியர்

☆ நம் இயற்கைக்கு நானகாவது தேவை, இசை, முதலாவது உணவு, பிறகு உடை, அப்பால் உறைவிடம், பின்னர் இசை. ✍ போவீ

☆ கலைகள் யாவற்றிலும் உணர்ச்சிகளை மிக அதிகமாய்ப் பாதிக்கக்கூடியது இசைதான்; சட்டம் இயற்றுபவன் அதற்கு முதன்மையான ஆதரவு கொடுக்க வேண்டும். ✍ நெப்போலியன்

☆ தினசரி வாழ்க்கையில் ஆனமாவின்மீது படியும் தூசியைத் துடைப்பது, இசை.

☆ கொடிய விலங்கைச் சாந்தப்படுத்தவும், பாறைகளை நெகிழ்விக்கவும், தேக்கு மரத்தை விளைவிக்கவும்கூடிய வசிய சக்திகள் இசையில் இருக்கின்றன. ✍ காங்கிரீவ்

இசை நம்மை உருக்குகின்றது. நமக்கு ஏன் என்று தெரியவில்லை; நாம் கண்ணீர்த் துளிகளைக் காண்கிறோம். ஆனால், அவைகளின் உற்பத்தி நிலையத்தை அறிந்திலோம்.
*✍ லாண்டன்*

நான் இசையைக் கேட்டுக்கொண்டே இறக்க வேண்டும். எனக்கு வேறு இன்பம் எதுவும் வேண்டியதில்லை. *✍ கீட்ஸ்*

## இச்சகம்

முகத்துதியாகப் பேசுவோரிடம் இருப்பதைவிடக் காகங்களிடையே வீழ்ந்து கிடக்கலாம்; அவை பிணங்களை மட்டுமே கொத்தும், இவர்களோ உயிருள்ளவர்களையே கொத்துகிறார்கள்.
*✍ ஆன்டிஸ்தினிஸ்*

முகத்துதி செய்வது ஒழுக்கத்திற்குச் சாவுமணி, மனித சமுதாயத்தின் இச்சகம் பேசுபவனே ஆகத் தாழ்ந்தவன். அவனிலும் தாழ்ந்தவன் அவன் பேச்சைக் கேட்பவன்.
*✍ எச். மூர்*

வன விலங்குகளிலே கொடுங்கோலனிடமிருந்தும், பழக்கப் பட்ட விலங்குகளிலே வீண் புகழ்ச்சி பேசுபவனிடமிருந்தும் என்னைக் காப்பாற்றுங்கள். *✍ பென் ஜான்ஸன்*

இச்சகம் பேசுவோருடைய தொழில்முறை என்னவென்றால், பெரியோர்களுடைய குறைகளைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்களுடைய தவறுகளைப் பெருக்கி வளர்த்தல். அவர்களுக்கு மனம் நோவும்படி யோசனை சொல்லவே மாட்டார்கள். *✍ மோலியர்*

## இடர்

எல்லா மனிதர்களும் தங்களுடைய துயரங்கள் யாவற்றையும் ஒரே இடத்திற்குக் கொண்டுவந்தால், மற்றவர் துயரங்களைச்

சேர்த்து அதிலிருந்து ஒரு பகுதியை ஏற்றுக்கொள்வ காட்டிலும், தங்கள் பழைய துயரங்களே இருக்கட்டும் எ எண்ணுவர்.

✍ ஸோ

☆ வாழ்க்கையின் சிறு துயரங்களையும் கவலைகளையும் நம் வழி மறிக்கும் தடைகளாகவும் கருதலாம். அல்லது ந மேல்நிலை அடையவும், சுவர்க்கம் பெறவும் அவைக படிக்கற்களாகவும் உபயோகிக்கலாம்.

✍ ஸோ

☆ இடர்களாகிய கருவிகளின் மூலம் இறைவன் நம்மை மேல காரியங்களுக்காகத் தயார் செய்கிறான்.

✍ பீ

☆ இன்பத்திற்கு அடுத்தபடியாக நன்மை செய்வது இடர்த உலகின் இன்பங்களிலும் துன்பங்களிலும் பங்கு கொள்ளா இருப்பதைப் போன்ற பயங்கரமான விஷயம் வேறில்லை.

✍ லாங்ஃபெல்லோ

☆ ஒருவருடைய வழி மற்றவர்களுக்கு ஆறுதலளிப்பதாகும்

✍ திருமதி டீ மெயின்ட

## இடுக்கண்

☆ இடுக்கண்தான் மனிதனின் உண்மையான உரைகல்.

✍ ஃபிளெ

☆ இடுக்கண் எவ்வளவு பெரியதாயுள்ளதோ அவ்வ அதிகமான பெருமையுள்ளது அதைத் தாண்டி வெ பெறுதல். தேர்ந்த மாலுமிகள் புயல்கள், சண்ட மாரு களிலேயே புகழ் பெறுகின்றனர்.

✍ எபிக்டீ

☆ துக்கத்தை எப்படித் தைரியத்துடன் தாங்குவது என்ப அறிந்தவனைப் போல் உலகில் வேறு எதுவும் மதிக் பெறுவதில்லை.

✍ ஸெ

பெறப்பட்டது
தொ... 308

பொறுமையோடு தாங்குபவனே வெற்றியடைகிறான்.
✍ பெர்சியஸ்

இடுக்கண் வருங்கால் நகுக. ✍ திருவள்ளுவர்

அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து. ✍ திருவள்ளுவர்

## இதயம்

நல்ல மனிதனின் இதயம் இந்த உலகில் ஆண்டவனுடைய ஆலயம்.
✍ திருமதி நெகார்

இதயத்தைக் கவர்ந்துகொண்டால், எது சொன்னாலும் புரிய வைக்கலாம்.
✍ ஸி. ஸிம்மன்ஸ்

ஆண்களும் பெண்களும் அறிவைக்காட்டிலும் இதயங்களாலேயே இழுத்துச் செல்லப்பெறுகின்றனர். இதயத்திற்கு வழி, புலன்கள்; கண்களையும் காதுகளையும் திருப்தி செய்தாலும் காரியம் பாதி கைகூடிவிடும்.
✍ செஸ்டர்ஃபீல்டு

மனம் மனிதனின் ஒரு பகுதிதான்; இதயமே அனைத்தும் எனலாம்.
✍ ரிவரோல்

ஒவ்வோர் இதயமும் ஓர் உலகம். நீ வெளியே பார்க்கிற அனைத்தையும் உன்னுள்ளேயும் காண்கிறாய். உன்னை நீ தெரிந்துகொள்ள, உன்னை இதுவரை நேசித்தவர்களையும் துவேஷித்தவர்களையும் உண்மையான முறையில் குறித்துப் பார்.
✍ லவேட்டர்

இதயத்தின் காரணங்களைப் பகுத்தறிவால் புரிந்துகொள்ள முடிவதில்லை.
✍ பாஸ்கல்

## இந்திரிய நுகர்ச்சி

☆ இந்திரியங்களின் நுகர்ச்சி ஆன்மாவின் கல்லறையாகும்.

*✍ சான்னிங்*

☆ பொறிகளின் வசமான ராஜ்யத்தில் வசிப்பவன் துக்கமாக ராஜ்யத்தில் மரிப்பான்.

*✍ பாக்ஸ்டர்*

☆ பொறிகளின் அனுபவமே இன்பம் என்றால், மிருகங்களே மனிதரைவிட இன்பமானவை; ஆனால், மனிதப்பண்பு ஆன்மாவில் அடங்கியுள்ளது, உடற்சதையிலன்று.

*✍ ஸெனீகா*

## இயலாமை

☆ 'இயலாது!' - இது நல்ல ஃபிரெஞ்சு மொழி அன்று.

*✍ நெப்போலியன்*

☆ 'இயலாது' என்ற இந்தச் சொல் ஆக்கமுள்ள வார்த்தையன்று இதை அடிக்கடி நாவிலே தரிப்பவர்களிடமிருந்து எவ்வித நன்மையும் வராது.

*✍ கார்லைல்*

☆ மடயர்களுடைய அகராதியில்தான் இயலாது என்ற சொல்லைக் காண முடியும்.

*✍ நெப்போலியன்*

## இயற்கை

☆ இயற்கையும் அறிவும் எப்பொழுதும் ஒரே விஷயத்தை கூறுகின்றன.

*✍ ஜுவினல்*

☆ இயற்கையின் விதிகள் நீதியானவை; ஆனால், பயங்கரமானவை.

*✍ லாங்ஃபெல்லோ*

☆ இயற்கை, கடவுளின் ஆடை, அது உயிருள்ளது; கட்புலனாவது. — கதே

☆ கடவுளைக் காரணமாய்க்கொண்ட காரியத்தின் பெயர் இயற்கை. — கௌப்பர்

☆ இயற்கையின் நிறைவுகள் அவள் இறைவனின் சாயல் என்பதைக் காட்டுவதற்காக அமைந்துள்ளன; குறைகள் அவள் அவருடைய வெறும் சாயைதான் என்பதைக் காட்டுவதற்காக அமைந்துள்ளன. — பாஸ்கல்

☆ முன்னேறுவதிலும், வளர்ச்சியிலும் இயற்கைக்கு ஓய்வே இல்லை. செயலின்மை அனைத்தையும் அவள் சபித்து விடுகிறாள். — கதே

☆ இயற்கைக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அவளை ஆட்சி செய்ய முடியும். — பேக்கன்

## இரகசியம்

☆ உண்மையான அறிவாளி தன் இரகசியத்தைத் தானே வைத்துக்கொள்ள வேண்டும். — குய்ஸாட்

☆ மூவருள் இருவர் இறந்து போனால்தான் இரகசியத்தைக் காப்பாற்றி வைக்க முடியும். — ஃபிராங்லின்

☆ உன் குடும்பக் கஷ்டங்களை மறைத்து வை. — தேல்ஸ்

☆ இரகசியம் என்பது நட்புக்குரிய கற்பு. — ஜெரிமி டெய்லர்

☆ பெரிய திட்டங்களுக்கு அடிப்படையாயுள்ளது இரகசியம். எதிரிகளின் இரகசியங்களை அறிந்துகொள்வதைவிட, நம் இரகசியங்களை மறைத்து வைத்துக்கொள்வதன் மூலமே அதிகமான வேலைகள் நடக்கக்கூடும். — கோல்டன்

# இரக்கம்

☆ இரக்கத்தின் பனித்துளி கண்ணீர். — *பைரன்*

☆ மனிதன் கருணையைக் கைவிட்டாலும், கடவுள் ஒருகாலும் கைவிடுவதில்லை. — *கௌப்பர்*

☆ இரக்கம் கொள்வது நம்மைத் தேவர்களுக்கு நிகராகச் செய்யும்.

☆ நற்பண்புகள் என்ற நட்சத்திரங்களிடையே இரக்கம் சந்திரனைப் போன்றது. — *சேப்பின்*

☆ கடவுளுடைய சக்திகள் யாவும் ஒன்றுபோல் சமமாக இருந்த போதிலும், அவருடைய நீதியைப் பார்க்கினும் இரக்கம் அதிகப் பிரகாசமாக விளங்குகின்றது. — *செர்வான்டிஸ்*

☆ மக்கள் இறைவனிடம் இரக்கம் பெற நாம் அனுப்பி விடுகிறோமே அன்றி, நாமாக இரக்கம் காட்டுவதில்லை. — *ஜியார்ஜ் எலியட்*

# இரட்டுற மொழிதல்

☆ சயித்தான் உண்மையைப் போலக் காட்டி இருபொருளில் பொய் பேசுவதை நான் நம்புவதில்லை. — *ஷேக்ஸ்பியர்*

☆ திடீரெனச் சொல்லும் பொய் உண்மையை வதைக்கும்; ஆனால், கவனமாகச் சிந்தனை செய்து இருபொருளில் பேசுவது உண்மையை, வேண்டுமென்று முன்யோசனை செய்து கொலை செய்வதாகும். — *மார்லி*

☆ நீ பேசும்படி நேர்ந்தால், உண்மையே பேசு; ஏனெனில், இரட்டுற மொழிதல் பொய் கூறுவதற்குரிய பாதி வழியாகும். பொய்யோ நரகப் பாதை.

☆ நேரடியாகக் கூறும் பொய்யைப் போல மறைமுகமாகக் கூறும் பொய்யும் தீமையே விளைக்கும். அது அதிக இழிவானதாயும், கோழைத்தனமுள்ளதாயும் இருக்கும்.

## இராஜ்யம்

☆ எந்த ராஜ்யத்திலே தீயோர் ஆதிக்கம் பெறாமல், நல்லோர் தலைமையில் உள்ளரோ, அந்த ராஜ்யம் நன்கு அமைந்ததாகும்.

*✍ பிட்டாகஸ்*

☆ சுதந்தரமான நாட்டில் கஷ்டம் குறைவு; ஆனால், சத்தம் அதிகமாயிருக்கும். எதேச்சாதிகாரமுள்ள ராஜ்யத்தில் கஷ்டம் அதிகமாயிருக்கும், குற்றம் சொல்வது குறைவாயிருக்கும்.

*✍ கருவோட்*

## இலக்கியம்

☆ ஒரு சமுதாயத்தின் இலக்கியம் அதன் தேசியப் பான்மையிலிருந்து தோன்ற வேண்டும். தேசியப் பான்மை தன்மான உணர்ச்சியில்லாமல் ஏற்பட முடியாது. தன்மானம் சுதந்தரமில்லாமல் தோன்ற முடியாது. *✍ திருமதி ஸ்டோ*

☆ செய்த வேலையின் நன்மையை அளந்த பார்த்துக் கூலி கொடுக்கப்பெறாத ஒரு தொழில் இலக்கியந்தான்.

*✍ ஃபுரூட்*

☆ இலக்கியம் வாழ்க்கையின் முழு வேலையாக அமைந்தால் அது ஊழிய வேலையாகவே இருக்கும். குறித்த நேரங்களில் மட்டும் நாம் அதில் ஈடுபட்டால், அது நேர்த்தியான ஓய்வளிப்பதாயிருக்கும். *✍ ரோஜர்ஸ்*

☆ நூல்கள் அவைகளின் ஆசிரியர்களைப்பற்றி ஓரளவுதான் தெரிவிக்கும்; ஆசிரியன் எப்பொழுதும் தன் நூலைவிட மேலானவனாகவே இருப்பான். *✍ போவீ*

☆ குடும்பத்தின் இலக்கியத்தைக் கட்டுப்படுத்த எனக்கு அதிகார மிருந்தால், நான் இராஜ்யத்தின் நன்மையையும் சமயத்தின் நன்மையையும் பாதுகாக்க முடியும். ✍ பேக்கன்

☆ விஞ்ஞானத்தில் மிகப்புதியனவாக வந்துள்ள நூல்களைப் படியுங்கள். இலக்கியத்தில் பழையவைகளைப் படியுங்கள். உயர்தர இலக்கியம் எப்பொழுதும் நவீனமாகவே இருக்கும். ✍ புல்வர்

☆ இலக்கியத்தின் நலிவு தேசத்தின் நலிவாகும்; வீழ்ச்சியில் இரண்டும் சேர்ந்தேயிருக்கும். ✍ கதே

☆ இலக்கியம் பயில்வது இளைஞர்களுக்கு வளர்ச்சியளிக்கும்; முதுமைப் பருவத்தில் விருந்தாக விளங்கும்; செழுமையை அலங்கரிக்கும்; வறுமையில் ஆறுதலளிக்கும்; வீட்டில் இன்பமளிக்கும்; வெளியில் எங்கே செல்லவும் உரிமை அளிக்கும். ✍ ஸிஸரோ

☆ இன்று, இலக்கியத்தில் ஏராளமான கொற்றர்கள் இருக்கின்றனர். ஆனால், கைதேர்ந்த சிற்பிகள்தாம் குறைவாயுள்ளனர். ✍ ஜோபெர்ட்

☆ நீ படைக்கும் இலக்கியப் படைப்புகளை ஒன்பது ஆண்டுகளாவது மக்களிடம் வெளியிடாமல் மறைத்து வைத்திரு. ✍ ஹொரேஸ்

☆ பேச்சை நித்தியமாக்கி வைப்பது இலக்கியம். ✍ ஷிலிகெல்

## இலட்சியங்கள்

☆ அடிவானத்தை நோக்கிச் செல்லும் பொழுது, அது பின்னால் நகர்ந்து சென்றுகொண்டேயிருக்கும். அது போல், மனிதனின் இலட்சியமும், அவன் அதை நோக்கி முன்னேறும் பொழுது தான் பின்னால் நகர்ந்துகொண்டேயிருக்கும். ✍ ஷெட்

☆ உயர்ந்த நோக்கங்கள் உயர்ந்த உள்ளங்களை அமைக்கின்றன.
*✍ எம்மஸன்*

☆ பனிக்கட்டியில் சிலைகள் செய்து, அவை கரைந்து போவதைக் கண்டு நாம் கண்ணீர் பெருக்குகின்றோம். *✍ வால்டர் ஸ்காட்*

☆ உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட வாழ்க்கைகளே தலை சிறந்த பெருமையுள்ள வாழ்க்கைகள். *✍ அல்பெமரான்*

☆ இலட்சியங்களே உலகின் எசமானர்கள். *✍ ஜெ.ஜி. ஹாலண்ட்*

# இல்லம்

☆ அரசனாயினும், குடியானவனாயினும், தன் வீட்டில் அமைதியைக் காண்பவனே தலைசிறந்த மகிழ்ச்சியுள்ளவன்.
*✍ கதே*

☆ நூறு பேர்கள் சேர்ந்து ஒரு முகாம் அமைக்கலாம். ஆனால், ஓர் இல்லத்தை இல்லமாக்க ஒரு ஸ்திரீ வேண்டும்.

*✍ சீனப் பழமொழி*

☆ வீடுதான் அன்பு, மகிழ்ச்சி, அமைதி, செழிப்பு ஆகியவற்றின் இருப்பிடம்; அங்கேதான் தாங்கள் உதவி புரிந்தும், உதவிகளைப் பெற்றும், சிறந்த நண்பர்களும், நெருங்கிய உறவினர்களும் கூடி இன்புறுகின்றனர். *✍ தாம்ஸன்*

☆ மற்ற ஸ்தாபனங்களுக்கெல்லாம் வளர்ப்புப் பண்ணை வீடுதான். *✍ சேப்பின்*

☆ நம்முடைய குற்றவாளிகளுள் நூற்றுக்கு எண்பது பேர் அனுதாபமில்லாத வீடுகளிலிருந்து வந்தவர்கள்.

*✍ ஹான்ஸ் கிறிஸ்டின் ஆண்டர்ஸன்*

☆ எவ்வளவு சிறிதாயிருந்தாலும், வீட்டுக்கு நிகரானது வேறில்லை. *✍ பேய்ன்*

☆ வீடுதான் ஓர் இராஜ்யத்தை அமைக்கின்றது. *✍ ஜோஸப் குக்*

## இழிதொழில்

☆ இழிவான தொழில் ஒவ்வொன்றும் ஒருவனை அதிலே கூர்மையுள்ளவனாகச் செய்யும். ஆனால், மற்றவைகளி லெல்லாம் அவனுடைய அறிவை மழுக்கிவிடும்.

*✍ ஸர் பி. ஸிட்னி*

☆ கடலில் ஒருவன் ஓரளவு ஆழத்திற்குக் கீழே செல்லாதபடி இயற்கையின் விதி தடுத்துவிடுகின்றது; ஆனால், இழிவாகிய கடலில் நாம் ஆழ்ந்து செல்லச் செல்ல, மேலும் மூழ்குவது எளிதாயிருக்கும். *✍ ஜே. ஆர். லோவெல்.*

## இழிந்த மனப்பான்மை

☆ மேலான மனிதர்கள் சில சமயங்களில் நேர்மையற்றவராக இருக்கலாம்; ஆனால், இழிவான மனப்பான்மையுள்ளவன் அதே சமயத்தில் நேர்மையானவனாகவும் இருப்பதில்லை.

*✍ கன்ஃபூஷியஸ்*

☆ இளமையில் இழிவானவனாக இருப்பவன் வயது வந்தபின் போக்கிரியாக மாறக்கூடும்; இழிவு அக்கிரமம் செய்ய ஆசையுண்டாக்கும். *✍ வி. செர்புலியெஸ்*

☆ இழிவான, அற்ப விஷயங்களில் ஈடுபடுவது மனம் பலவீனமாயிருப்பதைக் காட்டும்; அல்லது பலவீனப்படுத்தும்.

*✍ கௌப்பர்*

## இளக்காரம்

☆ தண்டிப்பதைவிடத் தயவு காட்டுவது அதிக வல்லமை யுள்ளது. ஆகவே, என் நடத்தையில் இளக்காரம் மிகுந்து விளங்க வேண்டும் என்பதே என் விருப்பம். *✍ வாஷிங்டன்*

☆ இளக்காரம் இரக்கத்தின் ஒரு பகுதி. ஆனால், அது உரக்கப் பேசத் தொடங்கினால், உறங்குகின்ற நீதியை எழுப்பி விட்டுவிடும்.

## இளமை

☆ குறித்த ஒரு காலத்தில், ஒரு தேசத்தின் கதி அதன் மக்களில் இருபத்தைந்து வயதுக்கு உட்பட்ட இளைஞர்களின் அபிப்பிராயங்களைப் பொறுத்துள்ளது. ✍ கதே

☆ இளமையான என் வசந்த காலத்தை நான் சோம்பலான விளையாட்டில் வீணாக்க மாட்டேன்; அப்பொழுது நான் பயனுள்ள விதைகளை விதைப்பேன். வயது வந்த பின்பு அவை நன்றாக மலர்ந்து, நான் வயோதிகனாகும்பொழுது அவை கனிகளை அளிக்கும். ✍ ஹில்ஹவுஸ்

☆ வாலிபம் மகிழ்ச்சி நிறைந்த வசந்த காலம். அப்பொழுது கொந்தளித்துப் பெருகும் உதிரத்தில் இன்பம் நிறைந்திருக்கும். இயற்கை தன் விருந்தில் பங்கு கொள்ளும்படி ஆயிரம் பாடல்களைப் பாடி நம்மை அழைக்கும். ✍ ரிட்ஜ்வே

☆ வழக்கங்கள். நம்பிக்கைகள். உறுதிகளை அமைக்க வேண்டிய பருவம் இளமை. ✍ ரஸ்கின்

☆ ஏதாவது செய்யவும். நல்ல முறையில் உருவாகவும் ஏற்ற பருவம் இளமை. ✍ டி.டி. முங்கர்

## இறுமாப்பு

☆ பணத்திமிர் கொண்ட செல்வர்களின் இறுமாப்பில் ஏழை மனிதன் ஒருவனுக்கு ஏற்படுகிற வெறுப்பைப் போல் வேறு எதிலும் இராது. ஆனால், அந்த ஏழை தான் செல்வனானால், அவன் எந்தத் தீமையை வெறுத்தானோ. அதிலேயே

அவனும் விரைவில் பாய்ந்துவிடுகிறான். மனித இயல்பிலேயே விசித்திரமான முரண்பாடுகள் அமைந்திருக் கின்றன. *— கம்பர்லண்ட்*

☆ மனிதர்கள், தங்கள் கருத்துகளையே உறுதி செய்துகொண்டு இறுமாப்படைந்திருக்கையில், அவர்களுடைய கருத்துகளுள் பெரும்பாலானவை தவறாயிருக்கும். அவைகளைப்பற்றி நிதானமாக ஆராயாமல் உணர்ச்சி வசப்பட்டு அபிப்பிராயங் கள் கூறுவார்கள்; ஆராய்ச்சிதான் பரிகசிக்கத்தக்க தவறு களிலிருந்து அவர்களைக் காக்க முடியும். *— ஹியூம்.*

# இறை நம்பிக்கையின்மை

☆ பாவங்களுக்கெல்லாம் அடிப்படை இறை நம்பிக்கையின்மை. *— பார்ரோ*

☆ பெற்றோர்களுக்கும், குழந்தைகளுக்கும், அரசர்களுக்கும், குடிகளுக்கும் ஒற்றுமையைப் புனிதமாக்கி உறுதி செய்வது இறை நம்பிக்கை. அந்த நம்பிக்கை இல்லாமை ஒவ்வொரு பந்தத்தையும் அறுத்துவிடுகின்றது. *— பெஸ்டலோஜி*

☆ பொதுவாக, இஷ்டம் போல் சிந்திப்பவர்களே எதையும் சிந்தியாதவர்களாயிருக்கின்றனர். *— ஸ்டெர்னி*

☆ இறை நம்பிக்கையின்மையால் ஏற்படும் நஷ்டங்களுக்கு ஈடாக அது எதையும் அளிப்பதில்லை. *— சால்மர்ஸ்*

# இறையருள்

☆ நன்மையான வாழ்க்கையும் இன்பமான மரணமும் உண்மையான அருளாகும். *— ஸோலன்*

☆ வாழ்வின் நற்பொருள்கள் தனித்தனியாகக் கிடைப்பதில்லை. அவை கலவைகளாகவே வரும்; பள்ளி மாணவனுடைய விடுமுறையில் அவன் செய்து முடிக்க வேண்டிய வீட்டு வேலையும் சேர்ந்துதான் இருக்கும். அது போன்றவையே எல்லா நற்பொருள்களும்.
*— சார்லஸ் லாம்ப்*

☆ நல்ல செயல்களுக்கு உரிய அருட்பயன்கள் காத்திருக்கின்றன. சிறிது தாமதமாக வந்த போதிலும், அவை வந்தே தீரும்.
*— காங்கிரீவ்*

☆ ஆண்டவன் அன்புக்கு உரியவர்கள் ஏழைகளைப் போன்ற பணிவு பெற்றுள்ள செல்வர்களும், செல்வர்களைப் போன்ற பெருந்தன்மையுள்ள ஏழைகளும்.
*— லா அதி*

# இறைவன்

☆ இறைவனைப்பற்றி நாம் விளக்குவதற்காகச் சிரமப்படாமலிருந்தால், அவரை நாம் எளிதாக அறிந்துகொள்ளலாம்.
*— ஜோபெர்ட்*

☆ பிரபஞ்சத்தில் கடவுள் பெற்றிருக்கும் ஸ்தானத்தையே நாம் நம் இதயங்களில் அவருக்கு அளிக்க வேண்டும்.

☆ கடவுள் ஒரு சக்கர வளையம். அந்த வளையத்தின் மையப் புள்ளி எல்லா இடங்களிலும் இருக்கும். அதன் பரிதி எங்குமில்லை.
*— எம்பி டாக்ளஸ்*

☆ இறைவனைப்பற்றி அவனுக்குப் பெருமையாயில்லாத ஓர் அபிப்பிராயம் கொள்வதைவிட, அவனைப்பற்றி அபிப்பிராயமே கொள்ளாதிருத்தல் மேலாகும்; ஏனெனில், பிந்தியது வெறும் நம்பிக்கைக் குறைவை மட்டும் காட்டும்; முந்தியது அவதூறாகும்.
*— புளூடார்க்*

☆ இறைவன் இருக்கவில்லையானால், அவனை உண்டாக்கிக் கொள்ள வேண்டியது அவசியம். ✍ வால்டேர்

☆ ஆண்டவர் உலகை ஆள்கிறார். நாம் நமது கடமையை மட்டும் அறிவோடு செய்ய வேண்டும். பயனை அவருக்கே விட்டுவிட வேண்டும். ✍ ஜான்ஜே

☆ இருவர் இறைவனுக்கு உகந்தவர்கள்; அவனை அறிந்து கொண்டு தன் இதயம் முழுவதையும் அவனிடம் ஈடுபடுத்தித் தொண்டு செய்பவன் ஒருவன்; அவனை அறியாமல் தன் இதயம் முழுவதையும் அவனைத் தேடுவதில் ஈடுபடுத்து பவன் மற்றவன். ✍ பானின்

☆ இறைவனுக்குப் பகைவனானவன் ஒருகாலும் மனிதனுக்கு நண்பனாக இருந்ததில்லை. ✍ யங்

☆ நான் இறைவனுக்கு அஞ்சுகிறேன், இறைவனுக்கு அடுத்தாற் போல் அவனுக்கு அஞ்சாதிருப்பவனைக் கண்டு அஞ்சு கிறேன். ✍ ஸாஅதி

☆ கடவுளை அண்டி வாழ்வாயாக. நித்தியமான உண்மைகளுக்கு முன்னால், மற்றப் பொருள்கள் யாவும் உனக்கு அற்பமானவை களாகத் தோன்றும். ✍ மசீயன்

☆ கடவுள் நம் ஆசைகளின் இலட்சியமாகவும், நம் செயல்களின் நோக்கமாகவும், நம் அன்புகளின் தத்துவமாகவும், நம் முழு ஆன்மாக்களையும் ஆட்சி செய்யும் சக்தியாகவும் இருக்க வேண்டும். ✍ மாஸில்லன்

☆ நாம் நிகழ்ச்சிகளை நடத்த வேண்டியவர்களல்லர், அவை களைப் பின்பற்றிச் செல்ல வேண்டியவர்கள்.

✍ எபிக்டெடஸ்

☆ உரோமம் கத்தரிக்கப்பெற்ற ஆட்டுக்குட்டிக்காக இறைவன் காற்றை மென்மையாக வீசும்படி செய்கிறான். ✍ ஸ்டெர்னி

★ அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது. ✍ *திருவள்ளுவர்.*

# இன்பமூட்டுதல்

★ இன்பமூட்டும் முறை என்பது ஒருவன் தான் இன்புற்றிருப்பது. பிறருடன் ஒத்து வாழ்தல் என்பது ஒருவன் தான் திருப்தியுடன் வாழ்ந்து மற்றவர்களிடமும் இணங்கி வாழ்தல். ✍ *ஹாஸ்லிட்*

★ எவரையோ இன்புறச்செய்ய வேண்டும் என்று நம்பிக் கொண்டே நாம் அனைவரும் வாழ்கிறோம்; இன்பமூட்டுதல் தலைசிறந்த மகிழ்ச்சியாகும். எப்பொழுதும் அது நிகரற்ற தாகும். ஏனெனில், நம் முயற்சிகள் நம் கடமையை உணர்ந்து செய்யப்பெறுகின்றன. ✍ *ஜான்ஸன்*

★ மக்களை நீ இன்புறச்செய்ய வேண்டுமென்றால், முதலில் நீ அவர்களைப் புரிந்துகொள்ள வேண்டும். ✍ *சார்லஸ் ரீட்*

# இன்பம்

★ தான் மகிழ்ச்சியாயிருப்பதாக ஒருவன் எண்ணினாலன்றி, ஒரு மனிதன் இன்பமாயிருப்பதாகச் சொல்ல முடியாது.
✍ *மார்க்கஸ் அன்டோனியஸ்*

★ இன்பத்தை ஒழுக்கத்தின்மீதுதான் அமைக்க முடியும். அடிப்படையில் சத்தியம் இருக்க வேண்டும். ✍ *காலெரிட்ஜ்*

★ இன்பம் நமக்கு உள்ளே மட்டும் இருப்பதில்லை, அல்லது வெளியே இருப்பதில்லை; அது இறைவனுடன் நாம் ஐக்கியப்படுவதாகும்.

★ நமக்கு எவ்வளவு இருக்கிறது என்பதைப் பொறுத்தன்று, நாம் எவ்வளவை அனுபவிக்கிறோம் என்பதைப் பொறுத்தது நம் இன்பம். ✍ *ஸ்பர்ஜியன்*

☆ வாழ்க்கையில் நிகழ்ச்சிகள் எத்தகையவை என்பதைவிட, அவைகளை நாம் எப்படி ஏற்றுக்கொள்கிறோம் என்பதைப் பொறுத்தது இன்பம். ✍ ஹம்போல்ட்

☆ இன்பம் நம் ஆசைகள் நிறைவேறுவதிலும், நாம் நியாயமான ஆசைகளை மட்டும் வைத்திருப்பதிலும் உள்ளது.

✍ அகஸ்டின்

☆ எந்த மனிதனையும், அவனுடைய வாழ்க்கையின் முடிவை அறியுமுன், மகிழ்ச்சியுள்ளவன் என்று கூற வேண்டாம், அதுவரை அவனை அதிருஷ்டசாலி என்று வேண்டுமானால் கருதிக்கொள்ளலாம். ✍ ஹிரோடோட்டஸ்

☆ இன்பம் வாழ்க்கையின் இலட்சியமன்று, குணமே இலட்சியம்.

✍ பீச்சர்

☆ பூரணமாக உழைத்துக்கொண்டேயிருந்த எந்த மனிதனும் மிகவும் வருந்தத்தக்க நிலையை அடைந்ததில்லை.

✍ லாண்டன்

☆ எந்த மனிதன் தன் வாழ்க்கையின் இறுதியையும் தொடக்கத்தையும் இணைக்கும் தொடர்பை அறிந்துள்ளானோ, அவனே இன்பமான மனிதன். ✍ கதே

☆ உன்னைவிட அதிருஷ்டம் குறைந்தவனிடம் உன் இன்பத்தைப்பற்றிப் பேச வேண்டாம். ✍ புளுடார்க்

☆ இடமும், நிலைமையும் முக்கியமல்ல; மனம் மட்டுமே ஒருவனை இன்புறவோ, துன்புறவோ செய்கின்றது.

✍ லா எஸ்டிரேஞ்ச்

## இன்பம் துய்த்தல்

☆ இன்பம் துய்ப்பதில் தன்னை அடக்கிக்கொள்வதே நல்ல விதியாகும் ✍ லாண்டன்

★ உண்மையான அனுபவம் மனத்தின் செயலிலும் உடலின் உழைப்பிலும் தோன்றுவது; இரண்டும் எப்பொழுதும் இணை பிரியாதவை.
✍ ஹம்போல்ட்

★ மனிதன் துய்க்கும்படி அனுமதித்துள்ள இன்பத்தின் அளவு மிகச்சிறியதுதான்.
✍ பிளேர்

★ உறக்கம், செல்வங்கள், ஆரோக்கியம் மற்றும் ஒவ்வோர் அருட்பேறும் இடையிடையே நின்று, பின்னால் மீண்டு வந்தால்தான் முழு அனுபவமும் கிட்டும்.
✍ ரிச்டெர்

# இன்னலும் துன்பமும்

★ தத்துவத்திற்காக நடக்கும் பரீட்சையே இன்னல், அது இல்லாவிட்டால், ஒரு மனிதன் தான் நேர்மையாளனா அல்லனா என்பதைத் தெரிந்து கொள்ள இயலாமற்போகும்.
✍ பீல்டிங்

★ துன்பமே உண்மைக்கு முதல் வழி.
✍ பைரன்

★ வறுமை, உள்ளே அடங்கிக் கிடக்கும் அறிவாற்றல்களை வெளிவரச் செய்கின்றது. செழிப்பான நிலைமைகளில் அவை அடங்கியே கிடக்கும்
✍ ஹொரேன்

★ செழிப்பு ஓர் ஆசிரியர்; வறுமை அதைவிடச் சிறந்த ஆசிரியர்; செல்வம் மனத்திற்கு வேண்டியதையெல்லாம் அள்ளிக் கொடுக்கும், கஷ்டம் மனத்திற்குப் பயிற்சி அளித்து வலிமைப் படுத்தும்.
✍ ஹாஸ்லிட்

★ கோதுமையைத் தீட்டும் போது அதை உமியிலிருந்து பிரிப்பது போல, இன்னல் நல்லொழுக்கத்தைச் சுத்தமாக்கி எடுக்கின்றது.
✍ பார்டன்

★ வாழ்க்கையின் வெயிலில் கொஞ்சம் காய்ந்தும், மழையில் கொஞ்சம் நனைந்தும் வந்ததால், எனக்கு நன்மையே ஏற்பட்டிருக்கின்றது.
✍ லாங்ஃபெல்லோ

## இன்னாச்சொல்

☆ ஓர் இன்னாச்சொல்லால் தீய செயல்கள் இரட்டிப்பாகி விடுகின்றன. ✍ ஷேக்ஸ்பியர்

☆ பேச்சில் தீமை கலந்துவிட்டால், மனத்திலும் தீமை கலந்து விடும். ✍ செனீகா

☆ பேசுகிறவர்கள் எப்பொழுதுதான் தீமையைப் பேசாமல் விடுவார்கள்? கேட்பவர்கள் எப்பொழுதுதான் தீயதைத் கேளாமல் இருப்பார்கள்? ✍ ஹேர்

☆ அவன் என்னைப்பற்றி உலகிற்கெல்லாம் இழிவாகப் பேசட்டும். உலகமெல்லாம் என்னைப்பற்றி அவனிடம் இழிவாகப் பேசுவதைவிட அது எவ்வளவோ மேலாகும்.

✍ டாஸ்லோ

## ஈகை

☆ கீழே விழுந்து கிடப்பவரைத் தூக்கி விடாதவன், எச்சரிக்கையாயிருக்கட்டும். அவன் வீழ்ந்து கிடக்கையில் எவரும் கை நீட்டி அவனைத் தூக்கமாட்டார். ✍ ஜோபெர்ட்

☆ தானம் கொடுப்பதில் ஆளைப்பற்றி அதிகம் விசாரிக்க வேண்டாம். அவன் தேவையைப்பற்றி விசாரிக்கவும். மனிதன் உதவிக்கு அருகதையாய் இல்லாவிட்டாலும், அது மனித சமூகத்திற்குச் செய்யும் உதவியாகும். ✍ குவார்லெஸ்

☆ ஈகையில்லாத செல்வன் ஒரு போக்கிரி. அவன் மூடன் என்பதையும் நிரூபிப்பது எளிதாயிருக்கும். ✍ ஃபீல்டிங்

☆ துன்பத்திற்காக இரங்குதல் மனித இயல்பு; அதை நீக்குதல் தெய்வ இயல்பு. ✍ எச். மான்

## உடல்

☆ நமது உடல் நல்ல முறையில் அமைந்த ஒரு கடிகாரம். அது சரியாக நேரம் காட்டும்; ஆனால், அதில் அடிக்கடி கண்டபடி கைவைத்தால், அதில் மணி அடிக்கும் முன்பே 'அலாரம்' அடித்துவிடும்.
✍ பிஷப் ஹால்

## உடற்பயிற்சி

☆ அறிவாளிகள் உடல் நலத்திற்காக உடற்பயிற்சியையே நாடுவார்கள். விளையாட்டு மைதானங்களில் ஆரோக்கியம் விலையில்லாமல் கிடைக்கும். வைத்தியரிடம் பணம் கொடுத்துக் குமட்டலான மருந்தை வாங்கிக் குடிப்பதைவிட இது மேலானது.
✍ டிரைடன்

☆ உழைப்பதே உழைப்பின் பயன் என்று சொல்லத்தக்க முறையில் அமைந்துள்ளது மனிதனின் உடல். ✍ ஜான்ஸன்

☆ உடற்பயிற்சி என்பது களைப்புண்டாகாதபடி உழைத்தல் என்று நான் கருதுகிறேன்.
✍ ஜான்ஸன்

☆ அதிக உழைப்பால் நலிவடைந்த உடல்களைவிட, உழைப்பில்லாமல், அயர்ந்து, சோம்பிக் கிடப்பதால் அதிக உடல்கள் பாழாகியுள்ளன.
✍ டாக்டர் ரஷ்

☆ உடற்பயிற்சியால் நெஞ்சு விரிகின்றது; உறுப்புகள் பயிற்சி பெறுகின்றன. குத்துச்சண்டை செய்வதன் பயன் கிடைக்கின்றது. ஆனால், அதில் கிடைக்கும் குத்துகளும் இல்லை.
✍ அடிஸன்

## உடைகள்

☆ வெளியே நாகரிகமான உடை அணிந்துகொள்வது நமக்கு அவசியமில்லாவிட்டாலும், மற்றவர்களுக்கு மகிழ்ச்சியளிப்

பதாகும்; மூடனை அது மேலும் வெறுக்கச் செய்வதா யிருப்பினும், நமது மதிப்பை அதிகப்படுத்துவதாகும்.

*✍ டேவிட் பால் பிரௌன்*

☆ உடல், ஆன்மாவின் மேல் தோடு. உடை, அந்தத் தோட்டின் மேலுள்ள உமி. ஆனால், உமி அதனுள் என்ன இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவது. *✍ பழ வழக்கு*

☆ உனது திருப்திக்காக உணவருந்து. ஆனால், பிறருடைய திருப்திக்காக உடை அணிந்துகொள். *✍ ஃபிராங்கலின்*

☆ கிரீடந்தரித்த சக்கரவர்த்திக்குரிய மரியாதையில் பாதிகூட, வெறும் தொப்பியணிந்த சக்கரவர்த்திக்குக் கிடைக்காது.

*✍ கோல்டு ஸ்மித்*

☆ உடை விஷயங்களில் நான் ஒருவருக்குச் சொல்லக்கூடியது இதுதான்; புது மாதிரியான உடைகள் அணிவதற்கு நீங்கள் முதல்வராக நிற்க வேண்டாம்; அப்படி அணியாதவர்களுள் கடைசியாகவும் நிற்க வேண்டாம்.

☆ வீட்டு இன்பங்களும் வசதிகளும் தீர்ந்து போகும் அளவுக்கு நாம் உடைகளுக்காகத் தியாகம் செய்கிறோம். *✍ கௌப்பர்.*

## உணர்ச்சிகள்

☆ இதயம் மூளைக்கு மூத்தது. முதலில் தோன்றியதற்கு உணர்ச்சிகள் அதிகம்; ஆனால், அதற்குக் கண் தெரியாது. அதன் தம்பியாகிய மூளைக்குப் பார்வை அதிகம்; உணர்ச்சி கிடையாது. குருடன் கண்ணுள்ளவனால் வழிகாட்டப்பெற வேண்டும். இல்லாவிடின் தடுக்கி விழுவான். *✍ ஸீக்லெ*

☆ மலர்களுக்காக விரைவில் ஆவல் கொள்ளும் இதயந்தான் முள்ளைக் கண்டு முதலில் வருந்தும். *✍ மூர்*

☆ உணர்ச்சி மிகுதியால் துயரம் ஏற்படுகின்றது. உணர்ச்சிக் குறைவால் குற்றத்திற்கு வழி பிறக்கும். ✍ டாலிராண்ட்

☆ சிரிப்பும் கண்ணீரும் உணர்ச்சி என்னும் ஒரே இயந்திரத்தை ஓட்டுகின்றன; ஒன்று, காற்றின் வலிமையாலும், மற்றது தண்ணீரின் வலிமையாலும் ஓட்டுகின்றன; அவ்வளவுதான். ✍ ஹோம்ஸ்

☆ உணர்ச்சி மிகுந்தவர்கள் தலைகளைக் கீழே வைத்துக் கொண்டு நிற்பவர்கள்; அவர்களுக்கு எல்லாம் தலைகீழாகவே தெரியும். ✍ பிளேட்டோ

☆ மனிதர்கள் உணர்ச்சிகளைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்வதைவிட்டு, தங்களை உணர்ச்சிகள் பயன்படுத்திக் கொள்ளும்படி வாழ்க்கையைக் கழிக்கிறார்கள். ✍ ஸ்டீல்

☆ உணர்ச்சிகள் நம்மை உணரச்செய்கின்றன, ஆனால், தெளிவாகப் பார்க்கும்படி செய்வதில்லை. ✍ மான்டெஸ்கியு

☆ அடிமைகளுள் மட்டமானவன் உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டவன். ✍ புரூக்

☆ சில சமயங்களில் நமக்குப் பதிலாக நம் உணர்ச்சிகளே பேசுகின்றன, முடிவு செய்கின்றன, நாம் அருகில் நின்று வியந்துகொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. ✍ ஜார்ஜ் எலியட்

☆ உணர்ச்சிகள், அடங்காத கால்நடைகள். ஆதலால், அவைகளைக் கட்டியே வைக்க வேண்டும். நமது சமயம், அறிவு, முன் கவனம் ஆகியவைகளால் நாம் அவைகளை ஆண்டு அடக்கி வரவேண்டும்.

☆ உணர்ச்சி என்பது உள்ளத்தின் குடிவெறி. ✍ ஸௌத்

☆ உணர்ச்சிகள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஒவ்வொரு மனித இதயமும் ஒரு தனி உலகம்; அதன் அனுபவம் மற்றவர் களுக்குப் பயன்படாது.
*✍ புல்வெர்*

☆ அநேகமாக எல்லா மனிதர்களும் ஒவ்வோர் உணர்ச்சியையும் ஓரளவு பிறப்பிலேயே பெற்றுள்ளனர். ஆனால், ஒவ்வொரு வருடைய உணர்ச்சிகளிலும் ஓர் உணர்ச்சி மட்டும் முனைப்பாக நிற்கும். இதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். இந்த முதன்மையான உணர்ச்சி சம்பந்தப்பட்ட மட்டில், ஒருவனை நாம் நம்பியிருக்கக்கூடாது.
*✍ செஸ்டர்ஃபீய்ட்*

## உணர்ச்சித் தூண்டுதல்

☆ பொதுவாக மனிதர் அனைவரும் உணர்ச்சித் தூண்டுதலால் உந்தப்படுகின்றனரே அன்றித் தத்துவத்தை ஆராய்ந்து நடப்பதில்லை; எனவே, நாம் கருதுவது போல அவர்கள் மிகவும் நல்லவர்களாகவோ மிகவும் தீயவர்களாகவோ இருப்பதில்லை.
*✍ ஹேர்*

☆ நம்முடைய முதல் உணர்ச்சிகள் நல்லவை; தாராளப் போக்குள்ளவை; வீரம் நிறைந்தவை. பின்னால் செய்யும் சிந்தனை அவைகளைப் பலவீனமாக்கி வதைத்துவிடுகின்றது.
*✍ எல். ஏ. மார்ட்டின்*

☆ உங்கள் உணர்ச்சிகளின்படி நடவுங்கள், ஆனால், அவைகளை நல்ல வழிகளில் செலுத்தும்படி இறைவனை வேண்டிக் கொள்ளுங்கள்.
*✍ இ. டென்னென்ட்*

## உணர்ச்சியின்மை

☆ மற்றவர்களுடைய துன்பங்களை உணர முடியாதவன் மனித உருவத்திலுள்ள விலங்காவான்.
*✍ ஜுவெனல்*

# உணவு வகைகள்

சுவையுள்ள முறையில் மக்கள் சமைக்கத் தெரிந்திருப்பதால், இயற்கையான தேவைக்கு மேல் அவர்கள் இருமடங்கு அதிகமாக உண்கின்றனர்.

✍ ஃபிராங்லின்

சாதாரண எளிய உணவுதான் தலைசிறந்தது. அதிக உணவு வகைகள் அதிக நோய்களைக் கொண்டுவருகின்றன.

✍ பிளினி

சிங்கத்திற்கு ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு போதும். மனிதனுக்கும் அந்த அளவே போதும். ✍ ஜி. ஃபார்டைஸ்

உடலைத் திடமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றால் உபவாசத்தையும், நடையையும் மேற்கொள்ளவும்; ஆன்மாவைத் திடமாக வைத்துக்கொள்ள உபவாசத்தையும் பிரார்த்தனையையும் மேற்கொள்ளவும். நடை, உடலுக்குப் பயிற்சியளிக்கும்; பிரார்த்தனை, ஆன்மாவுக்குப் பயிற்சியளிக்கும்; உபவாசம், இரண்டையும் சுத்தமாக்கும்.

✍ குவார்லேஸ்

மருந்தைவிட உணவு வகை மேலானது. ஒவ்வொருவனும் தானே தனக்கு மருத்துவனாயிருக்க வேண்டும். இயற்கைக்கு நாம் உதவியாக இருக்க வேண்டுமேயன்றி அதைக் கட்டாயப்படுத்தக்கூடாது. உன் உடலுக்கு எது ஒத்து வருகிறது என்று அனுபவத்தில் தெரிந்துள்ளாயோ அதை அளவோடு உண்ண வேண்டும். நம் உடல் சீரணித்துக்கொள்ளக் கூடியதைத் தவிர வேறு எதுவும் நல்லதன்று. ஜீரண சக்தி அளிப்பது எது? உடற்பயிற்சி. உடலுக்கு வலிமையளிப்பது எது? உறக்கம். தீராத தீமைகளையும் குறைப்பது எது? பொறுமை.

✍ வால்டேர்

## உண்ணல்

☆ உண்பதன் இன்பம் மதிப்புயர்ந்த பொருள்களைத் தாளிப்பதிலோ நறுமணத்திலோ இல்லை. அது உன்னிடமேயுள்ளது. உன் உழைப்பே உருசியளிக்கின்றது. *— ஹொரேஸ்*

☆ விருந்துக்குச் செல்லலாம்; ஆனால், கொஞ்சம் பசியிருக்கும் போதே எழுந்துவிட வேண்டும். *— ஹெர்ரிக்*

☆ ஆரோக்கியத்திற்காக மருந்துகளை நிறுத்தோ அளந்தோ உட்கொள்கிறோம்; அதே போல, உணவையும் அளவோடு புசிக்க வேண்டும். *— ஸ்கெல்டன்*

☆ பணக்காரனுக்கும் ஏழைக்கும் இதுதான் வேற்றுமை, முன்னவன் தான் விரும்பிய பொழுது உண்பான். பின்னவன் உணவு கிடைத்த பொழுதுதான் உண்பான். *— ஸர் வால்டர் ராலே*

☆ ஒருவன் வாழ்வதற்காக உண்ண வேண்டும்; உண்பதற்காக வாழக்கூடாது. *— ஃபிராங்க்லின்*

## உதவி

☆ உலகில் ஒருவன் நிலை தாழ்ந்திருந்தால். அவனுக்கு ஓர் உபதேசம் அளிப்பதைவிட ஒரு பலம் உதவி செய்வது மேலாகும். *— புல்வேர்*

☆ உனக்கு நீயே உதவிக்கொண்டால், கடவுளும் உனக்கு உதவி செய்வார்.

☆ பலர் உழைப்பில் பங்கெடுத்துக்கொண்டால், வேலை எளிதாகி விடும். *— ஹோமர்*

★ கீழே கிடப்பவனை மேலே தூக்கிவிட்டால் போதாது. பின்னும் அவனுக்கு உதவி செய்ய வேண்டும். ✍ *ஷேக்ஸ்பியர்*

## உபதேசம்

★ உன் உபதேசத்தைக் கேட்டவர்கள் ஆன்மிக வளர்ச்சியில் ஆசை கொண்டு விளங்கும்படி செய்ய வேண்டும்; இல்லாவிடில் உன் உபதேசம் வீணானது. ✍ *கோல்பர்ன்*

★ உபதேசியாரின் அறிவுத்திறனைக்காட்டிலும் அவருடைய ஆழ்ந்த நம்பிக்கையே கேட்பவர்களின் இதயங்களில் பதிகின்றது. உயிர்தான் உயிரை அளிக்க வல்லது. ✍ *ராபர்ட்ஸன்*

★ உபதேசம் செய்பவர் படிப்பில்லாதவர்களுக்கு எளிய முறையிலும், தெளிவாகவும், பூரணமாகவும் கற்பிக்கக்கூடிய ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்; ஏனெனில், ஊக்கப் படுத்துவதைவிட அடிப்படையான விஷயங்களைக் கற்பிப்பது அவசியம. ✍ *லூதர்*

★ உபதேசம் செய்வதற்கு உயிர்த்துடிப்புள்ள ஒரு மனிதன் போதும், பேரறிவு தேவையில்லை. ✍ *ஏ. ஃபெல்ஸ்*

★ உலகின் தேவை நல்ல முறையில் உபதேசம் செய்வதன்று; ஆனால், நல்ல முறையில் கேட்பதுதான். ✍ *போர்ட்மன்*

## உயிர்த் தியாகிகள்

★ உண்மைக்காக உயிரைத் தியாகம் செய்தல் ஒருவர் தம் சமயத்திற்காகவோ, நாட்டிற்காகவோ மரிப்பதன்று; உலகத் திற்காக மரிப்பதாகும்.

☆ உயிரை விடும் தியாகியைவிட, உயிர்த் தியாகியாக வாழ்வது அதிகக் கஷ்டம், அதற்கு அதிக வல்லமை தேவை.

✍ ஹொரேஸ்மான்

☆ உலகின் இயல்பு, இறந்துபோன திருத்தொண்டர்களைப் புகழ்தலும், உயிரோடிருப்பவர்களைத் துன்புறுத்தலும்.

✍ என். ஹேர்

☆ உயிர்த் தியாகிகளைப்பற்றிப் படிக்கும் பொழுது, நாமும் தியாகிகளாகிவிடலாம் என்று தோன்றுகிறது; ஆனால், செயலில் இறங்கும்பொழுது, ஒரு கடுஞ்சொல்லைக்கூட நம்மால் தாங்க முடிவதில்லை. ✍ ஹன்னா மூர்

## உயில்

☆ உன் மரண காலத்தில் நீ விட்டுச்செல்வது தகராறுக்கு இடமில்லாததாய் இருக்கட்டும், இல்லையெனில், உன் சொத்துகளுக்கு வக்கீல்களே உன் வாரிசுகளாக விளங்குவார்கள். ✍ எப். ஆஸ்போரின்

☆ சாகும்வரை இருப்பதைப் பங்கிட்டு அளிக்காதவர்கள், முடிந்தால் மேலும் அதை வைத்துக்கொண்டிருக்க எண்ணு வார்கள் என்று தெரிகின்றது. ✍ பிஷப் ஹால்

☆ உன் வாழ்க்கையில் எனக்கு ஒன்றும் அளிக்காமல், உன் மரணத்திற்குப் பின் எனக்கு அளிப்பதாக உறுதி சொல்கிறாய். அப்படியானால் நான் எதை விரும்புவேன் என்பதை உனக்கு அறிவிருந்தால் நீ தெரிந்துகொள்வாய். ✍ மார்ஷியல்

☆ உயிரோடிருக்கையில் எதையும் கொடாமல், இறந்த பிறகு தர்மங்கள் செய்ய ஏற்பாடு செய்வது வடிகட்டிய சுயநலமாகும்.

✍ கோல்டன்

## உரிமை

☆ எந்த மனிதனும் நியாயமானதைச் செய்வதற்குத்தான் உரிமையுண்டு; தன் விருப்பம் போல் செய்வதற்கு உரிமை யில்லை.
✍ ஸி. ஸிம்மன்ஸ்

☆ ஒரு கடமை, சம்பந்தமில்லாத உரிமை கிடையாது. சட்டத்தின் அதிகாரத்திற்குக் கட்டுப்படாத சுதந்தரம் கிடையாது, இடைவிடாத முயற்சியில்லாமல் பெருமை கிடையாது.
✍ லீபெர்

☆ எல்லா மனிதர்களும் தம்மிடமிருந்து பிரிக்க முடியாத உரிமைகளை இறைவனால் அருளப்பெற்றுள்ளனர்; இவை களில் உயிர்ப்பாதுகாப்பு, சுதந்தரம், இன்பத்தை அடையும் முயற்சி ஆகியவை சேர்ந்துள்ளன.
✍ ஜெஃப்பர்ஸன்

☆ உரிமைகளைப் பெற்றிருப்பதில் முதன்மையான சிறப்புகளுள் ஒன்று என்னவெனில், அவை உன் உரிமைகளேயாயினும், நீயாக அவைகளை விட்டுக்கொடுக்கலாம் என்பது.
✍ ஜி. மாக்ர்டொனால்ட்

## உருவகக் கதைகள்

☆ உரையாடலின் நடுவில் கூறப்பெறும் உருவகக் கதைகள் ஒளிப்பிழம்புகள் போன்றவை. ஆனால், அவை நன்கு தேர்ந்தெடுத்தவைகளாக இருக்க வேண்டும். அவை எல்லா விஷயங்களையும் தெளிவாகவும் அழகாகவும் காட்ட உதவுகின்றன.
✍ அடிஸன்

☆ உருவகக் கதைகள் நேர்த்தியான ஆபரணங்கள்; நல்ல விளக்கங்கள்; ஆனால், அவை விஷயங்களுக்கு நிரூபணமாக மாட்டா.
✍ லூதர்

## உரையாடல்

★ உரையாடல் என்ற கலையில் ஒரு மனிதனுக்கு உலகிலுள்ள எல்லா மனிதர்களும் போட்டியாயிருக்கின்றனர். — *எமர்சன்*

★ உரையாடலில் சாதுரியமான பேச்சைவிட நகைச்சுவையே அதிகம் தேவை. அறிவைவிடத் தெளிவு தேவை. புதிதாகத் தெரிந்துகொள்ளவோ, தங்களுக்கு அது தேவை என்று கருதவோ சிலரே விரும்புவர். எல்லாரும் விரும்புவது மகிழ்ச்சி, மூளைக்குச் சிரமம் கொடாமலிருத்தல் ஆகியவைகளே. — *ஸர் வில்லியம் டெம்பிள்*

★ உரையாடலில் முதல் தேவை, உண்மை; அடுத்தது, நல்ல பொருள்; மூன்றாவது, நகைச்சுவை; நான்காவது, சாதுரியம். — *ஸர் வில்லியம் டெம்பிள்*

★ சம்பாஷணைதான் மாணவனுக்கு ஆராய்ச்சிக்கூடமும், தொழில் நிலையமும் ஆகும். — *எமர்சன்*

★ மற்றவர்களுடைய மூளைகளிலே நம் மூளைகளைத் தேய்த்துத் துலக்கிக்கொள்வது நல்லது. — *மாண்டெயின்*

★ எப்படிக் கேட்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொள். மோசமாய்ப் பேசுபவர்களிடமிருந்தும் நீ நன்மையடைய முடியும். — *புளூடார்க்*

★ உண்மையான முறையில் பேசுவது போலவே, அடக்கத்துடன் செவிமடுத்துக் கேட்பதும் உரையாடலில் முக்கியமானது. — *ஆட்வெல்*

★ உரையாடலில் மௌனமாயிருப்பதும் ஒரு கலையாகும். — *ஹாஸ்லிட்*

★ ஒருவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது குறுக்கிட்டுப் பேசுவதைவிட முரட்டுத்தனம் வேறில்லை. — *லாக்*

☆ மக்கள் எவ்வளவு குறைவாகச் சிந்தனை செய்கின்றனரோ அவ்வளவு அதிகமாகப் பேசுகின்றனர்.

☆ விவாதிக்கத்தக்க ஒவ்வொரு விஷயத்தையும்பற்றி விவாதித்துக்கொண்டிருந்தால், அதற்கு ஒரு முடிவே இராது.

*— வில்லியம் பென்*

☆ சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். *— திருவள்ளுவர்*

## உலகம்

☆ நாம் வசிக்கும் இந்த உலகம் அழகானது; அருள் பெற்றது. உயிருள்ளவரை இதை அனுபவிப்பதை இழந்துவிடுதல் பாவமாகும். *— சேம்பர்ஸ்*

☆ உலகை நம்பாதே. அது வாக்களிப்பதை ஒரு போதும் அளிப்பதில்லை. *— அகஸ்டின்*

☆ 'உலகம்' என்பது ஒரு சங்கேதச் சொல். அதன் பொருள் அதிலுள்ள அயோக்கியத்தனம் அனைத்தும். *— டிக்கென்ஸ்*

☆ உலகில் நமக்குரிய ஒரே வேலி அதை நன்றாகத் தெரிந்து கொள்ளல். *— லாக்*

☆ உலகம் என்ற நாட்டைப்பற்றி விளக்கத்தைக்கொண்டு தெரிந்துகொள்ள முடியாது; ஒருவர் தாம் அதில் யாத்திரை செய்து பழகியே தெரிந்துகொள்ளல் வேண்டும்.

*— செஸ்டர்ஃபீல்ட்*

☆ சிந்தனை செய்பவர்களுக்கு உலகம் ஓர் இன்பியல் நாடகம். அதை உணர்பவர்களுக்குத் துன்பியல் நாடகம்.

*ஹோரேஸ் வால்போல்*

☆ 'உலகைப்பற்றிய அறிவு' என்பதன் பொருள், மனிதர்களின் குறைபாடுகளை அறிதல் என்பதுதான். ✍ டிக்கன்ஸ்

## உலோபி

☆ ஊதாரித்தனமாகச் செலவழிப்பவன் தன் வாரிசைக் கொள்ளையடிக்கிறான்; உலோபி தன்னையே கொள்ளையடிக்கிறான். ✍ புருயோ

☆ பண ஆசை கொண்டவனுக்குத் தங்கந்தான் கடவுள், மனைவி, நண்பன். ✍ பென்

☆ உலோபி தன் சகோதரனுடைய உடலைப் பட்டினிபோட்டு, தன் ஆன்மாவையும் பட்டினி போடுகிறான்.. மரண காலத்தில், அநீதியால் வந்த தன் செல்வங்களை விட்டு அவன் ஏழையாய், நிர்வாணமாய், துன்பத்தோடு செல்கிறான். ✍ தியோடோர் பார்க்கர்

☆ தங்கத்தின் சுமையைத் தாங்க முடியாமல் முனகுபவன் ரொட்டிக்காக அழுகிறான். ✍ யங்

## உழைப்பு

☆ ஒரு மனிதனின் தலைசிறந்த நண்பர்கள் அவனுடைய பத்து விரல்கள். ✍ ராபர்ட் கோலியர்

☆ உழைப்பு நாம் உயிர் வாழ்வதற்கான தெய்விகச் சட்டம், ஓய்ந்திருத்தல் துரோகமும், தற்கொலையுமாகும். ✍ மாஜினி

☆ வேலை செய்யாமல் இந்த உலகில் எந்த மனிதனும் வாழக் கூடாது என்று ஆண்டவன் விரும்புகிறான்; அதே போல, ஒவ்வொரு மனிதனும் தன் வேலையில் இன்புற்றிருக்க

வேண்டும் என்றும் அவன் விரும்புகிறான் என்றே எனக்குத் தோன்றுகிறது.
✍ ரஸ்கின்

☆ உழைப்பில்லாமல் எதுவும் செழிப்பதில்லை.
✍ ஸாஃபாகிளிஸ்

☆ தெய்வ நம்பிக்கைக்கு அடுத்தது உழைப்பில் நம்பிக்கை.
✍ போவீ

☆ உழைப்பு மூன்று பெருந்தீமைகளை நம்மிடமிருந்து நீக்குகின்றது; தொந்தரவு, தீயொழுக்கம், தரித்திரம்.
✍ வால்டேர்

☆ செல்வத்தை உண்டாக்குவது உழைப்பு; எல்லா விஷயங்களையும் இயக்குவது அதுவே. ✍ டேனியல் வெப்ஸ்டர்

☆ கடுமையான உழைப்பைத் தவிர வெற்றிக்கு இரகசியம் வேறு எனக்குத் தெரியாது.
✍ இ. டர்னர்

☆ வாழ்நாள் முழுவதும் உழைத்தால்தான் ஒரு துறையில் உன்னத நிலையை அடைய முடியும்; அதற்குக் குறைந்த விலையில் அந்நிலையை வாங்க முடியாது. ✍ ஜான்ஸன்

☆ தன் வேலையைக் கண்டுகொண்ட மனிதன் பாக்கியசாலி. உலகிலே ஓர் அசுரன் இருக்கிறான், அவன்தான் சோம்பலுள்ள மனிதன்.
✍ கார்லைல்

☆ கவிதை எழுதுவதில் எவ்வளவு பெருமை உள்ளதோ, அதே அளவு, நிலத்தை உழுவதிலும் உளது என்பதைத் தெரிந்து கொள்ளாத எந்தச் சமூகமும் செழிப்படையாது. ✍ பீட்டீ

## உள்ளத்தின் உரம்

☆ ஒரு மனிதன் தன்னை அமைதியாக வைத்துக்கொண்டு எத்தகைய தீமைகள் நேர்ந்தாலும் கலங்காது தன் கடமையைச்

செய்து, வழியிலுள்ள அபாயங்களைத் தாண்டிச் சென்றால், அவன் உள்ளத்தில் உரமுள்ளவன். இந்த உறுதி, தானே முக்கியமான ஒரு பண்பாக விளங்குவதுடன், மற்ற பண்பு களையும் காத்து நிற்கின்றது.
✍ லாக்

## உள்ளுணர்வு

☆ விலங்குகளுக்குள்ள இந்த இயற்கை அறிவுக்கு மேலாக இயற்கையில் காணும் அறிவு கடந்த விஷயம் எதுவுமில்லை என்பது என் கருத்து. இந்த உணர்வு பகுத்தறிவுக்கு மேலே தோன்றுவது. ஆயினும், அதைவிட மிகவும் தாழ்ந்தது.
✍ அடிஸன்

☆ பகுத்தறிவு முன்னேறி வளர்வது; இயற்கை அறிவு நிலையாக நிற்பது. ஐயாயிரம் ஆண்டு காலமாகத் தேனீயின் கூட்டில் எவ்வித அபிவிருத்தியுமில்லை; நீர்நாயின் வீட்டிலும் மாறுதலில்லை.
✍ கோல்டன்

☆ அபிவிருத்தியடையக்கூடிய பகுத்தறிவே மனிதனுக்கும் விலங்குக்குமுள்ள வேற்றுமை.
✍ டி. பின்னி

☆ பெருமை மிகுந்த ஒரு சமூக மக்களின் உள்ளுணர்வு அவர்களுடைய தலைசிறந்த அறிவாளர்களைவிட மேலான ஞானத்தைப் பெற்றிருக்கிறது.
✍ கோஸத்

☆ இயற்கை அறிவுக்கு மேலாகப் பகுத்தறிவை எவ்வளவு வேண்டுமானாலும் உயர்த்திக்கொள்ளுங்கள்; முதலாவதில் கடவுள் வழிகாட்டுகிறார்; இரண்டாவதில் மனிதன் வழி காட்டுகிறான்.
✍ போப்

## உள்ளுக்கம்

☆ வெற்றிக்குக் காரணம் திறமையைக்காட்டிலும் உள்ளுக்கமே யாகும் என்று அனுபவத்தில் தெரிகின்றது. எவன் தன்

உடலையும் ஆவியையும் வேலைக்கே அர்ப்பணம் செய்கிறானோ. அவனே வெற்றியாளன். ✍ சார்லஸ் பக்ஸ்டன்

☆ உண்மையான உள்ளூக்கத்தின் புனித ஆர்வத்தைவிட நேர்த்தியானதும் பெருமை மிக்கதும் எதுவுமில்லை. ✍ மோலியர்

## உறக்கம்

☆ பகல் முழுவதும் வீணாக அலைந்து திரிந்தபின், உறக்கம் மறுநாள் காலைக்காக நம்மை ஓய்வெடுக்கச் செய்கின்றது. ✍ யங்

☆ நடுநிசிக்கு முன்பு ஒரு மணி நேர உறக்கம், பின்னால் இரண்டு மணி நேரம் உறங்குவதற்கு ஈடாகும். ✍ ஃபீல்டிங்

☆ மென்மையான உறக்கம் மரணத்தின் போலி. ✍ ஷேக்ஸ்பியர்

☆ துயில்தான் நமது வளர்ப்புத்தாய். ✍ ஷேக்ஸ்பியர்

☆ களைப்பு, கல்லின் மேலும் குறட்டை விடும். அமைதியில்லாத சோம்பலுக்குத் தண்டனையும் உறுத்தும். ✍ ஷேக்ஸ்பியர்

☆ உறக்கமே! வீடற்றவர்களுக்கு நீதான் வீடு; நண்பரற்றவர்கள் உன்னையே நண்பனாகக் கொள்கின்றனர். ✍ இ. எலியட்

☆ வேதனைக்கு எளிதான மருந்து தூக்கம். அது மரணத்தைப் போல எல்லாவற்றையும் செய்யும், ஆனால், கொல்லாது. ✍ டோன்

☆ ஓய்வு எவ்வளவு இன்பமான விஷயம்! கட்டிலே எனக்குச் சொகுசாக உள்ளது. உலகிலுள்ள மகுடங்கள் எல்லாம் கிடைப்பதாயினும், இதை அவைகளுக்கு ஈடாகக் கொடுக்க மாட்டேன். ✍ நெப்போலியன்

☆ முன்னதாகப் படுத்து, முன்னதாக எழுந்தால், மனிதனுக்கு உடல் நலமும், செல்வமும், அறிவும் பெருகும். ✍ ஃபிராங்க்லின்

## உறுதி

☆ நிலையான உறுதிதான் மற்ற பண்புகளுக்கெல்லாம் துணை யாகும். ✍ *மாஜினி*

☆ காரியத்தில் உறுதியாயிருத்தலே வெற்றியின் இரகசியம். ✍ *டிஸ்ரேலி*

☆ ஆண்டவனே! மனிதன் மட்டும் உறுதியோடிருந்தால் அவன் நிறைவுடையவனாவான். ✍ *ஷேக்ஸ்பியர்*

## உற்சாகப்படுத்துதல்

☆ திருத்துவது அதிக நன்மைதான்; அதனினும் அதிக நன்மையானது உற்சாகப்படுத்துதல். ✍ *கதே*

☆ அயர்ந்துவிடாதே! சுவர்க்கத்திற்கு இன்னும் சிறிது தூரந்தான்- சில மைல்கள்தான் இருக்கின்றன. ✍ *ரூதர்ஃபோர்ட்*

## ஊதாரித்தனம்

☆ ஊதாரித்தனத்தைச் சட்டங்களால் தடுக்க முடியாது. இது எப்பொழுதும் பொதுமக்களுக்குத் தீமையாயிருப்பதுமில்லை. மூடன் ஒருவன் ஒரு ரூபாயை வீணாகச் செலவழித்தால். அவனைவிடக் கெட்டிக்காரன் ஒருவன் அதைப் பொறுக்கிக் கொள்கிறான். அந்த ரூபாயை என்ன செய்ய வேண்டுமென்று அவனுக்கு அதிகமாய்த் தெரியும். ஆதலால். பணம் தொலைவதில்லை. ✍ *ஃபிராங்க்லின்*

☆ வீட்டைக் கட்டிவிட்டு. அதற்காகக் கொடுக்க வேண்டிய பணமில்லாதவன். தான் விட்டு ஓடுவதற்காகவே அந்த வீட்டை அமைத்தவனாகிறான். ✍ *பாங்*

☆ ஊதாரியாயிருப்பவன் விரைவிலே ஏழையாவான். வறுமையால் அவன் பிறரை அண்டி வாழ நேரும். அவனிடம் ஊழல்களும் மலிந்துவிடும்.
*✍ ஜான்ஸன்*

☆ செலவுகள் யாவற்றிலும் காலத்தை வீணாக்குதலே அதிகச் செலவும், ஊதாரித்தனமுமாகும்.
*✍ தியோஃப்ரேஸ்டஸ்*

## எங்கும் நிறைந்தவர்

☆ ஒருவர் உள்ள இடத்தில் கடவுள் இரண்டாமவராக உள்ளார்; இருவர் உள்ள இடத்தில், கடவுள் மூன்றாமவராக உள்ளார்.
*✍ முகம்மது நபி*

☆ மானிட சமூகத்தை ஒரு குடும்பமாக அமைத்து, தாம் தந்தையாயிருந்து, உலகை நம் வீடாக்கிய கடவுள் எல்லா இடங்களிலும் நிறைந்துள்ளார்.
*✍ காலெரிட்ஜ்*

## எதிர்காலம்

☆ நாம் எப்பொழுதும் எதிர்காலத்தையே நோக்கிக்கொண்டிருக்கிறோம்; நிகழ்காலம் நமக்குத் திருப்தியளிக்கவில்லை. நமது இலட்சியம் எதுவாயிருப்பினும், எதிர்காலத்திலேயுள்ளது.
*✍ கில்லெட்*

☆ இளைஞர்களுக்கு எதிர்காலம் ஒரு தேவதை உலகமாக உள்ளது.
*✍ ஸாலா*

☆ நாளை என்ற ஒவ்வொரு நாளைக்கும் இரண்டு கைப்பிடிகள் உள்ளன. கவலை என்ற பிடியினாலோ, நம்பிக்கை என்ற பிடியினாலோ நாம் அதைப் பிடித்துக்கொள்ளலாம்.

☆ எதிர்காலமே நமது குறிக்கோள். நாம் ஒரு போதும் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. வாழப்போவதாக நம்பிக்கொண்டு

தான் இருக்கிறோம்; இன்பமடைவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்; எனவே. நாம் இன்பமில்லாமல் இருப்பதைத் தவிர்க்க முடியவில்லை. ✍ பாஸ்கல்

☆ எதிர்காலத்திற்காக நாம் நம்மைத் தயாரித்துக்கொள்ளும் சிறந்த முறை. நிகழ்காலத்தைப் பேணிக்கொள்வதாகும். நம் கடைசிக் கடமை வரை செய்து முடிக்க வேண்டும்.

✍ ஜி. மாக்டொனால்ட்

☆ பழமையை எண்ணி வருந்திப் பார்க்க வேண்டாம். அது மீண்டும் வரப்போவதில்லை; நிகழ்காலத்தை அறிவோடு சீர்திருத்திக்கொள்; அச்சமில்லாமல், ஆண்மையுள்ள இதயத்துடன், நிழல் போலக் காணும் எதிர்காலத்தை எதிர் கொள்ளச் செல்வாயாக. ✍ லாங்ஃபெல்லோ

## எதிர்பார்த்தல்

☆ துயரங்களை எதிர்பார்ப்பவன் இருமுறை துயரமடைகிறான். ✍ போர்ட்டியஸ்

☆ தீமையை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டாம். நீ அஞ்சிக்கொண்டிருக்கும்போதே. அது உன் வீட்டுப் பக்கமாக வேறிடத்திற்குச் சென்றுவிடக்கூடும். ✍ டப்பெர்

☆ இன்றைய பளுவினால் எந்த மனிதனும் வளர்ச்சியடைவதில்லை. நாளைப் பளுவையும் இன்றைய பளுவுடன் சேர்த்து ஏற்றும் பொழுதுதான், ஒருவனால் தாங்க முடியாத சுமையாகிவிடுகின்றது. ✍ ஜி. மக்டொனால்ட்

## எதிர்ப்பு

☆ எதிர்ப்பு ஊக்கமுள்ளவரை வெறி கொள்ளச் செய்யும்; அவரை வேறு வழியில் திருப்புவதில்லை. ✍ ஷில்லர்

☆ ஊக்கமுள்ள ஆன்மா சிரமமில்லாத வெற்றியை வெறுக்கின்றது; தாக்குவோனுடைய ஆவேசமும் தற்காத்துக்கொள்பவனுடைய வேகத்தை அதிகப்படுத்தும். ✍ எமர்சன்

☆ உயர்ந்த உள்ளங்களுக்கு மகிழ்ச்சியளிப்பது வெற்றியன்று. போராட்டமேயாகும். ✍ மாண்டெ லெம்பெர்ட்

☆ நம்முடன் மல்யுத்தம் செய்பவன் நம் நரம்புகளை முறுக்கேற்றி விடுகிறான்; நம் திறமைகளைக் கூர்மைப்படுத்துகிறான். நமது எதிரியே நமக்குத் துணைவன். ✍ பர்க்

## எதிலும் ஐயம்

☆ அதிக அறிவிருந்தால் அதிக நம்பிக்கை இருக்கும். அறியாமைக்கு எப்பொழுதும் ஐயந்தான். ✍ வில்மாட்

☆ சில மனிதர்கள் தாங்கள் புரிந்துகொள்ளக்கூடிய விஷயங்களை மட்டுமே நம்புவர்; அவர்கள் புரிந்துகொள்ளக்கூடியவையும் மிகச்சிலவே. ✍ எவர்மாண்ட்

☆ இழிவான இதயத்திற்கும், நலிவடைந்த மூளைக்கும் அறிகுறி, எதிலும் ஐயப்படுதல். உண்மையான தத்துவ ஞானம் விஷயங்களை மறுத்துத் தள்ளாமல் விளக்கவே முற்படுகின்றது. ✍ புல்வர்

## எல்லாம் அறிந்தவர்

☆ எங்கும் பார்க்கக்கூடிய இறைவனுடைய கண்ணிலிருந்து எது தப்பியிருக்க முடியும்? எது அவன் உள்ளத்தை ஏமாற்ற முடியும்? அவன் எல்லாம் அறிந்தவன். ✍ மில்டன்

☆ உன் செயல்கள் அனைத்திலும் இறைவன் உன்னைக் காண்பதாக எண்ணிக்கொள் அவன் செயல்கள் அனைத்திலும் அவனைக் காண்பதற்கு முயற்சி செய். ✍ குவார்லஸ்

## எல்லாம் வல்லவர்

☆ இறைவனுடைய சர்வ வல்லமையைத் தவிர என் நம்பிக்கைக்கு வேறு ஆதாரமில்லை. ✍ ரூதர்ஃபோர்ட்

☆ இறைவன், தான் மாறாமல், மாட்சிமை என்ற திரைக்குப் பின்னால் இருந்துகொண்டு, எல்லாவற்றிற்கும் ஒளியும் உயிரும் அளிக்கிறான்; வான் மண்டலத்தில் இயங்கும் கோளங்களையும், மாறி மாறி வரும் பருவ காலங்களையும் இயக்கி வருகிறான். ✍ ஸாமர்வில்

## எழுத்தாளர்

☆ தன் இதயத்துள் உள்ளதைப் பார்த்து, அவன் அங்கு காண்பதை அப்படியே உண்மையாக எழுதக்கூடிய எந்த மனிதனுக்கும் ஏராளமான வாசகர்கள் இருப்பார்கள். ✍ எட்ஹோ

☆ எழுத்துசமயத்தைப் போன்றது; அதில் ஈடுபடத் தீர்மானிப்பவன் தானே தன் கதி மோட்சத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். ✍ லாரிமெர்

☆ வாசகனின் நேரத்தில் அதிகமாய் எடுத்துக்கொள்ளாமல், அவனுக்கு மிக அதிகமான அறிவை அளிப்பவன் மிகப் பெரும் பணியைச் செய்கிறான். ✍ ஸிட்னி ஸ்மித்

## எழுத்து நடை

☆ நடை என்பது 'சரியான சொற்களைச் சரியான இடங்களில் அமைத்தல்' என்று விளக்கிச் சொல்லலாம். ✍ ஸ்விஃப்ட்

☆ நீ எவ்வளவு அழகிய உடலைப் பெற்றிருந்தாலும், அழுக்கான, கிழிந்த கந்தல்களை நீ அணிந்திருந்தால், உனக்குச் சரியான

வரவேற்பு இராது; அதுபோலவே, உன் கருத்துகள் எவ்வளவு நீதியானவைகளாயிருந்தபோதிலும், உன் எழுத்து நடை கரடு முருடாயும், நாகரிகமின்றியும், பாமர முறையிலும் இருந்தால், உன் எழுத்துக்குச் சரியான வரவேற்பு இராது; நடைதான் கருத்துகளின் உடை. *செஸ்டர்ஃபீல்ட்*

☆ தேவையற்றவைகளை ஒதுக்கித் தள்ளுவதிலிருந்து தெளிவான நடை ஏற்படும். *திருமதி நெக்கர்*

☆ நடையில் வல்ல கலைஞனை அவன் கூறாமல் விடுகிற விஷயங்களிலிருந்தே நான் கண்டு கொள்கிறேன். *ஷில்லர்.*

☆ நடை, ஆளைக் காட்டிவிடும். *லத்தீனிலிருந்து*

☆ ஓர் ஆசிரியர் தெளிவாயில்லை என்று குறைகூறும் வாசகன், தன் உள்ளத்தையும் பார்த்து, அங்கு எல்லாம் தெளிவாயிருக்கின்றனவா என்பதைக் கண்டுகொள்ள வேண்டும் எவ்வளவு தெளிவான எழுத்தாயிருந்தாலும், இருளில் கண்ணுக்குப் புலனாகாது. *கதே*

## எளிய வாழ்க்கை

☆ எளிமை இயற்கையின் முதற்படி; கலையின் கடைசிப்படி. *பி.ஜே. பெய்லி*

☆ மிகச்சிறந்த உண்மைகள் எளிமையாயுள்ளன; தலைசிறந்த மனிதர்களும் அப்படியே இருக்கின்றனர். *ஹேர்*

☆ குணத்திலும், பாவனைகளிலும், நடையிலும் எல்லா விஷயங்களிலும் மிக உயர்ந்து நேர்த்தியாக விளங்குவது எளிமைதான். *லாங்ஃபெல்லோ*

## ஏகாந்தம்

☆ மனம் ஏகாந்தத்தை விரும்பினால், அதன் மூலம் அது குணத்தில் மேம்பட்டிருப்பதாகும். அது ஏகாந்தத்தின் ருசியை

அனுபவித்த பின், மேலும் பெருமையுடையதாகும்.

✍ ஹம்போல்ட்

☆ எவருக்கு ஒருவரையும் பிடிக்கவில்லையோ, எவரை ஒருவருக்கும் பிடிக்கவில்லையோ. அவரே ஏகாந்தத்திற்குத் தகுதியுள்ளவர்.

✍ ஸிம்மர்மன்

☆ பயிரிடப்பெறாத நிலத்திற்கு என்ன ஏற்படுகின்றதோ அதுவே அறிவீனமாகச் சமூகத்தைத் துறந்து ஏகாந்தமாயிருப்பவனுக்கும் ஏற்படும்; பாலை போன்ற அவனுடைய இதயத்தில் முட்செடிகள் வளர்ந்துவிடுகின்றன.

✍ ரிவரால்

☆ சம்பாஷணை, உலக அறிவை விருத்தி செய்யும். ஆனால், ஏகாந்தம் பேரறிவின் பள்ளிக்கூடம்.

✍ கிப்பன்

☆ நாம் சமூகத்திலிருந்து வாழ்வதைக் கற்றுக்கொண்டால் எப்படி மரிக்கவேண்டும் என்பதை ஏகாந்தம் நமக்குக் கற்பிக்க வேண்டும்.

✍ பைரன்

☆ சமூகம் நாம் எப்படியிருக்கிறோம் என்பதைக் காட்டுகின்றது. ஏகாந்தமோ எப்படியிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றது.

✍ செஸில்

☆ நாம் நம்மைத் தனிமையாகப் பிரித்துக்கொள்ளக்கூடாது; அந்தத் தனி நிலையில் நாம் இருக்க முடியாது. சமூகத் தொடர்பு நம் சொந்த நிலையிலும், மற்றவர்களிடத்தும், சகிப்புத் தன்மையை உண்டாக்குகின்றது.

✍ கதே

☆ இயன்ற சமயத்தில் கூட்டத்தைவிட்டு வெளியேறி இரு. ஒவ்வொரு நாளும், சில மணி நேரமாவது, உனக்கு நீயே துணையாயிரு.

✍ ஆர்தர் பிரிஸ்பேன்

☆ மிகவும் தனிமையாக நிற்பவனே உலகில் தலைசிறந்த வலிமையுள்ள மனிதன்.

✍ இப்ஸன்

# ஏமாற்றம்

☆ ஒரு சமயம் ஒரு வயோதிகன் சொன்னதாவது: 'நான் இளைஞனாயிருக்கையில், நான் ஏழையாயிருந்தேன்; வயதான காலத்தில், நான் செல்வனானேன்; ஆனால், ஒவ்வொரு நிலையிலும் நான் ஏமாற்றத்தைக் கண்டேன். அனுபவிக்கக்கூடிய ஆற்றலிருந்த சமயத்தில் எனக்கு வசதியில்லை; வசதிகள் வந்த பின்பு, ஆற்றல்கள் போய்விட்டன.' ✍ *திருமதி காஸ்டரின்*

☆ நாம் ஆர்வத்துடன் போற்றும் திட்டங்கள் சிதைந்து கிடப்பதன் மூலமே நாம் சுவர்க்கப் பாதையில் முன்னேறுகிறோம். நம் தோல்விகள் வெற்றிகளே என்றும் கண்டுகொள்கிறோம்.

✍ *ஏ.பி. ஆங்காட்*

☆ நம்பிக்கையின் அடிச்சுவடுகளையே ஏமாற்றமும் பின்பற்றிச் செல்கின்றது.

☆ ஏமாற்றுக்காரர்களே சமூக உறுப்பினர்களுள் மிகவும் அபாயமானவர்கள். நம் இயற்கையின்படி நாம் காட்டும் பிரியத்திற்கும், ஆதரவுகளுக்கும் அவர்கள் துரோகம் செய்கின்றனர். மிகவும் புனிதமான கடமைகளைக்கூட மீறி நடக்கின்றனர்.

✍ *கிராப்*

★ ஒரு நல்ல காரியத்திற்காக நாம் ஒரு நாளும் ஏமாற்றுவதில்லை. இழிதகைமை பொய்யுடன் தீய எண்ணத்தையும் சேர்த்துவிடுகின்றது. ✍ *புரூயெர்*

# ஏளனம் செய்தல்

☆ ஏளனம் செய்தல் மூடர்களின் முதல் கருவியாகவும் கடைசிக் கருவியாகவும் உள்ளது. ✍ *ஸி. ஸிம்மன்ஸ்*

☆ வலிமையுள்ள உங்களுக்கு எதிராக ஏளனம் பலமற்ற ஆயுதமாகும். ஆனால், சாதாரண மனிதர்கள் கோழைகளா

யிருப்பதால், வெறும் சிரிப்பைக் கண்டே அஞ்சுகின்றனர்.

✍ டப்பெர்

☆ ஸ்பெயின் தேசத்தின் போலி வீரத்தை செர்வான்டிஸ் பரிகசித்துச் சிரித்தே வீழ்த்திவிட்டார். ✍ பைரன்

(முற்காலத்தில் ஸ்பெயின் நாட்டில் பிறருக்கு உதவி செய்ய - முக்கியமாகப் பெண்களைக் காக்க - வீரர்கள் பலர் தோன்றியிருந்தனர். நாளடைவில் அவர்கள் கத்தரித் தோட்டத்துப் பொம்மைகள் போலாகி விட்டனர். அவர்களுள் ஒருவரைப்பற்றி 'டான் குவிஷாட்' என்ற அற்புதக் கற்பனை நவீனம் ஒன்றை எழுதி உலகப் புகழ் பெற்ற ஆசிரியர் செர்வான்டிஸ்)

## ஒப்பிட்டுப் பார்த்தல்

☆ சில மனிதர்கள் மேலானவர்களாகத் தோன்றுவது அவர்கள் இருக்கும் இடத்தைப் பொறுத்தது; அங்கே மற்றவர்கள் மட்டமானவர்களாய் இருப்பதால், அவர்கள் மேலானவர்களாகின்றனர். ✍ ஜான்ஸன்

☆ நல்லது, கெட்டது என்பதை மதிப்பிடுதல் பெரும்பாலும் ஒப்பிட்டுப் பார்ப்பதில் இருக்கின்றது.

☆ சந்திரன் ஒளி வீசுகையில், நாம் மெழுகுதிரியைக் காணவில்லை அது போலவே, பெரும் புகழ் குறைந்த புகழை மங்கச் செய்துவிடுகின்றது. ✍ ஷேக்ஸ்பியர்.

## ஒப்புக்கொள்ளல்

☆ தீவினைகளை ஒப்புக்கொள்ளலே நல்ல வேலைகளுக்குத் தொடக்கமாகும். ✍ அகஸ்டின்

★ எந்த மனிதனும் தன் தீமைகளை முன் ஒப்புக் கொள்வதில்லை. ஏனெனில், அவன் இன்னும் அவைகளில் திளைத்துக்கொண்டிருக்கிறான். விழித்தெழுபவன்தான் தன் கனவைப்பற்றிப் பேச முடியும். ✍ *ஸெனிகா*

★ ஒருவன் தான் தவறு செய்ததை ஒப்புக்கொள்ள வெட்கப்படக் கூடாது. ஒப்புக்கொள்வதன் பொருள் என்ன? அவன் நேற்றைவிட இன்று அதிக அறிவு பெற்றிருக்கிறான் என்பதே. ✍ *போப்*

★ நம்முடைய தவறான செயல்களை ஒப்புக்கொள்ளத் தைரியம் அவசியமில்லை. பரிகசிக்கத் தகுந்த, மடமையான காரியங் களுக்கே அது அவசியம். ✍ *ரூஸோ*

## ஒழுக்கம்

★ ஒழுக்கம் என்பது சமயம் செயற்படுதலாகும்; சமயம் என்பது ஒழுக்கத்தின் தத்துவம். ✍ *வார்ட்லா*

★ சிலர் சமயத்திலிருந்து ஒழுக்கத்தைப் பிரிப்பர்; ஆனால், சமயமே வேர். அது இல்லாமல் ஒழுக்கம் வாடி அழிந்து விடும். ✍ *ஸி.ஏ. பார்ட்டல்*

★ சமயக் கட்சிகள் பலதிறப்பட்டவை, ஏனெனில், அவை மனிதர்களிடமிருந்து தோன்றியவை; ஒழுக்க நெறி எங்கும் ஒரே தன்மையுள்ளது, ஏனெனில், அது ஆண்டவனிடமிருந்து வந்தது. ✍ *வால்டேர்*

★ ஒழுக்கமில்லாமல் சமயமில்லை. சமயமில்லாமல் ஒழுக்க மில்லை. ✍ *ஜி. ஸ்பிரிங்*

## ஒழுக்க வரம்பின்மை

★ தீய கருத்துகள் தீய உணர்ச்சிகளை எழுப்புகின்றன, தூய்மையற்ற பேச்சுகளுக்கு இடமுண்டாக்குகின்றன; தீய

செயல்களுக்குக் காரணமாகின்றன இவை உடலையும் மனத்தையும் நலிவுறச்செய்து, ஒழுக்க நடையில் தூய்மையாயும் மேன்மையாயும் உள்ளவை அனைத்தையும் அழிக்கின்றன. ✍ *ஸி. ஸிம்மன்ஸ்*

## ஒழுங்கு

☆ நல்ல ஒழுங்குதான் எல்லா விஷயங்களுக்கும் அடிப்படை. ✍ *பர்க்*

☆ ஒழுங்கின் பொருள் என்னவென்றால், ஒளி, அமைதி, தற்சுதந்தரம், தன்னைத்தான் அடக்கிக்கொள்ளும் திறன் ஆகியவை. ஒழுங்குதான் ஆற்றல். - ஏமீயல்

☆ ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் இடம் உண்டு. ஒவ்வொன்றும் தன் இடத்தில் இருத்தல் வேண்டும். ✍ *ஃபிராங்க்லின்*

☆ உள்ளத்தில் ஒழுங்கு முற்றிலும் குறைந்திருந்தால், நாம் புறத்தில் ஒழுங்கை நிலைநாட்ட முடியாது. ✍ *ஷேக்ஸ்பியர்*

## ஒளி

☆ ஒளி உண்மையின் சின்னம். ✍ *ஜே. ஆர். லோவெல்*

☆ ஒளி ஆண்டவனின் நிழல். ✍ *பிளேட்டோ*

☆ கண்ணின் ஒளி கடவுளின் உன்னதப் பரிசு! எல்லா உயிர்களும் ஒளியிலிருந்து வாழ்கின்றன; படைக்கப்பெற்ற அழகிய பொருள் ஒவ்வொன்றும், செடிகளும், எல்லாம் உவகையோடு ஒளியின் பக்கம் திரும்புகின்றன. ✍ *ஷில்லர்*

## ஓய்வு

☆ தொழிலில்லாமலிருத்தல் ஓய்வன்று; காலியாயுள்ள மனம் துயர்ப்படுவதாகும். ✍ *கௌப்பர்*

☆ சிலர், உணவைத் தேடுகின்றனர்; சிலர், செல்வத்தையும் சுகத்தையும் தேடுகின்றனர்; சிலர், புகழைத் தேடுகின்றனர். ஆனால், எல்லோரும் ஓய்வை நாடுகின்றனர். — [illegible]

☆ வேலைக்கு மாறுபாடாயிருந்தால்தான் ஓய்வு பயனுள்ளது. அதையே நோக்கமாகக் கொண்டால், அது மிகவும் இரங்கத்தக்க நிலையாகும். — டி. [illegible]

☆ அளவுக்கு அதிகமான ஓய்வு வேதனையாகும். — [illegible]

☆ ஓய்வு ஊக்கமுள்ள வேலையிலிருந்து ஓடுவதன்று; அதற்குத் தயார் செய்துகொள்வதாகும். — ஜே. [illegible]

☆ உழைப்பின் சாரம் ஓய்வு. — புளூடார்க்

☆ ஓய்வும் உழைப்பும் மாறி மாறி இருந்தால், நீண்ட நாள் அவை நிலைத்திருக்கும். — ஓவிட்

☆ உழைப்பின் நோக்கம் ஓய்வு. — அரிஸ்டாட்டல்

☆ ஓய்வு ஓர் அழகான உடை. ஆனால், அது இடைவிடாமல் அணியத் தக்கதன்று. — பழைய வாக்கியம்

☆ ஓய்வு போய்விட்டது. இராட்டினங்கள் போன இடத்திற்கு; பொதிக்குதிரைகளும், கட்டை வண்டிகளும் போன இடத்திற்கு; வீட்டு வாயிலில் கதிரொளி நிறைந்த மாலை நேரங்களில் சாமான்கள் கொண்டுவந்து கொடுத்த வியாபாரிகள் போன இடத்திற்கு, அதுவும் போய்விட்டது. — ஜியார்ஜ் எலியட்

☆ மனிதன் வாழ்வாகிய இந்த மேடையில் கடவுளும் தேவர்களுமே (வேலையில்லாமல்) பார்வையாளர்களாக இருக்க உரிமை யுள்ளவர்கள். — பிதாகோரஸ்

## ஓய்வு பெறுதல்

☆ பெருஞ்சாலையை விட்டு விலகி, காப்புள்ள ஓரிடத்தில் போய்த் தங்கியிரு; ஏனெனில், சாலையருகிலுள்ள மரத்தில் காய் காய்த்தால், அது கனியும்வரை இராது.

✍ கிரிஸோஸ்டம்

☆ ஓய்வெடுத்துக்கொண்டு ஒதுங்குவதை நன்கு அனுபவிப்பதற்கு, அடிப்படையான நல்ல உலகியல் அறிவும், படிப்பில் ஆர்வமும் வேண்டும்; அப்பொழுதுதான் ஓய்வின் இனிமை தெரியும்.

✍ டிரைடன்

☆ உலகம் நீ ஓய்வெடுத்துக்கொண்டு ஒதுங்குவதற்காக வருந்தும்வரை, ஒதுங்க நினைக்காதே. செருக்கினாலோ, கோழைத்தனத்தாலோ, சோம்பலினாலோ ஒரு மூலையில் ஒதுக்கப்பட்டிருக்கும் மனிதன், அங்கே வெறுமே உட்கார்ந்து, உறுமிக்கொண்டிருப்பதை நான் வெறுக்கிறேன், நான் செய்வதைப் போல வெளியே வரட்டும், வந்து குரைக்கட்டும்.

✍ ஜான்ஸன்

## கடமை

☆ தொலைவிலே மங்கலாகத் தெரிவதைக் காண்பது நம் கடமையன்று, நம் கண் முன்பு உள்ளதைச் செய்வதே நம் மேலான கடமை.

✍ கார்லைல்

☆ நமது வாழ்க்கை பெருங்கடமைகளுக்காக அளிக்கப் பெற்றுள்ளது, சுயநலத்திற்காக அன்று; குறிக்கோளில்லாத கனவுகளில் வீணாகக் கழிப்பதற்காக அன்று; நம்மை அபிவிருத்தி செய்துகொண்டு, மனித சமூகத்திற்குத் தொண்டு செய்வதற்காக.

✍ ஆப்ரே டி. வீர்

மனிதனின் கடமை தெளிவானது, சுருக்கமானது. அதில் இரண்டு விஷயங்களே உள்ளன; கடவுளுக்காக அவன் செய்ய வேண்டிய கடமை. இதை ஒவ்வொரு மனிதனும் உணர வேண்டும்; அண்டை வீட்டுக்காரருக்கு அவன் செய்ய வேண்டிய கடமை, தனக்கு மற்றவர் செய்ய வேண்டுமென்று விரும்புவதை அவனே செய்ய வேண்டும். ✍ *தாமஸ் பெயின்*

நம் கடமையைச் செய்வதில், நாம் அதைச் செய்வதைக் கற்றுக் கொள்கிறோம். ✍ *இ.பி. புஸே*

செய்யாமல் விட்டுள்ள ஒவ்வொரு கடமையும் புதிதாக ஏழு கடமைகளுடன் திரும்ப வரும். ✍ *சார்லஸ் இங்ஸ்லே*

உனக்கு மிகவும் அருகிலுள்ள கடமையைச் செய். ✍ *கதே*

கடமைகள் நம்முடையவை; நிகழ்ச்சிகள் கடவுளுடையவை. ✍ *செஸில்*

கடமையில்லாத ஒரு கணங்கூட இல்லை. ✍ *ஸிஸரோ*

## கடமையில் வழுவுதல்

ஜனங்கள் ஒருமுறை கடமையிலிருந்து வழுவத் தொடங்கினால், அதை எங்கே நிறுத்த வேண்டுமென்று தெரியாமற்போய்விடும். ✍ *மூன்றாவது ஜியார்ஜ்*

ஒருமுறை மானிடக் கடமைகளிலிருந்து வழுவினால் அது எவ்வளவு தூரம் விலகிச் செல்லச் செய்துவிடுகின்றது? ✍ *பைரன்*

## கடன்

சிக்கனமான வாழ்க்கையின் இரகசியப் பகைவன், கடன். வெளிப்படையான பகைவர்கள், தீயொழுக்கமும் சோம்பலும்.

கடன் வாங்கும் பழக்கமும் தரித்திரமும் இரட்டைப் பிள்ளைகள்.

✍ டி.டி. முங்கர்

☆ சிறு கடன் ஒரு கடன்காரனை உண்டாக்கும், பெருங்கடன் ஒரு பகைவனை உண்டாக்கும்.

✍ பப்ளியஸ் ஸைரஸ்

☆ சொற்பக் கடனுள்ளவன் சொற்பக் காலத்தில் அதை அடைத்து விடலாம். அவன் கவனமாயிருந்தால், அடைத்துவிடுவான். அவன் அசட்டையாயிருந்துவிட்டால் கடன் பெருகிவிடும். அவன் ஒருகாலும் அடைக்க முடியாது என்று மனம் தளர்ந்து போவான், அதனால் தன் கணக்குகளை ஒரு போதும் திருப்பிப் பார்க்கமாட்டான்.

✍ செஸ்டர்ஃபீல்ட்

☆ கடன் வாங்குவதில் நீ என்ன செய்கிறாய் என்பதை நினைத்துப் பார். உன் சுதந்தரத்தின்மீது மற்றொருவனுக்கு அதிகாரம் அளிக்கிறாய். தவணைப்படி கடனைச் செலுத்த முடியாவிட்டால், உன் கடன்காரனை நீ பார்க்க வெட்கப் படுவாய்; அவனிடம் பேசும்பொழுது அஞ்சி நடுங்குவாய். அற்பமான, இரங்கத்தக்க போலிச் சாக்குப்போக்குகளைச் சொல்வாய், படிப்படியாக உண்மை பேசுவதை நிறுத்தி பச்சைப் பொய் சொல்லத் தொடங்குவாய். கடனோடு இருப்பது தீமையான வெற்றுப்பை நிமிர்ந்து நிற்பது கஷ்டம்.

✍ ஃபிராங்க்லின்

# கடன் கொடுத்தல்

☆ நீ ஒரு நபருக்குக் கடன் கொடுத்தால், உன் சொந்தக் காரியம் எதற்கும் அந்தப் பணம் உதவாமற்போகிறது. நீ அதைத் திரும்பக் கேட்டால், உன்னுடைய அன்பு காரணமாகவே அந்த நண்பன் உனக்கும் பகைவனாக மாறியிருப்பான். மேலும் வற்புறுத்திக் கேட்டால், ஒன்று, நீ பணத்தை இழக்க வேண்டும். அல்லது அந்த நண்பனை இழக்க வேண்டும்.

✍ பிளாட்டஸ்

☆ நீ கடன் வாங்குபவனாகவோ, கொடுப்பவனாகவோ இருக்க வேண்டாம்; ஏனெனில், கடன் பெரும்பாலும் தன்னையும் இழந்து, ஒரு நண்பனையும் இழக்கச்செய்கின்றது.

☙ ஷேக்ஸ்பியர்

☆ உன் சக்திக்கு மீறிய அளவில் கடன் கொடுக்க வேண்டாம், உன்னால் இயன்றதைக் கொடுக்க மறுக்கவும் வேண்டாம்.

☙ பென்

## கடன் வாங்குதல்

☆ கடன் வாங்குதல் பிச்சையெடுப்பதைவிட மிகவும் மேலானதன்று.

☙ லெஸ்ஸிங்

☆ பணத்தின் அருமை உனக்குத் தெரிய வேண்டுமானால், வெளியே போய்க் கொஞ்சம் கடனாகக் கேட்டுப் பார். கடன் வாங்கப் போகிறவன் துக்கப்பட்டுக்கொண்டே போகிறான்.

☙ ஃபிராங்க்லின்

☆ கடன்படுதல் வலைக்குள் சிக்கிக்கொள்வதாகும்.

☙ ஃபிராங்க்லின்

☆ பணப்பையைப் பீடிக்கும் இந்தக் காச நோய்க்கு மருந்தே இல்லை; கடன் வாங்குதல் அதைச் சிறிது தான் இழுத்துக் கொண்டிருக்கச் செய்யும். ஆனால், நோய் குணமாகாது.

☙ ஷேக்ஸ்பியர்

## கடிதங்கள்

☆ பிரிந்துள்ள நண்பர்களை இணைப்பது கடிதங்கள். ☙ ஸெனிகா

☆ கடிதம் யாருக்கு எழுதப்பெறுகின்றதோ அவனையும், எழுதுவோனையும் இருவரையும் எடுத்துக் காட்டுகின்றது.

☙ செஸ்டர்ஃபீல்ட்

☆ நல்ல காதற்கடிதம் எழுதுவதற்கு, நீ என்ன எழுத வேண்டும் என்பதை அறியாமலே எழுதத் தொடங்க வேண்டும், நீ என்ன எழுதியிருக்கிறாய் என்பதை அறியாமலே முடிக்கவேண்டும்.

*✍ ரூஸோ*

☆ மனம் மிகவும் தளர்ந்துள்ள சமயத்தில் ஒருவன் தன் நண்பர்கள் எழுதிய கடிதங்களையெல்லம் படித்துப் பார்த்தல் தலைசிறந்த மருந்தாகும். *✍ ஷென்ஸ்டன்*

## கடினம்

☆ உழைப்பு உடலை வலிமையாக்கும், கஷ்டங்கள் மனத்தை வலிமையாக்கும். *✍ ஸெனீகா*

☆ நம்முடைய ஆற்றல் அதற்கு எதிராகத் தோன்றும் தடைகளின் அளவைப் பொறுத்தது. *✍ ஹாஸலிட்*

☆ நாம் எதிர்பாராத இடங்களில் தோன்றும் கஷ்டங்களே மிகப் பெரியவை. *✍ கதே*

☆ கடினம், கஷ்டம் என்பது என்ன? குறித்த காரியங்களை முடிக்க எவ்வளவு வலிமை வேண்டும் என்பதைக் குறிக்கும் சொல்லே அது. அதைக் கண்டு குழந்தைகளும் மூடர்களுமே அஞ்சுவர்; மனிதர்களுக்கு அது ஊக்கமே அளிக்கும்.

*✍ ஸாமுவேல் வாரென்*

## கட்சிகள்

☆ கட்சி என்பது சிலருடைய நன்மைக்காகப் பலருக்குப் பைத்தியம் பிடிப்பதாகும். *✍ போப்*

☆ கட்சிக் கொடிகளின் நிழலில்தான் தேசபக்தி புதைக்கப் படுகின்றது. *✍ ஸெயின்ட் பியெர்*

★ தாங்கள் எந்தக் கட்சியிலும் சேராதவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் நிச்சயமாக நம் கட்சியில் சேராதவர்கள்.

✍ ஜே.பி. லோவல்

★ ஒரு விஷயத்திற்கு நான் தகுதியேயில்லை, அதாவது, ஒரு கட்சியின் கட்டளைப்படி, சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு, கொள்கைகளை அனுசரிப்பதும் கைவிடுவதும் ஆகும்.

✍ ஹொரேஸ்மான்

★ சுதந்தரமான நாடுகளில் அரசாங்கம் ஆட்சி செய்வதைத் கண்காணிப்பதற்காகக் கட்சிகள் இருப்பது நலம் என்று ஓர் அபிப்பிராயம் இருந்து வருகின்றது. அது சுதந்தர உணர்ச்சியைக் காத்து வரும் என்றும் கருதப்படுகின்றது. ஓர் அளவுக்கு இது உண்மையாயிருக்கலாம். ஆனால், பொது மக்களுக்குப் பொறுப்புள்ள, தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள அரசாங்கங்களில் இத்தகைய உணர்ச்சியை வளர்க்கக்கூடாது.

✍ வாஷிங்டன்

★ ஒரு கட்சியிலுள்ள மனிதர்கள், சுலோகங்கள் கூறுவதற்கு மட்டும் உரிமையுடையவர்கள்; உண்மையில் அவர்களைவிட அடிமைகள் வேறில்லை. ✍ ஸவில்லி

## கஷ்டங்கள்

★ திறமையும் அவசியமும் ஒன்றுக்கொன்று பக்கத்தில் வாழ்கின்றன. ✍ பிதாகோரஸ்

★ நம்மை மனிதர்களாக்குவது உதவிகளல்ல, தடைகள்; வசதிகளல்ல, கஷ்டங்கள். ✍ மாத்தியூஸ்

## கட்டடக் கலை

★ கட்டடக் கலை என்பது இறுகிய இசை. ✍ டி. ஸ்டேல்

★ **வீடுகள்** வசிப்பதற்காகக் கட்டப்படுகின்றன, பார்வைக்காக மட்டுமன்று. ஆதலால், அவை ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பதைவிட, பயனையே அதிகம் கவனிக்க வேண்டும்; இரண்டும் சேர்ந்து அமைவதானால் நல்லதுதான்.

*✍ பேக்கன்*

## கட்டுப்பாடு

★ **இயற்கை** முழுவதிலும் கடுமையான கட்டுப்பாடு பரந்திருக்கின்றது. அது, மிகவும் அன்பாயிருப்பதற்காக, சற்று கொடுமையாக விளங்குகின்றது. *✍ ஸ்பென்ஸர்*

★ **கஷ்டமில்லாமல்** வெற்றியில்லை, முள்களில்லாமல் அரியாசனையில்லை, முயற்சியில்லாமல் பெருமையில்லை. சிலுவை யில்லாமல் மகுடமில்லை. *✍ பென்*

## கண்டனம்

★ **தான்** பிரபலமாயிருந்ததற்காக ஒரு மனிதன் பொது மக்களுக்குச் செலுத்தும் வரி, கண்டனம். *✍ ஸ்விஃப்ட்*

★ **நமக்கு** எதிராயுள்ளவர்களுடைய கண்டனம் நமக்கு மிக உயர்ந்த நன்மதிப்பாகும். *✍ எவ்ரிமாண்ட்*

★ **நாம்** எல்லோரும் பாவிகள். (நாம் பிறரை) மதிப்பிட வேண்டாம். *✍ ஷேக்ஸ்பியர்*

★ **கண்டனத்திலிருந்து** தப்புவதற்கு நிச்சயமான சுருக்கு வழி, நம்மை நாமே திருத்திக்கொள்ளல். *✍ டெமாஸ்தனிஸ்*

## கண்டுபிடிப்புகள்

நான் மதிப்புயர்ந்த விஷயங்கள் எவைகளையாவது கண்டு பிடித்துள்ளேன் என்றால், அது என்னுடைய பொறுமையுள்ள கவனத்தினால்தான். வேறு பிரமாதமான சக்தியால் அன்று.

*✍ ஸர் ஐஸக் நியூட்டன்*

## கண்ணீர்

இதயத்தின்மீது அளவுக்கதிகமான பாரம் ஏறும் பொழுது, திறந்துவரும் குழாயடைப்புகளே கண்ணீர்த் துளிகள்.

*✍ ஆல்பெர்ட் ஸ்மித்*

அன்பு, கண்ணீருடன் கலந்து வரும் பொழுது, அது பெரும் பேறாகும். *✍ வால்டர் ஸ்காட்*

ஒரு சொட்டுக் கண்ணீருடன் விளங்கும் புன்னகை, நிகரற்ற ஒளியும் அழகும் உடையதாகும். *✍ லாண்டர்*

கண்ணீரில்லாத துக்கம், உள்ளே உதிரம் வடிக்கும். *✍ போவீ*

அழுதறியாத இளைஞன் ஒரு காட்டுமிராண்டி; சிரித்தறியாத கிழவன் ஒரு மூடன். *✍ ஜியார்ஜ் ஸாந்தாயன*

## கபடம்

தீயோன் ஒருவன் துறந்த ஞானி போல நடிக்கும் பொழுது மேலும் மோசமாகிறான். *✍ பேக்கன்*

பாசாங்குக்காரரிலும் பொய்யரிலும், எந்த மனிதன் மன ஆறுதலுக்காகத் தனக்குத்தானே பொய் சொல்லிக்கொள் கிறானோ, அவனே மிகவும் இழிவானவன்.

*✍ ஹிலேர் பெல்லக்*

☆ வெளியே ஞானியார், வீட்டிலே சயித்தான். ✍ பனியன்

☆ கடவுளைத் தவிர வேறு எவரும் காணமுடியாதபடி உலவும் தீமை பாசாங்கு ஒன்றுதான். ✍ மில்டன்

☆ ஒருவன் (முகமலர்ந்து) சிரித்துக்கொண்டேயிருக்கலாம். அந்நிலையில் துரோகியாகவும் இருக்கலாம். ✍ ஷேக்ஸ்பியர்

☆ கோயிலில் எண்ணற்ற பாசாங்குக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதற்காக நீ போகாமல் இருக்கவேண்டாம். கூட ஒருவருக்கு அங்கே எப்பொழுதும் இடமுண்டு.
✍ ஏ. ஆர். ஆடம்ஸ்

☆ தீங்கே எண்ணாத உள்ளமுடையார்க்குத் தலையணை வேதனையளிப்பதில்லை. ✍ கௌப்பர்

☆ அகத்தில் பரிசுத்தமாயிருப்பவர்களைப் புறத்தில் அதுவே பித்தளைச் சுவராக நின்று காக்கும். ✍ ஹொரஸ்ரே

## கருத்துகள்

☆ கருத்துகளே உலகை ஆட்சி செய்கின்றன. ✍ கார்ஃபீல்ட்

☆ இந்தக் காலத்தில் நாம் கருத்துகளுக்காகப் போராடுகிறோம். பத்திரிகைகள் நம் கோட்டைகளாக உள்ளன. ✍ ஹீய்ன்

☆ கருத்துகள் தாடிகள் (வளர்வது) போன்றது. வளர்ந்து பருவமடையும்வரை மனிதர்களுக்கு அவை முளைக்க மாட்டா. ✍ வால்டேர்

☆ கருத்துகள் நாகரிகத்தை மேல்நிலைக்கு உயர்த்துபவை. அவை புரட்சிகளைத் தோற்றுவிக்கின்றன. ஒரு கருத்தில் அநேக வெடி குண்டுகளைக்காட்டிலும் அதிகமான வெடி மருந்து அடங்கியுள்ளது.

# கருத்துடன் கற்றல்

☆ ஏதாவது ஓர் அறிவுத் துறையில் விசேடத் திறமை பெறுவதற்காக நீ எந்தக் கஷ்டமான உழைப்பையும் மேற்கொள்ள வேண்டும். ஆயினும், முற்றிலும் ஒரே துறையில் மட்டுமன்றி, எல்லாத் துறைகளையும்பற்றி ஓரளவு உனக்குத் தெரிந்திருக்க வேண்டும். *— செனிகா*

☆ நாம் படிக்கப் படிக்க, நம்மிடமிருந்த அறியாமையைக் கண்டு கொள்கிறோம். *— ஷெல்லி*

☆ இயற்கையாகப் பெருமை ஏற்படுவதைவிட, அதிகமான மக்கள் கருத்துடன் கற்பதால் மேன்மையடைகின்றனர். *— ஸிஸரோ*

☆ எந்த ஆராய்ச்சியிலும் நாம் சிறிது ஊன்றிக் கருத்தைச் செலுத்தினால், அது நமக்கு இன்பமளிக்காமல் இராது. *— போப்*

☆ திட்டமில்லாமல் கண்டபடி கற்பது, பென்சிலால் எழுதிய எழுத்துகளைப் போல் விரைவில் அழிக்கப்படலாம்; விவரமாகப் பிரித்து முறையாகக் கற்பது, மையால் எழுதியதைப் போல நிலைத்து நிற்கும். *— கூப்பர்*

☆ கட்டைகளைப் புரட்டிப் போட்டால் நெருப்பு நன்றாக எரிவது போல, படிக்கும் விஷயங்களையும் சிறிது மாற்றிக் கொண்டால், அயர்ந்துள்ள மூளை கிளர்ச்சி பெறும். *— லாங்ஃபெல்லோ*

☆ ஒரு பையன் தனியாக ஐந்து ஆண்டுகள் படிப்பதைவிட, பொதுப் பள்ளியில் ஓர் ஆண்டிலேயே அதிகமாக அறிவைப் பெற்றுவிடுவான். இளைஞர், உலகியல் அறிவை ஆசிரியர்

களிடமிருந்து பெறுவதைக்காட்டிலும்' தமக்குச் சமமாயுள்ள இளைஞர்களிடமிருந்து அதிகமாய்க் கற்கின்றனர்.

✍ கோல்டுஸ்மித்

## கலைகள்

☆ உயர்ந்த கலைகள் அனைத்தும் கடவுளின் வேலையில் மனிதனுக்குரிய மகிழ்ச்சியை வெளிக் காட்டுகின்றன.

✍ ரஸ்கின்

☆ தெய்விகப் படைப்பின் நிழல்தான் உண்மையான கலைப் படைப்பு.

✍ மைக்கேல் ஏஞ்சலோ

☆ கலையில் நன்மையானவையெல்லாம் ஓர் ஆன்மா மற்றொன்றுக்கு வெளியிடுவதாகும். அதன் அருமை அதை வெளியிடுபவரின் பெருமையைப் பொறுத்தது.

✍ ரஸ்கின்

☆ கலை, அதன் சக்திக்குத் தகுந்தபடி, இயற்கையைப் பின் பற்றிச் செல்கின்றது. இது சீடன் ஆசிரியரைத் தொடர்வது போன்றது. ஆகவே, இறைவனிடமிருந்து வருவதாகும்.

✍ தாந்தே

☆ கலையின் நிறைவு கலையை (புலப்படாதபடி) மறைத்து வைத்தல்.

✍ குவின்டிலியன்

☆ கல்விமான்கள் கலையின் காரணத்தைப் புரிந்துகொள்கின்றனர்; படிப்பில்லாதவர்கள் மகிழ்ச்சியை மட்டும் உணர்கின்றனர்.

✍ குவின்டிலியன்

☆ நாம் கண்களினாலேயே சித்திரம் தீட்ட முடிந்தால் நல்லதுதான்! கண் பார்த்தது கையின்மூலம் பென்சிலுக்குப் போய்ச் சேர்வதற்குள் எவ்வளவோ நஷ்டம் ஏற்படுகின்றது!

✍ லெஸ்ஸிங்

★ கலைஞர்களே கடவுளுக்கு மிகவும் சமீபத்திலிருக்கின்றனர்.

✍ ஹாலண்ட்

## கல்லறை

★ நாம் வாழும்பொழுது உலகம் முழுவதையும் வளைத்துக் கட்டிக்கொள்ள விரும்புகிறோம். ஆனால், இறந்த பிறகு எவ்வளவு சிறிய இடம் நமக்குப் போதுமானது என்பது தெரிகின்றது. ✍ மாஸிடோனியா மன்னர் பிலிப்

## கல்வி

★ கல்விதான் நமக்குரிய அரசியல் பாதுகாப்பு. இந்த ஓடத்திற்கு வெளியே எல்லாம் வெள்ளக்காடுதான். ✍ எச். மான்

★ ஒரு குழந்தை கனவானாகவோ, சீமாட்டியாகவோ இருக்கும்படி கல்வி போதிக்க வேண்டாம்; ஆனால், மனிதனாகவும், ஸ்திரீயாகவும் இருக்கக் கற்பியுங்கள்.

✍ ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்

★ ஒவ்வொரு தேசத்தின் மக்கட்சமுதாயத்தினுடைய பாதுகாப்பும் கதியும் மக்களுக்கு அளிக்கும் நிறைவுள்ள கல்வியைப் பொறுத்தேயுள்ளன. ✍ கோஸத்

★ பள்ளிக்கூடங்களே மக்கள் ஆட்சி முறையில் அமையும் கோட்டைக் கொத்தளங்கள். ✍ ஹொரேஸ் மான்

★ வாழ்க்கைக்குப் பயிற்சி பெறுவதுதான் கல்வி. ✍ வில்மாட்

★ சரியான கருத்தில், கல்விப்பயிற்சி பெறுகிறவரை மனிதன் மனிதனாக மாட்டான். ✍ எச். மான்

★ மக்கள் அறியாதவைகளைத் தெரிந்துகொள்ளும்படி கற்பிப்பது கல்வியின் பொருளாகாது; அவர்கள் நடையை

மாற்றிச் செம்மையாக நடந்துகொள்ளும்படி கற்பிப்பதே யாகும். ✍ ரஸ்கின்

☆ முதலாவதாக, மாணவன் தன் தாய்மொழியில் புரிந்து கொள்ளவும், பேசவும், படிக்கவும், எழுதவும் நாம் கற்பிக்க வேண்டும். ✍ எச். ஜி. வெல்ஸ்

☆ ஒழுக்க நெறியின் வளர்ச்சியே கல்வியின் முழு நோக்கம், அல்லது பெருநோக்கமாயிருக்க வேண்டும். ✍ ஒ' ஷீ

☆ சர்வ ஜனக் கல்வியில்லாமல், சர்வ ஜன வாக்குரிமை ஒரு தீமையாகிவிடும். ✍ எச்.எல். வேலண்ட்

☆ நன்றாகக் கற்பிப்பதானால், எந்த விஷயத்தைக் கற்பித்தாலும் எனக்குக் கவலையில்லை. ✍ டி.எச். ஹக்ஸ்லி

☆ கல்வியின் முழுநோக்கம் மனவளர்ச்சி. ✍ ஷெர்வுட் ஆண்டர்ஸன்

☆ கற்பிப்பதன் இரகசியம் மாணவனுக்கு மதிப்பளிப்பதில் இருக்கின்றது. ✍ எமர்ஸன்

☆ தேசங்களுக்கு மலிவான பாதுகாப்பு, கல்வி. ✍ பர்க்

☆ மானிட உள்ளத்தின் கல்வி, தொட்டிலில் தொடங்குகின்றது. ✍ டி.கோகன்

☆ பொதுக் கல்வியே அரசாங்கத்தின் முதல் இலட்சியமாயிருக்க வேண்டும். ✍ நெப்போலியன்

☆ கல்வி அழகே அழகு. ✍ நாலடியார்

☆ எம்மை உலகத்தும் யாம்காணோம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து. ✍ நாலடியார்

☆ கல்வி கரையில, கற்பவர் நாள்சில. ✍ நாலடியார்

☆ கேடில் விழுச்செல்வம் கல்வி ✍ திருவள்ளுவர்

## கல்விச் செருக்கு

★ கல்விச் செருக்கு, படித்த குப்பைகளை நம் தலைகளில் திணித்து, இருக்கிற மூளையை வெளியே தள்ளிவிடுகின்றது.
✍ கோல்டன்

★ புத்தகங்களில் ஆழ்ந்த படிப்பு, தனக்கு வேண்டிய அறிவு மட்டும் இல்லை!
✍ மில்டன்

## கவலை

★ துன்பத்தை எதிர்பார்க்க வேண்டாம், ஒரு காலத்தும் நடவாததற்குக் கவலைப்பட வேண்டாம். நல்ல சூரிய வெளிச்சத்தில் தங்கியிரு. ''
✍ ஃபிராங்க்லின்

★ வேலை மனிதனைக் கொல்வதில்லை, கவலைதான் கொல்லும்.
✍ பீச்சர்

## கவனம்

★ ஒரே விஷயத்தில் கவனத்தைச் செலுத்தி அதில் தளர்ச்சியில்லாமல் உறுதியாக நிற்கும் ஆற்றல், அபார அறிவுக்கு அடையாளம்.
✍ செஸ்டர்ஃபீல்டு

## கவிதை

★ அறிவுக் கூர்மையுடன் உணர்ச்சிகளின் வண்ணங்கள் கலப்பது கவிதை.
✍ வில்ஸன்

★ கவிதை, சொற்களின் இசை.
✍ ஃபுல்வர்

☆ கவிதையாகிய உடையணிந்தால், உண்மை அதிகப் பிரகாசமாக இருக்கிறது. ✍ போப்

☆ கவிதை, சோகத்தின் சகோதரி, வருத்தப்பட்டு அழும் ஒவ்வொரு மனிதனும் ஒரு கவிஞன், ஒவ்வொரு கண்ணீர்த் துளியும் ஒரு பாட்டு. ✍ ஆண்ட்ரீ

## களியாட்டம்

☆ மக்களுக்குக் கேடு விளைவிக்காமல் ஆடல் பாடல்கள் நடத்துவது சமூகத்துக்குச் செய்யும் தொண்டாகும். ✍ எச். மோர்

☆ சில சமயங்களில் மனத்தை வேறிடத்திற்குத் திருப்பிவிடுதல், மீண்டும் அது சிந்தனை செய்ய உதவியாகும். ✍ வில்மார்ட்

☆ பொது மக்களின் களியாட்டங்கள் எனக்குப் பிரியமானவை; ஏனெனில், அவை அவர்களைத் தீமையிலிருந்து காக்கின்றன. ✍ ஜான்ஸன்

## கற்பனை

☆ கல்வியறிவில்லாதவனுடைய கற்பனை, கால்களில்லாமல் சிறகுகள் மட்டும் பெற்றிருப்பது போலாகும். ✍ ஜோபர்ட்

☆ கற்பனையே உலகை ஆள்கின்றது. ✍ நெப்போலியன்

☆ பைத்தியக்காரனும், காதல் கொண்டவனும், கவிஞனும் கற்பனையில் ஒன்றாவர். ✍ ஷேக்ஸ்பியர்

## கற்பித்தல்

☆ வாழ்வதில் நான் என் தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்; ஆனால், முறையாக வாழ்வதில், நான் என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன் ✍ மகா அலெக்ஸாண்டர்

☆ பூரணமான அறிவுக்கு அடையாளமாயுள்ளது கற்பிக்கும் ஆற்றல். *✍ அரிஸ்டாட்டில்*

☆ நான் எப்பொழுதாவது ஆசிரியனானால், நான் கற்பிப்பதை விடக் கற்றுக்கொள்வதே அதிகமாயிருக்கும். *✍ டெலுஸி*

☆ ஒழுக்க விஷயங்களைப்பற்றிக் கற்பித்தல் மிகமிக அவசியமாகும்; அதன் மூலம் மிக உயர்ந்த பிரஜைகள் தோன்றுவார்கள். *✍ ரூஸ்வெல்ட்*

☆ நாம் கருத்துகளை நிறைய கற்பிக்க வேண்டும். இதுவரை நிகழ்ச்சிகளையே அதிகமாகக் கற்பித்து வந்தோம். *✍ அனடோல் ஃபிரான்ஸ்*

## கனவுகள்

☆ கனவு காண்பது முற்றிலும் கற்பனையானது. அதன் மூலம் எல்லா மனிதர்களும் சிருஷ்டிக்கும் ஆற்றல் பெற்றவர்கள் என்று தெரிகின்றது. விழித்திருக்கும் பொழுது அந்த ஆற்றல் இருந்தால், ஒவ்வொரு மனிதனும் ஒரு தாந்தேயாகவோ, ஷேக்ஸ்பியராகவோ விளங்குவான். *✍ மஹேடஜ*

☆ மானிட உள்ளம் எல்லையற்றது என்பதற்குக் கனவு காண்பதை உதாரணமாய்க் கொள்ளலாம். *✍ குளுலோ*

## காதல்

☆ காம உணர்ச்சிக்குக் கண்ணில்லாமல் இருக்கலாம்; காதலுக்குக் கண்ணில்லை என்பது பொய்யும், அவதூறானதுமாகும். *✍ டேவிஸ்*

☆ மனிதனின் வாழ்க்கையில் காதல் ஒரு பகுதிதான்; ஆனால், ஒரு பெண்ணின் வாழ்க்கையில் அதுவே முழுமையுமாகும். *✍ பைரன்*

☆ காதல், கண்களால் காண்பதில்லை, மனத்தால் பார்க்கின்றது.

✍ ஷேக்ஸ்பியர்

## கிளர்ச்சி

☆ கிளர்ச்சி பெருங்கலகம் ஏற்படுவதைத் தடுத்து, அமைதியைக் காத்து, முன்னேற்றத்திற்கு வழி செய்கின்றது. துப்பாக்கிகள் விலங்குகளுக்கு ஏற்ற ஆயுதங்கள். கிளர்ச்சிதான் அறிவுள்ள மக்களின் வழி.

## கீழ்ப்படிதல்

☆ நாம் பிரஜைகளாகப் பிறந்துள்ளோம். சுதந்தரத்துடன் நாம் இறைவனை வணங்குவது கடமை. இதைச் செய்பவன் சுதந்தரமாகவும், சேமமாகவும், இன்பமாயும் இருப்பான்.

✍ செனிகா

☆ இதயத்தின் அதிருப்தியுடன், உடலால் மட்டும் கீழ்ப்படிதல் உண்மையானதன்று.

✍ ஸாஅதி

☆ தீய மனிதர்கள் அச்சத்தினால் அடங்கி நடக்கின்றனர்; நல்ல மனிதர்கள் அன்பினால் அடங்கியிருக்கின்றனர்.

✍ அரிஸ்டாட்டல்

## குடியரசு

☆ இருபது வயதில், எல்லோருக்கும் குடியரசுக் கொள்கைதான்

✍ லமார்டைன்

☆ முடியாட்சிகள் வறுமையால் வீழும்; குடியரசுகள் ஆடம்பரமான பழக்கவழக்கங்களால் வீழும்.

✍ மாண்டெஸ்கியூ

☆ எல்லோருக்கும் சமமான நீதி; எல்லா நாடுகளுடனும் அமைதியாக நடந்து, வாணிபம் செய்து, நேர்மையாக நட்புறவு கொள்ளல்; எவருக்கும் கட்டுப்படும் ஒப்பந்தங்கள் இல்லாமை; மாகாண இராஜ்யங்களின் உரிமைகள் அனைத்தையும் ஆதரித்தல் - இவையெல்லாம் நம் குடியரசுக் கொள்கைக்கு எதிரான நடவடிக்கைகளைத் தடுக்கக்கூடியவை.

✍ *ஜெஃபர்ஸன்*

## குடும்பம்

☆ குடும்பங்கள் எப்படியோ அப்படியே சமூகம். ✍ *தேயர்*

☆ இன்பமான குடும்பம் முன்கூட்டியே காணும் சுவர்க்கமாகும்.

✍ *பௌரிங்*

☆ ஸ்திரீதான் குடும்பத்தின் கதிமோட்சம் அல்லது அழிவுக்குக் காரணமாவாள். ✍ *ஏமியெல்*

## குணம்

☆ அறிவைத் தனிமையாயிருந்து பெருக்கிக்கொள்ளலாம்; ஆனால், குணம் அலைகள் வீசும் உலகத்தின் சந்தடியிலிருந்துதான் அமைய வேண்டும். ✍ *கதே*

☆ வாழ்க்கையில் நம் குணத்தின் மூலம் பெற்றுள்ளதே கடைசியில் நம்முடன் வரக்கூடியது. ✍ *ஹம்போல்ட்*

☆ மனிதர்கள் சாதாரணச் சிறு விஷயங்களில் தங்கள் குணங்களைக் காட்டிவிடுகின்றனர். அப்பொழுது அவர்கள் எச்சரிக்கையாயிருப்பதில்லை. அற்ப விஷயங்களிலும் மனிதனின் எல்லையற்ற சுயநலத்தைக் காண்கிறோம். அவன் மற்றவர்களின் உணர்ச்சியை மதிப்பதில்லை. தனக்கு எதையும் வேண்டாமென்று ஒதுக்குவதுமில்லை. ✍ *ஷோப்பனார்*

☆ சமூகத்தின் கதி தனி மனிதரின் பண்பில் இருக்கின்றது.

✍ சானிங்

## குழந்தைகள்

☆ காலை நேரம் ஒரு நாளைக் காட்டுவது போல, குழந்தை, பின்னால் வளரும் மனிதனைக் காட்டுகின்றது. ✍ மில்டன்

☆ குழந்தைகளைக் குறை சொல்வோரைவிட அவர்களுக்கு வழி காட்டுவோரே அதிகமாகத் தேவை. ✍ ஜோபர்

☆ பல குழந்தைகள், பல கவலைகள்; குழந்தைகள் இல்லை மகிழ்ச்சியும் இல்லை. ✍ போவீ

☆ ஒருவன் எத்தனை துன்பங்களை அனுபவித்தாலும், அவன் அன்பு செலுத்த ஒரு குழந்தையைப் பெற்றிருந்தால், பாக்கியமற்றவன் என்று சொல்ல வேண்டாம். ✍ கதே

## குறித்த நேரம்

☆ குறித்த நேரத்தில் குறித்தபடி முடித்தலே தொழிலுக்கு ஆதாரமாகும். ✍ செஸ்டர்ஃபீல்ட்

☆ நேரத்தின் உண்மையான மதிப்பை அறிந்து ஒவ்வொரு நிமிடத்தையும் நன்றாக அனுபவிக்கவும். சோம்பல் வேண்டாம்; தாமதம் வேண்டாம்; இழுத்துக்கொண்டே செல்ல வேண்டாம்; இன்று செய்யக்கூடியதை நாளைக்கு ஒத்தி வைக்க வேண்டாம். ✍ செஸ்டர்ஃபீல்ட்

## குறை கூறுதல்

☆ குறை சொல்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளவர்களை நாள்தோறும் காணலாம். அவர்கள், நண்பர்களுக்குக் கவலை

உண்டாக்குவார்கள்; ஆனால், அந்நியரை மகிழ்விப்பார்கள்; இல்லாத குறைகளைக் கூறி வருந்துவார்கள். ✍ கிரேவ்ஸ்

☆ உலகில் நான் என்னைத் தவிர ஓர் சகோதரனைக் குறை சொல்ல மாட்டேன்; என் குறைகள் எனக்குத் தெரியும்.

✍ ஷேக்ஸ்பியர்

☆ பகலில் தலைவலி என்று கூறிக்கொண்டு நேரத்தைக் கழித்துவிட்டு, இரவில் அந்த வலிக்குக் காரணமான மதுவை அருந்திக்கொண்டிருப்பவரைப் போல நான் இருக்க மாட்டேன். ✍ கதே

## குறைபாடுகள்

☆ ஒவ்வொரு தோல்வியும் வெற்றிக்கு ஒரு படி. ✍ ஆல்காட்

☆ தோல்வியிலிருந்து தெரிவது இதுதான்; வெற்றியடைய வேண்டுமென்று நாம் செய்துகொண்ட தீர்மானத்தில் போதிய உறுதியில்லை. ✍ போவீ

☆ உன் எதிரிகளைக் கவனி, அவர்களே உன் குற்றங்களை முதலில் கவனிப்பவர்கள். ✍ ஃபெனிலன்

☆ சிறு தவறுகளுக்காகத் தேவையில்லாத ஆத்திரத்துடன் கண்டிப்பது, ஒரு நண்பனின் நெற்றியிலுள்ள ஈயை அடிப்பதற்காகச் சம்மட்டியை எடுப்பது போன்றது.

✍ பழைய வாக்கியம்

☆ மனிதனின் குறைபாடுகளைப்பற்றிக் கூறிக்கொண்டிருப்பவன் கடவுளையே கண்டிக்கிறான். ✍ பர்க்

## குற்றமுள்ள நெஞ்சு

☆ குற்றமே சோகத்தின் நரம்பு. ✍ புஷ்னெல்

☆ குற்றத்தின் நெஞ்சில் தேள்கள் நிறைந்துள்ளன.

✍ ஷேக்ஸ்பியர்

☆ குற்றமான செயல் என்ற உடலிலிருந்து பயங்கள், பழைய நினைவுகளாகிய ஆயிரம் ஆவிகள் கிளம்பி வருகின்றன.

✍ வோர்ட்ஸ்வொர்த்

☆ குற்றத்தைத் தவிர, இயற்கையிலுள்ள மற்ற எல்லாத் துயரங்களும் சேர்ந்து உடனே வந்தாலும் நாம் தாங்கலாம்.

✍ ஷேக்ஸ்பியர்

☆ நெஞ்சிலே குற்றமுள்ளவர்கள் ஒவ்வொரு கண்ணும் தங்களையே பார்ப்பதாக எண்ணுவர்.

✍ ஷேக்ஸ்பியர்

☆ குற்றமுள்ள நெஞ்சு சந்தேகத்தால் குறுகுறுத்துக்கொண்டே யிருக்கும்; திருடன் ஒவ்வொரு செடியையும் ஓர் அதிகாரி யென்று அஞ்சுவான்.

✍ ஷேக்ஸ்பியர்

## குற்றம்

☆ சமூகம் குற்றத்தைத் தயாரிக்கின்றது, குற்றம் புரிபவன் அதைச் செய்துவிடுகிறான்.

☆ சிறு குற்றங்கள் எப்பொழுதும் பெரிய குற்றங்களுக்கு முன்னால் வரும். கூச்சமுள்ள கபடமற்ற தன்மை திடீரென்று எதையும் செய்யத் துணிந்துவிடுவதை நாம் ஒரு போதும் கண்டதில்லை.

✍ ராஸீன்

☆ குற்றத்தைத் தொடர்ந்து அச்சம் வரும். அதுவே தண்டனை யாகும்.

✍ வால்டேர்

## கேலி

☆ துன்பம் நேர்ந்த காலத்தில் நல்ல கேலிப் பேச்சு உணவும் பானமும் போன்றது.

✍ வேர்

☆ கேலி செய்வதில், செய்தவனே முதலில் சிரிக்கும்படி ஏற்பட்டால், அதன் முக்கியம் போய்விடும். ✍ ஷில்லர்

☆ சாதாரணமாக ஒரு முறை கேலி பேசுவது நல்லது. ஆனால், கேலியைத் தொழிலாக வைத்துக்கொள்ளக்கூடாது.

✍ ஃபுல்லர்

☆ கேலியைக் கண்டு பயப்பட வேண்டாம்; உன்மீது ஒருவன் உப்பை அள்ளிப் போட்டால், உன்மீது புண்கள் இருந்தாலன்றி, உனக்கு ஒரு தீங்கும் நேராது. ✍ ஜூனியஸ்

☆ வேடிக்கைப் பேச்சால் அடிக்கடி ஒரு நண்பனை இழக்க நேரும். ஆனால், அது பகைவனை உண்டாக்காது.

✍ ஷிஸிம்மன்ஸ்

☆ கேலியின் பெருமை கேட்பவரின் செவியைப் பொறுத்தது. ஒரு போதும் சொல்பவர் நாவில்லை. ✍ ஷேக்ஸ்பியர்

☆ சிரித்து முடிந்த பிறகு கேலிப் பேச்சை மதிப்பிடு.

✍ டபுள்யு. லாயிட்

☆ கேலி பேசுவதில் எச்சரிக்கையாயிருக்கவும்; கேலியால் பலர் பெரு நஷ்டமடைந்துள்ளனர்.

## கேவலம்

☆ கேவலம் தண்டனையிலில்லை; ஆனால், குற்றத்திலிருக்கிறது.

✍ அல்ஃபியெரி

☆ நம் இயற்கையில் எண்ணற்ற முரண்பாடுகள் உள்ளன. பிறரால் வரும் சிறு கேவலங்களை நாம் மிகப் பெரியவையாகக் கருதி வருந்துவோம். ஆனால், நாமாகவே பெரிய கேவலங்களை உண்டாக்கிக்கொண்டு, அலட்சியமாக இருப்போம்; நம் முரண்பாடுகளுள் இதைப் போல் பெரியதைக் காண்பது அரிது.

# கொடுங்கோன்மை

☆ தீமையான சட்டங்களே கொடுங்கோன்மையில் மிகவும் இழிவானவை. — பர்க்

☆ கொடுங்கோன்மை எப்பொழுதும் பலவீனமானது. — ஜே. ஆர். லோவெல்

☆ காரணமில்லாமலும் கருத்தில்லாமலும் குடிமக்களின் அபிப்பிராயம் கட்டுப்படுத்தப்பெறுவது ஓரளவு கொடுங்கோன்மையாகும். இது அரசனால் அல்லது பிரபுக்களின் ஆட்சியால் அல்லது தேர்ந்தெடுக்கப்பெற்ற சட்டசபையால் செய்யப்படினும் கொடுமையேயாகும். — பிளாக்ஸ்டோன்

☆ மக்கள் அதை இருக்கவிடுவதால்தான் கொடுங்கோல் ஆட்சி செய்கின்றது. அதன் சக்தியாலன்று. — ஷேக்ஸ்பியர்

☆ அரசன், ஆளவேண்டிய முறைப்படி ஆள்வான்; கொடுங்கோலன் தன் விருப்பம் போல் ஆள்வான். அரசன் யாவருடைய நன்மையையும் நாடுவான்; கொடுங்கோலன் சிலருடைய மகிழ்ச்சியையே நாடுவான்.

☆ தன் விருப்பத்தைத் தவிர வேறு சட்டத்தை அறியாத அரசன் கொடுங்கோலன். — வால்டர்

☆ சட்டம் முடிவுறும் பொழுது, கொடுங்கோல் ஆரம்பமாகின்றது. — வில்லியம் பீட்

☆ கொடுங்கோலரை எதிர்த்துக் கலகம் செய்தல் கடவுளுக்குக் கீழ்ப்படிவதாகும். — ஃபிராங்க்லின்

☆ கொடுங்கோன்மைக்கும் அராஜகத்திற்கும் இடையில் அதிகத் தூரமில்லை. — ஜே. பெந்தாம்

☆ கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு அல்லவை செய்தொழுகும் வேந்து. — திருவள்ளுவர்

## கொடுமை

☆ கொடுமையும் அச்சமும் சேர்ந்து கைகுலுக்குகின்றன.

✍ பால்ஸாக்

☆ கொடுமை அனைத்தும் கடினச் சித்தத்திலிருந்தும், பலவீனத்திலிருந்தும் தோன்றுகின்றன. ✍ செனிகா

☆ மனிதனுக்கு மனிதன் செய்யும் கொடுமையால் எண்ணற்ற ஆயிரக்கணக்கான மக்கள் துக்கப்படுகிறார்கள். ✍ பர்ன்ஸ்

☆ கொடுமையை எதிர்க்கும் ஆசை மனிதனுடைய இயல்பில் அமைந்துள்ளது. ✍ டாஸிடஸ்

☆ கொடுமை என்பதன் மறுபெயர் பொறுப்பில்லாத அதிகாரம்.

✍ பிங்க்னே

## கொலை

☆ சிறை, விலங்கு, இருட்டறை ஆகியவற்றுள் எதுவும் தனிமை, கொலைஞனிடம் பேசும் குரலைப் போல் பேசுவதில்லை.

✍ மெச்சூரின்

(ஏகாந்தமே கொலைஞனுடைய இதயத்தை அதிகமாக வருத்தும்)

☆ கொலைதான் பரிகாரமேயில்லாத முதன்மையான குற்றம். இயற்கையே கொலையால் நடுங்குகின்றது. ✍ காஃப்

☆ சிந்திய இரத்தம், சிறிது காலம் உறங்கிக் கிடந்தாலும் அது ஒரு போதும் செத்தொழிவதில்லை. ✍ சாப்மன்

☆ உடலைக் கொலை செய்வது போல்தான் ஒருவருடைய குணத்தைக் கொலை செய்வதும். ✍ டி. எட்வர்ட்ஸ்

☆ கண்ணியமானவர்மீது உண்மைக்கு மாறாகக் குற்றம் சாட்டுதலும் ஒரு வகைக் கொலைதான்.

## கொள்கை

☆ ஜனங்கள் என்ன சொன்னாலும் சொல்லட்டும், உலகை இயக்கி வைப்பது சித்தாந்தமே, ஒரு சித்தாந்தத்தையும் நிலையாகக் கொள்ளாதவன் மனித அறிவின்மீது ஆட்சி செலுத்த முடியாது.
*✍ டி.ஷெட்*

☆ பரிசுத்தமான சித்தாந்தம் பரிசுத்தமான நன்மைகளின் மூலம் எப்பொழுதும் பயனளித்து வருகின்றது.
*✍ எமர்சன்*

☆ கடமைக்கு அவசியமான அடிப்படை கொள்கை அல்லது சித்தாந்தம். சித்தாந்தம் சரியில்லாவிட்டால், செயலும் சரியானதாயிருக்க முடியாது.
*✍ எட்வர்ட்ஸ்*

## கொள்கை வெறி

☆ கொள்கை வெறிக்குத் தலையே கிடையாது. அதனால் சிந்திக்க இயலாது. இதயம் கிடையாது, இதனால் உணரவும் முடியாது. அது அசைந்தால் கோபத்தோடு செல்லும். அது ஓரிடத்தில் தங்கினால் சுற்றிலும் எல்லாம் பாழாயிருக்கும். அதன் பிரார்த்தனைகள் சாபக்கேடுகளாக இருக்கும். அதன் தெய்வம், ஒரு பேய். அதன் துணை, மரணம்.
*✍ ஓ' கானல்*

☆ ஒரு மனிதன் ஒழுக்கமும் உண்மையும் தன் பக்கத்தில் மட்டுமே இருப்பதாக நம்புவது அறிவீனமும், நேர்மை யின்மையும் ஆகும்.
*✍ அடிஸன்*

## கோபம்

☆ உணர்ச்சிகளுள் கோபமே எவ்வித வலுவும் இல்லாதது. அதனால் பயனொன்றும் விளைவதில்லை. எதிரியைக் காட்டிலும், அதைக் கொண்டவனுக்கே அது அதிகத் தீங்கிழைப்பதாகும்.
*✍ கிளாரண்டன்*

☆ பிறரிடம் பழி வாங்க எண்ணுவதற்கோ, (நமக்கு) இழைக்கப் பெற்ற தீங்குகளை நினைத்துப் பார்க்கவோ, வாழ்க்கையில் நேரமில்லை. அது மிகச் சுருக்கமானது. ✍ சார்லட் பிராண்டி

☆ கோபத்திற்குச் சிறந்த மருந்து தாமதித்தல். ✍ ஸெனீகா

☆ அமைதியாயிரு, நீ எவரையும் வசப்படுத்திக்கொள்ள முடியும். ✍ ஸெயின்ட் ஜஸ்ட்

☆ கோபம் வெறிகொண்ட குதிரையைப் போல் துள்ளிப் பாய்கையில், இடையில் தடுக்கி விழும். ✍ ஸாவேஜ்

☆ வெளியே காட்டிய கோபம் மன்னிப்புக்கு வழி தேடும், உள்ளேயடக்கிய கோபம் பழிக்கு வழி தேடும். ✍ புல்வெர்

☆ நீ கோபமாயிருந்தால், நீ பேசத் தொடங்குமுன் பத்துவரை எண்ணு. அதிகக் கோபமாயிருந்தால் நூறுவரை எண்ணு. ✍ ஜெஃபர்ஸன்

☆ உணர்ச்சி அரியணையில் அமர்ந்திருக்கும் பொழுது அறிவு வெளியே போய்விடும். ✍ எம். ஹென்றி

☆ கோபம் எழும்பொழுது, அதன் விளைவுகளை எண்ணிப்பார். ✍ கன்ஃபூஷியஸ்

☆ பொறுமையுள்ள மனிதனின் கோபத்தைப்பற்றி எச்சரிக்கையா யிருக்க வேண்டும்.

## கோழைத்தனம்

☆ கோழை தனக்கு மேலுள்ளவர்களிடம் கொஞ்சிக் குலவுவான். அந்தக் கோழையே, தான் விரும்பிய நேரத்தில் முரட்டுத் தனமாகவும் நடப்பான். ✍ ஜூனியஸ்

☆ கோழைகள் தடுமாறுவார்கள். மேலான முறையில் துணிந்து வருபவர்கள் மூலமாகவே பெரும்பாலும் அபாயத்தை அடக்கி வெற்றி கொள்ளப் பெறுகின்றது. ✍ எலிஸபெத் மகாராணி

☆ சாந்தியும் செழிப்பும் கோழைகளை அபிவிருத்தி செய்யும்; கடுமையான நிலையே தைரியத்திற்குத் தாய். ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ கோழைகள் தம்முடைய மரணத்திற்கு முன்பே பலமுறை இறந்து போகின்றனர். வீரர்கள் மரணத்தின் உருசியை ஒருமுறையே அறிகின்றனர். ✍ *ஷேக்ஸ்பியர்*

## கௌரவம்

☆ என் கௌரவமே எனது உயிர்; இரண்டும் ஒன்றிலேயே வளர்கின்றன. கௌரவத்தை என்னிடமிருந்து எடுத்துவிட்டால், என் வாழ்க்கை முடிந்துவிடும். ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ என் கௌரவத்திற்குக் கேடு வருவதைவிடப் பதினாயிரம் மரணங்களை வரவேற்கிறேன். ✍ *அடிஸன்*

☆ தன் கௌரவத்திற்காக மகிழ்ச்சியோடு துணிந்து முன்வராத நாடு கழிவானது. ✍ *ஷில்லர்*

## சகிப்பின்மை

☆ ஒவ்வொரு சகாப்தத்திலும், ஒவ்வோர் இராஜ்யத்திலும் சகிப்பின்மை சாபக்கேடாக இருந்துவந்திருக்கிறது. ✍ *பீச்சர்*

☆ ஒரு மதத்தில் வெறி கொண்டிருப்பதைக்காட்டிலும், எம்மதமும் இல்லாதிருத்தல் மேலாகும். ✍ *பென்*

☆ சீர்திருத்தவாதிகளின் சகிப்பின்மையையே சைத்தான் மிகவும் விரும்புகிறான். அவர்களுடைய சகிப்புத் தன்மையையும் பொறுமையையும் கண்டே அவன் மிகவும் அஞ்சுகிறான்
✍ *ஜே. ஆர். லோவல்*

## சகிப்புத்தன்மை

☆ உன் இதயத்தில் சகிப்புத்தன்மையைப் பயிர் செய், நல்ல கதிர் விளையும்வரை அதை வளர்த்து வா. பிறர் உனக்குச் செய்த தீமையெல்லாம் விரைவில் மறந்து போகும்படி பிரார்த்தனை செய்.

✍ *ஸ்பர்ஜியன்*

☆ துன்பங்களையோ, வேதனை தரும் நிகழ்ச்சிகளையோ அடக்கத்தோடு, பொறுமையோடு, பணிவோடு ஏற்றுக்கொள்ளல் ஒரு நகரத்தை வெற்றி கொள்வதற்கு மேலாகும். ✍ *ஸி. ஸிம்மன்*

## சகோதரத்துவம்

☆ வாழ்க்கை என்பது ஒருவன் தனக்காக வாழ்வதாகாது. நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ள வேண்டும்.

✍ *மினாண்டர்*

☆ இறைவனைத் தந்தையென்று கொள்ளாமல், மானிட சகோதரத்துவம் கிடையாது. ✍ *எச். எம். ஃபீல்ட்*

☆ சமூகம் அனைத்தின் நன்மைக்காக நாம் பிறந்துள்ளோம் என்று கருதவேண்டும். ✍ *ஸெனீகா*

☆ நம்முடனுள்ள ஒருவன் எவ்வளவு கேவலமான தாழ்ந்தவனாயினும், அவனும் நம் மனித இனத்தைச் சேர்ந்தவனே.

✍ ஸெனீகா

☆ நன்மைகளுக்கெல்லாம் சிகரம், வாழ்க்கையின் இறுதி நட்சத்திரம், சகோதரத்துவம். ✍ *எட்வின் மார்க்காம்*

## சட்டம்

☆ இரண்டு வக்கீல்களுக்கிடையிலுள்ள வழக்காடுபவன், இரண்டு பூனைகளுக்கிடையில் அகப்பட்டுக்கொண்ட மீன் போலிருப்பான். ✍ *ஃபிராங்க்லின்*

☆ சட்ட நடவடிக்கையில், செலவைத் தவிர மற்றது எதுவும் நிச்சயமில்லை. ✍ *எஸ். பட்லர்*

☆ பூனைக்காகப் பசுவை இழப்பது போன்றது வழக்காடல். ✍ *சீனப் பழமொழி*

☆ சட்டம் ஓர் எலிப்பொறி; உள்ளே செல்வது எளிது; ஆனால், வெளியே வருவது கஷ்டம். ✍ *பால்ஃபோர்*

☆ சட்டத்தையும் மருந்தையும் அவசியம் ஏற்பட்டால்தான் உபயோகிக்க வேண்டும்: இல்லாவிடில், உடல்கள் மெலிந்து போகும், பைகள் காலியாகிவிடும். ✍ *குவார்லெஸ்*

☆ சட்டங்கள் சிலந்திவலைகள் போன்றவை. அவைகளில் சிறு ஈக்கள் சிக்கிக்கொள்ளும். ஆனால், குளவிகளும் வண்டுகளும் வலைகளை அறுத்துக்கொண்டு ஓடிவிடும். ✍ *ஸ்விஃப்ட்*

☆ ஆங்கிலேயரின் சட்டங்கள் குற்றத்தைத் தண்டிக்கின்றன; சீனர்களின் சட்டங்கள் இன்னும் அதிகமாய்ச் செய்கின்றன, அவை நன்மையைப் பாராட்டிப் பரிசளிக்கின்றன.

✍ *கோல்டுஸ்மித்*

☆ சட்டப்படியுள்ள ஏழை மனிதனின் உரிமையைப் போல, வலையில் தொங்கும் மீன் அதை விட்டு வெளியே வருதல் அபூர்வம். ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ ஒழுக்கமுறைபற்றி மக்களுடைய உணர்வே சட்டமாக அமைந்துள்ளது. ✍ *பிளாக்ஸ்டோன்*

☆ நல்ல சட்டங்கள் நன்மை செய்வதை எளிதாக்குகின்றன, தவறு செய்வதைக் கடினமாக்குகின்றன. ✍ *கிளாட்ஸ்டன்*

☆ சட்டமும் ஒழுங்கும் இல்லாமல் சமுதாயம் வாழ முடியாது. தீவிரமாகச் சட்டத்தை மீறி மேற்செல்பவர்கள் இல்லாமல் சமுதாயம் முன்னேறவும் முடியாது. ✍ *பெர்ட்ரான்ட் ரஸ்ஸல்*

☆ சட்டம் உன்னைக் குடியாமலிருக்கச்செய்ய முடியும். ஆனால், சட்டமில்லாமல் உன்னைக் குடியாமலிருக்கும்படி திருத்த, அதனால் முடியாது. ✍ டான் மார்க்குவிஸ்

☆ சட்டம் ஒரு போதும் ஆக்கவேலை எதுவும் செய்வதில்லை. ✍ ஹென்றி ஃபோர்டு

☆ ஒரு மனிதன், மாற்றவே முடியாத சட்டம் என்று ஒன்றைப்பற்றிப் பேசினால், அவனை மாற்றவே முடியாத மனிதன் என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது. ✍ ஸிட்னி ஸ்மித்

☆ ஆயுதங்களுக்கு நடுவே சட்டங்கள் மௌனமாக இருந்துவிடும். ✍ ஸிஸரோ

☆ தவ்றான சட்டம் ஒன்றை நீக்குவதற்குச் சிறந்த முறை அதைக் கண்டிப்பாக அமல் நடத்துவது. ✍ லிங்கன்

☆ சட்டத்தின் பண்பு, இரக்கம்; கொடுங்கோலர்களே அதைக் கொடுமையாக உபயோகிப்பார்கள். ✍ ஷேக்ஸ்பியர்

☆ மக்களின் பாதுகாப்பு இறைவனின் சட்டம். ✍ ஜேம்ஸ் ஒட்டிஸ்

☆ அரசாங்கம் மிகவும் ஊழலாய்ப் போயிருந்தால், அப்போது சட்டங்கள் அளவுக்கதிகமாகும். ✍ டாஸிடஸ்

☆ சட்டம் மரணத்தைப் போலிருக்க வேண்டும். மரணம் எவரையும் விடுவதில்லை. ✍ மாண்டெஸ்கியு

☆ சட்டங்கள் ஏழைகளைக் கசக்கிப் பிழிகின்றன. பணக்காரர்களோ சட்டத்தை ஆட்சி செய்கின்றனர். ✍ கோல்டுஸ்மித்

☆ சட்டங்கள் அரசர்களுக்கும் அரசர்கள். ✍ பதினான்காவது லூயி மன்னர்

☆ சட்டம் தீரும் பொழுது கொடுங்கோல் தொடங்குகின்றது. ✍ வில்லியம் பிட்

## சந்தேகம்

☆ நாம் கொஞ்சம் அறிந்திருந்தால், தெளிவாகக் கண்டு கொள்வோம்; அறிவு மிகுந்தால் சந்தேகமும் அதிகமாகிவிடும்.

*✍ கதே*

☆ சந்தேகமே கொள்ளாதவன் அரை நம்பிக்கைகூட இல்லாதவன். சந்தேகமுள்ள இடத்தில் உண்மையும் இருக்கும். அது உண்மையின் சாயல். *✍ பெய்லி*

☆ ஆராய்ச்சிக்கு முன்வாயிலைத் திறக்காவிட்டால் சந்தேகம் சாளரத்தின் வழியாக வரும். *✍ ஜோபெட்*

☆ சந்தேகம் தீர்ந்தால் ஓய்வு ஆரம்பமாகும். *✍ பெட்ராக்*

☆ மானிட ஆன்மாவின் சந்தேகம் நரகமாகும். *✍ காஸ்பரின்*

## சமத்துவம்

☆ இறைவனின் சட்டப்படி - அவன் மனித சமூகத்திற்கு அளித்துள்ள அந்தச் சட்டத்தின்படி - எல்லா மனிதர்களும் சுதந்தர மானவர்கள், சகோதரர்கள், சமத்துவமானவர்கள். *✍ மாஜினி*

☆ பூமியில் தோன்றியதும், ஒவ்வொருவருக்கும் சமத்துவம் உண்டு; பூமிக்கடியில் போகும் பொழுதும் சமத்துவம் உண்டு.

*✍ என்கிளாஸ்*

☆ சமூகம் நாம் கருதுவதைவிட அதிகச் சமநிலை உள்ளது; மகா அறிவாளிகளும், ஒன்றும் தெரியாத மூடர்களும் அபூர்வம்; பெரிய அசுரர்களோ, குள்ளர்களோ அபூர்வமாகவே இருப்பர்.

*✍ ஹாஸ்லிட்*

☆ இயற்கையில் எல்லா மனிதர்களும் சமத்துவமாக உள்ளவர்கள். எல்லோரும் ஒரே மண்ணால், ஒரே கடவுளால் படைக்கப்

பெற்றவர்கள், நாம் நம்மை எவ்வளவுதான் ஏமாற்றிக் கொண்டாலும், கடவுளுக்கு வல்லமையுள்ள அரசன் எவ்வளவு வேண்டியவனோ அவ்வளவு வேண்டியவன் ஏழைக் குடியானவனும். ✍ *பிளேட்டோ*

## சமய போதனைகள்

☆ உபதேசம் செய்வது எளிது, ஆனால், நன்றாக உபதேசிப்பது மிகவும் கஷ்டம். ✍ *எமர்ஸன்*

☆ ஆன்மாவிலிருந்து வெளிவரும் உபதேசமே ஆன்மாவைக் கவர்ச்சி செய்யும். ✍ *ஃபுல்லர்*

☆ அவர் செருக்குள்ளவர்களை அடங்கச் செய்தார்; பாவங்களுக்காக வருந்துபவர்களை உற்சாகப்படுத்தினார்; குற்றம் செய்யும் செல்வர்களை அஞ்சாது கண்டித்தார். அவர் நிறைய உபதேசம் செய்தார்: ஆனால், உபதேசத்தைவிட அவர் வாழ்க்கையே அவர் போதித்த உண்மைகளுக்கு எடுத்துக் காட்டாக விளங்கிற்று. ✍ *டிரைடன்*

## சமயமும் நம்பிக்கையும்

☆ கடவுளை நேசி; அவர் உன்னுள் தங்கியிருப்பார். கடவுளுக்குப் பணிந்து நட; அவர் தமது ஆழ்ந்த போதனைகளை உனக்குப் புலப்படுத்துவார். ✍ *ராபர்ட்ஸன்*

☆ கடவுளும் சமயமும் இல்லாவிட்டால், மனிதரின் வாழ்க்கை பயனற்றதாகும்; வாழ்க்கையில் எவ்வித உயர்ந்த நோக்கமும் இல்லாமற்போகும். ✍ *டில்லோட்ஸன்*

☆ உண்மையான சமயம் நம்முடைய நடத்தையில் ஒவ்வொரு பகுதியிலும் தொடர்புற்றிருக்கும்; ஒரு பச்சை மரத்தில் ஜீவாதாரமான சாறு வெகு தொலைவிலுள்ள கிளைகளுக்கும் செல்வது போல் அதுவும் பரவி நிற்கும்.

☆ சமயத்தினால் வரும் இன்பம் மனத்திற்கு ஒரு மந்திரவாதியைப் போன்றது. அது சதை சம்பந்தமான களிப்பு, பயித்தியம் ஆகிய அசுரர்களை ஓட்டிவிடும். ✍ *செஸில்*

☆ மனிதர்கள் மதத்திற்காகப் பூசலிடுவார்கள். அதைப்பற்றி எழுதுவார்கள். அதற்காகப் போராடுவார்கள். அதற்காக உயிரை விடுவார்கள். அதற்காக வாழ்வதைத் தவிர வேறு எதுவும் செய்வார்கள். ✍ *கோல்டன்*

☆ இதயத்தில் சமயப்பற்று இல்லாமல் மூளையை மட்டும் விருத்தி செய்துகொள்வது நாகரிகமான அநாகரிகம்; மூடி மறைப்பது மிருகத்தனம். ✍ *பன்ஸன்*

☆ சமயம் உலகில் சிறந்த கவசமாகும். ஆனால், உடைக்கு அது ஃஉதாவது. ✍ *ஜான் நியூட்டன்*

☆ சித்தாந்தங்கள் வழியெங்கும் அடர்த்தியாக வளர்ந்து கடவுளை மறைத்துவிடுகின்றன. ✍ *எல். டபுள்யு.ரீஸ்*

☆ நான் சமயத்தைப் பெற்றிருக்க விரும்பவில்லை. அதுதான் என்னை ஆட்கொள்ள வேண்டும். ✍ *சார்லஸ் கிங்ஸ்லே*

☆ ஒருவனுடைய ஒழுக்கம் போன பின்பு, அவனுடைய சமயம் தங்கியிராது. ✍ *ஸவுத்*

☆ சமயச் சண்டை சைத்தானுக்கு அறுவடை. ✍ *ஃபாண்டெயின்*

☆ முக்கியமான விஷயங்களில் சமயத்தை இரண்டாவதாகக் கருதுவது அதைப் பொருட்படுத்துவதாகாது. எவன் கடவுளுக்கு இரண்டாவது இடத்தை அளிக்கிறானோ அவன் இடமே அளிக்காதவனாவான். ✍ *ரஸ்கின்*

☆ சமயம் தினசரி வாழ்க்கைக்கு உரியது; தொழில் நடத்தும் இடத்திற்கும் ஆலயத்திற்கும் ஒன்று போல உரியதாகும். ✍ *பீச்செர்*

☆ நீ எந்த நிலையில் இருக்கிறாயோ அதைப் பொறுத்ததுதான் உனது நம்பிக்கையும். ✍ என். போர்ட்டர்

☆ பயனுள்ள முயற்சிகளின் இரகசியம் நம்பிக்கையில் இருக்கின்றது. ✍ புல்வர்

## சமுதாயம்

☆ அறிவைக்கொண்டு நாம் மனிதர்களுடன் பழகுவதைக்காட்டிலும் இதயத்தைக்கொண்டு பழகுவதில் அதிக நெருக்கமாயுள்ளது. ✍ புருயெர்

☆ கூடி வாழும் இயல்பு இல்லாதவனுக்குச் சமுதாய வாழ்வு சுகமாக இராது. ✍ ஷேக்ஸ்பியர்

☆ மனிதனுடைய குறிப்பிடத்தகுந்த வெற்றிகள் சமுதாயத்திற்குப் பயன் உள்ளவைகளாக இருப்பவையே. ✍ டாக்டர் ஆல்பிரட் ஆட்லர்

☆ சிறுவிஷயங்களில் மாறுபட்டும், பெரிய விஷயங்களில் ஒற்றுமைப்பட்டும் இயங்குவதே சமுதாயம்.

## சரித்திரம்

☆ சரித்திரம் பெரிய அளவுள்ள வாழ்க்கை வரலாற்றைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. ✍ லாமார்டைன்

☆ சரித்திரத்திலிருந்து நாம் அடையும் தலைசிறந்த பயன் அது நம் மனத்தில் எழுப்பும் உற்சாகமாகும். ✍ கதே

☆ சரித்திரத்தை உண்டாக்கும் மனிதர்களுக்கு அதை எழுத நேரம் கிடைப்பதில்லை. ✍ மெட்டர்னிக்

☆ சரித்திரம் வெறும் குற்றங்கள், தவறுகள், துரதிருஷ்டங்கள் ஆகியவற்றின் பட்டியல் மட்டும் அன்று. ✍ கிப்பன்

☆ நாம் சரித்திரத்தை நமது விருப்பு வெறுப்புகளின் மூலம் பார்க்கிறோம். ✍ வெண்டல் ஃபிலிப்ஸ்

☆ எல்லாச் சரித்திரமும் ஒரே பொய். ✍ ஸர். ஆர். வால்பொல்

☆ வாழ்க்கை வரலாறே உண்மையான சரித்திரம். ✍ கார்லைல்

☆ வாழ்க்கையின் சுருக்கத்திற்குச் சரித்திரம் சிறிது ஈடு செய்வதாகும். ✍ ஸ்கெல்டர்

## ஜனக் கூட்டங்கள்

☆ ஜனக் கூட்டங்களின் மனங்களைப் போல அவ்வளவு நிச்சயமில்லாதவை வேறொன்றுமில்லை. ✍ வீய்ஸ்

☆ ஐக்கியப்பட்டு வேலை செய்யும்படி இணைக்கப்பெறாத ஜனக் கூட்டம் வெறும் குழப்பமாகும். ஜனக்கூட்டத்தை ஆதாரமாய்க் கொள்ளாத ஐக்கியம் கொடுங்கோன்மையாகும். ✍ பாஸ்கல்

☆ கூட்டம் எப்பொழுதும் தவறாகவே யிருக்கும். ✍ ரோஸ்காமன்

☆ பொது மக்களின் நம்பிக்கை, அதற்கு ஆதாரமில்லாத போதிலும், உண்மையைப் போன்றே பயனுண்டாக்கிவிடும் சந்தர்ப்பங்களும் உண்டு. ✍ ஷில்லர்

☆ ஜனக் கூட்டத்திற்குத் தன்னம்பிக்கையும், தனித்த செயல் திறமையும் கிடையாதென்பதால், வலிமை பெற்றவர்களுக்கு வாய்ப்புண்டாகிறது. ✍ எமர்ஸன்

☆ சமுதாயம் கொந்தளிக்கும் பொழுது, மேலே கிளம்பி வருவது அடித்தளத்திலுள்ள கும்பல்கள்தாம். ✍ டிரைடன்

☆ ஜனக்கும்பல் பயமில்லாதிருக்கையில் கொடுமையாகப் பாயும்; ஒரு முறை அஞ்சிவிட்டால், மிக இழிவாயும் வெறுக்கத்தக்க முறையிலும் இறங்கிவிடும். ✍ மேலெட்

☆ கூட்டம் தன் அபிமானத்தைக்கொண்டே சிந்தனை செய்யும். அறிவைக் கொண்டு சிந்திக்காது. ✍ டபுள்யு. ஆர். ஆல்ஜெர்

☆ அவர்கள் சுதந்தரம் என்று கூவும் பொழுது, தங்கள் இஷ்டம் போல் நடக்கும் உரிமையையே கோருகின்றனர். ✍ மில்டன்

## ஜனநாயகம்

☆ ஜனநாயகத்தின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியாதது போல் தோன்றுகிறது; ஏனெனில், அது சரித்திரத்தில் மிகப் புராதனமான போக்கு, மிகவும் நிலையானது, பெரும்பாலோர் வேற்றுமையின்றி ஏற்றுக்கொள்ளக்கூடியது. ✍ டி. டாக்புவில்வி

☆ சைத்தான் முதல் ஜனநாயகவாதி. ✍ பைரன்

☆ அமெரிக்காவின் உண்மையான ஜனநாயகக் கருத்து என்ன வெனில், ஒவ்வொருவரும் மற்ற ஒவ்வொருவரைப் போலச் சமநிலையில் இருக்க வேண்டும் என்பதில்லை, ஆனால், ஒவ்வொருவரும் கடவுளால் படைக்கப்பெற்ற நிலையில் இருப்பதற்குத் தடையற்ற சுதந்தரம் இருக்கவேண்டும் என்பதே. ✍ பீச்சர்

☆ ஜனநாயகம் என்பது வெறும் தேர்தல்களுக்குரிய பிரச்சினை யன்று. ✍ ஜவஹர்லால் நேரு

☆ பூரண அரசியல் ஜனநாயகம் என்பதன் பொருள் பொருளாதார ஜனநாயகமாக வளர்ச்சியடைதல் என்று பொதுவாகச் சொல்லி விடலாம். ✍ ஜவஹர்லால் நேரு

## சாட்சியம்

☆ ஒரு கட்சியை மட்டும் கேட்டால் நீ இருளில்தான் இருப்பாய்; இரு திறத்தாரையும் கேட்டால் எல்லாம் தெளிவாகிவிடும். ✍ ஹாலிபர்ட்டன்

## சார்ந்து வாழ்தல்

☆ மனித சமூகம் எப்பொழுதுமே சார்ந்து வாழவே வேண்டியிருக்கிறது. இரக்கமும் தயவும் மற்ற குணங்களைவிட அதிகமாகத் தேவைப்படுகின்றன. ✍ *தாக்கரே*

☆ மனிதன் எவ்வளவு உயர்ந்த அறிவைப் பெற்றிருந்த போதிலும், ஒவ்வொரு மணி நேரத்திலும் அவனுக்குப் பிறர் உதவியில்லாமல் முடியாது. ✍ *ஜான்ஸன்*

☆ தனித்து இயங்கக்கூடிய முறையில் கடவுள் எவனையும் படைக்கவில்லை. ✍ *ஃபெல்ட்ஹாம்*

## சிக்கனம்

☆ சிக்கனந்தானே பெரிய வருமானமாகும். ✍ *ஸெனிகா*

☆ பெரிய தொழில்கள் சிலரைச் செல்வராக்கும்; ஆனால், பெரும்பாலோர் கவனத்தினாலும் சிக்கனத்தினாலுமே செழிப்படைகின்றனர். ✍ *டிடி முங்கெர்*

☆ ஒரு மனிதனுடைய சாதாரணச் செலவுகள் அவனுடைய வருவாயில் பாதியளவு மட்டும் இருக்க வேண்டும். அவன் செல்வனாக விளங்க வேண்டுமானால், மூன்றில் ஒரு பகுதியே செலவழிக்க வேண்டும். ✍ *பேக்கன்*

☆ கையில் மிஞ்சியதைப் பாதுகாத்து வைத்துக்கொள்வதைப் போன்ற ஆதாயம் வேறில்லை. ✍ *பப்ளியஸ் ஸைரஸ்*

☆ தேவையில்லாமல் கூடுதலாக வாங்கும் பொருள் எதுவும் மலிவன்று. ஓரணா ஆனாலும் அது கிராக்கிதான். ✍ *புளுடார்க்*

☆ சேமித்தலே ஒரு கல்வியாகும்; மற்ற நற்குணங்களை அது போற்றி வளர்க்கின்றது; அது தன்னல மறுப்பைக் கற்பிக்கின்றது.

ஒழுங்கு முறையிலும் முன் யோசனையிலும் பயிற்சியளிக்கின்றது. இவ்வாறு மனம் விரிவடையச் செய்கின்றது.
✍ டிடிமுங்கெர்

☆ உண்மையும் உழைப்பும் உனக்கு இடைவிடாத தோழர்களாயிருக்கட்டும். வருமானத்திற்கு ஓரணா குறைத்துச் செலவழிக்கவும். பின்னால் உன் பையில் பணம் மிஞ்சும்; கடன்காரர் தொல்லை இராது. தேவையால் கஷ்டப்பட வேண்டாம். பசி வாட்டாது; துணியில்லாமல் வாடையில் வருந்த வேண்டாம்.
✍ ஃபிராங்க்லின்

☆ சிக்கனம் வாழ்க்கைப் போராட்டத்தில் பாதியாகும். பணம் தேடுதல் அவ்வளவு கஷ்டமன்று. அதை முறையாகச் செலவழிப்பதே கஷ்டம்.
✍ ஸ்பர்ஜியன்

☆ பைசாவை நீ கவனித்தால் போதும். ரூபாய்கள் தாங்களே தங்களைக் கவனித்துக்கொள்ளும்.
✍ ஃபிராங்க்லின்

## சித்திரக் கலை

☆ சித்திரம் தீட்டுதல் மௌனமான கவிதை. கவிதை பேசும் சித்திரம்.
✍ ஸிமோனைட்ஸ்

☆ சித்திரங்கள் தொங்கும் அறை சிந்தனைகள் தொங்கும் அறையாகும்.
✍ ஸர். ஜே. ரேனால்ட்ஸ்

## சிந்தனை

☆ ஆன்மா தானே தன்னுடன் பேசிக்கொள்வது சிந்தனை.
✍ பிளேட்டோ

☆ இறுதியில், சிந்தனையே உலகை ஆள்கின்றது. ✍ ஜே. மக்கோஷ

★ வெறும் வளர்ச்சி மனிதனாக்குவதில்லை. சிந்தனைதான் மனிதனை உருவாக்குகின்றது. ✍ ஐஸக் டெயிலர்

★ தங்கத்தைப் போல் சிந்தனையாளர் அரிதாகவே இருப்பர் ✍ லவேட்டர்

★ உண்மையில் சிறந்த சிந்தனைகள் யாவும் முன்பே பல்லாயிரம் தடவைகள் சிந்திக்கப்பெற்றவையாகும்; ஆனால், அவைகளை நம் சொந்தமாக்கிக்கொள்வதற்கு, நாம் மறுபடி அவைகளை நேர்மையாகச் சிந்தனை செய்ய வேண்டும். பிறகு, அவை அனுபவத்துடன் வேரூன்றிவிடுகின்றன. ✍ கதே

★ சிந்தனை இல்லாத படிப்பு பயனில்லாத உழைப்பு; படிப்பில்லாத சிந்தனை ஆபத்தானது. ✍ கன்ஃபூஷியஸ்

★ வெளிப்படையான செயல்களைவிடச் சிந்தனைகள் மனிதருடைய பண்பாட்டைக் காட்டுகின்றன. ✍ புளுமெர்

★ செயல் திறன் வாய்ந்தவர்கள், தங்களை அறியாமலே சிந்தனையாளர்களின் கருவிகளாகவே விளங்குகின்றனர். ✍ ஹீய்ன்

# சிந்தித்து ஆராய்தல்

★ ஆழ்ந்து சிந்தித்து ஆராயாதவர்கள் வாயால் உளற மட்டும் செய்வார்கள். ✍ ஷெரிடன்

★ பகலில் நீ செய்தவைகளையும், (மறுநாள்) காலையில் செய்ய வேண்டியவைகளையும் பற்றி இரவில் சிந்தனை செய்துபார். ✍ ஹெர்பர்ட்

★ பேசும் முன்னால், இருமுறை சிந்திக்கவும். ✍ ஃபிராங்க்லின்

## சிரத்தை

சிரத்தையுள்ள மனிதனுக்கு உபகரணங்கள் தாமாகவே அமைகின்றன. அப்படிக் கிடைக்காவிட்டால், அவனே உண்டாக்கிக் கொள்கிறான். ✍ *சான்னிங்*

பூரணமான, உற்சாகமுள்ள, மனப்பூர்வமான சிரத்தைக்கு ஈடானது எதுவுமில்லை. ✍ *டிக்கன்ஸ்*

சிரத்தை இல்லாமல் எந்த மனிதனும் பெருமையடைவதில்லை, அல்லது பெரிய காரியங்களைச் சாதிப்பதில்லை. ✍ *பேய்ன்*

நீ செல்வனாக வேண்டுமா? நீ அரைகுறையா யில்லாமல் முழு மனத்தோடு விரும்பினால், அப்படி ஆக முடியும். ✍ *ராபர்ட்ஸன்*

## சிரிப்பின்றி வினை கருதல்

வினையில் கருத்துடைமை அறிவின் மேல்தோடுதான். ஆயினும் அது அறிவைப் பாதுகாத்து வைக்கின்றது.

✍ *கன்ஃபூஷியஸ்*

## சிரிப்பு

சிரிப்பு ஆரோக்கியத்தை வளர்க்கத் தலைசிறந்ததாகும். அது ஜீரண சக்தியை அளிக்கின்றது. முற்காலத்தில் நம் முன்னோர்கள் விருந்துண்ணும் பொழுது, விகடகவிகளைப் பேசச்செய்து வந்ததன் காரணம் சிரிப்பினால் ஜீரண சக்தி அதிகமாகும் என்பதே. ✍ *ஹியூஃப்லண்ட்*

நீ அறிவாளியாயிருந்தால் சரி. ✍ *மார்ஷியல்*

ஒரு முறைகூடச் சிரிக்காமல் கழிந்த நாளே வீணாகக் கழிந்த நாளாகும். - சாம்ஃபோர்ட்

☆ உரக்கச் சிரித்தல், உள்ளத்தின் வெறுமையைக் காட்டும்.

✍ *கோல்டுஸ்மித்*

☆ நன்றாகச் சிரித்தால் வீட்டில் ஒளி பரவும். ✍ *தாக்கரே*

## சிறுபான்மையோர்

☆ வாக்குகளை நிறுத்துப் பார்க்க வேண்டும், எண்ணக்கூடாது.

✍ *ஷில்லர்*

☆ கடவுளையும் உண்மையையும் தங்களுக்கு ஆதரவாய்க் கொண்டுள்ள மிகச் சிறுபான்மையோர் ஆயிரக்கணக்கானவரைவிட வலிமை பொருந்தியவர். ✍ *ஜி. ஸிம்மன்ஸ்*

## சீர்கேடு

☆ ஒவ்வொரு மனிதனுக்கும் தீய நினைவுகள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. ✍ *லவேட்டர்*

☆ நம்மிடம் [illegible]ாவம் இருந்துகொண்டேயிருக்கின்றது. அது தாடியைப் போல் வளர்ந்துகொண்டேயிருக்கும், வாழ்நாள் முழுதும் வளர்ந்துகொண்டேயிருக்கும். அதை நாம் அவ்வப்போது களைந்துகொண்டே வர வேண்டும். ✍ *லூதர்*

## சீர்திருத்தம்

☆ ஒவ்வொரு வருடமும் ஒரு தீய வழக்கத்தைக் களைந்து வந்தால், நாளடைவில் மிகவும் இழிவான மனிதன்கூட நல்லவனாகி விடுவான். ✍ *ஃபிராங்க்லின்*

☆ அவசியம், ஏழைகளைத் திருத்துகின்றது. தெவிட்டுதல் செல்வர்களைத் திருத்துகின்றது. ✍ *டாஸிட்டன்*

★ நாம் ஆயிரக்கணக்கான நற்பண்புகளைப் பெறுதல் எளிது. ஆனால், ஒரு குற்றத்தைத் திருத்திக்கொள்வது அரிது. ✍ புரூமே

★ நரகத்திலிருந்து ஒளிமயமான பிரதேசத்திற்குச் செல்ல வேண்டுமானால், வழி நீளமாயும் கஷ்டமாயுமே இருக்கும். ✍ மில்டன்

★ ஒரு மனிதனை நீ சீர்திருத்த வேண்டுமானால், அவனுடைய பாட்டியிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். ✍ விக்டர் ஹியூகோ

## சுதந்தரம்

★ வாழ்க்கை என்பது என்ன? வெளியே சுற்றி நடப்பதும், நல்ல காற்றைச் சுவாசிப்பதும், உயரே சூரியனைப் பார்ப்பதும் அன்று; சுதந்தரமாயிருப்பதே வாழ்க்கை. ✍ அடிஸன்

★ மனித சமூகம் எப்பொழுது மிக அதிகமான அளவில் சுதந்தரம் பெற்றுள்ளதோ, அப்பொழுதுதான் உச்ச நிலையில் விளங்கும். ✍ தாந்தே

★ சுதந்தரம் மனித சமூகத்தின் கதியை நிர்ணயிப்பது. உலகில் எந்த அளவில் அது வெற்றி பெற்று வளர்கின்றதோ, அந்த அளவுக்கு அது சுதந்தரம் விரும்புவோர் அனைவருக்கும் உதவியாகும். ✍ கோஸத்

★ மக்கள் தேர்ந்தெடுக்கும் அரசாங்கத்தைத் தவிர வேறு எதுவும் பூமியில் இருப்பதற்கு நியாயம் கிடையாது. ✍ ஜோஸப் போனபார்ட்

★ சுதந்தரமாயுள்ள மக்கள் அந்தச் சுதந்தரத்தைத் தங்கள் குழந்தைகளுக்கும் அளிப்பதே தலைசிறந்த பெருமையாகும். ✍ ஹாவர்டு

★ நான் சுதந்தரத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருக்கிறேன். சமூக சுதந்தரம், பொருளாதார சுதந்தரம், குடும்ப சுதந்தரம், அரசியல்

சுதந்தரம், அறிவுச் சுதந்தரம் ஆன்மிகச் சுதந்தரம் - அனைத்தும் அவசியம்.
✍ எல்பர்ட் ஹப்பர்ட்

❖ சமய சுதந்தரம், பத்திரிகை சுதந்தரம், சட்டத்தின் மூலம் தனி மனிதனின் உடற்காப்புக்குச் சுதந்தரம் ஆகிய தத்துவங்களே, புரட்சியும் மறுமலர்ச்சியும் நடந்து வந்த காலத்தில் நமக்கு வழிகாட்டிகளாயிருந்து வந்தன.
✍ ஜெஃபர்ஸன்

❖ சட்டத்திற்கு உட்பட்டு அமையும் சுதந்தரமே உண்மையான சுதந்தரம்.
✍ பர்டன்

❖ தனி மனிதனின் சுதந்தரம் மனிதனின் பெருமைக்கும் இனத்திற்கும் அவசியமாகும்.
✍ புல்வர்

❖ மற்ற சுதந்தரங்களைக்காட்டிலும் எனக்கு அறிவு பெறவும், சிந்தனை செய்யவும், நம்பிக்கை கொள்ளவும், மனச்சாட்சியின் படி நினைத்ததைப் பேசவும் உரிமை தேவை.
✍ மில்டன்

❖ சுதந்தரமாயிருக்க வேண்டுமென்று உறுதிகொண்ட மக்கள்மீது அடிமைத்தனத்தைச் சுமத்தப் பார்ப்பதைவிட மலையை அடியோடு பெயர்த்தெறிவது எளிது.
✍ ஸதே

❖ மனித உடலுக்கு ஆரோக்கியத்தைப் போல், சமூகத்திற்குச் சுதந்தரம் தேவை.
✍ கௌவி

❖ சுவர்க்கத்திலே என்னைச் சிறை வைத்தாலும், நான் அதன் பளிங்குச் சுவர்களைத் தாண்டி வெளியேறவே விரும்புவேன். எனக்குச் சுதந்தரமே தேவை.
✍ டிரைடன்

❖ சுதந்தரம், சமத்துவம் ஆகிய கொள்கை வெறும் சுய நலத்தோடு சேர்ந்திருந்தால், மனிதர்களைப் பேய்களாக்கிவிடும். ஒவ்வொருவனும் சுதந்தரமாகி, தன் சுயநலத்திற்காக மட்டும் போராடிக்கொண்டிருப்பான். இங்கேதான் சமயமும், அதன்

ஆற்றலும் தேவைப்படுகின்றன. அவை மனிதர்க்கு அன்பையும் பரோபகாரச் சிந்தையையும் உண்டாக்கும்.

✍ ஜான் ராண்டோல்ஃப்

☆ உண்மையான சுதந்தரம் என்பது நம் உரிமைகளை நாம் அனுபவிக்கும் உரிமையாகும்; பிறருடைய உரிமைகளை அழிப்பதன்று. ✍ பிங்கார்ட்

☆ சட்டங்கள அனுமதிக்கும் உரிமையே சுதந்தரம். அவை தடுத்துள்ளவைகளை ஒரு பிரஜை செய்தால், அது சுதந்தர மாகாது. ஏனெனில், மற்றவர்களும் அவ்வாறே செய்ய உரிமை கொண்டாடுவார்கள். ✍ மாண்டெஸ்கியு

☆ சட்டத்துக்கு அடங்கிய சுதந்தரம் அடுப்பிலுள்ள நெருப்பானால், சட்டத்துக்கு அடங்காத சுதந்தரம் தரைமீது பரவிய நெருப்பாகும்.

✍ ஷில்லாட்

☆ சுதந்தரம் ஒரு சமூகத்தை நோக்கி இறங்கி வராது. சமூகமே அதை நோக்கி மேலெழ வேண்டும்; அதைச் சிரமப்பட்டு அடைந்து அனுபவிக்கவேண்டும். ✍ கோல்டன்

☆ எங்கே சுதந்தரம் உளதோ, அது என் நாடு. ✍ மில்டன்

☆ சுதந்தரம் இல்லாமல் ஒரு நாடு சிறப்பாக வாழ முடியாது.

✍ ரூஸோ

## சுருங்கச் சொல்லல்

☆ சுருங்கச் சொல்வதே பேச்சுத் திறனின் உயிர்நாடி ✍ ஷேக்ஸ்பியர்

☆ சட்டமன்ற உறுப்பினராயினும் சரி, பேச்சாளராயினும் சரி, ஒருவரின் பேச்சு சுருக்கமாயிருக்க வேண்டும். ✍ ஸிஸரோ

## சுவர்க்கம்

☆ நான் எப்பொழுதாவது சுவர்க்கத்திற்குச் செல்ல நேர்ந்தால், அங்கே மூன்று அதிசயங்களைக் காண்பேன். முதலாவது, அங்கேயிருக்கமாட்டார்கள் என்று நான் கருதிய சிலர் இருப்பார்கள்; இரண்டாவது, அங்கேயிருப்பார்கள் என்று நான் கருதிய சிலர் இருக்க மாட்டார்கள்; மூன்றாவது பெரிய ஆச்சரியம் என்னவென்றால், நான் அங்கேயிருப்பது.

*✍ ஜான் நியூட்டன்*

☆ பேரின்பத்தை விரும்புபவன் பேரின்பமயமாக இருப்பான்.

*✍ ஷேக்ஸ்பியர்*

☆ பூமிக்கு வானம் வெகு தொலைவிலுள்ளது. வானத்திற்குப் பூமி மிக அருகிலுள்ளது. *✍ ஹேர்*

☆ நடந்தால் சுவர்க்கத்தை அடையலாம், பேச்சால் முடியாது.

*✍ எம். ஹென்றி*

☆ நாம் சுயநலத்திலிருந்தும், பாவமான உலகிலிருந்தும் எவ்வளவு விலகியிருக்கிறாமோ, அவ்வளவு சுவர்க்கத்தின் அருகில் இருக்கிறோம். *✍ ரூதர்ஃபோர்டு*

## சுறுசுறுப்பு

☆ (சோம்பலால்) துருப்பிடித்துத் தேய்வதைவிட, உழைத்துத தேய்வது மேல். *✍ கம்பர்லந்து*

☆ சோம்பல் எல்லா விஷயங்களையும் கஷ்டமாக்கும்; சுறுசுறுப்பு எல்லாவற்றையும் எளிதாக்கும். *✍ ஃபிராங்க்லின்*

☆ குழந்தைகளுக்குச் சுறுசுறுப்பான பழக்கங்களை அளிப்பவன் சொத்து அளிப்பதைவிட மேலாகும். *✍ வேட்லி*

☆ தேனீயைப் போல, நமது வேலையை நாம் இன்பமயமாக்கிக் கொள்வோம்.

✍ கோல்டுஸ்மித்

☆ சுறுசுறுப்பு, கடன்களை அடைக்கும்; சோம்பலும் கருத்தின்மையும் கடன்களைப் பெருக்கும்.

✍ ஃபிராங்க்லின்

☆ எவ்வளவு அதிகமாக நாம் வேலை செய்கின்றோமோ அவ்வளவுக்குக் கூடுதலாக வேலைசெய்ய முடியும்; எவ்வளவு சுறுசுறுப்பாயிருக்கின்றோமோ, அவ்வளவு அதிகமாக ஓய்விருக்கும்.

✍ ஹாஸ்லிட்

☆ அறிவைப் பெருக்கிக்கொள்வதற்கு கருத்துடைமை என்ற விலையைச் செலுத்த வேண்டும். அறுவடை செய்ய வேண்டுமானால், முன்னால் விதைகளை விதைத்திருக்க வேண்டும்.

✍ பெய்லி

☆ மனிதன் தானாக உழைத்துப் பழகிக் காய்த்துப் போயிருக்க வேண்டும். இன்ப நுகர்ச்சியிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்ந்திருக்கக் கூடாது. அவை உடலுக்கும் நன்மை செய்வதில்லை, மனத்தின் அறிவுக்கும் உதவுவதில்லை.

✍ சாக்ரடீஸ்

## சூதாட்டம்

☆ சூதாடும் கருவியைக் கையிலெடுத்துக்கொண்ட கணத்திலிருந்தே ஒரு மனிதனை, அவன் தற்கொலை செய்து கொள்பவன் என்றே நான் கருதுகிறேன்; பின்னால் நேருவதெல்லாம் அவன் தன் நெஞ்சிலே குத்திக்கொள்ள உடைவாளைத் தீட்டுவதாகும்.

✍ கம்பர்லந்து

☆ பகடை உருட்டும் ஓசையைக் கேட்கும் போதெல்லாம், நான் குடும்பம் முழுவதற்கும் சாவுமணி அடிக்கும் ஓசையைக் கேட்கிறேன்.

✍ ஜெரால்டு

☆ சீட்டு, பகடை, சரக்குகள் ஆகிய எத்தகைய சூதாட்டமாயினும், ஒன்றுதான்; அது பணத்திற்குப் போதிய ஈடு செலுத்தாமல் பணம் பெறுவதாகும்.
✍ பீச்சர்

☆ சூதாட்டத்தில் மனிதனுடைய வாழ்க்கையில் மிகவும் அருமையான காலத்தையும், செல்வத்தையும் நாம் இழக்கிறோம்.
✍ ஃபெல்ட்ஹாம்

☆ சுவலை நெருப்பிலிருந்து தொலைவில் வைக்கவும் இளைஞனைச் சூதாட்டத்திலிருந்து ஒதுக்கி வைக்கவும்.
✍ ஃபிராங்க்லின்

## சூழ்நிலைகள்

☆ ஒருவன் சூழ்நிலைகளைத் தொடர்ந்து, தன்னைச் சுற்றியுள்ள சக்திகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரே வார்த்தையில் சொன்னால், செய்யத்தக்கதைச் செய்ய வேண்டும்.
✍ அனடோல் ஃபிரான்ஸ்

☆ பெரும்பாலான ஆடவரும் பெண்டிரும் வாழ்க்கையில் தங்களுக்குக் கிடைக்கும் வழியிலேயே செல்கின்றனர். அவர்கள் தங்கள் அனுபவங்களை ஆராய்ந்து தெரிந்துகொள்ள ஆசையோ ஓய்வோ பெற்றிருக்கவில்லை. சிலர் மட்டுமே மிகச் சிறந்த அனுபவ இலாபங்களை அடையத்தக்க பாதைகளை அமைத்துக்கொள்கின்றனர்.
✍ ஸர் ஆர்தர்கீத்

☆ சூழ்நிலைகள் பலவீனமானவர்களுக்கு எஜமானர்கள்; அறிவாளர்களுக்கு அவை கைக்கருவிகள். ✍ சாமுவேல் லோவர்

☆ சூழ்நிலைகள்! - நானே சூழ்நிலைகளை அமைத்துக் கொள்கிறேன்.
✍ நெப்போலியன்

## செயல்

☆ வாழ்க்கை நல்ல முறையில் வாழப்பெற்றதா என்பதை ஆண்டுகளைக்கொண்டு கணக்கிடாமல், செயல்களைக் கொண்டு கணக்கிட வேண்டும்.
✍ ஷெரிடன்

நல்ல செயல்கள் நம்மை உயர்த்துகின்றன. நாம் நம் செயல்களின் புதல்வர்களாய் இருக்கிறோம். ✍ செர்வான்டிஸ்

நாம் நம் செயல்களைத் தீர்மானிப்பதுபோல், நம் செயல்களும் நம்மைத் தீர்மானிக்கின்றன. ✍ ஜியார்ஜ் எலியட்

மனிதனின் வாழ்க்கை, கோட்பாடுகளுக்காக அமைந்ததன்று. அது செயல்களுக்காக அமைந்தது. ✍ மெரிடித்

செயல் புரியாத மனிதனுக்குத் தெய்வம் ஒரு போதும் உதவி செய்யாது. ✍ ஸாஃபாகிளிஸ்

செயல் எப்பொழுதும் இன்பமளித்துக்கொண்டிராது; ஆனால், செயலில்லாமல் இன்பமில்லை. ✍ டிஸ்ரேலி

## செய்ததற்கு வருந்துதல்

(தவறு செய்ததற்கு) வருந்துதலே மனிதனுடைய செயல்களுள் மிகவும் தெய்விகமானது. ✍ கார்லைல்

மேற்கொண்டு அவ்வாறு (தவறு) செய்யாமலிருத்தலே உண்மையான இரங்குதலாகும். ✍ லூதர்

இரங்குதல் இதயத்தின் சோகம். அதிலிருந்து தூய வாழ்க்கை தொடங்குகின்றது. ✍ ஷேக்ஸ்பியர்

தடுக்கி விழாமலே இருப்பதில் நமக்குத் தலைசிறந்த பெருமையில்லை; ஆனால், நாம் விழுந்த பொழுதெல்லாம் மீண்டும் எழுதலில் இருக்கின்றது. ✍ கோல்டுஸ்மித்

## செய்திகள்

செய்திகள் ஒரு நாளின் இனிய் உணவு. ✍ கிரீஸ்

☆ காலைக் காற்றைப் போலச் செய்திகள் வரவேற்கத்தக்கவை.
✍ *சாப்மன்*

☆ கெட்ட செய்தி சிறகடித்துப் பறந்து செல்கின்றது. ✍ *டிரைடன்*

# செய்முறை

☆ செய்யத்தக்க காரியமெல்லாம் நல்ல முறையில் செய்யத் தக்கவையே. ✍ *செஸ்டர்ஃபீல்ட்*

☆ நேர்த்தியாகச் செய்து முடிப்பதோடு உன் வேலை தீர்ந்தது. உன்னைப்பற்றிப் பேசுவதை மற்றவர்களுக்கு விட்டுவிடு.
✍ *பிதாகோரஸ்*

☆ நன்றாகச் சிந்தனை செய்தல் புத்திசாலித்தனம்; நன்றாகத் திட்ட மிடுதல் மேலும் அறிவுடையதாகும்; நன்றாகச் செய்து முடிப்பது எல்லாவற்றினும் சிறந்ததாகும். ✍ *பாரசீகப் பழமொழி*

# செருக்கு

☆ செருக்கு, உலகிலே வெறுக்கத்தக்கவைகளுள் மிகவும் இழிவானது. ✍ *ஹாஸ்லிட்*

☆ கர்வம் பைத்தியத்திற்கு எவ்வளவு நெருக்கமாயிருக்கிறது என்பது ஆச்சரியமாய்த்தான் உளது. ✍ *ஜெரால்ட்*

☆ தான் முக்கியமானவன் என்று காட்டிக்கொள்பவன் தனக்கு ஆற்றலில்லை என்பதையே வெளியே காட்டுகிறான்.
✍ *லவேட்டர்*

☆ தன்னைப்பற்றியே அதிகமாகப் பேசுபவன், அந்த அளவுக்குப் பிறரைப்பற்றிப் பேசுவதைக் கேட்க விரும்புவதில்லை.
✍ *லவேட்டர்*

எந்த மனிதனும் தன்னைத்தான் ஏமாற்றிக்கொள்வதைக் காட்டிலும், மற்றவர்களால் ஏமாற்றப்பெறுவதில்லை.

*✍ கிரேவில்லி*

எவ்வளவு அற்ப மனிதனாயிருந்தாலும், தன் கண்ணுக்கு அவன் பெரிய 'ஆசாமி'யாகவே தோன்றுவான் *✍ ஹோம்*

அறிவாளிக்குத் தன் அறியாமை தெரியும்; மூடன் தனக்கு எல்லாம் தெரியுமென்று எண்ணுகிறான். *✍ ஸி. ஸிம்மன்ஸ்*

அநேக மனிதர்கள் தங்களுடைய சொந்த நிழல்களைப் பார்த்துக் கொண்டே வாழ்க்கையைக் கழிக்கின்றனர். அதனால் நாளடைவில் தாங்களே தேய்ந்து நிழல்களாகிவிடுகின்றனர். *✍ ஹேர்*

கர்வம் முதன்மையான பெரிய பிரபு; நரகத்தின் ஜனாதிபதி.

*✍ டிஃபோ*

செருக்கின் இருப்பிடம் இதயம், அங்கு மட்டுமே அது நிலைத்திருக்கின்றது. அங்கே இல்லாவிட்டால், அது பார்வையிலோ, உடைகளிலோ தென்படாது. *✍ கிளாரண்டன் பிரபு*

செருக்கு, அபினி மற்றும் விஷ மருந்துகளைப் போலச் சொற்ப அளவிலிருந்தால் நன்மை பயக்கும்; பெரிய அளவில் கேடு விளைவிக்கும். தன்னிடத்திலே தனக்குத் திருப்தியில்லாதவன் மற்றவர்களை மகிழ்விக்க முடியாது. *✍ எப். ஸாண்டர்ஸ்*

செருக்கில் இந்த அளவு அல்லது அந்த அளவு அனுமதிக்கலாம்; இல்லாவிடில் மனிதன் தன் பெருமையைக் காத்துக்கொள்ள முடியாது. பெருந்தீனி தின்பது தீதென்றால், உணவு இல்லாமல் முடியாது. குடிவெறியில் ஆழ்ந்துவிடுவது தீதென்றால் சொற்ப மது அருந்தாமலிருக்க முடியாது. தீமை, உண்பதிலும் மது அருந்துவதிலும் இல்லை. அளவு அதிகமாய்ப் போவதிலேயே இருக்கின்றது. அதுபோலவே செருக்கும். *✍ ஸெல்டன்*

## செலவுகள்

☆ ஒரு தீமைக்கு இடம் கொடுத்தால், அது இரண்டு குழந்தைகளை அழைத்து வரும். கொஞ்சம் தேநீர் அல்லது கொஞ்சம் பழச்சாறு ஆகியவற்றை இடையிடையே குடித்து வரலாம் என்றும், சற்றுக் கூடுதலான விலைமதிப்புள்ள உணவை அருந்தி வரலாம் என்றும், சற்று உயர்ந்த ஆடைகளை அணியலாம் என்றும், கொஞ்சம் தமாஷாக்கள் பார்த்து வரலாம் என்றும் நீங்கள் ஒருவேளை எண்ணலாம். இவை பெரிய விஷயங்கள் அல்ல என்றும் கருதலாம். ஆனால், 'பலதுளி பெருவெள்ளம்' என்பது நினைவிருக்கட்டும். சின்னச் சின்னச் செலவுகளில் எச்சரிக்கையாக இருங்கள். ஒரு சிறு துவாரம் இருந்தாலும், அது பெரிய கப்பலை மூழ்கச் செய்துவிடும். ✍ ஃபிராங்க்ளின்

☆ உனக்கு அவசியமில்லாத பொருள்களை விலைக்கு வாங்கு. சீக்கிரத்தில் உனக்கு இன்றியமையாத பொருள்களையும் விற்க நேரிடும். ✍ ஃபிராங்க்ளின்

## செல்வம்

☆ செலவுக்குமேல் கூடுதலாக வருவாயுள்ளவன், செல்வன்; வரவுக்கு மேலே செலவழிப்பவன், ஏழை. ✍ புருயே

☆ செல்வம் வாழ்க்கையில் இலட்சியமன்று, அதன் கருவி. ✍ பீச்சர்

☆ எனது செல்வம் என் உடைகளில் இல்லை; என் தேவைகளின் சுருக்கத்திலிருக்கிறது. ✍ கே. பிரதர்டன்

☆ செல்வங்கள் ஓர் அசௌகரியத்தை மட்டும் நீக்குகின்றன. அதுதான் வறுமை. ✍ ஜான்ஸன்

☆ அகூர் என்பவர், 'எனக்குச் செல்வங்களைக் கொடுக்க வேண்டாம், வறுமையையும் கொடுக்க வேண்டாம்' என்று சொன்னார். இதுவே எக்காலத்தும் அறிவாளர்கள் சொல்லக் கூடியது. ✍ கோல்டன்

☆ செல்வங்களை அனுபவிக்காமல் சேர்த்து வைக்கும் மனிதன், தங்கம் சுமந்த கழுதை முட்செடிகளைத் தின்னுவது போலாகும்.

☆ இறக்கும்போது செல்வனாக இறப்பது கேவலம் என்று பொதுவான உணர்ச்சி ஏற்படும். ✍ ஆலன் ரூ காஸ்கிலி

☆ இந்த உலகில் நம்மைச் செல்வராக்குவது நாம் விட்டு விடுவதுதான். ✍ பீச்சர்

☆ செல்வம் தன்னை வைத்திருப்பவனுக்குச் சொந்தமில்லை. அனுபவிப்பவனுக்கே சொந்தம். ✍ ஃபிராங்க்ளின்

☆ எந்த மனிதனும் பணக்காரனா ஏழையா என்பதைத் தன் கணக்குப் புத்தகத்தைப் பார்த்துச்சொல்ல முடியாது. அவன் எந்த நிலையில் இருக்கிறான் என்பதைப் பொறுத்தது. அவனுடைய செல்வம்; என்ன வைத்திருக்கிறான் என்பதைப் பொறுத்ததன்று ✍ பீச்சர்

☆ அதிகமாயப படித்திருந்தால், அநித்தியமான மனிதர்கள் எவ்வளவு அற்ப அறிவு பெற்றிருக்கிறார்கள் என்பது தெரியும்; அதிகச் செல்வமிருந்தால், உலகப் பற்றுடைய மக்கள் எவ்வளவுதான் அனுபவிக்க முடியும் என்பது தெரியும். ✍ யங்

☆ சூரியன் மிக உயரத்திலிருக்கிறது என்பதற்காக நாம் அதை மதிப்பதில்லை. அதன் பயனுக்காக மதிக்கிறோம். அதே போல, செல்வர்களை அவர்களுடைய தானதர்மங்களுக்காக மதிக்கவும். ✍ பென்லி

☆ ஏழைகளைக்காட்டிலும் செல்வர்களுக்குரிய தலைசிறந்த இனிய உரிமை யாதெனில்; மற்றவர்களை இன்புறச் செய்தல். அந்த உரிமையைத்தான் அவர்கள் மிகக் குறைவாக உபயோகிக்கின்றனர். ✍ கோல்டன்

☆ செல்வங்களை நம் வீடுகளுக்குள் அனுமதிக்கலாம். ஆனால் இதயங்களுக்குள் அனுமதிக்கக்கூடாது. அவைகளை நம் உடைமைகளாக வைத்துக்கொள்ளலாம். ஆனால், நம் அன்புக் குரியவைகளாக ஆக்கிவிடக்கூடாது. ✍ சார்ரன்

☆ வேகமாகச் சேர்ந்த செல்வங்கள் குறைந்துவிடும்; சிறிது சிறிதாகச் சேர்ந்தவை பெருகும். ✍ கதே

☆ ஒரு மனிதன் எவ்வளவு வைத்திருக்கிறான் என்பதைக் கண்டு நாம் பொறாமைப்படுகிறோம், அவன் எவ்வளவு அனுபவிக்கிறான் என்பதைக் கண்டால், நாம் அவனுக்கு இரங்கத்தான் வேண்டும். ✍ ஸீட்

☆ ஒரு பணக்காரன தன் செல்வத்தால் செருக்குற்றிருக்கிறான். அவன் அந்தச் செல்வத்தை எப்படி உபயோகிக்கிறான் என்பது தெரியும்வரை, நாம் அவனைப் புகழக்கூடாது. ✍ சாக்ரடீஸ்

☆ செல்வங்களில் திளைப்பவர்களுக்கு மற்றவர்களுக்கு எவ்வளவு தேவைகள் இருக்கும் என்பதைக் கண்டுகொள்வதைப் போன்ற கஷ்டம் வேறில்லை. ✍ ஸ்விஃப்ட்

☆ மிகக் குறைந்ததைக்கொண்டு திருப்தியடைபவனே முதன்மையான செல்வன். ஏனெனில், இயற்கையின் செல்வம் திருப்திதான். ✍ சாக்ரடீஸ்

☆ பயனுள்ள முறையில் செல்வாக்கை உபயோகிக்க விரும்புவோன் எதற்கும் அவமரியாதை செய்யக்கூடாது. தவறானவைகளைக் கண்டு அவன் துயருறக்கூடாது. நன்மையை வளர்ப்பதில் அவன் தன் ஆற்றல்களைப் பயன்படுத்த வேண்டும். அவன் அழிவு வேலையில் இறங்காமல், ஆக்க வேலையில் (புதியன படைப்பதில்) ஈடுபட வேண்டும். அவன், ஆலயங்களைக் கட்டி, மனித சமூகம் அங்கே வந்து, பரிசுத்தமான இன்பத்தில் பங்கு கொள்ளச் செய்ய வேண்டும். ✍ கதே

☆ வெளியே தெரியாமல் உன்னை மூடிவைக்க முடியாது; உலகமெல்லாம் பார்க்கும்படி மாபெரும் மேடைமீது நீ அமர்ந்திருக்கிறாய். உன் செயல்கள் நேர்மையாகவும் பரோபகாரமாகவும் இருந்தால், அவை உன் ஆற்றலைப் பெருக்கி, இன்பத்தையும் சேர்க்கும். ✍ சைரஸ்

☆ இளைஞருக்கு வழி காட்டுதல், ஆற்றலைப் பெருக்குதல், நம்பிக்கை ஊட்டுதல், அணைக்கின்ற கரிக்கங்குகளை ஊதித் தீ மூட்டுதல், புதிய சிந்தனையாலும் உறுதியான செயலாலும் தோல்வியை வெற்றியாக்குதல் - இவையெல்லாம் எளிதான காரியங்களல்ல. இவை தெய்விக மனிதர்களின் வேலையாகும்.
✍ *எமர்ஸன்*

☆ நாம் நமக்காக மட்டும் வாழ முடியாது. நம் சகோதர மக்களையும் நம்மையும் ஆயிரக்கணக்கான மெல்லிய நூலிழைகள் ஒன்றாகப் பிணைத்துள்ளன. இந்த இழைகளின் வழியாக நம் செயல்கள் அனுதாபத்துடன் காரணங்களாகச் செல்கின்றன. பின்னர் அவை பயன்களாக நம்மிடம் திரும்பி வருகின்றன. ✍ *மெல்வில்லி*

☆ செல்வத்தை அடையும் வழி, சந்தைக்குச் செல்லும் வழியைப் போல், தெளிவாக உள்ளது. அது முக்கியமாக இரண்டு சொற்களில் அடங்கியுள்ளது; சுறுசுறுப்பு, சிக்கனம்.
✍ *ஃபிராங்க்லின்*

☆ அருவருப்பான இந்த உலகத்தில் எந்த விஷயத்தைக்காட்டிலும் அதிகமான கொலைகளைத் தங்கம் செய்துள்ளது. விஷங்களைக் காட்டிலும் கொடிய தங்கம் மனிதர்களின் ஆன்மாக்களையே வதைப்பதாகும். ✍ *ஷேக்ஸ்பியர்*

## செல்வாக்கு

☆ உலகை ஆட்டிவைக்க விரும்புவோன் முதலில் தன்னை இயக்கி வைத்துக்கொள்ள வேண்டும். ✍ *சாக்ரடீஸ்*

☆ மனிதர்களை வசப்படுத்துவது, அவர்களைக் குறை சொல்வதாலன்று, அவர்களை அன்பினால் அரவணைத்துக் கொள்வதால் இயலும். ✍ *சான்னிங்*

☆ பேரறிவும் புனித வாழ்வும் உலகம் வெளியிடும் சிந்தனைகள், உலகை மாற்றிவிடுகின்றன. ✍ *எமர்ஸன்*

☆ ஒருவருடைய குணம் வெளியே பரிமளிப்பது செல்வாக்கு.
✍ டெயிலர்

☆ மிகுந்த ஒழுங்குதாபமில்லாத இடத்தில் சொற்பச் செல்வாக்குதான் இருக்கும்.
✍ எஸ்.ஐ.பிரைம்

☆ மற்றவர்களுடைய அரிய சொற்பொழிவுகளைக்காட்டிலும், நல்லவர்களுடைய ஒரு சொல் அல்லது தலை அசைப்பு அதிகச் செல்வாக்குடையது.
✍ புளூட்டார்க்

☆ மிகச் சொற்பமான அசைவும் இயற்கை அனைத்திற்கும் முக்கியமாகும். ஒரு சிறு கல் விழுந்தாலும் அது சமுத்திரம் முழுவதையும் பாதிக்கும்.
✍ பாஸ்கல்

## செழுமை

☆ செழுமை நற்பண்பின் உரைகல். ஏனெனில், இன்பத்தால் நலிவடையாமல் இருப்பதைவிடத் துன்பங்களைத் தாங்குதல் அதிகக் கஷ்டம்.
✍ டாஸிடஸ்

☆ உலகில் எதையும் தாங்கலாம். இடைவிடாத செழுமையை மட்டும் தாங்குதல், அரிது.
✍ கதே

☆ வறுமை ஆயிரக்கணக்கானவர்களை வதைத்திருந்தால், செழுமை பல்லாயிரக்கணக்கானவர்களை வதைத்துள்ளது. ஆதலால், வறுமையே மேலெனக் கொள்ளத்தக்கது. ✍ பர்டன்

## சொற்கள்

☆ பொருளில்லாத சொற்கள் கருத்தில்லாத செயல்களாகும்; சொற்கள் செயல்களின் சிறகுகள்.
✍ லவேட்டர்

உன் சொற்கள் எப்படி இருக்கின்றனவோ, அந்த அளவுக்கு உன் அன்பு மதிக்கப்பெறும்; உன் அன்பின் தன்மைக்கு ஏற்றபடி உன் செயல்கள் இருக்கும். உன் செயல்களுக்கு ஏற்றபடி உன் வாழ்க்கை இருக்கும். ✍ *சாக்ரடீஸ்*

சொற்கள் சுருங்கினால், பயன் வீணாவதில்லை. ✍ *ஷேக்ஸ்பியர்*

ஆயிரம் சொற்கள் சேர்ந்தாலும், ஒரு செயலைப் போல் மனங்களில் பதிவதில்லை. ✍ *இப்ஸன்*

ஒரு மனிதன் ஒரு செயலைச் செய்ய வேண்டாமென்று நீ கருதினால், அதைப்பற்றி அவனைப் பேசும்படி செய்; ஏனெனில், மனிதர்கள் எவ்வளவு அதிகமாய்ப் பேசுகின்றனரோ, அந்த அளவுக்கு அவர்கள் வேறு எதையும் செய்வதில்லை.

## சொற்பொழிவுக் கலை

மற்றவர்களைத் தூண்டும்படியான பொலிவுடன் ஒரு பேச்சாளன் இருக்க வேண்டும் என்பது பேச்சுக்கலையின் முதல் விதி. அதைச் செய்யவல்லது அவனுடைய வாழ்க்கையே.

✍ *ஸிஸரோ*

சுருக்கமாகப் பேசுவதில் ஒவ்வொரு மனிதனும் பயிற்சி பெறவேண்டும். நீண்ட பேச்சுகள் பேசியவனுக்குத் திருப்தியளிக்கலாம்; ஆனால், கேட்பவர்களுக்குச் சித்திரவதை ஆகும். ✍ *ஃபெல்ட்ஹாம்*

பற்பல பேச்சாளர்கள் தங்கள் பேச்சில் ஆழமில்லை என்பதற்குப் பதிலாக, நீளத்தைக் கூட்டிவிடுகிறார்கள். ✍ *மாண்டெஸ்கியு*

உண்மையான பேச்சுத் திறனுக்கு ஈடான ஆற்றலில்லை. ஸீஸர் மக்களின் அச்சங்களைக் கிளறிவிட்டு அவர்களை அடக்கி ஆண்டு வந்தார்; ஸிஸரோ அவர்களுடைய அன்பைக் கவர்ச்சி செய்து, உணர்ச்சிகளை ஆண்டு வந்தார். ஸீஸரின் செல்வாக்கு

அவர் ஆயுளுடன் முடிந்தது; மற்றவருடைய செல்வாக்கு இன்றுவரை தொடர்ந்து நிற்கின்றது. ✍ ஹென்றி கிளே

☆ விஷயங்களை மதிப்பிட்டுப் பேச முடியாத பேச்சாளன் கடிவாளமில்லாத குதிரை. ✍ தியோஃபிரேஸ்டஸ்

☆ ஸிஸரோவின் மென்மையான, நாகரிகச் சொற்பொழிவுகளைக் கேட்ட ரோமானியர்கள், 'நமது சொற்பொழிவாளர் எவ்வளவு அருமையாகப் பேசினார்!' என்று ஒருவருக்கொருவர் வியந்துகொண்டே சென்றனர். ஆனால், அத்தீனியர்கள், டெமாஸ்தனிஸின் பேச்சுகளைக் கேட்டு, உள்ளங்களில் அந்தச் சொற்பொழிவுகளின் விஷயத்தைப்பற்றியே எண்ணிக்கொண்டு, அவரை மறந்துவிட்டு, அவர் பேச்சுகளை முடிக்கு முன்பே, 'நாம் ஃபிலிப்புடன் போராடச் செல்வோம்!' என்று கூவிக்கொண்டே செல்வார்கள். ✍ கோல்டன்

☆ நடக்க முடியாதவர்கள் குதிரைகள்மீது ஏறிச் செல்வது போல, சொற்பொழிவாளர்களும் தங்கள் விஷயம் மிகவும் பலவீனமாயிருந்தால், அப்பொழுதுதான் மிகவும் காரசாரமாய்ப் பேசுவார்கள். ✍ ஸிஸரோ

☆ பேச்சாளரோ, ஆசிரியரோ, தம் கருத்துகளைவிடத் தம் சொற்கள் சிறியவைகளாக இருக்கும்படி செய்யக் கற்றுக்கொள்ளும்வரை வெற்றி பெற இயலாது. ✍ எமர்ஸன்

# சோகம்

☆ வானுலகால் சாந்தப்படுத்த முடியாத சோகம் எதுவும் பூமிக்கு ஏற்படுவதில்லை. ✍ மூர்

☆ அதிக வேலையாக அலைபவர்களுக்குக் கண்ணீர் விட நேரமில்லை. ✍ பைரன்

பெருமைப்பட்டது

☆ சோகம் தோன்றினால், வார்த்தைகளால் வெளியிட வேண்டும்; பேசாமல் அடங்கியுள்ள கோபம் முறுகிக் கிடக்கும் இதயத்தை உடையச் செய்துவிடும். ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ வாழ்க்கையாகிய மணலில் சோகம் பலமாக மிதித்து நடப்பதால், அதன் தடங்கள் பதிந்துவிடுகின்றன. அவைகளைக் காலத்தால் அழிக்க முடிவதில்லை. ✍ *எச்.நில்*

☆ சோகம் எவ்வளவு அதிகமோ, அந்த அளவுக்கு நாவு பேச முடியாது. ✍ *டால்மாட்*

☆ சோகத்தோடு அனுபவம் வருகின்றது. நம் நம்பிக்கைகளில் எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று கற்பிக்கும் கொடுமையான அறிவும் ஏற்படுகின்றது. ✍ *இ. கபேரியா*

☆ இன்பம் அனுபவித்த பல ஆண்டுகள் சந்தடியில்லாமல் அகன்று விடுகின்றன. ஆனால், சோகம் ஒவ்வொரு நிமிடமாக எண்ணிக் கொண்டு இருக்கின்றது. ✍ *ஹவார்டு*

☆ துக்கம் மனிதர்களுக்காக ஏற்பட்டது, விலங்குகளுக்காக அன்று; ஆனால், மனிதர் அதிகமாய்த் துக்கம் கொண்டாடினால், அவர்கள் விலங்குகளுக்கு மேலல்லர். ✍ *செர்வான்டிஸ்*

☆ அளவுக்கதிகமான சோகம், அளவுக்கதிகமான சிரிப்பைப் போல் மடமையாகும்; ஆனால், துக்கமே கொண்டாடாமல் இருப்பது உணர்வில்லாமை ஆகும். ✍ *ஸெனீகா*

☆ ஒரு சோகம் (தனியே வராமல்) ஒரு வாரிசையும் கூட அழைத்துக் கொண்டு வரும். அதற்குப் பின்னால் வாரிசு தலையெடுக்கும். ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ கண்ணை மறைக்கும் கண்ணீரைக் காலமும் பொறுமையும் காய வைக்கின்றன. ✍ *பிரெட் ஹார்ட்*

# சோம்பல்

☆ சோம்பல் தீய ஒழுக்கத்தையோ, கெடுதலையோ உண்டாக்கா விட்டால், பொதுவாக அது துக்கத்தை உண்டாக்கும்.

*✍ ஸிட்னி ஸ்மித்*

☆ மெலிந்த உள்ளங்களுக்குச் சோம்பல் சரணாலயம்; மூடர்களுக்கு அது ஓய்வு நாள். *✍ செஸ்டர்ஃபீல்டு*

☆ வில்லை அதிகமாக வளைத்தால் ஒடிந்துவிடும்; மனத்தை வளைக்காமலே விட்டிருந்தால் அதுவும் ஒடிந்துவிடும்.

*✍ பேக்கன்*

☆ மனிதர்களிலே பதரான சோம்பேறியின் ஆரம்ப நடவடிக்கைகள் இப்படியிருக்கும்: அவன் மறைவான இடத்தில் சாய்ந்திருக்க விரும்புவான்; காரணமில்லாமல் தெரு முனைகளில் நின்று கொண்டிருப்பான்; எங்காவது போய்க்கொண்டேயிருப்பான்; அல்லது அதற்கடுத்த நாளோ, பல கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணம் கொண்டிருப்பான். *✍ டிக்கென்ஸ்*

☆ சோம்பல் உன்னை ஏமாற்றாமல் காத்துக்கொள்; ஏனெனில், அதற்கு இன்று ஒரு நாளை கொடுத்தால், அது அடுத்த நாளையும் திருடிக்கொள்ளும். *✍ குரோகுவில்*

☆ சோம்பல் உள்ளத்தின் உறக்கம். *✍ வாவெனார்கூஸ்*

☆ அவனுக்குப் பிறர் உதவியில்லாமல் முடியாது. *✍ ஜான்ஸன்*

☆ தனித்து இயங்கக்கூடிய முறையில் கடவுள் எவனையும் படைக்கவில்லை. *✍ ஃபெல்ட்ஹாம்*

# சோஷலிஸம்

☆ உலகம் முழுவதிலும் மனித சமுதாய அமைப்பில் சோஷலிஸத் தத்துவம் படிப்படியாக ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது என்பதை

நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அதை எவ்வளவு வேகத்தில் அடையலாம் என்பதிலும், முன்னேறிச் செல்வதற்குரிய வழி முறைகள் என்ன என்பதிலுமே கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன.

*ஜவஹர்லால் நேரு*

முதலாளித்துவ அமைப்பு முழுவதும் ஏதாவது ஒருவகையான செல்வம் ஈட்டும் ஆர்வமுள்ள சமூகத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. சோஷலிஸ சமுதாயம் செல்வம் சேர்க்கும் இந்த ஆர்வத்தைக் கைவிட முயற்சி செய்ய வேண்டும்; இதற்குப் பதிலாகக் கூட்டுறவை மேற்கொள்ள வேண்டும்.

*ஜவஹர்லால் நேரு*

## தகுதி

எத்தகைய தகுதியையும் நெடுங்காலம் மறைத்து வைக்க முடியாது; அது கண்டுபிடிக்கப் பெறும். ஒருவன் அதைத் தானே வெளிக் காட்டிக்கொண்டால்தான், அது குறைவடையும். அதற்குப் போதிய சன்மானம் எப்பொழுதும் கிடைக்காமல் இருக்கலாம். ஆனால், பிறர் அத்தகுதியை அறிந்தேயிருப் பார்கள்.

*செஸ்டர்ஃபீல்டு*

தகுதியும் நல்லதிருஷ்டமும் நெருக்கமுள்ளவை என்பதை மூடர்கள் ஒருபோதும் உணர்வதில்லை.

*கதே*

## தண்டனை

தீயவன் ஒருவன் தண்டிக்கப்பெறுவது நோயாளிக்கு மருந்து கொடுப்பது போலாகும்; எல்லா வகைத் தண்டனையும் ஒரு வகை மருந்துதான்.

*பிளேட்டோ*

குற்றத்திற்குத் தண்டனை அளித்தால் குற்றவாளிக்கு மட்டும் கேவலம்; அளிக்காவிட்டால் சமூகம் முழுவதற்கும் கேவலம்.

*ஸி.ஸிம்மன்ஸ்*

☆ தண்டனை பெறுவோனைவிட, தண்டிப்பதில் பொது மக்களுக்கே அதிக அக்கறையுண்டு. ✍ கேட்டே

☆ நாம் தூக்கில் போடும் மனிதனைத் திருத்துவது நோக்கமன்று; அவன் மூலம் மற்றவர்களையே திருத்தி எச்சரிக்கை செய்கிறோம். ✍ மாண்டெயின்

☆ சிறைகள் பள்ளிக்கூடங்களுடன் சேர்ந்தவை; பள்ளிக்கூடங்கள் குறைந்தால், சிறைகளை அதிகமாக்கவேண்டியிருக்கும். ✍ ஹொரேஸ்மான்

## தத்துவங்கள்

☆ நம் தத்துவங்கள் நம்முடைய செயல்களுக்கு ஆதாரமானவை. ✍ ஸ்கெல்டன்

☆ உதிரத்தில் விஷம் கலந்தாலும், ஒருவருடைய தத்துவங்களில் அது கலந்துவிடக்கூடாது.

☆ தத்துவம் என்பது உண்மையின்மீதும்; நியாயத்தின்மீதும் கொள்ளும் ஆர்வம். ✍ ஹாஸ்லிட்

☆ தத்துவங்கள் என்றும் உள்ளவை; ஆனால், விசேட விதிகள் மட்டும் காலத்திற்குக் காலம் மாறிவரும். ✍ ஸீலீ

## தத்துவஞானம்

☆ ஒரு தத்துவ ஞானியாக இருப்பது நுணுக்கமான கருத்துகளைக் கொண்டிருப்பது மட்டும் அன்று; ஆனால், அறிவை அன்போடு போற்றி, அது காட்டும் வழியில் வாழ்வதாகும். ✍ தோரோ

☆ உண்மையான தத்துவ ஞானம் புதிதாக எதையும் கண்டு பிடிப்பதில்லை; அது இருப்பதையே உறுதி செய்து விளக்குகின்றது. ✍ கஸின்

உண்மையானதைக் கண்டுபிடிப்பதும், நன்மையானதைச் செய்வதும் தத்துவ ஞானத்தின் முக்கியமான இரண்டு நோக்கங்கள்.
*✍ வால்டேர்*

தத்துவ ஞானம் என்பது வாழ்க்கைக் கலை. *✍ புளூடார்க்*

உண்மையை ஆராயும் கலையே தத்துவஞானம். *✍ அரிஸ்டாட்டல்*

தத்துவ ஞானத்தின் கருத்து உண்மை; சமயத்தின் கருத்து வாழ்க்கை.
*✍ பீட்டர் பேய்ன்*

தத்துவ ஞானத்தை ஆராய்வது ஒருவன் தன்னை மரணத்திற்குத் தயாரித்துக்கொள்வதாகும்.
*✍ ஸிஸரோ*

தத்துவஞானியின் முதல் கடமை தற்பெருமையைக் கைவிடல்.
*✍ எபிக்டெடஸ்*

தத்துவ ஞானத்தை மேலெழுந்தால் போலக் கற்றால், அது ஐயங்களை எழுப்பும்; தீர்க்கமாக ஆராய்ந்தால் ஐயங்களை நீக்கும்.
*✍ பேக்கன்*

நீ தததுவ ஞானியாக இரு; ஆனால், உன் தத்துவ ஞானத்தின் இடையே மனிதனாகவும் இரு.
*✍ ஹியூம்*

## தருக்க நூல்

உண்மை கிணற்றுள் இருக்கிறது என்று முன்காலத்தில் சொல்வது வழக்கம்; தருக்க நூல் அந்தக் கிணற்றுள் அமைந்த படிக்கட்டு என்று நாம் சேர்த்துச் சொல்லலாம்.
*✍ வாட்ஸ்*

ஒழுக்கம் ஆன்மாவை நலமுறச் செய்யும். ஆனால், தருக்க நூல் அறிவின் ஆயுதசாலை. அதில் தாக்குவதற்கும் தற்காப்புக்கும் உரிய எல்லா ஆயுதங்களும் இருக்கும்.
*✍ ஃபுல்லர்*

# தவறுகள்

☆ எந்த மனிதனும் தவறு செய்யக்கூடும்; ஆனால், முட்டாளைத் தவிர வேறு எவனும் அதைத் தொடர்ந்து செய்ய மாட்டான்.

✍ *ஸிஸரோ*

☆ எந்த மனிதனும் பல தவறுகளையும், பெரிய தவறுகளையும் செய்யாமல் பெருமையுடையவனாகவோ, நல்லவனாகவோ ஆனதில்லை.

✍ *கிளாட்ஸ்டன்*

☆ குற்றமே செய்யாமல் இருப்பவர்கள் இறந்து போனவர்களே.

✍ *லேலண்ட்*

☆ விஞ்ஞானம் முழுவதிலும் தவறுதான் உண்மைக்கு முன்னால் செல்லும். உண்மைக்குப் பின்னால் கடைசியாக நிற்காமல், அது முன்னால் போவதே நலம்.

✍ *வால்போல்*

☆ கீழே விழாமல் இருத்தல் நமக்குப் பெரிய பெருமையன்று; ஆனால், விழுந்த பொழுதெல்லாம் எழுந்திருத்தலே பெருமை.

✍ *கன்ஃபூஷியஸ்*

☆ தெரியாமல் செய்த பிழைக்கு நாம் அனுதாபம் காட்ட வேண்டும், ஏளனம் செய்யக்கூடாது.

✍ *செஸ்டர்ஃபீல்ட்*

# தற்கொலை

☆ தானாகச் சாகத் துணிந்தவன் தைரியமுள்ளவன்; துக்கத்தைத் தாங்குபவனே வீரன்.

✍ *மாஸிங்கர்*

☆ தற்கொலை, கோழைத்தனத்திலிருந்து சில சமயங்களில் உண்டாகிறது; ஆனால், எப்பொழுதும் அல்ல; அநேகர் சாவதற்கு அஞ்சி உயிர் வாழ்கின்றனர்; அநேகர் வாழ்வதற்கு அஞ்சி உயிரை விடுகின்றனர்.

✍ *கோல்டன்*

## தற்புகழ்ச்சி

☆ ஒருவன் தன்னைப்பற்றி அதிக உயர்வாக எண்ணுவதும், மிகத் தாழ்வாக எண்ணுவதும், இரண்டுமே தவறுதான். ✍ கதே

☆ இருபது அறிஞர்களுள் ஒருவர்கூட தம்மைத் தாமே புகழ்ந்து பேச மாட்டார். ✍ ஷேக்ஸ்பியர்

☆ ஒருவன் புகழை மற்றவர் புகழ்ந்தால் இசைபோல் இருக்கும். ஆனால், அவன் தானே புகழ்ந்துகொண்டால் கேட்க வெறுப்பாயிருக்கும். ✍ ஸெனஃபோன்

## தன்னம்பிக்கை

☆ தாங்கள் வெல்லலாம் என்று நம்புகிறவர்களே வெற்றி அடைய முடியும். ✍ வர்கில்

☆ நானே செய்துகொள்ளக்கூடிய காரியம் எதையும் நான் மற்ற எவரையும் செய்யச் சொல்லக்கூடாது என்று நான் எப்பொழுதும் நம்பி வருகிறேன். ✍ மாண்டெஸ்கியு

☆ எவரை வேண்டுமானாலும் ஐயுறலாம், ஆனால், உன்னை நீயே ஐயுறக்கூடாது. ✍ போவீ

☆ தன்னுடைய இன்பத்திற்குத் தேவையான ஒவ்வொன்றையும், மற்றவர்கள் சார்பில்லாமல் தானே அமைத்துக்கொள்ளும் மனிதன், இன்பமாக வாழ்வதற்குத் தலைசிறந்த வழியைக் கடைப்பிடிக்கிறான். இவனே நிதானமான தேவையுள்ளவன்; ஆண்மையும் அறிவும் உள்ளவன். ✍ பிளேட்டோ

## தனிப் பெருமை

☆ தனிப் பெருமையுடையவர்களை எல்லா இடங்களிலும் தனியாக விட்டுவிட்டு மரியாதை செய்ய வேண்டும். அவர்களே நன்மைகளுக்கெல்லாம் வேராவர். ✍ ரிச்டெர்

☆ வெளியே உள்ளவைகளெல்லாம் ஒருவனைப் பயனற்றவன் என்று கூறுகின்றன. ஆனால், அவனுள்ளே உள்ளவைகளெல்லாம் அவனே எல்லாப் பயன்களுமுள்ளவன் என்று தூண்டுகின்றன. ✍ டௌடன்

## தன்மானம்

☆ உன்னை நீயே மதித்துக்கொள்ளும் அளவுக்கு நீ வந்துவிட்டால், அதற்குமேல் உனக்கு ஆசிரியர் தேவையில்லை. ✍ ஸெனீகா

☆ எல்லாவற்றிற்கும் மேலாக, உன்னை நீயே மதித்துக்கொள். ✍ பிதாகோரஸ்

☆ தன்மானமே ஒழுக்கத்திற்கு அடிப்படை. ✍ ஸர் ஜே. ஹெர்ஷெல்

☆ (சுயமரியாதையில்லாமல்) தன்னையே கைவிட்டுவிடுபவனிடம் வேறு எவன் சேர்ந்திருப்பான்? ✍ ஸர் பி. ஸின்னி

☆ தன்மானம், தன்னறிவு, தன்னடக்கம் - இம்மூன்றுமே வாழ்க்கையில் தலைசிறந்த ஆற்றலை அளிக்கக்கூடியவை. ✍ டென்னிஸன்

## தன்னடக்கம்

☆ அடக்கம் பிரகாசமான ஒளி. மனம் அறிவைப் பெறுவதற்கும், இதயம் உண்மையைப் பெறுவதற்கும் அது இரண்டையும் தயார் செய்கின்றது. ✍ குய்ஸாட்

இருவருள், ஒருவனுடைய சிறு தவறுகளை மற்றவர் மன்னிக்க முடியாவிட்டால், அவர்களுடைய நட்பு நீடித்திருக்க முடியாது.
✍ புரூயெர்

குறையே யில்லாத ஒரு நண்பனை ஒரு மனிதன் கண்டுபிடிக்க முடியாது. அவன் தானும் அப்படிப்பட்டவன் என்று மற்றொருவனிடம் சொல்லவும் கூடாது. ✍ ஓ. ஃபெல்ட்ஹாம்

நமக்காக நம குறறங்களைக் கண்டுபிடித்துச் சொல்லி அவைகளை மற்றவர்கள் அறிந்துவிடாதபடி மறைத்துக் கொள்பவனே சிறந்த நண்பன். ✍ ஸெனகா

நட்பு உடையக்கூடிய பொருள். மற்ற உடையக்கூடிய அரிய பொருளை எப்படிக் கையாளுவோமோ அத்தகைய கவனத்துடன் நட்பையும் கையாள வேண்டும். ✍ ஆர். எஸ். போர்ன்

புது நண்பர்களைப் பெற முடியாதவன். வாழ்வும் கலையை மறந்தவனாவான். ✍ மிச்லெ

தெளிந்த சிந்தனையும், அனுதாபமுமுள்ள ஒரு நண்பனைப் பெற்றவன் தன் அறிவாற்றலை இரட்டிப்பாக்கிக்கொண்டவனாவான். ✍ ராபர்ட் ஹால்

நட்பு நம் இன்பததைப் பெருக்கி, துன்பத்தைக் குறைக்கின்றது. அது இன்பத்தை இரட்டிப்பாக்குகின்றது. துன்பத்தைப் பகிர்ந்து கொள்கின்றது. ✍ அடிஸன்

பழைய நண்பர்களே சிறந்தவர்கள். ஜேம்ஸ் அரசர் தம் பழைய பூட்ஸுகளையே வேண்டுவார்; அவைகளே அவருடைய பாதங்களுக்கு மிகவும் பொருந்தியிருந்தவை. ✍ ஸெல்டன்

வறுமையிலும், வாழ்க்கையின் மற்ற துன்பங்களிலும் உண்மையான நண்பர்களே உறுதியான அடைக்கலமாவார். வாலிபர்களை அவர்கள் தவறுதலான பாதையிலிருந்து விலக்குவர்; வயோதிகர்களுக்கு அவர்களுடைய பலவீன

நிலையில் அவர்கள் ஆறுதலாகவும், உதவியாகவும் இருப்பர்; நடு வயதிலுள்ளவர்களை அவர்கள் வீரச் செயல்கள் புரியும்படி தூண்டுகிறார்கள். *✍ அரிஸ்டாட்டல்*

☆ மூன்று நண்பர்கள் இருந்து, அவர்களை இழந்தவனுக்கு நீ நான்காவது நண்பனாகச் சேர வேண்டாம். *✍ லவேட்டர்*

☆ வாழ்க்கைப் பாதையில் சென்றுகொண்டிருக்கையில் ஒரு மனிதன் புதிய நண்பர்களைப் பெறாவிட்டால், அவன் விரைவிலேயே தனியாக விடப்படுவான். *✍ ஜான்ஸன்*

☆ முன் கவனமுள்ள ஒரு நண்பனைப்போல வாழ்க்கையில் வேறு பாக்கியமில்லை. *✍ யூரிபிடிஸ்*

☆ ஆடவன் பெண்ணிடம் கொள்ளும் காதல் சாதாரணமானது, இயல்பானது, ஆரம்பத்தில் அது உணர்ச்சியால் ஏற்படுவது, ஒருவன் தானாகத் தேர்ந்து ஏற்படுத்திக்கொள்வதன்று; ஆனால் மனிதனுக்கு மனிதன் அமைத்துக்கொள்ளும் உண்மையான நட்பு எல்லையற்றது, நித்தியமானது. *✍ பிளேட்டோ*

☆ செல்வ நிலையைப் பார்க்கினும், வறுமையிலுள்ள நண்பனிடம் குறித்த நேரம் தவறாமல் நீ செல்லவேண்டும். *✍ கிலோ*

☆ நட்பு, மாலை நிழல்; அது வாழ்க்கைக் கதிரவன் அஸ்தமிக்கும் பொழுது வலிமையடையும். *✍ லாக்பான்டெயின்*

☆ பரிசுகள் கொடுத்து நண்பர்களைச் சேர்க்காதே; நீ கொடுப்பது நின்றால், அவர்கள் அன்பு செலுத்தாமல் நின்றுவிடுவர். *✍ ஃபுல்லர்*

☆ வாழ்க்கை பல நட்புறவுகளாகிய கோட்டைகளால் பாதுகாப்புப் பெற வேண்டும். அன்பு கொள்வதும், அன்பு பெறுவதும் வாழ்க்கையில் முதன்மையான இன்பங்கள். *✍ ஸிட்னி ஸ்மித்*

நம்மைப் பாராட்டி மதிப்பதைவிட, நம்மிடம் அதிகமாக அன்பு செலுத்தி, நமது பெரிய வேலையில் உதவி செய்பவனே நம் நண்பன்.

✍ சான்னிங்

ஒரு நண்பனை இழத்தல் ஓர் அங்கத்தை இழப்பது போன்றது. காலம் புண்ணின் வேதனையைக் குணப்படுத்திவிடும். ஆனால், அந்த நஷ்டத்தை ஈடு செய்ய முடியாது.

✍ கதே

## நம்பாமை

நம்பாதிருக்கும் உணர்ச்சி ஒரு பெரிய உள்ளத்திற்குக் கடைசியாகவே வரும்.

✍ ராஸின்

நம்பாமையைவிட அதிகத் தனிமையான தனிமை வேறு எது?

✍ ஜியார்ஜ் எலியட்

## நம்பிக்கை

நன்மைகள் ஏற்படுமென்று நம்பிக்கொண்டிருக்கும் நேரம் எல்லாம், வெற்றி பெறும் நேரத்தைவிட அதிக மகிழ்ச்சி தருவதாகும்.

✍ கோல்டுஸ்மித்

சிறு ஆன்மாவுக்குப் பெரிய நம்பிக்கை ஏற்படுவதில்லை.

✍ ஜே. எல். ஜோன்ஸ்

முறையாகச் சொல்வதானால், மனிதன் நம்பிக்கையையே ஆதாரமாய்க் கொண்டவன்; நம்பிக்கையைத் தவிர அவனுக்கு வேறு உடைமை கிடையாது; அவனுடைய இந்த உலகமே நிச்சயமாக, நம்பிக்கைக்கு ஏற்ற இடம்.

✍ கார்லைல்

ஏழைகளுக்கு நம்பிக்கையைத் தவிர வேறு மருந்தில்லை.

✍ ஷேக்ஸ்பியர்

உண்மையான நம்பிக்கை வேகமுள்ளது. குருவியைவிட அ
வேகமாய்ப் பறக்கும். அரசர்களை அது தேவர்களாக்கு
சாதாரணமானவர்களை அரசர்களாக்கும். ✍ ஷேக்ஸ்பி

விழிப்போடிருப்பவர்கள் காணும் கனவுதான் நம்பிக்கை.

✍ பிரை

நமக்குப் பிரியமானவைகளுள் நம்பிக்கையே மிகவும் நன்மை
தருவது. அடிக்கடி ஏமாற்றத்தில் முடியாமலிருந்தால் அ
வாழ்வை நீடிக்கச் செய்வது. நன்மை வருமென்று அது ஆ
அளித்துக்கொண்டேயிருக்கும். ✍ பேக்க

நம்பிக்கை ஒரு மயக்கம். எந்தக் கையாலும் ஓர் அலையையோ
ஒரு நிழலையோ பற்றிக்கொள்ள முடியாது. ✍ விக்டர் ஹியூகே

நம்மை மனிதராக்குபவை மாபெரும் நம்பிக்கைக

✍ டென்னிசன்

எல்லா விஷயங்களிலும் ஏக்கமுறுவதைவிட நம்பிக்
கொள்வதே நலம். ✍ கதே

நம்பிக்கையில்லாத இடத்தில் முயற்சியும் இருக்க முடியாது.

✍ ஜான்ஸ

நம்பிக்கையைப் பெருக்கக்கூடியது எதுவும தைரியத்தையு
உயர்த்தும். ✍ ஜான்ஸ

நான் நம்பிக்கையால் வாழ்கிறேன். இந்த உலகத்திற்கு வரு
எல்லோரும் அப்படித்தான் என்று நான் எண்ணுகிறேன்.

✍ ராபர்ட் பிரிட்ஜ

நம்பிக்கை மனிதன் சாகா வரம் பெற்றவன் என்பதை நிரூபி
கின்றது. நமது ஆன்மா, அழியக்கூடிய உடலிலிருந்து விடுதலை
பெறப் போராடி, தான் ஊழூழிக்காலம் நிலையானது என்பதை
நிரூபித்துக் காட்டுவதே நம்பிக்கையாகும். ✍ ஹென்றி மெல்வில்

நம்பிக்கையே வாழ்வு. வாழ்வே நம்பிக்கை. ✍ அடிலி ஷிர்

# நம்பிக்கை இழத்தல்

நம்பிக்கையிழப்பவன் தன் சிறு அளவுகோலைக்கொண்டு எல்லையற்ற சக்தியாகிய பரம்பொருளை அளந்து பார்ப்பவன்.

✍ ஸவுத்

இந்த உலகின் எதிர்பாராத நிகழ்ச்சிகளைக் கருதி, மனிதர்கள் எந்த நிலையிலும் நம்பிக்கையை முழுதும் இழக்க வேண்டிய தில்லை என்று நாம் கற்பிக்கப்பெற வேண்டும். ✍ ஃபீல்டிங்

நம்பிக்கையின்மை, நரகத்தின் ஈர வாடை, இன்பம், சுவர்க்கத்தின் தெளிவான ஒலியுள்ளது. ✍ டோன்

நம்பிக்கையிழத்தல் அச்சம், சோம்பல், ஆத்திரம் ஆகியவற்றின் குழந்தை; உற்சாகம், உறுதி, ஓரளவு நேர்மை ஆகியவற்றிலுள்ள குறைபாடே அதற்குக் காரணம்.

# நரகம்

இயற்கையின் மிகவும் ஏகாந்தமான இடங்களைக் காணும் பொழுது, ஆயிரக்கணக்கான ஆன்மிக உரைகளில் சொல்லப் பட்டிருப்பதுபோல், நரகமும் சுவர்க்கமும் இருப்பதாகவே தோன்றுகின்றன.

மனம் தன் இடத்தில் இருந்துகொண்டே சுவர்க்கத்தை நரகமாக்கிக்கொள்ளும், நரகத்தைச் சுவர்க்கமாக்கிக்கொள்ளும்.

✍ மில்டன்

மனிதர்கள் தங்கள் ஊக்கத்தைச் சரியான வழியில் திருப்பினால், நரகத்திற்குச் செல்வதற்காக உழைப்பதில் பாதி உழைத்தாலேயே, சுவர்க்கத்திற்குச் செல்ல முடியும். ✍ பென் ஜான்ஸன்

புண்ணியங்களுக்குச் சுவர்க்கம் ஒன்று இருக்குமானால் குற்றங்களுக்கு நரகம் ஒன்று இருந்தாக வேண்டும். ✍ காஸீன்

❖ குற்றமுள்ள மனச்சான்று பூமியிலுள்ள நரகம். அது தொலை யுள்ள நரகத்தைச் சுட்டிக் காட்டுகின்றது.

❖ உலகம் கரையும் பொழுது, சுவர்க்கமாயில்லாத இடமெல்லா நரகமாயிருக்கும். ✍ மார்லே

## நவீனங்கள்

❖ நவீனங்களும், புதுமைக் கதைகளும் எழுதுவதற்குக் காகிதப் பேனா, மை ஆகியவற்றுடன், அவைகளை உபயோகிக்கு உடல் வலிமையும் தவிர, வேறு எதுவும் தேவையில்லை.

✍ ஃபீல்டிங்

❖ நாவல்கள் இனிமையாயிருக்கின்றன. நல்ல இலக்கிய ருசியுள்ள எல்லா மக்களும் அவைகளை விரும்புகிறார்கள்.

❖ அநேகமாக எல்லாப் பெண்டிரும் புத்திசாலிகளான கடின இதயமுள்ள மனிதர்களும் நாவலை விரும்புகிறார்கள். நீதிபதி கள், பிஷப்புகள், அமைச்சர்கள், கணித நிபுணர்கள் ஆகியோ கள் நாவல் படிப்பதில் பிரசித்தமானவர்கள். சிறு பையன்களும் இனிய பெண்களும், அவர்களுடைய அன்பும் அருமையும் உள்ள தாய்மார்களும் அவைகளைப் படிக்கிறார்கள். ✍ தாக்கரே

❖ மனித இயற்கையின் பெருமையைக் காப்பதற்கும் உயர்த்துவதற்கும் கொஞ்சம் புதுமையான கதை கேடொன்றும் செய்துவிடாது. அது இல்லாவிடில், மனித இயற்கை இழிவான தீமையான, தாழ்ந்த விஷயங்களில் இறங்கிவிடக்கூடும்.

✍ ஸ்விஃப்ட்

❖ நாம் இன்புறவும், பொழுது போக்கவும் புத்தகங்கள் வேண்டும் அதே போல, அறிவு பெறவும், தொழில் செய்யவும் புத்தகங்கள் வேண்டும்; முதலாவது புத்தகங்கள், விரும்பிப் படிக்கக் கூடியவை, பின்னவை, பயனுள்ளவை, மனித உள்ளத்திற்கு இரண்டு வகையுமே தேவை ✍ பால்ஜாக்

☆ எல்லாவற்றிற்கும் மேலாக, உங்களுடைய மகன் புதுமைக் கதையான ஒரு நாவலைத் தீண்டிவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
*✍ கோல்டுஸ்மித்*

☆ இப்பொழுது வெளிவரும் நவீனங்களுள் முக்கால் பகுதி அறிவை நலிவுறச்செய்து, கற்பனையைக் குன்றச்செய்து உருசியையும் நடையையும் கொச்சையாக்கிவிடுகின்றன. வாழ்க்கையையும் மனித இயற்கையையும்பற்றி உண்மைக்கு மாறான கருத்துகளை அளிக்கின்றன; எல்லாவற்றிற்கும் மேலாக, அறிவு வளர்ச்சிக்குரிய அருமையான நேரத்தை வீணாக்குகின்றன.
*✍ ஜீ வெட்டர்ஸ்*

☆ சிறந்த முறையில் அமைந்த நாவல், நாகரிகத்தை வளர்ப்பதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட உயர்ந்த கருவிகளுள் ஒன்றாகும்.
*✍ ஸர் ஜே. ஹெர்ஸ்செல்*

☆ நாவல்கள் தங்கள் வாசகர்களைப் பாவம் செய்யத் தூண்டுவதில்லை. ஆனால், எப்படிச் செய்யவேண்டும் என்பதை மட்டும் அவர்களுக்குக் கற்பிக்கின்றன.
*✍ ஸிம்மர்மன்*

## நன்மை செய்தல்

☆ ஒரு மனிதனின் வாழ்க்கையில் நன்மை செய்தலே உண்மையான இன்பம் அளிக்கும் செயல்.
*✍ ஸர் பி.ஸிட்னி*

☆ துன்பத்தைக் கண்டு இரங்குதல் மனித இயல்பு. அதை நீக்குதல் தெய்விகமாகும்.
*✍ எமர்ஸன்*

☆ நாம் பிறருக்கு அளிக்கும் இன்பத்திலேயே நமக்கு மகிழ்ச்சி இருக்கின்றது.
*✍ டூமாஸ்*

☆ மனிதர்கள் தங்களுடன் சேர்ந்த மற்ற மனிதர்களுக்கு நன்மை செய்வதிலேயே தேவர்களைப் போல விளங்குகின்றனர். வேறு எதிலும் அவ்வாறு விளங்குவதில்லை.
*✍ ஸிஸரோ*

☆ நன்றி என்பது கடவுள் அருளிய நன்மையின் நினைவு மட்டும் அன்று; இதயம் கலந்த வணக்கமும் ஆகும். ✍ *என். பி.வில்லிஸ்*

☆ நான் நன்றியோடு இருக்க வேண்டும் என்று உறுதியாக எண்ணினால், அவ்வாறே இருப்பேன் ✍ *ஸெனீகா*

☆ உன்னதமான இதயங்களில் நன்றியறிதல் ஒரு பெரிய உணர்ச்சியின் ஆர்வத்தைக் கொண்டிருக்கும். ✍ *பாயின்ஸ்லாட்*

☆ பரம்பொருளைப்பற்றிய நன்றியுள்ள கருத்து, தானே ஒரு பிரார்த்தனையாகும் ✍ *லெஸ்னிஸின்*

ஆண்டவனே! எனக்கு உயிர் அளித்ததுபோல், நன்றி நிறைந்த இதயத்தையும் அளிப்பாயாக. ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ நன்றியறிதலை மிகச்சிறந்த பண்பாகப் போற்றுகிறார்கள், ஆனால், செயலில் அதை விட்டுவிடுகிறார்கள். பேச்சுக்கு அது அணி. உண்மை வாழ்க்கைக்கு அது அவதூறாகத் தோன்றுகிறது ✍ *ஃபோர்னே*

## நன்றி மறத்தல்

☆ நன்றி மறத்தலை விலங்குகள் மனிதனுக்கு விட்டுவிடுகின்றன. ✍ *கோல்டன்*

☆ மனிதனிடமுள்ள பொய், செருக்கு, பிதற்றல், குடிவெறி மற்றும் எந்தத் தீமையைக்காட்டிலும், நன்றி மறத்தலை நான் மிகவும் வெறுக்கிறேன். அத்தீமைகள் நம் உதிரத்தைப் பாழாக்குகின்றன. ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ நன்றியற்ற குழந்தையைப் பெற்றிருத்தல் நாகத்தின் பல்லைவிட எவ்வளவு கூர்மையானது. ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ நன்றி கெட்ட மனிதனைவிட ஒரு நன்றியுள்ள நாய் மேலானது. ✍ *ஸாஅதி*

நன்றியின்மை வீரத்திற்கு விடமாகும். ✍ ஸர்.பி.ஸிட்னி

## நாகரிகம்

நாகரிகம் என்பது மனித சமூகம் மேல் நோக்கிச் செல்வதற்கான போராட்டமாகும். அதில் பத்து இலட்சக்கணக்கானவர்கள் மிதித்து நசுக்கப்படுகிறார்கள், அவர்களின் உடல்களை மிதித்துக் கொண்டு ஆயிரக்கணக்கானவர்கள் மேலே செல்கின்றார்கள்.
✍ பால்ஃபோர்

சமூகங்கள், தனி நபர்களைப்போல் வாழ்கின்றன அல்லது மடிகின்றன; ஆனால், நாகரிகம் அழிய முடியாது. ✍ மாஜினி

## நாகரிக நடை

ஒழுக்கத்திற்கும், காலத்திற்கேற்ற நடைக்கும் மிக நெருங்கிய சம்பந்தம் உண்டு. நமது கற்பனையில்தான் நாம் அவற்றைப் பிரித்து எண்ணுகிறோம். ✍ ஸிஸரோ

ஒருவன் எங்கு தங்கியிருக்கிறானோ அந்த இடத்திலுள்ள நாகரிக நடையை மேற்கொள்ள வேண்டும் என்பது விதிகளுக்கெல்லாம் மேலான விதி, சட்டங்களுக்கெல்லாம் மேலான பொதுச் சட்டம்.
✍ மாண்டேயின்

நாகரிக நடை என்பது வெளித் தோற்றங்களுக்கு உரிய கலை. அது ஒருவருக்குக் காலத்திற்கேற்ற தோற்றத்தைப்பற்றி ஆசை உண்டாக்கும். ✍ சேபின்

ஒவ்வொரு தலைமுறையும் பழைய நாகரிக முறைகளை ஏளனம் செய்து சிரிக்கின்றது. ஆனால், புதிய முறைகளையே கண்டிப் பாகப் பின்பற்றுகின்றது. ✍ தோரே

☆ நாகரிகக் கோலம் ஒரு கொடுங்கோலனைப் போன்றது. அதன் பிடியிலிருந்து நம்மை எதுவும் விடுவிப்பது இல்லை. ✍ பாஸ்கல்

☆ தனித் தன்மையை விட்டுவிடுங்கள். பழைய முறைகளைப் பிடித்துக்கொண்டிருப்பதைவிட, புதிய முறையில் அதிகக் கர்வம் தோன்றாமலும் இருக்கலாம். அவை மூடர்கள் கண்டு பிடித்தவைகளாகவும் இருக்கலாம். அறிஞர்கள் அவைகளை மறுப்பதற்குப் பதிலாகப் பின்பற்றவும் செய்யலாம். ✍ ஜோபெர்ட்

☆ புதுமைத் தோற்றம் உள்ளது ஒவ்வொன்றுமே தீயது என்றோ, பழையது ஒவ்வொன்றும் நல்லது என்றோ கருதுவது முற்றிலும் தவறாகும். ✍ மோமெரி

☆ நாகரிகத் தோற்றம் எப்பொழுதும் புதுமையாகவே இருக்க வேண்டும். இல்லாவிட்டால், அது தெவிட்டிப் போய்விடும். ✍ லோவெல்

☆ நவநாகரிகத்தில் மிகவும் முன்னதாகச் சேரவும் வேண்டாம் அதிக நாள்வரை பின்தங்கி இருக்கவும் வேண்டாம். எந்தக் காலத்திலும் அமிதமான இரண்டு எல்லைகளின் பக்கம் நிற்க வேண்டாம். ✍ லவேட்டர்

## நாடகக் கொட்டகை

☆ நாடகங்கள் ஒழுக்கத்தைப் போதிக்கின்றன என்றும், நாடக அரங்கு வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி என்றும் கூறப்பட்ட போதிலும், இந்தக் கூற்றுகளுக்கு உண்மை யிலும் அனுபவத்திலும் ஆதாரம் இல்லை. ✍ ஸர். ஜான் ஹாகின்ஸ்

☆ நாடகத்தில் ஒவ்வொருவரும் எவ்வளவு நேர்மையாகவும் தாராளமாகவும் நடந்துகொள்கின்றனர் என்பது ஆச்சரியமா யிருக்கிறது. நியாயமான கட்டத்தில் நாம் அனைவரும் ஆமோதித்துக் கைகளைத் தட்டுகிறோம். தீயதை அனைவரும்

கண்டிக்கிறோம். இவற்றில் நமக்கு மன உணர்ச்சியைத் தவிர வேறு எதுவும் செலவில்லை. ✍ ஹாஸ்லிட்

☆ நாடக அரங்கில் வாழ்க்கையின் இன்ப ஒளியும், துக்கமும் காணப்பெறும் பொழுது, என்னுள் ஆழ்ந்த தீவிரமான சிந்தனைகள் நிறைந்துவிடுகின்றன. ✍ ஹென்றி சைல்ஸ்

☆ இயற்கை, பரம்பொருளின் செயல்களை நடித்துக் காட்டும், கலை கண்யமான உள்ளங்களுக்கு மட்டுமே ஒப்படைக்கப்பெற்றிருக்க வேண்டும் என்பது விரும்பத்தக்கது. ✍ கதே

## நாட்டுப்பற்று

☆ நாட்டுப்பற்றைவிட அதிக நெருககமான அன்பு வேறில்லை. ✍ பிளேட்டோ

☆ ஆண்டவருக்குரிய என் கடமைக்கு அடுத்தபடி, என் நாயகத்திற் குரிய அன்பும், மரியாதையும் முதன்மையானவை. ✍ டிதௌ

☆ நாட்டுப்புறத்து வீடுகளும், தோட்டங்களும் துரவுகளும் கழனிகளும், ஓடைகளும், காவுகளும் கிராமப்புறத்து விளை யாட்டுகளும், எல்லாம் ஒழுக்கம் நிறைந்தவை. நகரங்களிலோ, பல்கலைக் கழகங்களிலோ அந்தப் பண்பைக் காண்பதரிது. ✍ ஏ. பி. ஆல்காட்

☆ நாட்டுப்புறத்தில் வசிக்கும் மனிதர்கள், ஒழுக்கத்தைக் கற்பதுடன் சுதந்தர ஆசையையும் பெறுகின்றனர். ✍ மினாண்டர்

☆ நாட்டுப்புற வாழ்க்கை உடலுக்கு ஆரோக்கியமாயிருப்பதுடன் உள்ளத்திற்கும் உரமளிப்பதாகும். ✍ ரூஃபினி

☆ கடவுள், நாட்டுப்புறத்தை உண்டாக்கினார்; மனிதன், நகரத்தை உண்டாக்கினான். ✍ கௌப்பர்

# நாணயம்

☆ நாணயம் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி. அதில் மூச்சுக் காற்றுப் பட்டு, அது அழுக்கடைந்தால் துடைத்துவிடலாம்; ஆனால், அது உடைந்துபோனால், அதைப் பழுது பார்க்க முடியாது.

✍ வால்டர் ஸ்காட்

☆ ஒரு மனிதனின் நாணயத்தைப் பாதிக்கக்கூடிய மிகச்சிறிய விஷயங்களிலேகூடக் கவனமாயிருக்க வேண்டும். அதிகாலை ஐந்து மணிக்கும் இரவு ஒன்பது மணிக்கும் உன் சம்மட்டியின் ஓசையை உனக்குக் கடன் கொடுத்தவன் கேட்டால், அவன் உன் கடனை மேலும் ஆறு மாதத்திற்குக் கேளாமலிருப்பான். நீ வேலை செய்துகொண்டிருக்க வேண்டிய நேரத்தில், அவன் உன்னை மேடைப் பந்தாட்டத்திலே கண்டாலும், மதுக்கடையிலே உன் குரலைக் கேட்டாலும், மறு நாளே அவன் தன் கடனைக் கேட்டு ஆளனுப்புவான். ✍ ஃபிராங்க்லின்

☆ கடன் வாங்கியவர்களைவிடக் கடன் கொடுத்தவர்களுக்கு ஞாபகம் அதிகம். ✍ ஃபிராங்க்லின்

# நாத்திகம்

☆ நாத்திகம், வாழ்க்கையைக்காட்டிலும் இதயத்திலேயே உள்ளது.

✍ பேக்கன்

☆ நாததிகம் நம்பிக்கையின் மரணம்; ஆன்மாவின் தற்கொலை.

☆ நெருக்கடியான ஆபத்துக் காலத்திலும் ஒரு தெய்விக சக்தியை ஏற்றுக்கொள்ளாத பிடிவாதமுள்ளவர் சிலரே இருப்பர்.

✍ பிளேட்டோ

☆ நல்லொழுக்கமுள்ளவர்கள் கஷ்டமடைவதும், தீமை வெற்றி பெறுவதும் மனித சமூகத்தில் நாத்திகர்கள் பெருகக் காரணமாயுள்ளன. ✍ டிரைடன்

☆ நாத்திகம் ஒரு பிணி என்று பிளேட்டோ கூறுவது சரிதான்

✍ ஆர்டி ஹாகாக

☆ சொற்பமான தத்துவஞானம் மனிதர்களின் மனங்களை நாத்திகத்தின்பால் செலுத்தும்; ஆனால், ஆழ்ந்த ஞானம் ... மனங்களைச் சமயத்தின்பால் செலுத்தும். ✍ பேகன்

☆ உடற்கூறுபற்றிய நூலைப் பயில்பவன் எவனும் நாத்திகனா யிருக்க முடியாது. ✍ ஹெர்பெர்ட் ...

## நிகழ்காலம்

☆ இன்றே கடைசி நாள் என்ற எண்ணத்துடன் வாழ்வாயாக.

✍ பிஷப் ...

☆ ஒவ்வொரு நாளும் உன் குறிக்கோளை நிறைவேற்றி வருவாய்; ஒவ்வொரு மாலையும் ஓரளவு வேலை முடிந்திருப்பதைக் காண்பாய். ✍ ...

☆ கடமையும் இந்த நாளுமே நம்முடையவை; பயன்களும் எதிர் காலமும் கடவுளைச் சேர்ந்தவை. ✍ ஹொரேஸ் கிரீலி

☆ நிகழ்காலத்தில் என் கடமைகளைச் செய்து வந்தால், எதிர் காலத்தைக் கடவுள் கவனித்துக்கொள்வார். ✍ பெ...

## நிதானம்

☆ நீண்ட நாள் வாழ்வதற்கு நிதானமாக வாழ்தல் அவசியம்.

✍ ...

☆ செங்குத்தான பாறைகளில் ஏறுவதற்கு முதலில் மெதுவாக ஏற வேண்டியிருக்கும் ✍ ஷேக்ஸ்பியர்

## நிறைவுடைமை

☆ நிறைவுடைமை படிப்படியாக நீண்ட காலத்தில் அமைவது.

✍ வால்டேர்

☆ நிறைவு அசாதாரணமான விஷயங்களைச் செய்வதில் இல்லை, சாதாரண விஷயங்களை, அசாதாரண முறையில், நன்றாகச் செய்வதில் இருக்கின்றது. எதையும் அலட்சியம் செய்ய வேண்டாம்; இறைவனுக்காக எந்தச் சிறு செயலையும் செய்து முடிக்கலாம். ✍ ஏ. ஆர்னால்ட்

☆ ஒவ்வொரு விஷயத்தையும் நிறைவுடையதாகச் செய்ய முயற்சி செய்யவும், பெரும்பாலான விஷயங்களில் நிறைவடைவது கஷ்டமே ஆயினும் அதைக் குறிப்பாக வைத்துக்கொண்டு முயற்சி செய்பவர்கள் ஏறத்தாழ அதை எட்டிவிடுவார்கள்; மற்றவர்கள் சோம்பலினாலும், அயர்வினாலும், எடுத்துக் கொண்ட விஷயங்களை நிறைவேற்றுவது கஷ்டமென்று இடையில் கைவிட்டுவிடுவார்கள். ✍ செஸ்டர்ஃபீல்டு

## நினைவு

☆ எல்லா அறிவும் சேர்ந்து தங்கியிருப்பதே நினைவு. ✍ ஸிஸரோ

☆ நினைவுதான் நிதிகளின் காப்பாளன், அவனிடமிருந்து பணங்கள் பெறுவதற்கு முதலில் நாம் செல்வங்களைச் சேர்த்து வைக்க வேண்டும். ✍ ரோ

☆ நினைவு கவனத்தின் மகள், அறிவின் தாய். ✍ டப்பெர்

☆ மகிழ்ச்சியோடு நாம் கற்பது ஒரு போதும் மறக்கப்படுவதில்லை.

✍ ஏ. மெர்ஸியர்

☆ கவனந்தான் உண்மையான நினைவுக்குரிய பாதை ✍ ஜான்ஸன்

☆ ஒருவருக்கு முற்றும் பற்றில்லாத விஷயங்கள் நினைவில் இருப்பதில்லை. ✍ ஜி. மாக்டொனால்டு

# நினைவுச் சின்னங்கள்

ஒரு தலைமுறைக்கும் பின் தலைமுறைக்கும் தொடர்பு ஏற்படுத்தும் சங்கிலிகள் நினைவுச் சின்னங்கள். ✍ *ஜோபெர்ட்*

நினைவுச் சின்னம் அவசியமாயுள்ள ஒருவருக்கு அதை வைக்க வேண்டியதில்லை. ✍ *ஹாதார்ன்*

எவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் தேவையில்லையோ அவர்களே அவைகளுக்கு உரியவர்கள்; அவர்கள் மக்களின் உள்ளங்களிலும் நினைவுகளிலும் ஏற்கனவே நினைவுச் சின்னங்களை எழுப்பியுள்ளார்கள். ✍ *ஹாஸ்லிட்*

தலைசிறந்த மனிதனுக்கு மார்பளவுச் சிலை ஒன்றும், அவர் பெயருமே சின்னமாயிருக்கப் போதுமானவை. சிலையை விவரம் காட்டப் பெயர் மட்டும் போதாதென்றால், இரண்டுமே தொலையட்டும். ✍ *லாண்டர்*

# நீதி

நீதியாயிருங்கள். அஞ்சவேண்டாம்; உங்களுடைய நோக்கங்களெல்லாம் உங்கள் தேசத்திற்காகவும், உங்கள் கடவுளுக்காகவும், உண்மைக்காகவும் இருக்கட்டும். ✍ *ஷேக்ஸ்பியர்*

மனிதர்க்குத் தீங்கு செய்யாமலிருப்பது நீதி; அவர்க்குப் பிழை செய்யாதிருப்பது கௌரவத்திற்கு அழகு. ✍ *ஸிஸரோ*

நீதி நம் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் நமக்குரிய பாதுகாப்பாகும். இதற்குப் பணிந்து நடத்தலே நாம் அதற்காகக் கட்டும் தவணைக் கட்டணம். ✍ *பென்*

நீதியைப்பற்றிய உணர்ச்சி உலகில் மனிதசமூகம் முழுமைக்கும் பொதுவாக விளங்கும் அளவுக்கு இயற்கையாக உள்ளது; அது

எல்லாச் சட்டங்களையும், எல்லாக் கட்சிகளையும், எல்லாச் சமயங்களையும் கடந்து நிற்பதாகத் தோன்றுகின்றது.

✍ வால்டேர்

☆ கண்ணியமான மனிதன் எப்பொழுதும் நீதியாகவே சிந்தனை செய்கிறான்.

✍ ரூஸோ

☆ நீதிபதிகள் சாதுரியமாயிருப்பதைவிட அதிகம் கற்றவர்களாய் இருக்கவேண்டும். வழக்கை ஆராய்வதைவிட மரியாதையுள்ளவர்களாயும், தாமே நம்பி உறுதி செய்வதைவிட அதிக ஆலோசனை கேட்பவர்களாயும் இருக்க வேண்டும். ✍ அடிஸன்

☆ நீதிபதிகள் தங்கள் தீர்ப்புகளை நேர்மையானவைகளாகச் செய்ய வேண்டுமானால், அவர்கள் வாதியையோ பிரதிவாதியையோ, வக்கீலையோ பார்க்காமல் வழக்கை மட்டுமே கவனிக்க வேண்டும்.

✍ பி.லிவிங்ஸ்டன்

☆ கட்சி, நட்பு, உறவு ஆகியவற்றையெல்லாம் நீதி ஒதுக்கி விடுகின்றது.' அதனாலேயே அது (நீதி தேவதை) குருடாயிருப்பதாகச் சித்திரிக்கப்பெறுகின்றது.

✍ அடிஸன்

☆ ஒரே மனிதனுடைய வார்த்தைகள் எவனுடைய வார்த்தைகளாகவும் ஆகமாட்டா; நாம் இரு கட்சிகளையும் அமைதியாகக் கேட்க வேண்டும்.

✍ கதே

☆ நல்ல அரசாங்கத்திற்கெல்லாம் பொதுவானது நீதி; பாரபட்சமின்மையே நீதியின் உயிர்.

☆ ஞானமில்லாமல் நீதி செலுத்துவது இயலாது.

☆ பலவிதமான சட்டங்களை இயற்றி நீதியைக் கட்டுப்படுத்துவதும், நீதிபதிகளையே அதிகம் நம்பி விட்டுவிடுவதும், ஒன்றுக்கொன்று எதிர்ப்பக்கங்களிலுள்ள இரண்டு பாறைகள்; இந்தப் பாறைகளின்மீதே சட்டங்களியற்றுவோரின் அறிவு மோதி உடைந்துவிடுகின்றது. முதல் விஷயத்தில், போர்வைகளால்

மூச்சுத் திணறி இறந்து போன சக்கரவர்த்தியை உதாரணமாய்க் கூறலாம்; குளிரைக் காப்பதற்காகவே அவருக்குப் போர்வைகள் போடப்பெற்றிருந்தன; மற்ற விஷயத்தில், எதிரிகளிடம் தன் கோட்டைகளை விட்டுவிட்ட நகரத்தை உதாரணமாகக் கூறலாம். அந்நகர மக்கள் தாங்கள் தைரியத்தை மட்டுமே நம்பி யிருப்பதாகக் காட்டிக்கொள்ளவே அப்படிச் செய்தார்களாம்.

✍ கோல்டுஸ்மித்

☆ சுதந்தரமும் நீதியும் எப்பொழுதெல்லாம் பிரிந்து செல்ல ஏற்படுகின்றதோ, அப்பொழுதெல்லாம் இரண்டுக்கும் ஆபத்து என்பது என் அபிப்பிராயம். ✍ பர்க்

☆ தாமதமாக அளிக்கும் நீதி, இல்லை என்று மறுக்கப்பெற்ற நீதியாகும். ✍ கிளாட்ஸ்டன்

☆ நீதி மெதுவாக அசைந்து ஆடிக்கொண்டு செல்வதால், அதன் தாமதத்தால், குற்றம் பல சமயங்களில் தப்பி ஓடிவிடுகின்றது. அதனுடைய மந்தமான, சந்தேகமான போக்கு பலரைக் கண்ணீர் பெருகும்படி செய்துவிடுகின்றது. ✍ கார்னீலி

☆ நீதிக்குப் பொருத்தமாயுள்ளது சட்டங்களுக்கும் பொருத்தமா யிருக்க வேண்டும். ✍ சாக்ரடீஸ்

☆ கடவுளுடைய திரிகை மெதுவாகத்தான் திரிக்கும். ஆனால், நிச்சயமாகத் திரிக்கும். ✍ ஹெர்பெர்ட்

☆ நீதியாயிருக்கக் கற்றுக்கொள்ளாத ஒரு ஜன சமூகம் எப்படிச் சுதந்தரமாயிருக்க முடியும்? ✍ ஸீயெஸ்

☆ நீதியாக மட்டும் இருப்பவன் கொடுமையானவன். எல்லோரும் நீதியான முறையில் (கண்டிப்பாக) நடத்தப்பட்டால், பூமியிலே எவர் வாழ முடியும்? ✍ பைரன்

## நீதிக் கதைகள்

☆ நீதிக் கதைகள், போதனை செய்தவன் கடுமையைக் குறைத்து விடுகின்றன; ஆனால், அதை மறைத்து விருப்பமான உருவத்தில் போதித்துவிடுகின்றன. ✍ அடிஸன்

## நீதி வாக்கியங்கள்

★ நமது வாழ்க்கையை முறைப்படுத்திக்கொள்ளவும், உணர்ச்சிகளை நிதானப்படுத்திக்கொள்ளவும் நீதி வாக்கியங்களை விதித்து அருளியவன், இப்பொழுது மட்டுமன்றி, பின்வரும் தலைமுறைகளிலும் மனித இயற்கைக்குப் பெரிய நன்மையைச் செய்தவனாவான். ✍ ஸெனீகா

★ செய்வதற்கு எது நல்லது என்று தெரிந்துகொள்வதைப் போலச் செய்வதும் அவ்வளவு எளிதாக இருந்தால், வீட்டுக் கோயில்களெல்லாம் பெரிய மாதா கோயில்களாகிவிடும். ஏழை மனிதர்களின் குடிசைகளெல்லாம் அரசர்களின் அரண்மனைகளாகிவிடும். ஒரு சமய குரு தாமே தம் உபதேசங்களின்படி நடந்தால் நல்லதுதான். செய்வதற்கு எது நல்லது என்பதை நான் இருபது பேர்களுக்கு எளிதாகக் கற்றுக்கொடுக்க முடியும். ஆனால், அந்த இருபது பேர்களுள் ஒருவனாக இருந்து என் உபதேசங்களின்படி நடப்பதுதான் அதைவிடக் கடினம். ✍ ஷேக்ஸ்பியர்

★ நல்ல உபதேசங்களைச் செய்பவர் அவைகளின்படி நடக்காவிட்டால், அவர் வெளி வேடக்காரரென்று பொதுவாகக் கூறுவது வழக்கம்; இது அநீதியாகக் குற்றம் சாட்டுவதாகும். அவர் தம் உணர்ச்சிகளை அடக்கிக்கொள்வதன் நன்மைகளை உண்மையிலேயே நம்பியிருப்பார். ஆனால், அதில் அந்தச் சமயம் அவர் வெற்றி பெறாமலிருக்கலாம்; ஒரு கடல்யாத்திரை

அல்லது பிரயாணம்பற்றி ஒரு மனிதன் நம்பி, தான் போவதற்குத் தைரியமோ ஊக்கமோ இல்லாமல், மற்றவர்கள் போகும்படி உற்சாகப்படுத்தக்கூடும். ✍ ஜான்ஸன்

☆ நீதி மொழிகளைக்காட்டிலும் பிறர் காட்டும் மாதிரியையே பலர் பின்பற்றுகின்றனர். ஆனால், மாதிரியைக்காட்டிலும், நேரடியாக நீதிமொழிகளிடமிருந்தே கற்றுக்கொள்வதுதான் மேலானது.

✍ வார்விக்

## நூலாசிரியர்

☆ படிப்பவர்களைக் கவரக்கூடிய ஆசிரியரின் இரண்டு ஆற்றல்களாவன: புதிய விஷயங்களைப் பழக்கப்படுத்துதல், பழைய விஷயங்களைப் புதுமையுடன் அளித்தல். ✍ ஜான்ஸன்

☆ நன்றாக எழுதுதல் என்பது நன்றாகச் சிந்தித்தல், நன்றாக உணர்தல், நன்றாகத் தெரிவித்தலாகும்; அதாவது, அறிவு, உயிர்த் துடிப்பு, நல்ல சுவைத்திறன் ஆகியவை ஒருங்கே வேண்டும்.

✍ பஃப்பன்

☆ ஆசிரியராக விரும்புபவன் முதலில் மாணவனாக இருக்க வேண்டும். ✍ டிரைடன்

☆ தந்தையார், தாயார் எவரும் தம் குழந்தைகள் விகாரமாக இருப்பதாக எண்ணுவதில்லை; தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் இந்தக் குணம், உள்ளத்தால் படைக்கும் படைப்புகளில் மேலும் அதிகமாயிருக்கும். ✍ செர்வான்டிஸ்

☆ மிகவும் சுயமாக எழுதும் ஆசிரியர்கள் அவ்வாறு சுயமாகப் படைப்பவர்களாக விளங்குவதன் காரணம், அவர்கள் புதிய விஷயத்தைக் கூறுகின்றனர் என்பதன்று, அவர்கள் தாம் சொல்ல விரும்பும் விஷயங்களை முன்பு எவரும் சொல்லியிராதவை போல எடுத்தளிப்பதே காரணம். ✍ கதே

☆ ஒரு நாட்டின் முக்கியமான பெருமை அதன் ஆசிரியர்களிடமிருந்தே வருவதாக ஜான்ஸன் கூறுகிறார். ஆனால், அவர்கள் ஞானக் களஞ்சியங்களை அளிக்கும் பொழுதுதான் இந்த உரை பொருந்தும். அவர்கள் ஒழுக்கத்தைப் போதிக்காவிடில், அவர்கள் புகழுக்கு உரியவர்களாயில்லாது, கண்டனத்திற்கே அதிகமாக உரியவர்கள். ✍ *ஜேன் போர்ட்டர்*

☆ எழுத்தில் பதியத்தக்க புகழுள்ள காரியங்களைச் செய்வதற்கு அடுத்தபடியாக, ஒரு மனிதனுக்குப் பெருமையோ இன்பமோ அளிக்கும் விஷயம் படிக்கத்தக்கவைகளை எழுதுவதாகும். ✍ *செஸ்டர்ஃபீல்*

☆ நூலாசிரியராக விளங்குவதில் மூன்று கஷ்டங்கள் இருக்கின்றன; வெளியிடத்தக்க விஷயம் எதையாவது எழுதுதல், அதை வெளியிடக் கண்ணியமான மனிதரைக் கண்டுபிடித்தல், அதைப் படிக்கப் புத்திசாலிகளான வாசகர்களைப் பெறுதல். ✍ *கோல்டன்*

☆ ஆசிரியராவதற்கு அறிவுத்திறன் மட்டும் போதாது; நூலுக்குப் பின்னால் ஒரு மனிதன் இருக்கவேண்டும். ✍ *எமர்ஸன்*

☆ பெரிய ஆசிரியர் தம் வாசகர்களுக்கு நண்பராகவும் நன்மை செய்பவராகவும் விளங்குகிறார். ✍ *மெகாலே*

☆ ஆசிரியர்கள் உயிரோடிருக்கும் பொழுது அவர்களை ஏளனம் செய்து கண்டிப்பார்கள்; இறந்த பிறகு புகழ்வார்கள். ✍ *வால்டேர்*

☆ ஒவ்வோர் ஆசிரியரும் தாம் விரும்பாவிடினும் தம் நூல்களில் தம்மை ஓரளவு சித்திரிக்கிறார். ✍ *கதே*

## நூல் நிலையங்கள்

☆ இந்தக் காலத்தில் உண்மையான பல்கலைக் கழகம் என்பது நூல்கள் நிறைந்த நூல் நிலையமே. ✍ *கார்லைல்*

ஒரு பெரிய நூல் நிலையத்தில் மானிட சமுதாயத்தின் நாட் குறிப்பேடு அமைந்துள்ளது. ✍ ஜீ. டாஸன்

நல்ல நண்பர்களைத் தேடிக்கொள்வதற்கு அடுத்தபடியாக, நல்ல நூல்களைத் தேடிக்கொள்ளல் இனிது. ✍ கோல்டன்

பெரிய நூல் நிலையம், படிப்பவன் சிந்தனையைப் பல விதங்களில் திருப்பிவிடக்கூடும்; பல ஆசிரியர்களின் நூல்களைப் பார்த்துக்கொண்டு சுற்றுவதைவிடச், சில ஆசிரியர் களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு பார்த்தல் நலம். ✍ ஸெனீகா

## நெருக்கமான பழக்கம்

நெருக்கமான பழக்கம் முதலில் அன்பை உண்டாக்கும்; முடிவில் வெறுப்பை உண்டாக்கும். ✍ ஃபுல்லர்

வேலைக்காரர்களுடன் அதிகமாகப் பழக வேண்டாம்; அடிக்கடி பார்வையிலுள்ள பொருள்கள் எல்லாம் மதிப்பில் குறையும். ✍ டிரைடன்

நெருக்கமான பழக்கம் வெறுப்பை உண்டாக்காவிட்டாலும், இருக்கிற மதிப்பின் கூர்மையை மழுக்கிவிடும். ✍ ஹாஸ்லிட்

## நேரம்

நேரந்தான் நமக்கு மிக அவசியமான தேவை. ஆனால், அந்தோ! அதைத்தான் நாம் மிகவும் அதிகமாக வீணாக்குகிறோம். ✍ பென்

நேரத்தை முறையாக வகுத்துக்கொள்வது மனத்தில் சிந்தனைகள் முறையாக அமைந்திருப்பதைக் காட்டும். ✍ பிட்மன்

ஒவ்வொரு தங்கச் சரிகையின் இழையில் எவ்வளவு மதிப்பு உள்ளதோ, அவ்வளவு மதிப்புள்ளது ஒவ்வொரு நிமிட நேரமும். ✍ ஜே. மேஸன்

- தக்க சமயத்தைத் தேடிக்கொள்வது நேரத்தைக் காத்துக் கொள்வதாகும். *✍ பேக்கன்*
- கடவுளுக்கு அடுத்தபடியாக நேரத்தை மதித்தல் ஒழுக்க முறையில் உயர்ந்த விதியாகும். *✍ லவேட்டர்*
- மணிகளுக்குச் சிறகுகள் உண்டு. அவை காலத்தை ஏற்படுத்தியவரிடம் சென்று, நாம் அவைகளை எப்படி உபயோகித்தோம் என்பதைத் தெரிவிக்கும். *✍ மில்டன்*
- நாம் நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தினால், நமக்குப் போதிய நேரம் இருக்கத்தான் செய்யும். *✍ கதே*

## நேரம் தவறாமை

- நேரம் தவறுதல் பண்பில் குறைந்ததாகும். *✍ மேஸன்*
- தொழிலில் முக்கியமானது நேரம் தவறாமை. அது இல்லாமல் எந்த முறையும் பயனற்றது. *✍ செஸில்*
- நான் எனக்குக் குறித்த நேரத்திற்குக் கால் மணி நேரம் முந்தியே சென்றுவிடுவது வழக்கம். அதுதான் என்னை மனிதனாக்கி யுள்ளது. *✍ நெல்ஸன் பிரபு*
- மூன்று மணி நேரம் முன்கூட்டிச் சென்றாலும் செல்லலாம். ஒரு நிமிடம் பின்தங்கிவிடக்கூடாது. *✍ ஷேக்ஸ்பியர்*
- ஓடிச் செல்வதால் பயனில்லை; முன் கூட்டியே புறப்பட்டிருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம். *✍ ஃபாண்டெயின்*
- வாஷிங்டனுடைய காரியதரிசி ஒருவர் காலதாமதமாக வந்ததற்கு அவரிடம் காரணம் கூறுகையில், தமது கைக்கடிகாரம் மிகவும் மெதுவாகப் போவதாகத் தெரிவித்தார். அதற்கு வாஷிங்டன், 'நீர் புதுக்கடிகாரம் வாங்க வேண்டும் அல்லது நான் புதுக் காரியதரிசியை நியமிக்க வேண்டும்,' என்று கூறினார்.

## நேர்மை

☆ உன்னை யோக்கியமான மனிதனாகச் செய்துகொள்; பின்னர் உலகில் ஓர் அயோக்கியன் குறைந்தான் என்பது நிச்சயம்.

✍ கார்லைல்

☆ கடவுள் படைப்பில் நேர்மையான மனிதனே தலைசிறந்தவன்.

✍ போப்

☆ நேர்மையும் நல்லியற்கையும் இல்லாதவனுக்கு, மற்ற அறிவெல்லாம் தீமையாகும். ✍ மாண்டெயின்

☆ கண்ணியமான மனிதனே இல்லையென்று எவன் சொல்லுகிறானோ, அவன் அயோக்கியன். ✍ பெர்க்லி

☆ தீய வழியில் இலாபம் அடைய எண்ணுவது நஷ்டத்திற்கு ஆரம்பம். ✍ டெமாகிரிடஸ்

☆ கண்ணியமான புகழுக்கு எது வழியென்று சாக்ரடீஸிடம் கேட்ட பொழுது, அவர் கூறியதாவது; 'நீ வெளியே எப்படித் தோன்ற விரும்புகிறாயோ அப்படி ஆகிவிடப் பயிற்சிசெய்.'

## நோக்கங்கள்

☆ உடலுக்கு ஆன்மா எப்படியோ, மரத்திற்கு வேர் எப்படியோ, அப்படிச் செயல்களுக்குச் சரியான நோக்கங்கள் இன்றியமையாதவை. ✍ ஸிம்மன்ஸ்

☆ மனிதனுடைய செயல்களிலும், இயற்கையின் வேலைகளிலும், நோக்கமே முக்கியமாக ஆராயத்தக்கது. ✍ கதே

☆ நோக்கங்கள் செயல்களைவிட மேலானவை. மனிதர்கள் குற்றத்தினுள் தாமாகச் சிக்கிவிடுகிறார்கள். தீமைகளை, அவர்கள் முன்னால் சிந்திப்பதைக்காட்டிலும், அதிகமாய்ச் செய்துவிடுகிறார்கள்; நன்மையில், அவர்கள் செய்வதைவிட, அதிகமாய்ச் சிந்திக்கிறார்கள். ✍ போவீ

☆ மனிதனுடைய மனத்தை இயக்கிவைப்பவை நன்மையில் ஆசையும் தீயதில் அச்சமும். ✍ ஜான்ஸன்

☆ கடவுள் தூபத்தையும் காணிக்கையையும் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், வணங்குபவனின் அந்தரங்க சுத்தியையும் பக்தியையுமே ஏற்றுக்கொள்கிறார். ✍ ஸெனீகா

## நோய்

☆ நோய், இளமையில் தோன்றும் ஒரு வகை முதுமை; உலக வாழ்க்கையில் நமது நம்பிக்கை குறைவதற்கு அது கற்பிக் கின்றது. ✍ போப்

☆ இயற்கையின் விதிகளை மீறுவதற்கு, அது அளிக்கும் தண்டனையே நோய் ✍ ஸிம்மன்ஸ்

☆ பிணியிருக்கும் பொழுதுதான் நாம் அனுதாபத்தை அதிகமாக வேண்டுகிறோம். நாம் ஒருவருக்கொருவர் எவ்வளவு சார்ந்திருக்கிறோம் என்பதையும், அத்தியாவசியமான தேவைகளுக்குக்கூட நாம் பிறரை எதிர்பார்க்கிறோம் என்பதையும் உணர்கிறோம். இவ்வாறு பிணி, வாழ்க்கையின் பிரத்தியட்ச உண்மைகளைக் காணும்படி நம் கண்களைத் திறந்து வைக்கின்றது. அது மறைமுகமான ஒரு நன்மையாகும். ✍ எச். பல்லோ

## பகுத்தறிவு

☆ மனிதன் பகுத்தறிவைக்காட்டிலும், துடிப்பு, உணர்ச்சி, வேகம், செயல் ஆகியவற்றால் அதிகமாக உந்தப்பெறுகிறான், உயிருள்ள இனங்களில் உலகத்தில் பகுத்தறிவு மிகவும் கடைசியாகத்தான் வேலை செய்யத் தொடங்கியிருக்கிறது. அவைகளுள் பெரும்பாலானவை அதன் உதவியில்லாமலே தினசரி வாழ்க்கையில் நன்றாகவே இருக்கின்றன. ✍ ஜேம்ஸ் டி ஆடம்ஸ்

☆ ஆராயாமல் ஒரு மனிதன் பற்றிக்கொண்டிருக்கும் ஒரு விஷயத்தை அவனை விட்டுவிடும்படி செய்ய முயலுதல் பயனற்ற வேலையாகும். ✍ ஸ்விங்ஃப்ட்

☆ ஆராய்ச்சி செய்ய மறுப்பவன், வெறியன்; ஆராய்ச்சி செய்ய முடியாதவன், மூடன்; ஆராய்ச்சி செய்ய அஞ்சுபவன், அடிமை.
*✍ ஸர் டபுள்யு. டிரம்பண்ட்*

☆ தெளிவான, போதுமான ஆராய்ச்சியறிவு சிலருக்குத்தான் இருக்கிறது. இந்தச் சிலர் அமைதியாய் இருந்துகொண்டு தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி வருகிறார்கள். *✍ கதே*

☆ அதிக வறுமையும், அதிகச் செல்வமும் ஆராய்ச்சி அறிவுக்குச் செவி கொடுக்கமாட்டா. *✍ பீல்டிங்*

☆ அறிவாளர்களுக்குப் பகுத்தறிவு கற்பிக்கின்றது; குறைந்த அறிவுள்ளவர்களுக்கு அனுபவம் கற்பிக்கின்றது; மிருகங்களுக்கு இயற்கை கற்பிக்கின்றது. *✍ ஸிஸரோ*

☆ உணர்ச்சிகளாலன்றிப் பகுத்தறிவால் உந்தப்பெறுபவன் தேவர்களுக்கு அடுத்தபடியாயுள்ளவன்.

☆ எல்லைக்குட்பட்டது, எல்லையேயில்லாததை எப்படிக் கண்டு பிடித்துக்கொள்ள முடியும்? *✍ டிரைடன்*

☆ நாம் இருக்கிறதைக் கொண்டுதான் ஆராய முடியும்; பிரத்தியட்ச உண்மைகளையே நாம் ஆராய முடியும், நடக்கக் கூடியவைகளைக் கொண்டு ஆராய முடியாது. *✍ போலிங்புரோக்*

## பகைவர்கள்

☆ உனக்கு ஐம்பது நண்பர்கள் இருக்கிறார்களா? அவர்கள் போதமாட்டார்கள் உனக்கு ஒரு பகைவன் இருக்கிறானா? அவனே அதிகம்! *✍ இத்தாலியப் பழமொழி*

☆ (பகைவருள்) சிறு பகைவன் என்பது கிடையாது. *✍ ஃபிராங்க்லின்*

☆ ஒரு பகைவனை வெல்வதைக்காட்டிலும் அவனைத் திருப்புவது மேல். வெற்றி அவனுடைய விடத்தைப் போக்கலாம். ஆனால்

அவனைத் திருத்தி வசப்படுத்திக்கொள்வதில், அவனுடைய உள்ள உறுதியே போய்விடும். ✍ ஃபெல்ட்ஹாம்

☆ உன் எதிரிகளைக் கவனி. அவர்களே உன் குறைகளை முதலில் கண்டிப்பவர்கள். ✍ ஆன்டிஸ்கினிஸ்

☆ நாம் சந்தேகிக்காத எதிரியே மிகவும் அபாயகரமானவன். ✍ ரோஜாஸ்

☆ நம்மைவிட நம் எதிரிகள் பெற்றுள்ள அதிக நல்ல குணங்களை நாம் கவனித்து வரவேண்டும். குறைகளை நீக்கிக்கொண்டு, அவர்களுடைய நல்ல குணங்களை நாம் அவர்களிலும் அதிகமாகப் பெறவேண்டும். ✍ புளூடார்க்

☆ அறிஞரே! உமது பகைவர்களுடன் உறவாடிக்கொண்டிருக்கும் அந்த நண்பரைக் கை கழுவிவிடும். ✍ ஸாஅதி

## பகை வன்மம்

☆ பகை வன்மம் தான் தயாரிக்கும் விடத்தில் பாதியைத் தானே குடித்துவிடும். ✍ செனீகா

☆ வன்மமுள்ள இடத்தில் எந்தப் பெரிய நன்மையும் சிறிதாகிவிடும். ✍ செனீகா

## பக்தி

☆ பக்தியுடன் முழங்கால் பணிந்தால், எல்லாம் புனிதமாகிவிடும். ✍ ஹோம்ஸ்

☆ ஒன்றுமே படித்தறியாதவன் பக்தி கொண்டிருந்தால், அடிக்கடி அதை உபயோகித்து வந்தால், உள்ளத்திலே ஒரு வகை மேன்மையை அடைவான். பெருமையுள்ள ஓர் எளிமை அவனிடம் ஏற்படும். அது அவனை மேலே உயர்த்துகின்றது.

பக்தியால், தாழ்ந்த நிலையிலுள்ளவன் அற்பப் புத்தியுள்ளவனாக இருக்கமாட்டான். உயர்ந்த நிலையிலுள்ளவன் செருக் கடையவும் மாட்டான். ✍ ஜான்ஸன்

☆ நாம் பக்தி சம்பந்தமான காரியங்களின் நடுவில் உறங்கிவிட்டால், சயித்தான் நம்மைத் தாலாட்டுவான். ✍ பிஷப் ஹால்

## படித்தல்

☆ படிப்பதைப் போல் செலவு குறைந்த பொழுதுபோக்கு வேறில்லை. அதைப்போல் இன்பமளிப்பதும் வேறில்லை. ✍ மான்டெயின்

☆ சிலவற்றில் முழுமையும் படித்தலும், ஒவ்வொன்றிலும் கொஞ்சம் படித்தலும் நலம். ✍ பிரோகாஸ்

☆ சிறு வயது முதலே படிப்பில் ஆர்வம் கொண்டுள்ளவன் இன்பமானவன். ✍ ரூஃபஸ் சோட்

☆ படிப்பு இன்பமாகும், அணியாகும், திறமையாகும். ✍ பேக்கன்

☆ படிப்பதில் ஆசை கொள்ளும் பழக்கம் வேண்டும்; ஒவ்வொரு புத்தகமாகத் தாவிக்கொண்டிருக்கக்கூடாது. பெருந்தீனி உண்பவனைப் போலப் படிப்பில் இருக்கக்கூடாது; முறையாக, சிரத்தையாக, சிந்தனையோடு, படிக்கும் விஷயங்களைப் பரிசீலனை செய்துகொண்டு, முக்கியமான விஷயங்களை நினைவிலேற்றிக்கொண்டு படிக்க வேண்டும். இவ்வாறு படித்தால்தான் நீ அறிந்துள்ள விஷயங்கள் விரிவானவை களாகவும், துல்லியமானவையாகவும், பயனுள்ளவையாகவும் விளங்கும். ✍ டபுள்யு. வர்ட்

☆ ஒரு குழந்தை தான் படிப்பதையெல்லாம் புரிந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கும். அறிவாளர்கள் எவ்வளவு மூடர்களாயிருக்கிறார்கள். ✍ ஸதே

☆ நீ படிப்பதைப்பற்றி, ஒவ்வொரு பகுதியையும் சிந்தனை செய்து பார். ✍ *காலெரிட்ஜ்*

☆ சிறந்தவர்களோடு மட்டும் நம் மனம் உறவாடுவதற்குச் சிறந்த புத்தகங்களையே தேர்ந்துகொள்ள வேண்டும். ✍ *ஸிட்னி ஸ்மித்*

☆ அவன் தான் படித்ததில் ஒவ்வொன்றிலிருந்தும் அவன் மதிப்புயர்ந்த விஷயம் எதையாவது எடுத்துக்கொண்டான். ✍ *பிளினி*

☆ ஒரு நூல் முழுவதையும் வேகமாகப் படிப்பதைவிட ஒரு பக்கத்தை நன்றாக உணர்ந்துகொள்வது மேலாகும். ✍ *மெகாலே*

☆ ஒரு புத்தகத்தைத் தொடங்கிவிட்டதற்காக மட்டும் அதை முழுதும் படிக்க வேண்டியதில்லை. ✍ *விதர்ஸ்பூன்*

## பணம்

☆ கையிலிருக்கும் பணம் அலாவுதீனுடைய விளக்கைப் போன்றது. ✍ *பைரன்*

☆ பணம் சமூகத்தின் ஜீவாதாரமான உதிரம். ✍ *ஸ்விஃப்ட்*

☆ பணத்தைப் பயன்படுத்துவதுதான் அதைப் பெற்றிருப்பதன் பயன். ✍ *ஃபிராங்க்லின்*

☆ பணம் உரத்தைப் போன்றது. அதை நன்றாகச் சிதறுவதைத் தவிர அதனால் வேறு பயனில்லை. ✍ *பேக்கன்*

☆ முடிந்த அளவுக்குத் தேடு. முடிந்த அளவுக்குச் சேமித்துவை. முடிந்த அளவுக்குச் செலவழி. ✍ *ஜே. வெஸ்லி*

☆ பணம், அடித்தளம் தெரியாத ஒரு கடல். அதில் கௌரவம், மனச்சாட்சி, உண்மை ஆகியவையெல்லாம் மூழ்கிவிடக்கூடும். ✍ *கோஸ்லே*

☆ ஆன்மாவுக்குத் தேவையான ஒன்றை வாங்கக்கூடப் பணம் தேவையில்லை.
*✍ தோரோ*

☆ பணத்தை இழித்து வெறுப்பது, ஓர் அரசனை அரியணையி லிருந்து இறக்குவது போன்றது.
*✍ சாம்ஃபோர்ட்*

☆ பணம், பணத்தைப் பெறும்; அதன் குட்டிகளும் பணம் பெறும்; இவ்வாறு சேர்ந்துகொண்டேயிருக்கும்.
*✍ ஃபிராங்க்லின்*

☆ உன் நம்பிக்கையைப் பணத்தின்மீது வைக்காதே பணத்தை நம்பிக்கையான இடத்தில் வைத்துவிடு.
*✍ ஹோம்ஸ்*

☆ பணம் நல்ல பணியாள்; ஆ னால், மோசமான எசமானன்.
*✍ டி.பௌஹர்ஸ்*

## பணியாளர்கள்

☆ நல்ல பணியாளனுக்குச் சன்மானம் கொடுத்து ஆதரித்து வரவும். கெட்டவனை வைத்துக்கொண்டு அவனிடம் உரக்கக் கத்திக் கொண்டிருப்பதைவிட அவனை வெளியேற்றிவிடுவது மேல்
*✍ சேம்பர்ஸ்*

☆ முன்னால் நான் என்னிடமிருந்த வேலையாள்களில் ஒவ்வொருவனையும் நண்பனாகக் கொள்ளலாம் என்று தவறாக எண்ணிக்கொண்டிருந்தேன்; ஆனால், இப்பொழுது அடிமை வேலை செய்வதன் இயற்கை நேர் மாறான குணத்தை உண்டாக்குகின்றது என்பதைக் கண்டுகொண்டுவிட்டேன். ஜனங்களுடைய குணம் அவர்களுடைய கல்வியிலிருந்தும், வாழ்க்கையில் அவர்களுடைய நிலையிலிருந்தும் அமை கின்றது; பிறப்பு மட்டும் அதிகமாய்ப் பாதிப்பதில்லை.
*✍ ஷென்ஸ்டன்*

# பத்திரிகைகள்

☆ கடவுள் உலகை எப்படி ஆண்டு வருகிறார் என்பதைப் பார்க்க நான் பத்திரிகைகளைப் படிக்கிறேன். ✍ *ஜான் நியூட்டன்*

☆ சாதாரண மக்களுக்குப் பத்திரிகைகளே பள்ளி ஆசிரியர்கள்.

✍ *பீச்செர்*

☆ இந்தக் காலத்தில் நாம் கருத்துகளுக்காகப் போராடுகிறோம். பத்திரிகைகள் நமது கோட்டைகள். ✍ *ஹீய்ன்*

☆ பத்திரிகைகள் மக்களின் பல்கலைக் கழகம்; பாதி மக்கள் வேறு எதையும் படிப்பதில்லை. ✍ *ஜே. பார்டன்*

☆ நவீன உலகின் முதன்மையான ஆச்சரியங்களுள் ஒன்று பத்திரிகை. ✍ *ஜே. ஏ. பிரோடஸ்*

# பத்திரிகைத் தொழில்

☆ பத்திரிகையாளர், சமூகத்தின்மீது விழும் ஆலங்கட்டிகளிலிருந்து தமது குடையால் பாதுகாத்து வருகின்றனர்.

✍ *ஜி. டபுள்யு. ரஸ்ஸல்*

☆ நம்முடைய ஜனநாயகத்தைப் போன்ற ஆட்சியுள்ள பெரிய நாடுகளில் அதிகச் செய்திகளைப் பரப்புவதும், அதிகச் சகிப்புத் தன்மையும் அவசியம், ஜனங்களின் அறிவைப் பெருக்குவதும், கல்வியைப் பரப்புவதும் பத்திரிகைகளின் உண்மையான முயற்சிகளாயிருக்கவேண்டும். தாமே தலைமை வகித்து மக்களுக்கு முன்னால் நிற்பதைவிட, இவை முக்கியமானவை.

✍ *டபுள்யு. ஹோவர்ட்*

☆ முதலில் உங்கள் செய்திகளைச் சேகரியுங்கள். பிறகு அவைகளை உங்கள் யுக்தம் போலத் திரிக்கலாம்.

✍ *மார்க் டுவெயின்*

நூலாசிரியன் என்பதைவிட நான் என்னைப் பத்திரிகையாளன் என்றே சொல்லிக்கொள்ள விரும்புவேன். ஏனெனில், பத்திரிகையாளன் தொழிலைக் கற்றுக்கொண்டே பிழைப்பையும் நடத்துபவன்.
*✍ ஜி. கே. செஸ்டர்டன்*

பத்திரிகையை அப்புறப்படுத்திவிட்டால், நமது நாடு குழப்பமாகி விடும்.
*✍ ஹாரிசாண்ட்லர்*

வாரந்தோறும் எழுதுதல், தினந்தோறும் எழுதுதல், சுருக்கமாக எழுதுதல், ரயில்களைப் பிடிப்பதற்கு அவசரமாக ஓடுபவர்களுக்காகச் சுருக்கமாக எழுதுதல் அல்லது மாலை நேரங்களில் களைத்து வீடு திரும்புகிறவர்களுக்காக எழுதுதல் ஆகியவை எழுத்தின் தராதரம் தெரிந்தவர்களுக்கு மிகவும் கஷ்டமான வேலையாகும்.
*✍ விர்ஜீனியா உல்ஃப்*

ஆயிரம் துப்பாக்கிச் சனியன்களைக்காட்டிலும், மூன்று பத்திரிகைகளைக் கண்டு நான் அஞ்சுகிறேன். *✍ நெப்போலியன்*

நாம் மனிதர்களும் பத்திரிகைகளும் நடத்தும் ஆட்சியின்கீழ் வாழ்கிறோம்.
*✍ வெண்டல்ஃபிலிப்ஸ்*

## பயிற்சி

அறிவுப் பயிற்சியின் முதன்மையான நோக்கம் மனிதனுக்கு நிறைந்த அறிவையளிப்பதும், அவன் மனத்தைப் பூரணமாக அடக்கிக்கொள்ளும் ஆற்றலை வளர்ப்பதுமாகும்.
*✍ நோவாலிஸ்*

அரைகுறைப் பயிற்சி ஆடம்பரத்தை உண்டாக்கும்; தீவிரப் பயிற்சி எளிய வாழ்வை உண்டாக்கும்.
*✍ போவீ*

சாதாரண அறிவுள்ள ஒரு மனிதன் பயிற்சியினாலும் கவனத்தினாலும் உழைப்பினாலும் தான் விரும்புவது போன்ற எந்த

நிலையையும் அடைய முடியும். ஆனால், கவிஞனாவது மட்டும் வேறு கலையாகும். ✍ செஸ்டர்ஃபீல்டு

## பரம்பரை

☆ மேய்ச்சலைவிட இனம் அதிக வலிமையுள்ளது.

✍ ஜியார்ஜ் எலியர்

☆ ஐரோப்பாவின் அரச பரம்பரையைப் பார்த்தால், எல்லாம் ஆதியில் வெற்றிகரமான ஒரு போர் வீரனில் போய் முடியும் என்பதைத் தவிர வேறு என்ன பார்க்கிறோம்? ✍ வால்டர் ஸ்காட்

☆ மனித சமுதாயத்தின் ஆதித் தோற்றம் ஒரே மாதிரியானது; நல்ல, பரிசுத்தமான மனச்சாட்சியே மனிதனைப் பெருமையுடையவனாகச் செய்கின்றது. அந்தப் பெருமை வானிலிருந்து வருவது. ✍ ஸெனிகா

☆ நான் இறந்தவர்களிடமிருந்து பெருமையைக் கடனாகப் பெற மாட்டேன். எனக்கோ தகுதியில்லை. ✍ ரோ

☆ பரம்பரைப் பெருமையிருந்தால், நல்ல மனிதன் மேலும் புகழுடன் விளங்குகிறான். ஆனால், இகழ்ச்சியிருந்தால், ஒருவன் அதிகமாக வெறுக்கப்பெறுகிறான். ✍ அடிஸன்

☆ பரம்பரையைக் கவனித்தால், சில மனிதர் தம் முன்னோர்களின் நிழல்களாக விளங்குகின்றனர். ✍ லூகான்

## பரிசுகள்

☆ நண்பர்கள் கேட்டால், நாளை என்பதில்லை. ✍ ஹெர்பெர்ட்

☆ பரிசுகள் அளிக்கும் பொழுது நீடித்து நிற்பவைகளாக அளிக்கவும். அவை நீண்ட காலத்திற்கு நமது நினைவை உண்டாக்கிக்கொண்டிருக்கும். ✍ ஃபுல்வர்

☆ உன் பகைவனுக்கு அளிக்கத் தகுந்த முதன்மையான பரிசு, மன்னிப்பு; உனக்குப் போட்டியாயுள்ளவனுக்கு, சகிப்புத் தன்மை; நண்பனுக்கு, உன் இதயம்; உன் குழந்தைக்கு, நல்ல மாதிரியான நடத்தை; தந்தைக்கு, மரியாதை; உனது தாய்க்கு, அவள் உன்னைப்பற்றிப் பெருமைப்படத்தக்க ஒழுக்கம்; உனக்கு தன்மானப் பெருமை; எல்லா மனிதர்களுக்கும், தாராள மனப்பான்மை.

✍ *பால்ஃபோர்*

☆ அன்போடு அளித்தால், சிறு பொருளாயிருந்தாலும் உண்மையில் பெரியதாகும்.

✍ *பிண்டார்*

☆ அளிப்பவன் இதயமே பரிசின் பெருமையை அரியதாக்குவது.

✍ *லூதர்*

## பரணி பாடுதல்

☆ தேசிய உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுபவை வீரர்களைப் பற்றிய தேசியப் பாடல்கள்.

✍ *லாம்ப்*

☆ ஒரு சமூகத்தின் வீரப் பரணிகளை நான் எழுதுவதானால், அதன் சட்டங்களை எவர்கள் இயற்றினாலும் எனக்குக் கவலையில்லை.

✍ *ஃபிளெச்சர்*

☆ ஒரு பரணியோ, நன்கு அமைக்கப்பெற்ற பாடலோ உள்ளத்தில் பதிந்து, உணர்ச்சிகளை மென்மையாக்கி, ஒரு பெரிய ஒழுக்க நூலைவிட அதிகப் பயனை விளைவிக்கின்றது; ஒழுக்க நூல் நமது அறிவைத் திருப்தி செய்யுமேயன்றி உணர்ச்சிகளை உண்டாக்காது; நம் பழக்கங்களைச் சிறிதும் மாற்றிவிடாது.

✍ *நெப்போலியன்*

## பரிதானம்

☆ நீதிபதிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும் முன்னால் பொன்னை விலையாகக் கொடுத்து வாங்கப்பெற்றுள்ளனர்.

✍ *போப்*

★ கண்ணியமான ஒரு மனிதனுடைய வாக்கை (ஓட்டை) விலைக்கு வாங்க இந்த உலகின் செல்வம் அனைத்தும் போதாது.

✍ கிரெகரி

★ தங்கத்தின் இனிய வாடையில்லாத மனுக்கள் பெரும்பாலும் மறுக்கப்பெறுகின்றன; அவை பெற்றுக்கொள்ளப்பட்டாலும், படிக்கப்பெறாமல் மூலையில் போடப்பெறுகின்றன.

✍ மாஸிஞ்சர்

## பரோபகாரம்

★ அவன் தனக்காக அல்ல, உலகுக்காக வாழ்கிறான். ✍ லூகான்

★ வெளிப்படையாகத் தெரியும்படியான தருமங்களில் பொன்னைப் புதைத்து வைக்காமல், மானிட இதயத்தில் தன் வைத்திய நிலையத்தை அமைப்பதே உண்மையான பரோபகாரம்.

✍ ஹார்வி

★ தானத்தைப் போல் பரோபகாரமும் ஒருவருடைய வீட்டிலிருந்தே ஆரம்பமாக வேண்டும். இதை மையப் புள்ளியாக வைத்துக் கொண்டு, நம்முடைய ஆதரவும் அன்பும், விரிவடைந்து கொண்டேயிருக்கும் வட்டத்தின் மேல் வட்டமாகப் பெருகி வர வேண்டும். ✍ லாம்ப்

★ மற்றவர்களுடைய நன்மைக்காகத் தன்னுடைய ஓய்வு, தன் உதிரம், தன் செல்வம் ஆகியவற்றில் ஒரு பகுதிகூட அளிக்க முடியாதவன் இரக்கமற்ற இழிமகனாவான்.

✍ ஜோ. அன்னா பெய்லி

## பல தொழில்

★ ஒவ்வொன்றும் தொடக்கத்தில் முறுக்காயிருக்கும். எதுவும் நீடித்திருப்பதில்லை. ✍ டிரைடன்

☆ அடிக்கடி மாறுபவர்கள் மிகவும் பலவீனமான மனம் படைத்தவர்களாயும், மிகவும் கடின இதயம் பெற்றவர்களாயும் இருப்பார்கள் என்பதைக் கண்டுகொள்ளலாம். ✍ *ரஸ்கின்*

☆ மனிதர்கள் பல சந்தர்ப்பங்களில் பயனற்றிருப்பதற்கு ஒரு முக்கிய காரணம், அவர்கள் பல நோக்கங்கள், தொழில்களில் சிந்தையைச் சிதறவிடுதலாகும். ✍ *எமர்ஸன்*

☆ பல விஷயங்களைத் தொடங்குபவன் எதையும் முடிக்க மாட்டான். ✍ *ஸி. ஸிம்மன்ஸ்*

☆ உருண்டுகொண்டிருக்கும் கல்லில் ஒன்றும் ஒட்டாது. ✍ *பப்ளியஸ்ஸைரஸ்*

☆ சிலர் முதலில் சொற்கலைஞர்கள்; பிறகு, கவிஞர்கள்; பிறகு, விமர்சகர்களாகி இறுதியில் மூடர்களாவர். ✍ *போப்*

## பலாத்காரம்

☆ பலாத்காரத்தினால் வெல்பவன் பாதி எதிரியைத்தான் வெல்கிறான். ✍ *மில்டன்*

☆ பலாத்காரத்திலிருந்து நன்மை எதுவும் ஒரு காலத்தும் வருவதில்லை. ✍ *லூதர்*

☆ பலாத்காரக் களியாட்டங்கள் பலாத்கார முடிவுகளையே அடைகின்றன. ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ பலாத்காரமான எதுவும் நிலையாக நிற்பதில்லையென்று நான் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறேன். ✍ *மார்லோ*

☆ ஈக்களை வதைப்பதில்கூட நம்பிக்கையில்லை. ✍ *மகாத்மா காந்தி*

☆ பலாத்காரப் போராட்டத்திற்குப் பயிற்சி பெறுவதில் கொலை செய்து பழக வேண்டியிருப்பது போல் அஹிம்சையில் பயிற்சி

பெறுவதற்கு ஒருவன் தானாக உயிர்துறக்கப் பழகவேண்டும்.

✍ *மகாத்மா காந்தி*

☆ பலாத்காரம், தண்ணீரைப் போல், தான் வெளியேறுவதற்கு வழி கிடைத்துவிட்டால், மேலும் அதிக வேகத்துடன் பாய்ந்து செல்லும். ✍ *மகாத்மா காந்தி*

☆ ஆயிரம் தடவைகள் பலாத்காரம் தோல்வியுற்ற பின்னும், நாம் அது வென்றுவிடும் என்று மேலும் நம்பும் அளவுக்கு, நம் மனங்களில் அதற்கு அவ்வளவு பிடிப்பு ஏற்பட்டிருக்கிறது.

✍ *விநோபா பாவே*

☆ உண்மை என்னவென்றால், ஒருவன் செய்த பலாத்காரத்திற்கு இரண்டாமவன் அதிகப் பலாத்காரத்தைக் கையாள்கிறான். அதாவது, சொற்பத் தீமை செய்ததற்குக் கூடுதலான தீமையைத் திருப்பியளிக்கிறான். மூன்றாமவன் மேலும் அதிகமாகச் செய்கிறான். இவ்வாறு இறுதியில்.

☆ இக்காலத்தில் நடைபெறும் சர்வ வியாபகமான யுத்தம் ஏற்படுகின்றது. ✍ *மகாத்மா காந்தி*

☆ இவ்வுலகில் எக்காலத்தும் பகைமை பகைமையால் தணிவதில்லை. பகைமை அன்பினாலேயே தணியும். ✍ *புத்தர்*

## பழக்கம்

☆ மனித இயற்கையான ஆழ்ந்தமைந்த சட்டம், பழக்கம்.

✍ கார்லைல்

☆ ஓடைகள் ஆறுகளாவது போலவும், ஆறுகள் கடல்களில் பாய்வது போலவும், எல்லாப் பழக்கங்களும் கண்ணுக்குத் தெரியாமல் சிறிது சிறிதாக ஒன்றாய்ச் சேர்ந்துவிடுகின்றன.

✍ *டிரைடன்*

அறிவிலி ஒருவன் ஒரே கதையை நாள்தோறும், ஆண்(டு) முழுவதும், உன்னிடம் சொல்லிவந்தால், நீ அதையும் நம்பி விடுவாய்.

✍ பர்க்

நல்ல செயல்களைச் செய்து பழக்கமாகும் பொழுது, அவை எளிதாக விளங்குகின்றன. அவை எளிதாயிருக்கும் பொழுது, நாம் அவைகளில் மகிழ்ச்சியடைகிறோம். அவைகளை அடிக்கடி செய்கிறோம்; திரும்பத்திரும்பச் செய்வதால், அவை ஒரு பழக்கமாகிவிடுகின்றன.

✍ டில்லோட்ஸன்

பழக்கத்தின் சங்கிலிகள் பொதுவாக அவை இருப்பதாகவே உணர முடியாதபடி அவ்வளவு சிறியவையாய் இருக்கும். அவை வலிமை பெற்று உடைக்க முடியாதபடி இறுகும்வரை, நாம் அவைகளை உணர்வதில்லை.

✍ ஜான்ஸன்

பழக்கத்தைத் தடுக்காவிடில், அது விரைவில் அவசியமாகி விடும்.

✍ அகஸ்டைன்

நாம் அனைவரும் பழக்கத்தின் அடிமையாயிருக்கிறோம்.

✍ ஃபான்டெயின்

உலகத்தின் சுதந்தரத்திற்காக உயிரைத் தியாகம் செய்ய மனிதர்கள் முன்வருவார்கள்; ஆனால், தங்களுடைய (பழக்கங்களாகிய) அடிமைத் தளைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள அவர்கள் சிறு தியாகங்கூடச் செய்யமாட்டார்கள் என்பது ஆச்சரியமல்லவா?

✍ புரூஸ் பார்ட்டன்

மனிதன் பலவீனம் துயரம் எல்லாவற்றிற்கும் எப்பொழுதும் காரணமாயிருப்பது பலவீனமான சிந்தனைப் பழக்கமே.

✍ ஹொரேஸ் ஃபிளெச்சர்

'பிளேக்' நோய் ஒட்டுவாரொட்டியாகப் பக்கத்தில் வருபவர்களையும் எப்படிப் பாதிக்கின்றதோ, அதே போல், கெட்ட பழக்கங்கள் முன்மாதிரிகளாயிருந்த மற்றவர்களையும் பற்றிக் கொள்கின்றன.

✍ பீல்டிங்

☆ பழக்கம் இயற்கையைவிடப் பத்து மடங்கு அதிகம்.

✍ வெல்லிங்டன்

☆ உணர்வுகள் கல்லாக இறுகிப் பழக்கங்களாகின்றன.

✍ எல். இ. லாண்டன்

☆ ஒரு செயலை விதைத்தால், பழக்கத்தை அறுவடை செய்யலாம்; பழக்கத்தை விதைத்தால், ஒரு குணத்தை அறுவடை செய்யலாம்; குணத்தை விதைத்தால் வாழ்வின் இறுதி இலட்சியத்தை அறுவடை செய்யலாம்.

☆ நெடுநாள் வழக்கங்களை உடைப்பது எளிதன்று; தன் வாழ்க்கையின் போக்கை மாற்றிக் கொள்ள ஒருவன் முயற்சி செய்தால், அது வீண் வேலையாகும். ✍ ஜான்ஸன்

## பழமை

☆ பழமையின் உறவுகளை அறுத்துவிடும் எதிர்காலத்தை நான் விரும்பவில்லை. ✍ ஜியார்ஜ் எலியட்

☆ எதிர்காலத்தை அறிந்துகொள்ள வேண்டுமானால், பழமையை ஆராய்ந்து பார். ✍ கன்ஃபூஷியஸ்

☆ பழமையைப்பற்றி நமக்கு எவ்வளவு தெரியாதோ, அவ்வளவு அதை நாம் மதிக்கிறோம். ✍ தியோடோர் பார்க்கர்

☆ ஆகப் பழங்காலத்தில் இருந்தவர்களும் இப்பொழுதும் நம்மீது ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். ✍ ஜியார்ஜ் எலியட்

☆ இப்பொழுது பழமையானவை என்று கருதப்பெறும் விஷயங்கள் ஒரு காலத்தில் புதுமைகளாக இருந்தன. இன்று நாம் மாதிரிகளாக் கொண்டிருப்பவை, வருங்காலத்தில் மாதிரிகளாக விளங்கும். ✍ டாஸிடஸ்

☆ காலம் புனிதமாக்குகின்றது. நெடுங்காலத்திற்கு முந்திய விஷயம் சமயமாகிவிடுகின்றது. ✍ ஷில்லர்

## பழமொழிகள்

☆ பழமொழியைப்போல் மனத்தில் பாய்ந்து பதியக்கூடியது வேறு எதுவும் இல்லை. ✍ ஏ. முர்ரே

☆ மணலில் முத்துகளைப் போலவும், சுரங்கத்தில் தங்கத்தைப் போலவும், சரித்திரத்தில் பழமொழிகள் இருக்கின்றன.
✍ எராஸ்மஸ்

☆ இந்த ஆச்சரியமான வாக்கியங்களுக்குப் பின்னால் மறைந்து நிற்கும் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, பின்னால் தத்துவ ஞானிகள் பல நூல்களை எழுதியுள்ளார்கள்.
✍ புளூடார்க்

☆ அனுபவம் விஞ்ஞானங்களுக்கு எல்லாம் தாய்; பழமொழிகள் அந்த அனுபவத்திலிருந்து பெறப்பட்டவை; பழமொழிகளில் உண்மையாக இல்லாதவை மிகச் சிலவே இருக்கும்.
✍ செர்வான்டிஸ்

☆ நீண்ட அனுபவங்களிலிருந்து பெறப்பட்ட சிறுவாக்கியங்கள் பழமொழிகள். ✍ செர்வான்டிஸ்

☆ பழமொழி பலருடைய ஞானத்தைப் பெற்று ஒருவருடைய புத்தி நுட்பத்தால் அமைந்தது. ✍ ஜே. ரஸ்ஸல்

☆ அறிவு புகட்டும் ஒரு வாக்கியத்தையோ, சொற்றொடரையோ கேள்விப்பட்டால், அதை நினைவில் வைத்துக்கொள்.
✍ ஸர். ஹென்றி ஸிட்னி

☆ எல்லா வகையிலும் உண்மையாயிருக்கும் பழமொழிகள் மிகச் சிலவே. ✍ வாவனார்கூஸ்

☆ பழமொழிகளை ஜோடி ஜோடியாக விற்க வேண்டும் என்று சொல்லுவது சரிதான். ஒற்றைப் பழமொழி பாதி உண்மையாகத் தான் இருக்கும். ✍ *டபுள்யூ. மாத்யூஸ்*

☆ வியாபார உலகில் தங்க நாணயங்கள் எப்படியோ, அப்படிச் சிந்தனை உலகில் பழமொழிகள்; இரண்டும் அளவில் சிறியவை, எல்லா மக்களிடத்தும் புழக்கத்தில் உள்ளவை. ✍ *டி. மார்ச்*

## பழிக்குப் பழி

☆ பழி வாங்குதலுக்கு முன்யோசனை கிடையாது. ✍ *நெப்போலியன்*

☆ பழி வாங்குவதால் ஒரு மனிதன் தன் எதிரிக்கு நிகராகி விடுகிறான்; ஆனால், செய்யப்பெற்ற தீங்கை மறந்துவிட்டால், நீ மேலானவனாவாய். ✍ *பேக்கர்*

☆ பழி வாங்குதல் வீரமன்று. ஆனால், பொறுப்பதே வீரம். ✍ *ஷேக்ஸ்பியர்*

## பாராட்டுதல்

☆ மேன்மைக்கு அடுத்தபடி அதைப் பாராட்டுதல் மேன்மையாகும். ✍ *தாக்கரே*

☆ எந்த மனிதரையும் நாம் குறைவாக மதிப்பிடக்கூடாது. தொழிலாளி தன் முன்னிலையில் தன் வேலையைக் குறைவாகப் பேசுவதை விரும்பமாட்டான். ✍ *டி. ஸேல்ஸ்*

☆ மற்றவர்களுடைய நற்செயல்களைப்பற்றிச் சிந்திப்பதில் மகிழ்ச்சியடையாதவன் எவ்வித நற்செயலையும் செய்ய முடியாது. ✍ *லவேட்டர்*

☆ பாராட்டு உன்னதமான உள்ளங்களை மேலும் ஊக்குவிக்கும்; பலவீனமானவர்கள் பாராட்டோடு திருப்தியடைந்துவிடுவார்கள். ✍ *கோல்டன்*

☆ பாராட்டுவதில் தாமதம் செய்தல் அன்புக் குறைவையும், பொறாமை உணர்ச்சியையும் காட்டும். ✍ எச். மோர்

## பாவம்

☆ பாவம் என்பது இறைவனிடமிருந்து விலகிச் செல்வதாகும்.

✍ லூதர்

☆ பாவத்தில் வீழ்பவன் மனிதன். பாவத்திற்காக வருந்துபவன் முனிவன் . பாவத்தைப்பற்றிப் பெருமையாய்ப் பேசுபவன் சைத்தான். ✍ ஃபுல்லர்

☆ பாவம் முதலில் இனிமையாயிருக்கும். பிறகு. அது எளிதில் வளரும்; பிறகு. மகிழ்ச்சி பெருகும். அப்படியே அது உறுதியாகி விடும்; பின்னர். மனிதன் செய்ததற்கு வருந்த மாட்டான்; ஒரே உறுதியுடனிருப்பான்; மேற்கொண்டு வருந்தவே கூடாது என்று தீர்மானித்துவிடுவான்; அதற்குப் பின்னால் அவன் அழிந்தவன் தான். ✍ லெய்டன்

☆ பாவம் ஒருகாலும் நிலையாக நின்றுகொண்டிருப்பதில்லை; அதிலிருந்து நாம் பின்னால் திரும்பச் செல்லாவிட்டால் நாம் அதிலேயே சென்றுகொண்டிருப்போம். ✍ பார்ரோ

☆ பாவம் காலையில் மிகப் பிரகாசமாக விளங்கும். இரவில் அது இருளைப்போல் கருமையாக முடிவடையும். ✍ டால்மேஜ்

☆ தீய மனிதர்கள் அச்சத்தினால் பாவத்தை வெறுக்கின்றனர். நல்ல மனிதர்கள் நற்பண்பிலுள்ள ஆர்வத்தினால் பாவத்தை வெறுக்கின்றனர். ✍ ஜுவினால்

☆ பாவத்தைப்பற்றி அலட்சியமாயிருப்பவனிடம் கடவுளைப் பற்றிய பெரிய சிந்தனைகள் இருக்கமாட்டா. ✍ ஓவன்

☆ கடவுள் என்னை மன்னிப்பாரென்றும். மனிதர்கள் என் பாவத்தைத் தெரிந்துகொள்ளமாட்டார்கள் என்றும் எனக்கு,

உண்மையாகத் தெரிந்தால்கூட, நான் பாவம் செய்ய வெட்கப் படுவேன்; ஏனெனில், அதில் அவ்வளவு இழிவு ஒட்டியுள்ளது.

✍ பிளேட்டோ

## பாவனை

☆ போலியான பணிவு அகங்காரமாகும். போலியான பெருமை கீழ்த்தரமான நடத்தையாகும். போலியான புகழ் கட்டற்ற வாழ்வாகும். போலியான ஒழுக்கம் கபடமாகும். போலியான அறிவு நடித்து ஏய்ப்பதாகும். ✍ புரூயெர்

☆ ஒரு மனிதனிடம் யோக்கியதை எவ்வளவு அதிகமாயுளதோ, அந்த அளவுக்கு அவன் ஒரு ஞானியைப்போல நடிக்கமாட்டான்.

✍ லவேட்டர்

☆ குணமோ, அந்தஸ்தோ உயர உயர, பாவனை செய்தல் குறைந்து வரும். ஏனெனில், அப்பொழுது பாவனை செய்ய வேண்டிய அவசியம் குறைவு. ✍ புல்வர்

☆ உண்மையான பெருமை வேரூன்றி வளர்ந்துவிடும்; அப்பொழுது பாவனைகள், வாடிய மலர்களைப் போல உதிர்ந்து விடும். போலிகள் நீடித்து நிற்கமாட்டா. ✍ ஸிஸரோ

## பிடிவாதம்

☆ பிடிவாதமுள்ள மனிதன் அபிப்பிராயங்களைக் கொண்டிருப்ப தில்லை. ஆனால், அவைகளே அவனைப் பிடித்துக் கொண்டிருக்கின்றன; ஏனென்றால், ஒரு தவறு அவனைப் பிடித்துக்கொண்டால், அதைப் பிசாசைப் போல் மிகவும் பிரயாசைப்பட்டுத்தான் விரட்ட வேண்டியிருக்கும். ✍ பட்லர்

☆ சிலரே, மிகச்சிலரே தங்கள் தவறுதலை ஒப்புக்கொள்வர்.

✍ ஸ்விஃப்ட்

☆ படிப்பில்லாத, அற்பமான மனிதனுக்குப் பிடிவாதமும், வழக்குப் பேசுதலும் பொதுவான குணங்கள், அவனுக்கே அவை பொருத்தமானவை.

☆ தவறு கூடுதலாயிருந்தால், பிடிவாதமும் அதிகமாயிருக்கும்.

*✍ திருமதி நெக்கெர்*

☆ பிடிவாதமும், விவாதத்தில் காரமும் தவற்றுக்குச் சிறந்த அத்தாட்சிகள். கழுதையைப் போல் பிடிவாதமுள்ள வெறுக்கத் தகுந்த பிராணி வேறு என்ன இருக்கின்றது? *✍ மாண்டெயின்*

☆ பிடிவாதம் பலவீனருடைய வலிமையாகும். தத்துவத்தை அடிப் படையாகக்கொண்டு, உண்மையையும், நியாயத்தையும் சட்டத்தையும், ஒழுங்கையும், கடமையையும், தாராளத்தையும் அடிப்படையாகக் கொண்டு உறுதியாயிருந்தால் ஞானிகளின் பிடிவாதமாகும். *✍ லேவேட்டர்*

☆ பிடிவாதமும் முரண்பாடும் காகிதக் காற்றாடிகளைப் போன்றவை; அவைகளை இழுத்துவிட்டுக்கொண்டிருக்கும் வரைதான் அவை உயரே இருக்கும்.

☆ மற்றவர்களுடைய அபிப்பிராயங்களிலிருந்து மிகவும் மாறுபட்டிருப்பவர்கள் தங்கள் அபிப்பிராயங்களே உண்மை யானவை என்று நம்பிக்கொண்டிருப்பர். *✍ மகின்டோஷ்*

## பிணையாதல்

☆ தான் சுதந்தரமாக வாழ விரும்புபவன் மற்றொருவருக்காகப் பிணையாகக்கூடாது. *✍ ஃபிராங்க்லின்*

☆ உன்னுடைய தலைசிறந்த நண்பனுக்காகவும் பிணைபோவதில் எச்சரிக்கையாக இருக்கவும். *✍ பர்லே*

☆ யாராவது ஒரு நண்பர் தமக்கு ஜாமீனாய் இருக்கும்படி வேண்டினால், உன்னால் இயன்ற தொகையைக் கொடுத்து

உதவிசெய்; அதற்கு மேலும் அவர் உன்னை வற்புறுத்தினால், அவர் உன் நண்பர் அல்ல, உங்கள் நட்பும் கெடும்.

*✍ ஸர் வால்டர் ராலே*

## பிதிரார்ச்சிதம்

☆ தங்கள் குழந்தைகளுக்கு அதிகமான செல்வத்தைத் தேடி வைத்து, அவர்களை ஒழுக்கமுள்ளவர்களாகப் பயிற்சி அளிக்காமல் விட்டுவிடுதல், தங்கள் குதிரைகளை உயரமாக வளர்த்து, அவைகளைப் பயன்படாமல் நிறுத்தி வைப்பது போலாகும். *✍ சாக்ரடீஸ்*

☆ தன் வாரிசுக்காகத் தான் பட்டினி கிடந்து ஒரு மனிதன் செல்வம் சேர்த்து வைப்பது எவ்வளவு அறிவீனம்! இது நண்பனை விரோதியாக்குவது போன்றது. நீ மரிக்கும் பொழுது உன் வாரிசு நீ விட்டுச் செல்லும் செல்வத்தின் அளவில்தான் மகிழ்ச்சி அடைவான். *✍ ஸெனிகா*

## பிரபுக்கள்

☆ இப்பொழுதுள்ள பிரபுக்களின் முன்னோர்கள் எவர்கள் என்பதைக் கடவுள்தான் அறிவார்! *✍ டிஃபோ*

☆ சிலர் எப்பொழுதும் மற்றவர்களுக்கு மேலாகவே இருப்பர். இன்றுள்ள ஏற்றத்தாழ்வை அழித்துவிட்டால், அது நாளை மறுபடி தோன்றிவிடும். *✍ எமர்ஸன்*

☆ சில மனிதர்கள் பூட்ஸுகளும் முள் ஆணிகளும் அணிந்து கொண்டு குதிரை சவாரி செய்யவும், இலட்சக்கணக்கான மக்கள் சேணமும் இலகான்களும் அணிந்துகொண்டு தங்கள் மீது சவாரி செய்யக் காத்திருக்கவும் ஆண்டவன் அவர்களைப் படைத்திருக்கிறான் என்று நான் நம்பவே முடியாது. *✍ குவிஸோட்*

(குதிரைகளைக் குத்தி ஓட்டுவதற்காகக் கால்களில் அணிந்து கொள்ளப்படுபவை முள் ஆணிகள்)

## பிரயாணம்

☆ ஒவ்வொரு மனிதனும் பிரயாணம் செய்வது உசிதமில்லை; அது அறிவாளியை மேலும் அறிவாளியாக்கும்; மூடனை அதிக மூடனாக்கும். ✍ ஃபெல்ட்ஹாம்

☆ வீட்டிலே சோம்பேறியாயிருந்து, வாலிபத்தை உருவில்லாத சோம்பலில் கழிப்பதைவிட, வெளியே சென்று உலகத்தின் ஆச்சரியங்களைப் பார். ✍ ஷேக்ஸ்பியர்

☆ நீ உன் நாட்டைவிட்டு வெளியே செல்வதற்கு முன்னால் உன் நாட்டில் பெரும் பாகத்தை நன்றாகத் தெரிந்துகொள். ✍ ஃபுல்லர்

☆ இரயில் பிரயாணம் பிரயாணமே அன்று. அது ஓர் இடத்திற்குப் 'பார்ஸல்' போவது போலத்தான். ✍ ரஸ்கின்

☆ நாம் பிறந்து வளர்ந்த நாட்டிற்கு வெளியே யாத்திரை செய்வது - அதாவது, மற்ற நகரங்கள், நாடுகள் முதலியவைகளைப் பார்த்து வருவது - மனத்தை விரிவடையச் செய்யும். ✍ வாட்ஸ்

## பிரார்த்தனை

☆ சில சிந்தனைகளே பிரார்த்தனைகளாகிவிடும். உடல் எந்த நிலையில் இருந்தாலும் ஆன்மா முழங்கால் பணிந்து வணங்கும் நேரமும் உண்டு. ✍ விக்டர் ஹியூகோ

☆ பிரார்த்தனை என்பது சொற்களை அடுக்குவது அன்று, மனப்பூர்வமானது; ஆதரவற்ற நிலையை விளக்குவது அன்று, அதை உணர்வது; பேச்சுத்திறன் அன்று, ஆனால், ஆன்மாவின் அந்தரங்க விசுவாசமாகும். ✍ எச். மோ

☆ பிரார்த்தனை என்பதைச் சுருக்கமாக விளக்கினால், அது நமது விருப்பத்தைக் கடவுள் பக்கமாகத் திருப்புவதாகும். ✍ *பி. புருக்ஸ்*

☆ நம்முடைய பிரார்த்தனைகள் பொதுவான ஆசிகளை வேண்டியிருக்க வேண்டும். ஏனெனில், நமக்கு எவை நன்மையானவை என்பதைக் கடவுளே அறிவார். ✍ *சாக்ரடீஸ்*

☆ நாம் கடவுளிடம் எதை வேண்டிக்கொண்டாலும், நாமும் அதற்காக உழைப்போம். ✍ *ஜெரிமி டெய்லர்*

☆ கடவுள் நம்மிடமிருந்து தொலைவில் இருக்கிறார். ஆனால் பிரார்த்தனை, அவரை நம்முடைய பூமிக்குக் கொண்டுவந்து, நம் முயற்சிகளோடு இணைத்துவிடுகின்றது. ✍ *திருமதி டி. காஸ்பரின்*

☆ சொற்கள் குறைந்துள்ள பிரார்த்தனை மேலானது. ✍ *லூதர்*

☆ காலையில் கடவுளைவிட்டு ஓடியவன் அன்று முழுவதும் அவரைக் கண்டுபிடிக்கமாட்டான். ✍ *பனியன்*

☆ நம் பிரார்த்தனைகள் காலையும் மாலையும் மேலே எழவேண்டும். நமது நாள்கள் கடவுளில் ஆரம்பித்துக் கடவுளிலே முடியவேண்டும். ✍ *சானிங்*

☆ பொறுமைதான் மிக உயர்ந்த பிரார்த்தனை. ✍ *புத்தர்*

☆ ஆன்மா பிரார்த்தனை என்ற சிறகைக் கொண்டு வானுலகுக்குப் பறந்து செல்கின்றது. தியானந்தான் நாம் கடவுளைக் காணும் கண். ✍ *அம்ப்ரோஸ்*

☆ பிரார்த்தனையில் சொற்களில்லாத இதயம், இதயமில்லாத சொற்களைவிட மேலானது. ✍ *பனியன்*

☆ உங்களுடைய வேலைகளைத் தொடங்கு முன்னால் அவைகளை வெற்றிகரமாக முடிப்பதற்காக ஆண்டவனைப் பிரார்த்தனை செய்யுங்கள். ✍ *ஸெனஃபோன்*

## பிரிவு

☆ நாம் ஒருவரையொருவர் அதைரியப்படுத்திக்கொள்ளக்கூடாது; விரைவில் பிரிந்துவிட வேண்டும்; எல்லாப் பிரிவுபசாரங்களும் சட்டென்று முடிய வேண்டும். ✍ பைரன்

☆ பிரியும் பொழுது அன்பான வார்த்தைகள் சொல்ல வேண்டும். நீங்கள் வாழ்வில் மறுபடி சந்திக்காமலே இருக்கவும் கூடும். ✍ ரிச்டெர்

☆ சிறிது காலம் பிரிந்திருந்தால் அன்பு அதிகமாகும்; நீண்ட காலம் அன்பை வதைத்துவிடும். ✍ மீராபோ

## புகழ்

☆ புகழ், வீரச் செயல்களின் நறுமணம். ✍ சாக்ரடீஸ்

☆ உலகில் வேகமாக உயர்ந்து வருகிறவர்களை மனிதர்கள் மேலாக எண்ணுகிறார்கள். ஆனால், புழுதி, வைக்கோல் கண்டு, இறகு முதலியவைகளைப் போல் எதுவும் அவ்வளவு வேகத்தில் மேலே எழுவதில்லை. ✍ ஹேர்

☆ உலகத்தின் புகழ், காற்றைப் போன்றது. ஒரு சமயம் இந்தப் புறமாக வீசும், பிறகு, அந்தப் புறமாக வீசும். திசை மாறும் பொழுதெல்லாம் அதன் பெயரும் மாறிவிடும். ✍ தாந்தே

☆ ஆசையுள்ளவர்களுக்குப் புகழ், தாகமுள்ளவர்களுக்கு உப்பு நீர் போன்றது -குடிக்கக் குடிக்கத் தாகம் அதிகமாகும். ✍ பெர்ஸ்

☆ புகழை வைத்துத் தகுதியை அளக்க முடியாது. தகுதியை ஓரளவு அறிய முயலலாம். அவ்வளவுதான்; அது தற்செயலாக ஏற்படுவது, மனிதனின் குணத்தை வைத்தல்ல. ✍ கார்லைல்

☆ புகழ் என்பது என்ன? ஜனங்கள் உன்னைத் தெரிந்துகொள்ளும் நன்மை; ஆனால், அவர்களைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது. அவர்களைப்பற்றி உனக்குக் கவலையும் கிடையாது.

✍ ஸ்டானிஸ்லாஸ்

☆ புகழைத் தேடி அலைவதைப் போன்ற சிரமமான வேலை உலகில் வேறில்லை. நீ திட்டம் தயாரிப்பதற்குள்ளேயே வாழ்க்கை முடிந்துவிடுகின்றது. ✍ புருயெர்

☆ நல்ல சீலமுள்ள பெரிய மனிதனுக்கு உலகில் புகழ் உரியது. அவன் நினைவைச் சரித்திரம் போற்றுகின்றது., அது மக்களின் ஒழுக்கத்தை நெறிப்படுத்துகின்றது. அவனுடைய சொற்களும் செயல்களும் மக்களின் வாழ்க்கையில் கலந்து விளங்குகின்றன.

✍ இ. எவரெட்

☆ விரைவிலே புகழ் பெற்றுவிட்டவன் தன் பெயரைக் காப்பாற்றிக் கொள்வது பெரிய பாரந்தான். ✍ வால்டேர்

☆ புகழின் கோயிலில் செல்வம் மிகுந்த மூடர்களுக்கும், கெஞ்சிக் கேட்கும் போக்கிரிகளுக்கும், மனித சமூகத்தை அரிந்து தள்ளும் கொலைகாரர்களுக்கும் இடம் கிடைத்துவிடுகின்றது.

✍ ஸிம்மெர்மன்

☆ இறந்துபோன மனிதனின் இதயத்தின் மேல் வைக்கப்பெறும் மலர், புகழ். ✍ மதர்வெல்

☆ செத்த பிறகுதான் புகழ் வருமென்றால், எனக்கு அதைப்பற்றிய அவசரம் எதுவுமில்லை. ✍ மார்ஷியன்

☆ புகழ் நெருப்பைப் போன்றது; அதை மூட்டிவிட்டால் பிறகு காப்பது எளிது; ஆனால், அதை மூட்டுவது கடினம். ✍ பேக்கன்

☆ இந்த வாழ்க்கையில் அடையும் பேறுகளுள் புகழே முதன்மை யானது; உடல் மண்ணுக்குள் போன பின்பு பெருமையுள்ள பெயர் மட்டும் உயிருடன் வாழ்ந்து வருகின்றது. ✍ ஷில்லர்

☆ மனித சமூகத்தின் நன்மையை நாடி உழைப்பதன் மூலமே உண்மையான, நிலையான புகழை நிறுவ முடியும்.

✍ *சார்லஸ் ஸம்மர்*

☆ புகழுக்குச் சுருக்குவழி மனச்சான்றின்படி நடத்தல்.

ஒரு சமூகத்தின் புகழும், ஒரு சகாப்தத்தின் புகழும் ஒருசில பெரிய மனிதர்களின் வேலையைப் பொறுத்தவை. அவர்களோடு அவைகளும் மறைந்துவிடுகின்றன. ✍ *கிரிம்*

☆ நமது புகழ் என்பது, ஆண்களும் பெண்களும் நம்மைப்பற்றி என்ன நினைக்கின்றனர் என்பது; நம் பண்பு, இறைவனும் தேவர் களும் நம்மைப்பற்றி என்ன நினைக்கின்றனர் என்பது. ✍ *பெயின்*

☆ உனது குணம் சரியாயிருந்தால், உன் புகழும் சரியாயிருக்கும்.

☆ நல்லெண்ணமும் பெயரும் பற்பல செயல்களை வைத்து உண்டாவது. ஆனால், இரண்டும் ஒரே செயலில் போய்விடவும் கூடும். ✍ *ஜெய்ப்ரே*

## புதியன படைத்தல்

☆ புதிதாக ஓர் இயந்திரத்தைக் கண்டுபிடிப்பவன் மனிதனின் ஆற்றலை வளர்ப்பதுடன், மனித சமூகத்தின் நல்வாழ்வையும் பெருக்குகிறான். ✍ *பீச்செர்*

☆ நாம் புதியதைக் கண்டுபிடிக்காவிட்டாலும், இருப்பதையாவது அபிவிருத்தி செய்ய முடியும். ✍ *கோல்டன்*

## புதுமை

☆ மனித சமூகத்தை ஆட்டிவைக்கும் உணர்ச்சிகளுள் புதுமை மோகமே மனத்தை அதிகமாகக் கவர்கின்றது. ✍ [illegible]

☆ புதிய வழக்கங்கள், அவை பரிகசிக்கத்தக்கவையாக இருந்தாலும், அவை எவ்வளவு இழுக்காக இருப்பினும், பின்பற்றப்பெறுகின்றன. ✍ ஷேக்ஸ்பியர்

☆ ஆழ்ந்த ஆராய்ச்சியில்லாத நம் மூளைகளுக்குத் திருப்தி யுண்டாகும்வரை எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பெறும்; பிறகு, பழகிப்போன விஷயங்கள் (தீண்டுவாரில்லாமல்) கிடக்கும். நாம் புதிய விஷயங்களையே நாடிச் செல்வோம். ✍ ஹூகர்

## புத்தகங்கள்

☆ புத்தகங்கள் மனித சமூகத்திற்காகப் பேரறிஞர்கள் விட்டுச் சென்றுள்ள பிதுரார்ஜிதமாகும். அதைத் தலைமுறை தலை முறையாக இனி வரப்போகும் சந்ததியார்களுக்கு அளித்துவர வேண்டும். ✍ அடிஸன்

☆ புத்தகங்கள் காலம் என்னும் கடலின் கரையில் நிறுத்தப் பெற்றுள்ள கலங்கரை விளக்கங்கள். ✍ இ.பி. விப்பிள்

☆ மற்ற மனிதர்களின் உள்ளங்களுடன் கலந்து நான் என்னை இழந்துவிட விரும்புகிறேன். நான் நடமாடாத நேரங்களில், நான் படித்துக்கொண்டேயிருப்பேன். அமர்ந்துகொண்டே சிந்திப்பது என்னால் இயலாது. புத்தகங்கள் எனக்காகச் சிந்திக்கின்றன. ✍ சார்லஸ் லாம்ப்

☆ ஒரு நூல் இதயத்திலிருந்து வெளிவந்திருந்தால், அது மற்ற இதயங்களுக்குள் புகுவதற்கு வழி செய்துகொள்ளும். ஆசிரியருடைய மற்ற வேலைகளெல்லாம் இதைப்போல் அவ்வளவு முக்கியமானவையல்ல. ✍ கார்லைல்

☆ சில புத்தகங்களை உருகி மட்டும் பார்க்க வேண்டும்; சிலவற்றை விழுங்கிவிட வேண்டும்; சிலவற்றை மென்று சீரணித்துக் கொள்ள வேண்டும். ✍ பேக்கன்

உயிருள்ள ஒரு மனிதனைத் தவிர, புத்தகத்தைப்போல ஆச்சரியமானது வேறு எதுவுமில்லை! அது முன்னால் இறந்து போனவர்கள் நமக்களித்துள்ள செய்தி. அந்த ஆன்மாக்களை நாம் பார்த்ததேயில்லை ஒரு வேளை, அவர்கள் ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழ்ந்தவர்களாக இருந்திருக்கக்கூடும் எனினும், அந்தச் சிறு காகிதங்கள் நம்மிடம் பேசுகின்றன, பயமுறுத்துகின்றன, நமக்குக் கற்பிக்கின்றன, ஆறுதலளிக்கின்றன, சகோதரர்களைப் போல நமக்குத் தம் இதயங்களைத் திறந்து காட்டுகின்றன. *— சார்லஸ் கிங்ஸ்லே*

புத்தகங்கள் ஞானிகள்; வீரர்களுடைய இதயங்களை நம் உள்ளத்திற்குப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடிகளாக விளங்கு கின்றன. *— கிப்பன்*

புத்தகங்களை, நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதுபோல் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்; சில நூல்களே போதும்.

என் புத்தகங்கள் என்னை மதுக்கடைகளுக்கும், விளையாட்டிடங்களுக்கும் செல்ல விடாது தடுத்துள்ளன. போப், அடிஸன் முதலியவர்களுடன் பழகியவன் ஷேக்ஸ்பியர், மில்டன் முதலியவர்களின் மௌனமான பேச்சுகளைக் கேட்டவன், அற்பர்களுடனும் தீயவர்களுடனும் கூடியிருக்க விரும்ப மாட்டேன். *— தாமஸ் ஹூட்*

ஐரோப்பாவிலுள்ள மணிமுடிகளையெல்லாம் என்னிடம் அளித்து, என் புத்தகங்களையும் படிப்பையும் விட்டுவிடும்படி கேட்டுக்கொண்டால் நான் அந்த முடிகளை விட்டெறிந்துவிட்டு, என் புத்தகங்களையே போற்றுவேன். *— ஃபெனிலன்*

நாம் பெறும் கருத்துகளின் அறிவைச் செயலில் பயன்படுத்தா விட்டால், நூல்கள் வெறும் பழைய தாள்களேயாம். *— புல்வெர்*

எகிப்திய மன்னர் ஒருவர் தமது நூல் நிலையத்தின் வாயிலில், 'ஆன்மாவின் மருந்துகள்' என்று எழுதியிருந்தார்; அப்படி

மருந்துகளாயிருக்க வேண்டுமானால், நாம் புத்தகங்களை மிகுந்த கவனத்துடன் தேர்ந்தெடுக்க வேண்டும்.

☆ எனக்குக் கொஞ்சம் பணம் கிடைத்தால், நான் புத்தகங்கள் வாங்குகிறேன்; மேலும் பணம் மிச்சமிருந்தால், நான் உணவும் துணிகளும் வாங்குகிறேன். ✍ *எராஸ்மஸ்*

☆ தீய நூல்கள், வெறியளிக்கும் மது வகைகளைப் போன்றவை; அவை உள்ளத்திற்கு உணவளிப்பதுமில்லை, மருந்தளிப்பதுமில்லை. ✍ *டி. எட்வர்ஸ்*

☆ புத்தகங்கள் தெளிவாயும், சுருக்கமாயும் இருக்க வேண்டும். ✍ *பட்லர்*

☆ புத்தகங்கள் இல்லாத வீடு, சாளரங்கள் இல்லாத அறை போன்றது. ✍ *எச். மான்*

☆ உன்னை அதிகமாய்ச் சிந்திக்கச் செய்பவைகளே உனக்கு அதிகமாக உதவக்கூடியவை. ✍ *தியோடோர் பார்க்கர்*

☆ புதிய நூல் ஒன்று வெளிவந்தால், நான் பழைய நூல் ஒன்றைப் படிப்பது வழக்கம். ✍ *ரோஜர்ஸ்*

☆ முப்பது வயதுக்கு முன்னால் புத்தகங்களை விரும்பாதவன், பின்னால் அவைகளைப் படித்துப் புரிந்துகொள்வது கஷ்டம். ✍ *கிளாரண்டன்*

## புன்மையான உணர்ச்சிகள்

☆ காதலுக்கும் காமத்திற்குமுள்ள வேற்றுமை அதிகம்; காதல் நிலைத்திருப்பது; மற்றது ஆவியாகப் போய்விடுவது. அனுபவத்தினால் காதல் வளரும்; காமம் நலிவடையும். காரணம் என்னவென்றால், ஒன்றில் ஆன்மாக்கள் இணைகின்றன; மற்றதில் புலனுணர்ச்சிகளே இணைகின்றன. ✍ *பென்*

புன்மையான உணர்ச்சி பணத்திற்குக் கேடு; ஆளுக்கு எதிரி; மனத்திற்கு விரோதம்; மனச்சாட்சியை அரிப்பது; அறிவுக்குப் பலவீனம்; புலன்களை மயக்குவது; உடல் அனைத்திற்குமே தீயது
*✍ பிளினி*

ஒரு பகைவனுக்கு அன்பு காட்டினால், அவன் உன் நண்பனாவான். ஆனால், புன்மையான உணர்ச்சி அப்படியல்ல. அதற்கு உபகாரம் செய்யச் செய்ய அதன் பகைமை அதிகரிக்கும்.
*✍ ஸா அதி*

## புன்னகை

சிரிக்க முடியாத முகம் நல்லதாயிருக்க முடியாது. *✍ மார்ஷியல்*

சிரிப்பு பகல்; அமைதி இரவு; புன்னகை அந்தி ஒளி. அது அவ்விரண்டுக்கும் நடுவே தவழ்ந்து, அவைகளைவிட மயக்கும் சக்தியுடையது.
*✍ பீச்சேர்*

அன்பு, இன்பம், மகிழ்ச்சி ஆகியவற்றை அணிவது புன்னகை. அவை முகத்தின் சாளரத்தில் ஒளிரும் ஒளி. அதன் மூலம் ஒருத்தி தன் தந்தை, கணவர் அல்லது நண்பருக்கு வரவு கூறி இன்புறுத்துகிறாள்.
*✍ பீச்சேர்*

இயற்கையின் அழகுக்குக் கதிரொளிபோல, பெண்ணின் முகத்திற்கு அழகிய புன்னகை ஏற்றது; அது விகார முகத்திற்கும் அழகூட்டும்.
*✍ லவேட்டர்*

ஒருவர் புன்னகை புரியும் முறையைக்கொண்டு அவர் குணத்தைப்பற்றி ஏதாவது தெரிந்துகொள்ளலாம். சிலர் சிரிப்பதேயில்லை, ஆனால், இளிக்க மட்டும் செய்வார்கள்.
*✍ போவீ*

உரக்கச் சிரித்தல் சாதாரண மக்களின் மகிழ்ச்சியைக் காட்டுவது. அற்ப விஷயங்களிலேயே அவர்களுக்கு ஆனந்தம் வந்து

விடும்; உலகம் தோன்றிய நாள் முதல் உண்மையான புத்தி சாதுரியமோ பெருந்தன்மையோ பெருஞ்சிரிப்பை உண்டாக்குவதில்லை. நாகரிகமுள்ள கனவான் புன்னகையே புரிகிறார். அவர் சிரிக்கும் ஒலியைக் கேட்கவே முடியாது. ✍ *செஸ்டர்ஃபீல்டு*

## பூமி

☆ பூமி தன் ஆயிரக்கணக்கான குரல்களில் ஆண்டவனைத் துதிக்கின்றது. ✍ *காலெரிட்ஜ்*

☆ வானுலகிலிருந்து ஆண்டு வரும் எங்கள் இறைவனின் பாத பீடமாகிய பூமித் தாயே! எங்களுடைய உடை, உயிர், உணவு, வீடு, பெற்றோர், தாதியர் எல்லாம் நீயே அருள்கின்றாய்! ✍ *வாட்ஸ்*

☆ முன்பு உயிரோடில்லாதிருந்த மண் எங்கேயிருக்கின்றது? மண் வெட்டியும் கலப்பையும் மண்ணிலுள்ள நம் முன்னோர்களையே கிளப்புகின்றன. மனிதர்களின் பூதங்களிலிருந்தே நாம் அன்றாட உணவைப் பெறுகிறோம். ✍ *யங்*

☆ பூமியென்ற அரசாங்கத்தின் மீது இறைவனும் இயற்கையும் சேர்ந்து நடிகர்களைக்கொண்டு நிரப்புகின்றனர். ✍ [illegible]

## பெண்

☆ கடவுளுக்கு அடுத்தபடியாக நாம் பெண்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம்; முதலில் நமக்கு வாழ்வளித்தவர்கள் அவர்கள்; பிறகு, அதை வாழத்தக்கதாகவும் அவர்களே செய்கின்றனர். ✍ *போவீ*

☆ பெரிய காரியங்கள் அனைத்திற்கும் தொடக்கத்தில் ஒரு பெண்ணின் தொடர்பு இருக்கும். ✍ *லமார்ட்டைன்*

☆ மனிதர்களுக்குள் இருக்கும் கூடுதலான வேற்றுமை வானத்திற்கும் பூமிக்கும் உள்ளது போன்றது; ஆனால், பெண்களுக்குள்

உள்ள வேற்றுமை வானத்திற்கும் நரகத்திற்கும் உள்ளது போன்றது.
✍ டென்னிஸன்

☆ அழகுள்ள பெண் ஓர் அணியாவாள்; நல்ல பெண் ஒரு கருஹூல மாவாள்.
✍ ஸா அதி

☆ பெண்ணின் பெருமை, அவள் உலகம் தன்னை அறியாம லிருக்கும்படி வாழ்தல். அவளது புகழ், கணவன் தன்னிடம் காட்டும் மரியாதை; அவளுடைய இன்பம், குடும்பம் இன்பமா யிருப்பது.
✍ ரூஸோ

☆ உலகந்தான் பெண்களின் புத்தகம். அவர்கள் என்ன அறிவு பெற்றிருக்கின்றனரோ, அது படிப்பிலிருந்து வந்ததன்று. பொதுவாக உலக அனுபவத்திலிருந்து வந்ததாகும். ✍ ரூஸோ

☆ ஒரு பெண்ணின் முதன்மையான பெருமை, ஆடவர்கள் தன்னைப் பற்றி நன்மையாகவோ தீமையாகவோ பேசாம லிருக்கும்படி நடந்துகொள்வது.
✍ பெரிக்ளிஸ்

☆ ஆடவர்கள் மனத்தின் உள்ளுணர்வால் தெரிந்து கொள்வதைவிடப் பெண்களின் உள்ளுணர்வுகள் சிறந்தவை; ஆராய்ச்சிக்குப் பொருத்தமான காரணங்களில்லாமலே அவர்கள் விரைவில் செய்யும் முடிவுகள், ஆடவர்கள் கவனமாக ஆராய்ந்து செய்யும் முடிவுகளைக்காட்டிலும் மேலானவை.
✍ டபுள்யு. ஐக்மன்

☆ பெண் ஆடவனுக்குக் காட்டக்கூடிய ஆழ்ந்த அன்பு, அவன் தன் கடமையைச் செய்வதற்கு உதவியாக நிற்றல். ✍ முலோக்

☆ நயமாகவும் ஆழமாகவும் இருக்கும்படி பேசுவதில் ஒரு பெண்ணைப் போல் வேறு எவருமில்லை. ✍ விக்டர் ஹியூகோ

☆ பெண்கள் பெரும்பாலும் நம்மை விரும்பி நேசிப்பதில்லை. அவர்கள் ஒரு மனிதனைத் தேர்ந்தெடுப்பது அவனிடம் காதல் கொண்டன்று, அவன் தங்களைக் காதலிப்பது அவர்களுக்கு

மகிழ்ச்சியாயிருப்பதால்தான். உலகப் பொருள்கள் அனைத்திலும் அவர்கள் அன்பைத்தான் அதிகமாய்க் காதலிக்கின்றனர். ஆண்கள் என்று தனியாக அவர்கள் விரும்பக்கூடியவர்கள் சிலரே இருப்பர். ✍ *அல்ஃபோன்ஸேகா*

☆ பெண்கள் எப்பொழுதும் அமிதமான எல்லைகளிலேயே இருப்பர். அவர்கள் மனிதர்களைவிட, ஒன்று, மேம்பட்டவர்களா யிருப்பார்கள் அல்லது தாழ்ந்தவர்களாயிருப்பார்கள். ✍ *புரூயெர்*

☆ பெண், எந்தக் காற்றிலும் அசைந்தாடிக்கொண்டிருக்கும் நாணலைப் போன்றவள். ஆனால், பெரும் புயலிலும் அவள் ஒடிந்து விழமாட்டாள். ✍ *வேட்லி*

☆ உலகம் அனைத்தையும் கட்டிக் காப்பாற்றி, அமுதூட்டி வரும் நூல்கள், கலைகள், கலை மன்றங்கள் யாவும் பெண்களே.

✍ *ஷேக்ஸ்பியர்*

☆ பெண்களைப் பெருமிதம் கொள்ளச் செய்வது, அழகு; அவர்களை மிகவும் பாராட்டும்படி செய்வது, பண்பு; அவர்களைத் தெய்விகமாகத் தோன்றச் செய்வது, அடக்கம்.

✍ *ஷேக்ஸ்பியர்*

☆ பெண்கள் நம்மை ஆட்சி புரிகின்றனர். அவர்கள் மேலும் நிறைவுடையவர்களாக விளங்கும்படி செய்வோம். அவர்கள் எவ்வளவுக்கு அறிவொளியைப் பெறுகின்றனரோ, அவ் வளவுக்கு நாம் அறிவு பெறுவோம். பெண்களின் மனங்களைப் பயிற்சி செய்வதையே ஆடவனின் அறிவு பொறுத்திருக்கின்றது.

✍ *ஷெரிடன்*

☆ மனிதர்கள், பெண்களின் விளையாட்டுக் கருவிகள்; பெண், சைத்தானின் விளையாட்டுக் கருவி. ✍ *விக்டர் ஹியூகோ*

☆ தலைசிறந்த பெண் அநேகமாக மனிதனின் வலிமையைப் பெற்றிருப்பாள்; தலைசிறந்த மனிதன் பெண்ணின் நயமான இனிமையைப் பெற்றிருப்பான். ✍ *திருமதி முலோக்*

மனிதன் தான் தாழ்வடையாமல் பெண்களைத் தாழ்வடையும்படி செய்ய முடியாது; தான் மேலெழாமல் அவர்களை மேல் நிலையடையும்படி செய்ய முடியாது.

*✍ ஏ. மார்ட்டின்*

நல்ல உடை, நடை, பாவனைகளுக்குப் பெண்களுடன் சேர்ந்து வாழ்தல் முக்கியமாகும்.

*✍ கதே*

பெண்ணின் ஒழுக்கத்தில் நம்பிக்கையிருத்தலே குடும்ப இன்பத்தின் அடிப்படையாகும்.

*✍ லாண்டர்*

பெண், உலகத்தில் செய்ய வேண்டியனவெல்லாம், ஒரு மகளாகவும், சகோதரியாகவும், மனைவியாகவும், தாயாகவும் தன் கடமைகளை நிறைவேற்ற வேண்டியதேயாகும்.

*✍ ஸ்டீல்*

மனிதர்களைவிடப் பெண்களுக்கு இதயமும் அதிகம், கற்பனையும் அதிகம்.

*✍ லமார்ட்டைன்*

ஆடவர்களின் ஆராய்ச்சி அறிவுகள் எல்லாம் பெண்களின் ஓர் உணர்ச்சிக்கு ஈடாக மாட்டா.

*✍ வால்டேர்*

மனிதர்கள் பார்வையைப் பெற்றிருக்கின்றனர்; பெண்கள் உள்ளுணர்வைப் பெற்றிருக்கின்றனர்.

*✍ விக்டர் ஹியூகோ*

பெண்களைப்பற்றிய மதிப்பீடே நாகரிகத்தின் சோதனையாகும்.

*✍ கார்ட்டிஸ்*

## பெண் வேட்டல்

ஒரு பெண்ணை மணந்துகொள்ள நாடுவதில், அவளிடம் காட்டும் ஆதரவுகள் பயமுறுத்தும்படி இருக்கக்கூடாது. அவள் புரிந்து கொள்ளாத அளவுக்கு அற்பமாகவும் இருக்கக்கூடாது.

*✍ ஸ்டெர்னே*

மௌனமாக மறுப்பவள் பாதி இசைகிறாள் என்று பொருள்.

*✍ ஒவிட்*

☆ பெண் கேட்பதில் மனிதர்கள் வசந்தகாலமாக (ஏப்ரலாக) இருக்கின்றனர்; திருமணத்தில் பனிக்காலமாக (டிசம்பராக) இருக்கின்றனர்.
✍ ஷேக்ஸ்பியர்

☆ நாவு ஒன்றுள்ள மனிதன், அதைக்கொண்டு ஒரு பெண்ணை அடைய முடியாவிட்டால், அவன் மனிதனே அல்லன்.
✍ ஷேக்ஸ்பியர்

## பெருந்தீனி

☆ உண்பதைத் தவிர வேறு இன்பமேயில்லாதவர்கள் தாங்கள் உயிர் வாழ்வதன் காரணம், அது ஒன்றுதான் என்று கூறலாம்.
✍ ஜூவினல்

☆ சில மனிதர்கள் விருந்துண்ணவே பிறந்தவர்கள், போராடுவதற்காக அன்று. போர்க்களத்திலேகூட ஊக்கமில்லாத அவர்கள் உள்ளங்களில் சாப்பாட்டைப்பற்றியே நினைவிருக்கும்.

☆ சமையலறைதான் அவர்களுடைய ஆலயம்; சமையற்காரனே அவர்களுடைய பூசாரி; உணவுண்ணும் மேசையே அவர்கள் பலி பீடம்; வயிறே அவர்களுடைய கடவுள்.
✍ பக்

☆ பெருந்தீனிதான் நம் குறைபாடுகளுக்கெல்லாம் காரணம்; நம் பிணிகளுக்கெல்லாம் அடிப்படை.
✍ பர்ட்டன்

☆ வயிற்றுக்கு அடிமையாயுள்ளவன் கடவுளைத் தொழுதல் அரிது.
✍ ஸா அதி

## பெருமை

☆ பெருமை, வலிமையாயிருப்பதில் இல்லை. வலிமையைச் சரியாகப் பயன்படுத்துவதில் இருக்கின்றது.

☆ எந்த மனிதனும் உண்மையையே நாடிச் சென்றால், அவன் உண்மையையும் பெருமையையும் சேர்த்துப் பெறுவான்.

✍ ஹொரேஸ் மான்

☆ பெருமை என்பது ஒரு பெரிய உள்ளத்தின் பயனாகும்; அதன் இலட்சியமன்று.

✍ வா. ஆல்ஸ்டன்

☆ தன் வாழ்க்கை தன் சமூகத்திற்கு உரியதென்றும், தனக்கு இறைவன் அருளியவையெல்லாம் மானிட சமூகத்திற்காக அருளியவை என்றும் ஓரளவு உணராத மனிதன் எவனும் உண்மையான பெருமையை அடைந்ததில்லை.

✍ ஃபிலிப்ஸ் புரூக்ஸ்

☆ சிலர், பிறப்பிலேயே பெருமையுடன் வருகின்றனர்; சிலர், பெருமையை அடைகின்றனர், சிலர்மீது பெருமை திணிக்கப் பெறுகின்றது.

✍ ஷேக்ஸ்பியர்

# பெற்றோர்

☆ கடவுளுக்கு அடுத்தபடியாக உங்கள் பெற்றோர்களைப் பேணுங்கள்.

✍ பென்

☆ பெற்றோர்களின் குரல்கள் தெய்வங்களின் குரல்கள். ஏனெனில், அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு இறைவனின் பிரதிநிதிகளாக விளங்குகின்றனர்.

☆ நாம் நம் குழந்தைகளுக்குக் கற்பிப்பதுபற்றிப் பேசுகிறோம். நம் குழந்தைகளும் நமக்குப் போதிக்கின்றன என்பது நமக்குத் தெரியுமா?

✍ திருமதி ஸிகோர்னி

☆ பெற்றோர் சந்தேகிப்பவராயிருந்தால், குழந்தை தந்திரமுள்ளதாக இருக்கும்.

✍ ஹாலிபர்டன்

## பேச்சு

☆ எவரையும கையைப் பிடித்து இழுத்து உன் பேச்சைக் கேட்கும்படி நிறுத்தி வைக்காதே. ஜனங்கள் உன் பேச்சைக் கேட்க விரும்பவில்லையானால். நீ உன் நாவை அடக்கிக் கொண்டு இருப்பதே நலம். ✍ *செஸ்டர்ஃபீல்டு*

☆ அதிகமாய்ப் பேசுபவர்கள் மிகவும் குறைவாய்ச் சிந்திப்பார்கள். ✍ *டிரைடன்*

☆ பேசுபவர்கள் நல்ல செயலாளர்களாக இருப்பதில்லை. ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ அதிகமாய்ப் பேசுதல் செருக்கின் அடையாளம்; சொற்களை அள்ளிக் கொட்டுபவன் செயலில் கருமியாயிருப்பான். ✍ *ஸர் வால்டர் ராலே*

☆ உலகில் கனைக்கிற கழுதையைப் போலவே, கனைக்கிற மனிதர்களும் இருக்கின்றனர்; பொருளில்லாமல் உரக்கக் கத்துவதைக் கனைத்தல் என்றுதானே சொல்ல வேண்டும்! ✍ *எல். எஸ்டியேஞ்ச்*

☆ பெரும் பேச்சாளர்கள் ஓட்டைப் பாத்திரங்களைப் போன்றவர்கள்; அவைகளில் ஊற்றியனவெல்லாம் வெளியே போய்விடும். ✍ *ஸி. ஸிம்மன்ஸ்*

## பேரவா

☆ வறுமையுற்றவர்களுக்குச் சில பொருள்கள் தேவை. ஆடம்பர வாழ்க்கைக்குப் பல பொருள்கள் தேவை. பேரவா கொண்டவர் களுக்கு எல்லாமே தேவை. ✍ *கௌவி*

☆ தங்கம் குவியக் குவியப் பேராசை வளர்ந்துகொண்டேயிருக்கும். ✍ *ஜுவினால்*

☆ புலனுணர்ச்சி ஒழுக்கங்களுக்கு எப்படியோ, அப்படி அறிவுக்கும் இதயத்திற்கும் பேரவா. ✍ *திருமதி ஜேம்ஸன்*

☆ பேரவா என்பது அதிகார ஆசை. எந்த இன்பத்திற்காக ஆசை ஏற்பட்டதோ, அந்த இன்பத்தையும் பலி கொடுத்து, அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சி செய்யப் பெறுகின்றது. ✍ *கோல்டன்*

☆ பேராசையை விட்டுத் தள்ளு; அந்தப் பாவத்தினால் அமரர்கள் வீழ்ச்சியுற்றனர். தன்னைப் படைத்தவரின் சாயலில் அமைந்த மனிதன் மட்டும் அதன் மூலம் வெற்றியடையலாம் என்று எப்படி நம்ப முடியும்? ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ பேரவா சாதாரண மக்களிடமுள்ள தீமையன்று. ✍ *மாண்டெயின்*

☆ ஒரேயடியாக உச்சிக்கு ஏறிவிட வேண்டும் என்ற முயற்சிதான், உலகில் பெருந்துயருக்குக் காரணமாயிருக்கின்றது. ✍ *காபெட்*

☆ பேரவா காதலைப் போன்றது. அது தாமதங்களைத் தாங்காது; போட்டிகளையும் சகிக்காது. ✍ *டென்ஹாம்*

## பேரறிவாளர்

☆ பேரறிவு இடைவிடாத கவனத்தின் மூலம் அமைவதைத் தவிர வேறில்லை. ✍ *ஹெல்விடியஸ்*

☆ பேரறிவு என்பது எனக்குத் தெரியாது; அது உழைப்பும் ஊக்கமுமேயாகும். ✍ *ஹோகார்த்*

☆ பார்வையிலேயே விசேடத் திறமையுடன் பார்க்கும் உயர்ந்த ஆற்றலே பேரறிவு. ✍ *ரஸ்கின்*

☆ பேரறிவாளர் தமக்கு வேண்டிய பாதைகளைத் தாமே அமைத்துக் கொள்வர், தமக்கு வேண்டிய தீபத்தையும் தாமே எடுத்துச் செல்வர். ✍ *வில்மாட்*

☆ பேரறிவாளர் பிறவியிலேயே அப்படியிருப்பவர்; அவர்களைப் போதனை செய்து தயாரிக்க முடியாது. ✍ டிரைடன்

☆ பேரறிவாளனுடைய முதற்கடமையும், கடைசிக் கடமையுமாவது உண்மையில் பற்றுக்கொண்டிருத்தல். ✍ கதே

☆ அறிவைப் பெற்றுக்கொண்டு, அதை அபிவிருத்தி செய்து கொள்வதே பேரறிவாளனின் திறமை. ✍ ஜி. எலிய"

## பேனா

☆ உலகத்தில் இரண்டே சக்திகள் இருக்கின்றன; அவை வாளும் பேனாவும். இறுதியில் பின்னதே முந்தியதை வென்று விடுகின்றது. ✍ நெப்போலியன்

☆ வாள் விரைவாக வேலை செய்ய வேண்டும்; பேனா நின்று நிதானித்தே வேலை செய்ய வேண்டும். ✍ ஜூலியா வார்ட்ஹோ

☆ எனது பழுப்பு நிறமான இறகுப் பேனாதான் இயற்கையின் தலைசிறந்த பரிசு. ✍ பைரன்

☆ வாளைத் தூக்கி எறியுங்கள்; இராஜ்யங்களை வாளில்லாமலே காப்பாற்றலாம்; பேனாவைக் கொண்டுவாருங்கள்! ✍ புல்வெர்

## பொது அறிவு

☆ தெளிவான சாதாரணப் பொது அறிவே வாழ்க்கையில் செல்லுபடியாகும் நாணயமாகும். ✍ யங்

☆ வாணிபத் தொழிலில் வெற்றி பெறுவது நிர்வாக ஆட்சித் திறனால்; ஆட்சித் திறனுக்கு உறுதுணையாயிருப்பது பொது அறிவு

பொது அறிவு என்பது, பொருள்கள் இருக்கிற நிலையில் அவைகளை அப்படியே தெரிந்துகொள்வது. செயல்களை எப்படிச் செய்ய வேண்டுமோ, அப்படியே செய்வதாகும்.

✍ ஸிடு ஸ்டோ

## பொய்மை

உண்மையாயிருக்கத் தைரியம் கொள்ளுங்கள். பிறகு எதற்கும் பொய் சொல்ல வேண்டியிராது. ✍ ஹெர்பெர்ட்

பொய்யின் பயன் யாரும் நம்மை நம்பாமை. நாம் உண்மையைச் சொல்லும் பொழுதும், அதையும் பிறர் நம்பமாட்டார்.

✍ ஸர் வால்டர் ராலே

கோழைகளைத் தவிர வேறு எவரும் பொய் சொல்லுவதில்லை.

✍ மர்ஃபி

ஒரு பொய்யைச் சொல்பவன் எவ்வளவு பெரிய வேலையை மேற்கொள்கிறான் என்பதை உணர்வதில்லை; அந்தப் பொய்யை நிலை நாட்டுவதற்கு அவன் மேலும் இருபது பொய்களை உண்டாக்க வேண்டும். ✍ போப்

உலகில் இவ்வளவு அதிகமாகப் பொய் பரவியிருப்பதற்குக் காரணம், வேண்டுமென்றே; ஆர்வமன்று. உண்மையைப்பற்றிய கவனமின்மைதான் காரணம். ✍ ஜான்ஸன்

எதற்காகவும் நாம் பொய் பேசாதிருக்க வேண்டும். ஒன்று, தீமையில்லாத பொய் என்றும், மற்றொன்று, மனமாரச் சொன்னதன்று என்றும் எண்ண வேண்டாம். அவை அனைத்தையும் வெளியே தள்ளிவிடுங்கள். அவை சாதாரணமாயும் தற்செயலாயும் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அவை புகை படிந்த ஆபாசங்கள் நம் இதயங்களில் அவை ஒட்டியிராமல் சுத்தமாக

வெளியேற்றிவிட வேண்டும். அவைகளுள் எது பெரிது, எது மிகவும் மோசமானது என்று கவலையே வேண்டியதில்லை.

*✍ ரஸ்கின்*

☆ ஒருவன் பொய் சொல்லுவதை ஒரு நண்பன் கண்டுகொண்டு விட்டால், அது நட்புக்கே பெரிய அதிர்ச்சியாகும். அதுமுதல் நம்பிக்கையும் குறைந்து போகும். *✍ ஹாஸ்லிட்*

☆ பாதி உண்மை முழுப் பொய்யாகும். உண்மையைப் பொய்யாக் சோடனை செய்து தவறான முறையில் கூறுவோனே பொய்யர்களுள் இழிவானவன். *✍ இ. எல். மகூன்*

☆ எல்லாவற்றிற்கும் மேலே இதை வைத்துக்கொள்; நீ உனக்கு உண்மையாக நடந்துகொள்; பிறகு இரவைப் பகல் தொடர்வது போல, நீ வேறு எந்த மனிதனுக்கும் பொய்யனாக மாட்டாய்.

*✍ ஷேக்ஸ்பியர்*

☆ பொய்யன் கடவுளிடமும் தைரியமாயிருப்பான்; ஆனால், மனிதர்களிடம் கோழையாகவே இருப்பான். *✍ மாண்டெய்ன்*

☆ பொய்யினால் ஒருவன் அடையும் ஆதாயமெல்லாம் இதுதான்; அவன் உண்மையைச் சொல்லும் போதும் எவரும் நம்பமாட்டார்.

*✍ அரிஸ்டாட்டில்*

☆ ஒருவன் ஒரு பொய்யைச் சொல்லிவிட்டால், அவனுக்கு நல்ல நினைவு இருக்க வேண்டும். *✍ கார்னீலி*

☆ பொய்யர்கள் எல்லா வெட்கத்தையும் விட்டவர்கள். அதனால் எல்லா உண்மைகளையும் கை விட்டவர்கள்.

☆ துருக்கி நாட்டுச் சட்டத்தில் பல விஷயங்கள் எனக்கு உவப்பானவை; அங்கே பிரசித்தமாகப் பொய் சொன்னதாக

நிரூபிக்கப்பெற்றவர்களின் நெற்றியிலே சூடான இரும்புக் கம்பியால் சூடு போடுகிறார்கள். ✍ மாண்டேகு சீமாடி

☆ பொய்யை எங்கே கண்டாலும் மிதித்து அணைத்துவிட வேண்டும். என்னைச் சுற்றி எங்காவது பொய் நடமாடுவதாய்ச் சந்தேகம் ஏற்பட்டால், தொற்று நோய்களுக்குச் செய்வது போல காற்றிலே புகையூட்டி வைப்பேன். ✍ கார்லைல்

☆ பாவத்திற்குப் பல கருவிகளுண்டு; ஆனால், அவை அனைத்திற்கும் பொருந்தக்கூடிய கைப்பிடி பொய்தான். ✍ ஆ. வெ. ஹோம்ஸ்

## பொழுதுபோக்கு

☆ மனிதர்கள் எப்பொழுதும் வேலை செய்துகொண்டேயிருக்க முடியாது. அவர்களுக்கும் பொழுது போக்க வசதி வேண்டும். நல்ல பொழுதுபோக்குகள் கிடைக்காவிட்டால், அவர்கள் தீமையானவைகளில் ஈடுபட நேர்ந்துவிடும். ✍ ஓ.டியூயி

☆ பொழுதுபோக்கு என்பது சோம்பியிருத்தலன்று. உடலின் எந்தப் பகுதி வேலையால் களைத்துப் போயுள்ளதோ, அதை வேறு வேலையில் திருப்பிக் களைப்பைத் தீர்ப்பதாகும்.

☆ பொழுதுபோக்கும் விளையாட்டுகள் ஒழுக்கத்திற்கு உகந்தவை; மெல்லிய காற்று, நெருப்புக்கு உதவுவது போன்றவை அவை. ஆனால், பலமான காற்று நெருப்பை அணைத்துவிடும். ✍ தாமஸ்

☆ அரிவாளுக்குச் சாணை பிடிப்பது போன்றது மனத்திற்குப் பொழுதுபோக்கு; அது இல்லாவிட்டால் மனம் ஊக்கம் குன்றி மழுங்கிப் போகும். ✍ பிஷப் ஹால்

# பொறாமை

☆ பொறாமையின் கண்களுக்குச் சிறு பொருள்களெல்லாம் மிகப் பெரியவைகளாகவும், குள்ளர்கள் பெரிய அசுரர்களாகவும், சந் தேகங்களெல்லாம் உண்மையாகவும் தோன்றும்.

*✍ செர்வான்டிஸ்*

☆ பொறாமை முழுவதையும் ஆரம்பத்திலேயே கழுத்தை நெரித்துவிட வேண்டும். இல்லையெனில், அது வலிமையடைந்து உண்மையை வென்றுவிடும். *✍ டேவனன்ட்*

☆ ஆட்சி புரியும் ஒருவன், தனக்கு அடுத்தாற்போல் பட்டத்திற்குரியவனிடத்தில் எப்பொழுதும் சந்தேகமும், துவேஷமும் கொண்டிருப்பான். *✍ டாஸிடஸ்*

☆ தன் அண்டை வீட்டுக்காரனின் நற்குணத்தைப்பற்றிக் கேள்விப்படும்பொழுது எவன் வருத்தமடைகிறானோ, அவன் அதற்கு மாறான செய்தியைக் கேட்க இன்புறுவான். தங் களுடைய பண்புகளைக் கொண்டு புகழ் பெற முடியாதவர்கள், மற்றவர்களும் தங்கள் நிலைக்குத் தாழ்த்தப்பெற்றால், மகிழ்ச்சியடைவர்.

☆ பொறாமையுள்ளவன் தன் தாழ்ச்சியை எப்பொழுதும் உணர்ந் திருப்பான். *✍ பிளினி*

☆ அந்துப்பூச்சி ஆடையை அரிப்பது போல், அழுக்காறு மனிதனை அரித்துவிடும். *✍ கிரிஸோஸ்டம்*

☆ அடுத்த வீட்டுக்காரன் வெற்றியடைவதில் பொறாமைக்காரன் உடல் மெலிவான். *✍ ஹொரேஸ்*

☆ அழுக்காறு உடையார்க்கு அதுசாலும், ஒன்னார்
வழுக்கியும் கேடு ஈன்பது. *✍ திருவள்ளுவர்*

அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். ✍ திருவள்ளுவர்

# பொறுமை

பொறுத்தல் என்பது நம் விதியையும் வெல்லுதல். ✍ காம்ப்பெல்

பொறுமை கசப்பு; ஆனால், அதன் கனி இனிப்பாயிருக்கும்.
✍ ரூஸோ

பொறுமை, நெஞ்சின் உறுதியைப் போலவே இருப்பதால், அது அதற்குச் சகோதரியாகவோ, மகளாகவோ இருக்க வேண்டும்.
✍ அரிஸ்டாட்டில்

பொறுமை பலவீனத்திற்குக் காப்பாகும். ஆத்திரம் வலிமையை அழிக்கும். ✍ கோல்டன்

பொறுமையுள்ளவனுக்கு அவன் விரும்பியனவெல்லாம் கிடைக்கும். ✍ ஃபிராங்க்லின்

எப்படிக் காலம் கருதிக் காத்திருக்க வேண்டும் என்பதை அறிதலே வெற்றியின் இரகசியம். ✍ டி. மெய்ஸ்டிரி

பொறுமையில்லாதவர் எவ்வளவு எளியராயிருக்கின்றனர்! எந்தப் புண்தான் சிறிது சிறிதாக அல்லாமல் உடனே ஆறிவிடுகின்றது?
✍ ஷேக்ஸ்பியர்

சான்றோருக்குரிய ஆற்றல்கள் இரண்டு. ஒன்று, சகிப்புத் தன்மை, மற்றது, பொறுமை. ✍ எபிக்டெடஸ்

வலிமையும் உணர்ச்சியும் சாதிப்பதைவிடப் பொறுமையும் காலமும் அதிகமாய்ச் சாதித்துவிடும். ✍ லாஃபான்டெயின்

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம், பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். ✍ திருவள்ளுவர்

☆ ஒறுக்கும் மதுகை உரனுடைய யாளன்
பொறுக்கும் பொறையே பொறை. ✍ நாலடியார்

## பொறுமையின்மை

☆ பொறுமையின்மை சிறு குளிரைப் பெரிய ஜுரமாக்கிவிடும்; ஜுரத்தைப் 'பிளேக்' ஆக்கிவிடும்; அச்சத்தை ஏக்கமாக்கிவிடும்; கோபத்தை வெறியாக்கிவிடும்; சோகத்தைப் பெருந்துக்கமாக்கி விடும். ✍ ஜெரிமி டெயிலர்

☆ வயதோ, சோகமோ உதிரத்தை உறிஞ்சுவதைக்காட்டிலும், பொறுமை, பொறுமையின்மை அதிகமாக உறிஞ்சிவிடும். ✍ கிளியான்

## பொன்

☆ மூடனை மறைக்கும் திரை,பொன், அதனால் அவனுடைய குறைகளை உலகம் கண்டுகொள்ள முடியாது. ✍ ஃபெல்ட்ஹாம்

☆ உன் தங்கம் கையிலிருந்தாலும் இருக்கட்டும். அதை இதயத்தில் பதித்துவிட வேண்டாம். ✍ ஃபுல்லர்

☆ தானியேலைப் போலத் தங்கத்தையும் இறைவனையும் சேர்த்து வைத்துக்கொள்ளக்கூடியவர் எத்தனை பேர் இருக்கின்றனர்? ✍ பிஷப் வில்லியம்ஸ்

☆ உரைகல் தங்கத்தைச் சோதிப்பதுபோல், தங்கம் மனிதனைச் சோதிக்கிறது. ✍ சிலோ

## போர்வீரர்

☆ நீர்க்குமிழி போன்ற புகழை நாடிப் போர்வீரன் பீரங்கியின் வாய்க்குச் செல்லுகிறான். ✍ ஷேக்ஸ்பியர்

அறியாமை, வறுமை, செருக்கு ஆகியவற்றால் பலர் போர் வீரராகின்றனர்.
✍ ஸிம்மெர்மன்

# மகிழ்ச்சி

பாடிக்கொண்டே வேலை செய்யும் மனிதனே நமக்கு வேண்டும்!
✍ கார்லைல்

திடமான, ஆரோக்கியமுள்ள மனிதனுக்குக் கன்னங்களில் நிறம் எப்படிச் சிவந்திருக்குமோ, அது போலவே இதயத்திலும் இயற்கையாக மகிழ்ச்சி நிறைந்திருக்கும். எங்கெங்கு வழக்கமாகச் சோகம் படர்ந்துள்ளதோ, அங்கெல்லாம் காற்று கெட்டிருக்க வேண்டும். அல்லது அளவுக்கதிகமாகக் கடுமையான வேலையிருக்க வேண்டும் அல்லது தவறான பழக்க வழக்கங்கள் இருக்க வேண்டும்.
✍ ரஸ்கின்

கவலையற்ற இதயம் நீடித்து வாழும்.
✍ ஷேக்ஸ்பியர்

மகிழ்ச்சி ஆ ரோக்கியம். அதறகு எதிராயுள்ள சோகம், பிணி.
✍ ஹாலிபர்டன்

மகிழ்ச்சியோடு சுமந்தால் எந்தப் பாரமும் குறைவாயிருக்கும்.
✍ ஒவிட்

துறப்பதுதான் இன்பத்தின் இரகசியம்.
✍ ஆண்ட்ரு கார்னீஜி

இன்பமே வாழ்வின் இலட்சியம்.
✍ ஜே.ஜீ. லாஸன்.

படைப்பிலே தலைசிறந்த இன்பமுள்ளவன் மனிதன்தான். அவனுக்கு மேலும் கீழும் உள்ளவை அனைத்தும் விசன முள்ளவை.
✍ அடிஸன்

கவலை நமது சவப்பெட்டியில் ஓர் ஆணியை அறைகின்றது. இன்பமாகச் சிரிக்கும் ஒவ்வொரு சிரிப்பும் ஓர் ஆணியைக் கழற்றுகின்றது.
✍ வால்காட்

☆ அநித்தியமான மக்களுக்கு மகிழ்ச்சியைவிட வேறு என்ன வேண்டும்? மகிழ்ச்சியுள்ள மனிதனே அரசன்.

✍ ஐ.பிக்கர்ஸ்டாஃப்

## மக்களிடம் செல்வாக்கு

☆ உண்மையான செல்வாக்கை நாம் தேடிக்கொண்டு செல்லக் கூடாது. அது நம்மைத் தொடர்ந்து வர வேண்டும்.

✍ மான்ஸ்ஃபீல்ட் பிரபு

☆ வெற்றி வந்தவுடன் பாராட்டும் வருகின்றது; நிலையில்லாத பொது மக்கள், வெள்ளத்தில் மிதந்து செல்லும் துரும்பு போல வெற்றியைத் தொடர்ந்து செல்கின்றனர். ✍ ஃபிராங்க்லின்

## மக்கள்

☆ உலகில் மூன்று வகையான மக்கள் இருக்கின்றனர்: 'செய்ய முடியும்' என்பவர்; 'செய்யமாட்டோம்' என்பவர்; 'செய்ய இயலாது' என்பவர். முதலாமவர், எல்லாவற்றையும் செய்து முடிக்கின்றனர்; இரண்டாமவர், எல்லாவற்றையும் எதிர்க் கின்றனர். மூன்றாமவர் எல்லாவற்றிலும் தோல்வியடைகின்றனர்.

✍ 'எக்லெக்டிக்' பத்திரிகை

☆ நீங்கள் எல்லா மக்களையும் சிறிது காலத்திற்கு ஏமாற்றலாம். ஆனால், எல்லா மக்களையும், எல்லாக் காலத்திலும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. ✍ லிங்கன்

☆ மக்கள் என்ன நிலையிலிருக்கின்றனர் என்பது மிகுதியாக அவர்களுடைய மூதாதையர்களைப் பொறுத்திருக்கிறது. கல்வி. முன் மாதிரிகள், பழக்கங்கள் முதலிய எத்தனையோ விஷயங்களை நீங்கள் காரணங்களாகக் கூறலாம். ஆனால்,

பெரும் அளவுக்கு அவர்களுடைய் இனமே முக்கியமான காரணமாகும்.

✍ மில்ஸ்

## மடமை

☆ சரியான தத்துவங்களிலிருந்து தவறான முடிவுகளைப் பெறுவது மடமை. பைத்தியம் என்பது தவறான தத்துவங்களிலிருந்து சரியான முடிவுகளைப் பெறுவது; இரண்டுக்குமுள்ள வேற்றுமை இதுதான்.

✍ லாக்

☆ மகா ஞானியின் மூளையிலும் ஒரு மூலையில் மடமை தங்கியிருக்கும்.

✍ அரிஸ்டாட்டில்

☆ மூடன் இறுதியில் செய்வதை, அறிவாளி முதலில் செய்கிறான்.

✍ ஸ்பானியப் பழமொழி

☆ ஆறு விஷயங்களைக்கொண்டு அறிவிலியைக் கண்டு கொள்ளலாம்; காரணமில்லாத கோபம்; பயனில்லாத பேச்சு; முன்னேற்றமில்லாத மாறுதல்; பொருத்தமில்லாததைப்பற்றி ஆராய்தல்; அந்நியனை நம்புதல்; பகைவரை நண்பராகக் கருதுதல்.

✍ அரபுப் பழமொழி

## மதிப்பீடு

☆ உண்மையாக மதிப்பிடுவதில் புகழ்வதோ, இகழ்வதோ குறிக்கோ ளன்று, ஆராய்ந்து பாகுபடுத்தி, உறுதியாக நிலைநாட்டி, அறிவோடு எடுத்துக்காட்டி, கண்ணியமான முறையில் தகுதியைக் கூறுவதே மதிப்பிடுதலுக்குரிய கடமைகள்.

✍ ஸிம்ஸன்

☆ அரிஸ்டாட்டில் முதலில் அமைத்த மதிப்பிடும் முறை, சரியான முறையில் மதிப்பீடு செய்வதற்காக அமைத்த அளவுகோலாகும்.

✍ ஜான்ஸன்

☆ பாசாங்கு மலிந்த இந்த உலகிலே, நடக்கும் பாசாங்குகளிலெல்லாம் மதிப்பிடுதல் என்னும் பாசாங்கிலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டுகிறேன்..
*✍ ஸ்டெர்னி*

☆ நல்லதை எடுத்துக்காட்டுவதே விமரிசனத்தின் நியாயமான நோக்கம்.
*✍ போவீ*

## மரணம்

☆ மரணம் இயற்கையானது; மிகவும் அவசியமானது; பிரபஞ்சத்தில் எங்குமுள்ளது; இத்தகையதை இறைவன் மனித சமூகத்திற்குத் தீமையாக அமைத்திருக்கவே முடியாது.
*✍ ஸ்விஃப்ட்*

☆ மரணம் நமக்கு வேண்டியவர் ஒருவர்மீது கை வைக்கும் பொழுதுதான், மரணத்தைப்பற்றி முதன் முதலாக நாம் உணர்ந்து கொள்கிறோம்.
*✍ திருமதி டி ஸ்டேல்*

☆ மனிதர்கள் வாழ்க்கையைத் தாங்கியிருக்க வேண்டும் என்பதற்காகத் தெய்வங்கள் மரணத்தின் இன்பத்தை அவர்கள் உணர முடியாதபடி மறைத்து வைக்கின்றன.
*✍ லூகான்*

☆ ஒருவன் வெற்றி வீரனாகவோ, அரசனாகவோ, நீதிபதியாகவோ வாழ்ந்திருக்கலாம்; ஆனால், அவன் மனிதனாகவே மரிக்க வேண்டும்.
*✍ டேனியல் வெப்ஸ்டர்*

☆ உன்னை மரணம் எங்கும் எதிர்பார்த்திருக்கிறது; ஆதலால், நீ தன்னறிவோடு அதை எங்கும் பார்த்திரு.
*✍ குவார்லெஸ்*

☆ சாக்ரடீஸ் ஒரு தத்துவ ஞானியைப் போல இறந்தார். ஏசு கிறிஸ்து ஒரு தெய்வத்தைப் போல உயிர் நீத்தார்.
*✍ ரூஸோ*

☆ உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.
*✍ திருவள்ளுவர்*

நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு. ✍ *திருவள்ளுவர்*

## மரியாதைகள்

மரியாதை எல்லா மனிதர்களின் அன்பையும் கவரக்கூடிய ஆற்றலுள்ளது; அதில் சொற்பமாயில்லாமல், அதிகமா யிருப்பதே நல்லது. ✍ *பிஷப் ஹார்ன்*

மரியாதையாகப் பேசுவதும் நடப்பதும் செலவில்லாத செல்வங்கள். ✍ *சேர்வாண்டிஸ்*

உன்னை ஒருவர் வணங்கினால், அவனைவிட அதிகமாகப் பணிவோடு நீயும் வணங்கு அல்லது அதே அளவாவது திருப்பிச் செய். ஏனெனில், ஆண்டவன் எல்லா விஷயங்களையும் கவனிக்கிறான். ✍ *குர் ஆன்*

சிறு மரியாதைகள் வாழ்க்கையை இனிமையாக்குகின்றன; பெரிய மரியாதைகள் அதை மிகவும் சிறப்படையச் செய்கின்றன. ✍ *போவீ*

மரியாதை காட்டுதல் முதன்மையாக முக்கியமுள்ள ஒரு கலை. உடலின் அழகும் எழிலும் பார்த்தவுடன எப்படி ஒருவரைக் கவர்ந்து, பிறகு அந்தரங்கத் தோழமை கொள்ள உதவு கின்றனவோ, அதே போன்றது மரியாதையும். ✍ *மாண்டெயின்*

நம்முடைய நடத்தை, நம்மினும் உயர்ந்தோர் தாழ்ந்தோர், நமக்குச் சமமானவர் ஆகிய மூன்று வகையான மக்களிடத்திலும் பொருத்தமாக இருக்கும்படி அமையவேண்டும்; இது நற் பயிற்சியில் முக்கியமான ஒரு விஷயம். ✍ *ஸ்விஃப்ட்*

நற்பயிற்சியில்லாத அறிஞன் தற்பெருமைக்காரனாக இருப்பான். தத்துவ ஞானி குறை சொல்லிக்கொண்டேயிருப்பான். போர் வீரன் வெறும் முரடனாயிருப்பான். அது இல்லாத ஒவ்

வொருவனும் வெறுக்கத்தக்கவனாயிருப்பான்.

✍ செஸ்டர்ஃபீல்டு

☆ மரியாதைக்கு விலையில்லை. ஆனால், அது எல்லாவற்றையும் விலைக்கு வாங்கிவிடுகின்றது. ✍ மாண்டேகு சீமாட்டி

☆ நல்ல பயிற்சியுள்ள மனிதன் எப்பொழுதும் பழகுவதற்கு இனியன். ✍ மாண்டெயின்

☆ நடை, உடை, பாவனைகள் சட்டங்களைவிட வல்லமை உள்ளவை. ✍ ஏ. கார்லைல்

☆ அமைதி, ஆத்திரமோ ஆவேசமோ இல்லாமை ஆகிய இவை நேர்த்தியான பண்புகளைக் காட்டும்; கனவான் ஓசையுண்டாக்க மாட்டான். சீமாட்டி சாந்தமாயிருப்பாள். ✍ எமர்ஸன்

☆ ஒவ்வொருவருடைய உடலுக்கும், புத்திக்கும் தக்கபடி ஒரு நடத்தை அமைந்திருக்கும். நாம் மற்றவருடைய நடத்தையைப் பார்த்து நடக்கத் தொடங்கினல், அது போய்விடும். ✍ ரூஸோ

## மருந்து

☆ மருந்துகளுள் முதன்மையானவை ஓய்வும், உபவாசமும்.

✍ ஃபிராங்க்லின்

☆ (உணவு முதலியவற்றில்) நிதானமும், உடற்பயிற்சியும் இல்லாததற்குப் பதிலாகத்தான் மருந்துகளை உபயோகிக்கிறோம்.

✍ அடிஸன்

☆ தீப்ஸ் நகரில் ஒரு நூல் நிலையத்தின் நிலையில் இப்படி எழுதப்பட்டிருக்கின்றது: ‘ஆன்மாவுக்கு மருந்து’.

✍ டயோடோரஸ் ஸிகியூலஸ்

☆ மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். ✍ திருவள்ளுவர்

# மன உறுதியின்மை

☆ ஊசலாடிக்கொண்டிருக்கும் மனத்தைப் பெற்றிருத்தல் இழிவாகும். ✍ டியூரிபிடிஸ்

☆ முன்னும் போகாமல், பின்னும் போகாமல் நிலையாக நிற்பது சங்கடமான விஷயம்; அது சிலந்தியின் வாழ்க்கையாகும். ✍ ஸ்விஃப்ட்

☆ வாழ்க்கைத் திட்டங்களைப்பற்றி உறுதியின்மையும், அவைகளை இடைவிடாமல் பின்பற்றிச் செல்லாமையும் நம் துயரங்களுக் கெல்லாம் உரிய காரணங்களுள் முதன்மையானவை. ✍ அடிஸன்

☆ இரண்டு வேலைகளுக்காகப் புறப்படும் மனிதனைப் போல, நான் எதில் தொடங்குவது என்று தயங்கி நிற்கிறேன். அதனால் இரண்டையும் கைவிடுகிறேன். ✍ ஷேக்ஸ்பியர்

☆ அடிக்கடி மாறுதலை விரும்பும் மனிதர்கள் மனவலிமை யற்றவர்கள். ஆனால், அவர்கள் கடின இதயம் படைத்தவர்கள். ✍ ரஸ்கின்

☆ எதையும் திடீரெனத் தொடங்கி, எதிலும் நீடித்து நிற்க மாட்டாதவர் பலர். ✍ டிரைடன்

☆ அரைகுறையான வேலைகளை நான் வெறுக்கிறேன். சரியா யிருந்தால், அதைத் தைரியமாய்ச் செய். அது தவறாயிருந்தால், அதைச் செய்யாமல் விடு. ✍ ஜில்பின்

☆ மனிதர்கள் தாங்கள் செய்யாத வேலைகளைப்பற்றி முதலில் முடிவு செய்துகொள்ள வேண்டும். பிறகு, அவர்கள் செய்ய வேண்டியவைகளில் தீவிரமாக இறங்க முடியும். ✍ மென்ஷியஸ்

## மன எழுச்சி

☆ உலகத்தின் வரலாற்றில் பெரிய இயக்கங்களுக்கெல்லாம் காரணம் மன எழுச்சிதான். அது இல்லாமல் பெரிய காரியம் எதையும் ஒரு காலத்தும் சாதிக்க முடிந்ததில்லை. ✍ *எமர்ஸன்*

☆ உற்சாகமுள்ளவனை எதிர்ப்பு தடை செய்வதில்லை, அவனுக்கு அது மேலும் ஊக்கத்தை மூட்டுகின்றது. ✍ *ஷில்லர்*

## மனித சமூகம்

☆ நான் ஒரு மனிதன், மனித சமூக சம்பந்தமான எந்த விஷயத்திலும் எனக்கு அக்கறை உண்டு. ✍ *டெரன்ஸ்*

☆ நமக்குள்ளே இயங்கும் தெய்வத்தன்மை இல்லாவிட்டால், மனித சமூகத்திற்கு என்ன மதிப்பு இருக்கும்? ✍ *பேக்கன்*

☆ மனிதனிடம் அதிக மிருக இயல்பும், சொற்பமான சைத்தானின் இயல்பும் இருப்பது போலவே, அவனிடம் கொஞ்சம் தெய்வத் தன்மையும் இருக்கின்றது. மிருக இயல்பையும் சைத்தான் இயல்பையும் வெல்ல முடியுமே தவிர, இந்தப் பிறவியில் அவைகளை முழுதும் அழித்துவிட முடியாது. ✍ *காலெரிட்ஜ்*

## மனச்சாட்சி

☆ மனிதனின் மனச்சாட்சி தெய்வத்தின் குரல். ✍ *பைரன்*

☆ மனிதன் மனச்சான்றைப் பெற்றிருக்கிறான் என்பதைப் பார்க்கினும், அது அவனைப் பெற்றிருக்கிறது என்பது அதிக உண்மையாகும். ✍ *டோர்னர்*

☆ பரிசுத்தமான மனச்சாட்சி உள்ளவன் அடக்கத்தோடும் அமைதி யோடும் இருப்பான். ✍ *தாமஸ் அகெம்பிஸ்*

☆ ஒருவனுக்குத் தன்னுடைய இதயத்தைக்காட்டிலும் இருளடைந்த சிறை வேறு எது இருக்கின்றது? ஒருவனுக்குத் தன் மனச் சாட்சியைப்பார்க்கினும் கடுமையான சிறைக்காவலன் எவன் இருக்கிறான்? ✍ *ஹாதார்ன்*

பேராசிரியர்
சென்னை-600 00



☆ மனச்சாட்சி ஆன்மாவின் குரல், உணர்ச்சிகள் உடலின் குரல்கள். இவைகளுக்குள் அடிக்கடி முரண்பாடுகள் ஏற்படுவதில் வியப்பில்லை.
*✍ ரூஸோ*

☆ மனச்சாட்சி ஒரு பெரிய பேரேடு. அதில் நமது குற்றங்களெல்லாம் பதியப்பெறுகின்றன. உரிய காலத்தில் நாம் அவைகளை உணர்ந்துகொள்கிறோம்.
*✍ பார்ட்டன்*

☆ நம்முள்ளே தங்கியிருக்கும் மனச்சான்றைப் போல் பயங்கரமாகச் சாட்சி சொல்வோனுமில்லை. அவ்வளவு ஆற்றலுடன் குற்றம் சாட்டுபவனும் இல்லை.
*✍ ஸாஃபோகிளிஸ்*

☆ மனச்சான்று நீதிபதியைப் போல் நம்மைத் தண்டிப்பதற்கு முன்னால், நமக்கு நண்பனைப் போல் எச்சரிக்கை செய்கின்றது.
*✍ ஸ்டானிஸ்லாஸ்*

☆ உன் இதயத்திலுள்ள தெய்விகச் சுடரான மனச்சான்றினை அணைந்துவிடாமல் காத்துக்கொள்.
*✍ வாஷிங்டன்*

☆ கோழைத்தனம், 'அது ஆபத்தில்லையா?' என்று கேட்கும்; சமயோசிதம், 'அதில் பயனுண்டா?' என்று கேட்கும், செருக்கு, 'அதில் புகழுண்டா?' என்று கேட்கும்; ஆனால், மனச்சாட்சி, 'அது நியாயமா?' என்று கேட்கும்.
*✍ புன்ஷான்*

☆ மனச்சான்று ஆட்சி செய்யத் தொடங்கும் பொழுது என் ஆட்சி முடிகின்றது.
*✍ நெப்போலியன்*

☆ மனச்சான்று நம் அனைவரையும் கோழைகளாக்கிவிடுகின்றது.
*✍ ஷேக்ஸ்பியர்*

☆ உண்மையான மகிழ்ச்சியின் அடிப்படை மனச்சான்றில் உள்ளது.
*✍ ஸெனீகா*

☆ நான் போப்பாண்டவருக்கும், அவருடைய திருத்துணைவர்களுக்கும் அஞ்சுவதைவிட என் நெஞ்சுக்கு அதிகம் அஞ்சுகிறேன். என்னுள்ளே ஒரு பெரிய போப்பாண்டவர் இருக்கின்றார். அவரே மனச்சான்று.
*✍ லூதர்*

# மனிதனும் மனிதர்களும்

☆ படைப்பில் மனிதனே முதன்மையான அதிசயம்; அவனுடைய இயல்பைப்பற்றி ஆராய்தல் உலகில் உன்னத ஆராய்ச்சியாகும்.

✍ *கிளாட்ஸ்டன்*

☆ பாதி மண், பாதி தெய்வம், (மனிதன்) மூழ்கவும் முடியாது, பறக்கவும் முடியாது.

✍ *பைரன்*

☆ சமூகத்தால் சீர்திருத்தப்பட்ட மனிதன் எல்லா விலங்குகளிலும் சிறந்தவன், அவன் சட்டமும் நீதியும் இல்லாமல் வாழ்ந்தால், அவனைப்போல் பயங்கரமானது வேறெதுவும் கிடையாது.

✍ *அரிஸ்டாட்டில்*

☆ மனிதன் தானாக நிமிர்ந்து நிற்கவேண்டும். மற்றவர்கள் அவனை அப்படி நிறுத்தி வைக்கக்கூடாது.

✍ *மார்க்க அரேலியஸ்*

☆ உன்னதமான மனிதனுடைய வாழ்க்கைமுறை மூன்று பிரிவாயிருக்கும்; அவன் ஒழுக்கத்தோடு இருப்பதால், கவலையற்றிருப்பான்; அவன் அறிவாளியாயிருப்பதால், அவனுக்குக் குழப்பங்கள் இருக்கமாட்டா; அவன் தைரியமாயிருப்பதால், அச்சம் அண்டாது.

✍ *கன்ஃபூஷியஸ்*

☆ ஒருவன் எப்பொழுதும் வீரனாயிருக்க முடியாது. ஆனால், ஒருவன் எப்பொழுதும் மனிதனாய் இருக்க முடியும்.

✍ *கதே*

☆ நான் என்னை ஒரு மனிதனாக்கிக்கொள்ளத் தீர்மானிக்கிறேன். நான் அதில் வெற்றி பெற்றால், மற்ற எல்லாவற்றிலும் வெற்றி பெற்றுவிடுவேன்.

✍ *கார்ஃபீல்டு*

☆ நம்பிக்கை இழந்து, கௌரவமும் போய்விட்டால், மனிதன் பிணந்தான்.

✍ *விட்டியர்*

☆ சமயம், அரசியல், கல்வி முறை ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒரு சோதனை உண்டு. அது எத்தகைய மனிதனை உருவாக்குகிறது?

✍ *ஏமியல்*

☆ ஒரே மனிதனைக் கடவுள் மனிதர்களாகப் பிரித்துள்ளார், அவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ள வேண்டும் என்பது அவர் நோக்கம்.

✍ *ஸெனீகா*

## மனைவி

உலகில் நாம் அடையக்கூடிய பொருள்களுள் நல்ல மனைவியே தலைசிறந்த பொருள்; தீயவள் மனித வாழ்க்கைக்கு ஒரு சாபத்தீடு.
✍ ஸிகிமோனைட்ஸ்

சுவர்க்கத்தில் நான் என் மனைவியைச் சந்திக்காவிட்டால், எனக்கு அது சுவர்க்கமாகாது.
✍ ஆண்ட்ரூ ஜாக்ஸன்

## மன்னிப்பு

நாம் மன்னிப்பது சொற்பம், மறப்பது அதிகம்.
✍ திருமதி ஸ்வெச்சின்

குற்றம் செய்வது மனித இயல்பு! மன்னிப்பது தெய்விக இயல்பு.
✍ போப்

அவருடைய உலகத்தைப்போல் விரிவாயிருந்தது; ஆனால், பிறர் செய்த ஒரு தீமையின் நினைவுக்கு மட்டும் துளி இடமில்லை.

## முயற்சி

எதுவும் தானாக வருவதில்லை. நல்லது எதுவும் நிச்சயமாக வருவதில்லை. எல்லாவற்றையும் நாமே கொண்டுவர வேண்டும்.
✍ ஸி. பார்ட்டன்

ஒவ்வொரு மனிதனுடைய வேலையும் அவன் உயிரைக் காத்து வருகின்றது.
✍ எமர்சன்

நாம் இடைவிடாமல் நம் புலன்கள், புத்தி, ஒழுக்கமுறை, உடல் ஆகியவை சம்பந்தமான கருவிகளை உபயோகித்துக்கொண்டே இருந்தால்தான், அவை துருப்பிடியாமல் இருக்கும், பயனற்றுப் போகாமல் இருக்கும்.
✍ ஸி. ஸிம்மன்ஸ்

## முனங்குதல்

ஓயாமல் குறை சொல்லி முனங்கிக்கொண்டிருப்பவர்கள் பழக்கத்தினால் அப்படிச் செய்கின்றனர்.
✍ கிரேவ்ஸ்

☆ பிறர் குற்றங்களில் உனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டால், பிறர் நிறைவு களில் உனக்கு வருத்தம் ஏற்படுவது இயல்பு. ✍ லவெட்டர்

## முன்யோசனை

☆ குறைவான முன்யோசனை மூடனின் செயல்; கூடுதலான முன்யோசனை துயரம் நிறைந்தவன் செயல். ✍ ஸெஸில்

☆ சதுரங்க விளையாட்டினைப் போல், வாழ்க்கையிலும் முன் யோசனையே வெல்கின்றது. ✍ பக்ஸ்டன்

☆ அதிதீவிர ஆசையினால் வெற்றி பெறும் காரியங்கள் மிகச் சிலவே. அமைதியான முன்யோசனையினால் வெற்றி பெறுபவை மிகப்பல. ✍ தூசிடைடஸ்

☆ தூரத்திலுள்ளதைப்பற்றிச் சிந்தனை செய்யாத மனிதன், தன் அருகிலேயே சோகம் தங்கியிருப்பதைக் கண்டுகொள்வான். ✍ கன்ஃபூஷியஸ்

☆ மிகவும் அதிகக் கவனமாயிருப்பவன் செய்து முடிப்பது கொஞ்சமாய்த்தானிருக்கும். ✍ ஷில்லர்

☆ நன்றாகவும் கவனமாகவும் செய்யப்பெற்ற காரியங்களைப்பற்றி அஞ்ச வேண்டியதில்லை. ✍ ஷேக்ஸ்பியர்

☆ உன் வாயையும் பணப்பையையும் கவனமாய்த் திற. உன் செல்வத்தையும் புகழையும் பற்றி வெளியே நல்ல மதிப்பிருக்கும். ✍ ஸிம்மர்மன்

## மூடநம்பிக்கை

☆ உலகிலே மிகப்பெரிய சுமையாக விளங்குவது மூட நம்பிக்கைதான். தேவாலயத்தின் சடங்குகள் மட்டுமன்றி கற்பனையாகப் பாவங்களைப்பற்றிய பயங்களும் அதைச் சேர்ந்தவை. ✍ மில்டன்

☆ இழிவான ஆன்மாக்கள் பின்பற்றக்கூடிய மதம் மூட நம்பிக்கை ஒன்றுதான். ✍ ஜோபெர்

☆ குதிரை ஒட்டகத்தைக் கண்டால் அஞ்சி நடுங்காமலிருக்க முடிய வில்லை; இது போலவே, ஒரு குடியானவன் மாமூலான தன் மூட நம்பிக்கைப்படி நடக்காமலிருக்க முடியாது. ✍ ஜியார்ஜ் எலியட்

☆ மூட நம்பிக்கை வாழ்க்கையின் கவிதை. மனிதனுடைய இயற்கையிலேயே அது ஊறிக் கலந்திருக்கின்றது; அதை முற்றிலும் ஒழித்தாயிற்று என்று நாம் கருதும் பொழுது. அது எங்கேனும் பொந்துகளிலும் மூலைகளிலும் மறைந்துகொள் கின்றது; ஆனால், அபாயம் நீங்கிவிட்டதென்று தெரிந்தவுடன் அது மறுபடி வெளியே தலை நீட்டுகின்றது. ✍ கதே

☆ மக்கள்தாம் மூடநம்பிக்கைக்குக் குருமார்கள். எல்லா மூட நம்பிக்கைகளிலும் அறிவாளிகள் மூடர்களைப் பின்பற்று கின்றனர். ✍ பேக்கன்

☆ பலவீனம். பயம், துக்கம், அறியாமை ஆகியவை மூட நம்பிக்கையின் உற்பத்தி ஸ்தானங்கள், ✍ ஹியூம்

## மெய்யறிவு

☆ டெல்ஃபி (ஆலயத்திலுள்ள) அசரீரி. கிரேக்கர்கள் அனைவரிலும் நானே தலைசிறந்த அறிவாளியென்று கூறிற்று. ஏனெனில், கிரேக்கர்கள் அனைவரிலும் நான் ஒருவனே. எனக்கு ஒன்றும் தெரியாது என்பதை அறிந்திருக்கிறேன். ✍ சாக்ரடீஸ்

☆ சுருக்கமான சில சொற்களில் மிகுந்த ஞானம் அடங்கியிருக்கும். ✍ ஸாஃபாகிளிஸ்

☆ அறிவைச் சரியான முறையில் பயன்படுத்துவது மெய்யறிவு. ✍ ஸ்பர்ஜியன்

☆ அறிவாளியின் வாழ்க்கையில் ஒருநாள், மூடனின் முழு வாழ்வுக்கும் ஈடாகும். ✍ அரபுப் பழமொழி

☆ ஞானி, தான் படைக்கப்பெற்றதன் இலட்சியம் என்ன என்பதை முதலாவதாக ஆராய்ந்து அறிந்துகொள்கிறான். பிறகு, இரண்டாவதாக, அதை அடைவதற்குரிய வழியை முடிவு செய்கிறான்.

✍ *வாக்கர்*

☆ மெய்யறிவு பெற்றவர் மூன்று காரியங்களைச் செய்கிறார்: உலகம் தம்மைத் துறக்குமுன் தாம் அதைத் துறந்துவிடுகிறார். தாம் சமாதிக்குள் புகுமுன்பே அதைத் தயாரித்து வைக்கிறார். கடவுளின் முன்னிலையை அடையுமுன்பே அவருக்கு உகந்த செயல்களைச் செய்து வருகிறார்.

☆ தினசரி வாழ்க்கையில் நமது கண்முன்னால் நடப்பதை அறிந்து கொள்வது முக்கியமான அறிவாகும்.

✍ *மில்டன்*

## மை

☆ ஒரு துளி மை, பத்து இலட்சம் பேர்களைச் சிந்தனை செய்யத் தூண்டக்கூடியது.

✍ *பைரன்*

# மொழி

☆ ஒரு கருத்து அணிந்துகொள்ளும் உடை, மொழியாகும்.

✍ *ஜான்ஸன்*

☆ கருத்தைத் தெரிவிக்கும் கருவியாக இருப்பதுடன், மொழி சிந்தனை செய்வதற்கும் உதவியான திறம் படைத்த பெரிய கருவியாகவும் விளங்குகின்றது.

✍ *ஸர். எச்.டேவி*

☆ நம் கருத்துகளை மறைத்துக்கொள்ளவும் சொற்கள் பயன் படுகின்றன.

✍ *வால்டர்*

☆ அந்நிய மொழிகளை அறியாத மனிதன் தன் சொந்த மொழியையும் அறியான்.

✍ *கதே*

☆ பேச்சு என்ற வியாபாரத்தில் தங்க நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையுமே உபயோகியுங்கள்.

✍ *ஜோபர்ட்*

மொழி ஒரு புனிதமான பொருள். அது வாழ்க்கையிலிருந்து வளர்ந்து வருவது. வாழ்க்கையின் வேதனைகள், இன்பங்கள், அதன் தேவைகள், அயர்வுகள் ஆகியவற்றில் அது உருவாகின்றது. ஒவ்வொரு மொழியும் அதைப் பேசி வரும் மக்களுடைய ஆன்மா எழுந்தருளியிருக்கும் ஆலயமாகும்.

*✍ ஆ. வே. ஹோம்ஸ்*

## மௌனம்

அறிவுள்ள மூளைதான் நாவை அடக்கியிருக்கச் செய்யும்.

*✍ ஜே. லூகாஸ்*

மௌனத்திற்கு ஆச்சரியமான எத்தகைய ஆற்றலிருக்கின்றது! உதடுகள் மூடியிருக்கும் பொழுது எத்தனை தீர்மானங்கள் செய்யப்பெறுகின்றன. எத்தனை ஆன்மார்த்திகமான வெற்றிகள் அடையப்பெறுகின்றன; ஆன்மா, இறைவனின் பார்வை தன்மீது விழுவதை அந்தரங்கமாக எவ்வளவு உணர்கின்றது! *✍ எமர்ஸன்*

பேசாத வார்த்தை ஒருபோதும் தீமை விளைவிப்பதில்லை.

*✍ கோஸத்*

மௌனமாயிருக்கத் தெரியாதவனுக்கு நன்றாகப் பேசவும் தெரியாது. *✍ புளூடார்க்*

உடலுக்கு உறக்கமும் ஓய்வும் ஊட்டமும் அளிப்பது போல, உள்ளத்திற்கு உண்மையான மௌனம் ஓய்வளிக்கும். அது சிறந்த ஒரு பண்பாகும். அது தவறுகளை மறைக்கும்; இரகசியங்களைப் பாதுகாக்கும்; தகராறுகளை நீக்கும்; பாவத்தைத் தடுக்கும்.

*✍ பென்*

நான் ஒரு வார்த்தையும் பேசவில்லை; அற்பமான இன்பங்கள், பேசினால்தான் உண்டாகும்; ஆனால் உள்மனத்தின் ஆனந்தம் ஊமையாகவே பிறக்கின்றது. *✍ எச். நீல்*

## யுத்தம்

யுத்தங்களிலே ஒருகாலும் நல்ல யுத்தம் என்பதே கிடையாது. அதே போலத் தீமையான அமைதி என்பதும் கிடையாது.

*✍ ஃபிராங்க்லின்*

☆ தவறானதைத் திருத்துவதற்கு யுத்தம் சிறிதும் ஏற்ற கருவியா யில்லை; அது நஷ்டங்களுக்கு ஈடு பெறுவதற்குப் பதிலாகப் பல மடங்கு நஷ்டங்களைப் பெருக்குகின்றது. ✍ *ஜெஃப்பர்ஸன்*

☆ இராணுவ மயமாக்கும் கொள்கையும், யுத்தமும் குழந்தைத் தனமாக இருக்கின்றன. அதைவிடப் பயங்கரமானவையாகவும் இருக்கின்றன. அவை பழங்கால விஷயங்களாக மறைந்து விட வேண்டும். ✍ *எச். ஜி. வெல்ஸ்*

☆ இரகசியமானாலும் சரி, வெளிப்படையானாலும் சரி, யுத்தம் காட்டுமிராண்டித்தனமான முறையாகும். ✍ *மகாத்மா காந்தி*

☆ மாஷினோ அரண்தான் சீக்ஃபிரீட் அரணுக்கு அவசியத்தை உண்டாக்கியது. ✍ *மகாத்மா காந்தி*

(இரண்டாவது உலகப் போரில் மாஷினோ அரண் பிரான்ஸ் நாட்டின் கீழ்எல்லையில் அமைந்திருந்தது. அதற்குப் போட்டியாக ஜெர்மனி தன் மேல்எல்லையில் சீக்ஃபிரீட் அரணைக் கட்டியது.)

☆ பலாத்காரத்தையே நம்பி உபயோகிப்பவன், செக்கு மாட்டினைப் போல, வட்டமாகச் சுற்றிக்கொண்டேயிருப்பான். ✍ *மகாத்மா காந்தி*

☆ அச்சமே முதன்மையான தீமையென்று நான் கருதுகிறேன். ஏனெனில், அச்சத்திலிருந்து பூசலும், பலாத்காரமும் தோன்று கின்றன. பலாத்காரம் பயத்தின் விளைவு. அது போலவேதான் பொய்யும். ✍ *ஜவஹர்லால் நேரு*

☆ மனிதன் திருந்துவதால் உலக சமாதானம் வரும் என்பதில்லை. ஆனால், புதிய சூழ்நிலைகள், புதிய விஞ்ஞானம், புதிய பொருளாதார அவசியங்கள் ஆகியவை அமைதியை நிலை நாட்டுபவை. ✍ *அனடோல் ஃபிரான்ஸ்*

☆ போர் திருடர்களை உண்டாக்குகின்றது. அமைதி அவர்களைத் தூக்கில் ஏற்றுகின்றது. ✍ *மாக்கிய வில்லி*

☆ யுத்தங்கள் வரும் பொழுது, அவை பொருளுற்பத்தி செய்யும் பெருவாரியான தொழிலாளர் வகுப்பினர்மீது பாய்கின்றன. அவர்களே துயரத்திற்குள்ளாகின்றனர். ✍ *யு. எஸ். கிரான்ட்*

யுத்தம், காட்டுமிராண்டிகளின் தொழில். ✍ நெப்போலியன்

விளையாட்டுக்கான பொம்மைச் சிப்பாய்களையும் ஒழித்துவிட வேண்டும். குழந்தைகள் வளர்ப்பு நிலையத்திலிருந்து முதலில் ஆயுதங்களை அப்புறப்படுத்துவோம்! ✍ டாக்டர் பாலினா லூய்ஸி

யுத்த தளவாடங்களைப் பெருக்க வேண்டுமென்று கூறுவோர்களுக்கு இரக்கப்பட்டு, நாம் அவர்களை மன்னிப்போம். ஏனெனில், அவர்கள் தாங்கள் என்ன செய்கிறோம். என்பதை அறியார்கள்; ✍ ஆண்ட்ரு கார்னீஜி

மூளையால் வேலை செய்யும் அறிவாளி, சமூகத்தில் செய்ய வேண்டிய வேலை ஏதாவது இருந்தால், அது இதுதான்; அவர் பாரபட்சமின்றி, தாமும் உணர்ச்சி வெறி கொள்ளும்படி ஏற்படும் தூண்டுதலை விலக்கிவிட்டு, அமைதியான மனநிலையுடன் இருக்க வேண்டும். போர் நடக்கும் பொழுது, சிக்கனம், பொது சுறுசுறுப்பு, நன்மைக்கு உழைத்தல் போன்ற சாதாரணப் பண்புகள் கூட, போரில் அழிவுவேலைகளைப் பெருக்கி, இருகட்சியினரும் ஒருவரையொருவர் வதைத்துக்கொள்ள அதிக ஆற்றலை உண்டாக்கப் பயன்படுத்தப்பெற்றன. ✍ பெர்ட்ராண்ட் ரஸ்ஸல்

ஒரே ஒரு நல்ல பண்புதான் உளது, அதுதான் போர் வெறி; ஒரே ஒரு கெட்ட பண்புதான் உளது, அதுதான் சாந்தியை விரும்புதல், இந்த நிலைதான் போருக்குத் தேவையானது.✍ ஜி. பெர்னாட்ஷா

போர்கள், போர்களை ஒழிக்க முடியாது என்பது எனக்கு இப்பொழுது தெரியும். ✍ ஹென்றி ஃபோர்டு

ஐந்து விஷயங்களை எதிர்த்துத்தான் மனிதன் போர் செய்ய வேண்டியது அவசியம்; உடலின் பிணிகளையும், மனத்தின் அறியாமையையும், புலன்களின் உணர்ச்சிகளையும், நகரிலுள்ள அரசாங்கத் துவேஷத்தையும், குடும்பங்களிலுள்ள பிணக்குகளையுமே எதிர்க்க வேண்டியிருக்கின்றது. ✍ யாரோ

## வக்கீல்கள்

வக்கீல்கள் நியாயம், அநியாயம் என்றில்லாமல், எல்லா வழக்குகளையும் ஆதரித்துப் பேசவேண்டியிருக்கின்றது.

✍ ஜூனியஸ்

☆ வழக்காடும் எதிரிகள், வல்லமையுடன் போராடுகிறார்கள், ஆனால், உண்பதிலும் பருகுவதிலும் அவர்கள் நண்பர்களைப் போலவே நடக்கின்றனர்.

*✍ ஷேக்ஸ்பியர்*

## வம்பளப்பு

☆ எல்லா மக்களும், தாங்கள் ஒருவரைப்பற்றி ஒருவர் என்ன பேசிக்கொண்டார்கள் என்பதைத் தெரிந்துகொண்டால், உலகிலே நான்கு நண்பர்கள்கூடச் சேர்ந்திருக்க மாட்டார்கள்.

*✍ பாஸ்கல்*

☆ வம்பளப்பு என்பது இரண்டையும் இரண்டையும் சேர்த்து ஐந்தாக்குவது.

☆ வம்பளப்புதான் வதந்திகளுக்கும் அவதூறுகளுக்கும் காரணம்.

*✍ ஃபில்லெட்*

## வழக்கம்

☆ வழக்கம் நம் அனைவரையும் நலிந்து மெலிந்த முதியவர்களாக்கி விடுகின்றது.

*✍ கார்லைல்*

☆ உலகம் காட்டுகிற வழியில், நாம் பின்பற்றிச் செல்கிறோம்.

*✍ செனீகா*

☆ வழக்கம் மூடர்களின் சட்டம். *✍ வான்பிரக்*

☆ மனிதன் விதிக்குத் தலை வணங்குவது போல, வழக்கத்திற்கும் பணிகிறான். மனம், உடல் உரிமை ஆகிய எல்லாவற்றிலும் அதனால் ஆட்சி செய்யப்பெறுகிறான்.

*✍ கிரேப்*

## வள்ளன்மை

☆ வழிப்போக்கரும் ஏழைகளும் இறைவனால் அனுப்பப் பெறுகின்றனர். இவர்களுக்கு நாம் கொடுப்பது இறைவனுக்கே அளிப்பதாகும்.

✍ ஹோமர்

☆ சிக்கனம் நல்லதுதான். அத்துடன் வள்ளன்மையும் சேர்ந்திருக்க வேண்டும். ✍ பென்

☆ ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. ✍ திருவள்ளுவர்

## வறுமை

☆ வறுமை கஷ்டமானதுதான் என்பதை நான் அறிவேன். ஆனால், பத்துச் சந்தர்ப்பங்களுள், ஒன்பதில், ஒரு வாலிபனுக்கு ஏற்படக் கூடிய முதன்மையான நன்மை என்னவென்றால், அவனைக் கப்பலிலிருந்து தண்ணீருள் தள்ளிவிடுவதுதான். அவன் மூழ்கினால் மூழ்கட்டும், தானே நீந்திக் கரையேறினால், ஏறட்டும். ✍ கார்ஃபீல்டு

☆ ஏழைக்கு ஏழைகளைத் தவிர இரங்குவோர் சிலரே. ✍ லாண்டன்

☆ வறுமையால் ஏற்படும் பிணி ஒன்றுண்டு. தேவையினால் அது மனிதனைத் தீமை செய்யத் தூண்டும். ✍ யூரிபிடிஸ்

☆ வறுமை, மனிதனுடைய ஊக்கம், பண்பு எல்லாவற்றையும் பறித்து விடுகின்றது; காலியுள்ள பை நட்டமாக நிற்க முடியாது. ✍ ஃபிராங்க்லின்

☆ கிழிந்த கந்தல் துணிகளின் மூலம் சிறுசிறு கெட்ட பழக்கங்கள் நுழைந்து வந்துவிடுகின்றன; நீண்ட அங்கிகளும், உயர்ந்த உடைகளும் எல்லாவற்றையும் மூடி மறைத்துவிடுகின்றன. ✍ ஷேக்ஸ்பியர்

## வாணிபம்

☆ வாணிபம், எந்தக் காற்றையும் எதிர்த்துச் செல்லும், எந்தப் புயலையும் தாண்டிவிடும். எந்தப் பிரதேசத்திலும் நுழைந்து விடும். ✍ பாங்க்ராப்ட்

☆ விசேஷ அறிவாற்றல்களால் அவன் வெற்றியடையவில்லை. ஆனால், வியாபாரத்திற்கு வேண்டிய அளவு - அதற்கு மேற் போகாத அளவு - திறமை அவனிடம் இருந்தது. ✍ டாஸிடஸ்

# வாழ்க்கை

☆ வாழ்க்கை வேதனையுமில்லை, இன்பமுமில்லை என்பதை நினைவில வைத்துக்கொள்; இது கவனமாக நடக்க வேண்டிய தொழில். அதில் தைரியத்துடனும், தன்னலத்தியாக புத்தியுடனும் இயங்க வேண்டும்.

*✍ டி. டாக்குவில்லி*

☆ வெறுமே வாழ்வது அவசியமில்லை. அதற்கப்பாலும் முன்னேறி நம் பெயரைத் துலங்கச் செய்ய வேண்டும். இது அவசியம்.

*✍ ஜி. டி. அனன்ஸியோ*

☆ ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் ஒரு தேவதைக் கதை. அதை எழுதிய விரல்கள் ஆண்டவனுடையவை.

*✍ ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்ஸன்*

☆ கொஞ்சம் வேலை, கொஞ்சம் உறக்கம், கொஞ்சம் காதல்- எல்லாம் முடிந்துவிடுகின்றன.

*✍ மேரி ராபர்ட்ஸ் ரைன்ஹார்ட்*

☆ ஓர் இலையின் மேலுள்ள பனித்துளிபோல உனது வாழ்க்கை காலத்தின் விளிம்புகளில் நடனமாடிக்கொண்டிருக்கட்டும்.

*✍ ரவீந்திரநாத் தாகூர்*

☆ தனக்குப் பின்னால் பெருமையையும், புகழையும் நிறுத்திவிட்டுச் செல்பவன் இறந்தவனில்லை; ஆனால், உயிரோடிருக்கும் பொழுது பழி சுமந்திருப்பவனே இறந்தவனாவான்.

*✍ டியெக்*

☆ வாழ்க்கையின் இறுதியில் மறுபடி வாழ்க்கை யாத்திரையைத் தொடங்குவதற்கு யார்தான் விரும்புவர்?

*✍ திருமதி மெயின்டெனன்*

☆ நம் வேலை முடிகிறவரை நாம் நித்தியமானவர்களே.

*✍ ஒயிட்ஃபீல்ட்*

☆ நாம் நம் செயல்களில் வாழ்கிறோம், ஆண்டுகளில் அன்று; சிந்தனைகளில் வாழ்கிறோம், மூச்சிடுவதில் அன்று; உணர்ச்சிகளில் வாழ்கிறோம், கடிகாரம் காட்டும் மணிகளில் அன்று. நேரத்தை நாம் இதயத் துடிப்புகளைக்கொண்டு கணக்கிட வேண்டும். எவன் மிக அதிகமாகச் சிந்தனை செய்கிறானோ, தலைசிறந்த செயல்களைச் செய்கிறானோ, அவனே அதிகமாக வாழ்பவனாவான்.

*✍ பெய்லி*

☆ வாழ்க்கையைக் காதலிக்கவும் வேண்டாம், வெறுக்கவும் வேண்டாம்; அது எவ்வளவு காலம் நீண்டிருக்க வேண்டும் அல்லது குறைந்திருக்க வேண்டும் என்பதை இறைவனுக்கு விட்டுவிடுங்கள்.
*✍ மில்டன்*

☆ வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள், அழிவில்லாத வாழ்க்கையை அறிந்துகொள்வதாகும்.
*✍ பென்*

☆ வாழ்க்கையின் இலட்சியம் இறைவனைப் போன்றிருந்தால், இறைவனைப் பின்பற்றும் ஆன்மா அவனைப் போலவே இருக்கும்.
*✍ சாக்ரடீஸ்*

## வாழ்க்கை வரலாறுகள்

☆ மனித சமூகத்திற்கு முதன்மையான ஆசிரியர்கள் பெரிய மனிதர்களின் வாழ்க்கைச் சரிதைகளே.
*✍ ஃபௌலர்*

☆ பழங்காலத்தில் பெரும் புகழ் பெற்று விளங்கியவர்களின் வரலாறுகளை அறியாமலிருப்பது, நம் வாழ்நாள் முழுவதும் குழந்தைகளாக இருப்பது போன்றது.
*✍ புளூடார்க்*

☆ படிப்பவைகளுள் மிகவும் இன்பமானவை, பயன்தரத்தக்கவை வாழ்க்கை வரலாறுகளே.
*✍ வாண்டர்*

## விஞ்ஞானம்

☆ விஞ்ஞான உலகில் பெரிய நோக்கங்களுக்காக, சுயநல ஆசையின்றிச் சிரத்தையுடன் வேலை செய்ததை நான் காண்கிறேன். இந்த முறை, மனிதர்களின் மற்ற முயற்சிகள் அனைத்திலும் பரவும் என்று நான் நம்புகிறேன்.
*✍ எச். ஜி. வெல்ஸ்*

☆ விஞ்ஞானம் முறைப்படுத்தித் தொகுக்கப்பெற்ற அறிவாகும்.
*✍ ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்*

☆ விஞ்ஞானம், பழைய புராணக் கதைகளிலுள்ள அற்புதங்களையும் மிஞ்சிவிடுகின்றது.
*✍ எமர்ஸன்*

☆ மனிதர்கள், விஞ்ஞான முன்னேற்றம் மனித சமூகத்திற்கு ஒரு வரப்பிரசாதமாகவே இருக்குமென்று சில சமயங்களில்

போகின்றனர். இது பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்டிருந்த மயக்கங்களுள் ஒன்று. அறிவு பெருகியுள்ள இந்தக் காலத்தில் இந்தக் கருத்து தள்ளப்பெற வேண்டும். ✍ *பெர்ட்ராண்ட் ரஸ்ஸல்*

## விதி

✤ எல்லா விஷயங்களும் விதியின்படி நடப்பவை. ஆனால், குருடாயுள்ள ஏழை மனிதன் அந்தச் சங்கிலியில் ஒரு பகுதியை மட்டுமே காண முடிகின்றது. அவனுக்கு அருகிலுள்ளதுதானே கண்ணிற்படும்! ஆனால், எல்லாவற்றிற்கும் மேலே சமநிலையில் அமைதியாக நிற்கும் தராசு முனையை அவன் பார்ப்பதில்லை.

✍ *டிரைடன்*

✤ எல்லாம் படைக்கப்பெற்றவை. எல்லாம் முறைப்படி நடைபெறுகின்றன. எனினும், நமது வாழ்நாளில், நிச்சயமாகப் புலப்படாத விதி ஒன்று ஆட்சி புரிகின்றது. ✍ *கதே*

## விவகாரம்

✤ இரண்டு கட்சிகளிலும் பலவீனம் இருப்பது எல்லாச் சண்டைகளிலும் இயற்கைதான். ✍ *வால்டேர்*

✤ சமயச் சண்டையில் சைத்தானுக்குக் கொண்டாட்டம்.

✍ *ஃபான்டெயின்*

✤ இருவர் விவாதம் செய்கையில், ஒருவருக்குக் கோபம் வருமானால், விவகாரத்தைத் தொடராமல் நிறுத்துபவனே அறிவாளியாவான். ✍ *புளூடார்க்*

## விவசாயம்

✤ விவசாயம் தேசத்திற்குச் செல்வங்களைச் சேர்த்துக் கொடுக்கின்றது; அவைகளே தேசத்திற்குச் சொந்தமான செல்வங்களாம்.

✍ *ஜான்ஸன்*

✤ குடியானவர்களே நாகரிகத்திற்கும், செழிப்புக்கும் அடிப்படை அமைத்தவர்கள்.

☆ நிறைய நிலங்கள் இருக்கட்டும். ஆனால், சிலவற்றில் மட்டும் பயிரிடுங்கள்.

## விளம்பரம்

☆ விளம்பரத்திற்கே அவசியமில்லையென்று எண்ணும் வியாபாரம், தொழில் நடத்தவே அவசியமில்லை என்ற நிலைக்கு வந்துவிடும்.
*✍ டி. பிரௌன்*

☆ இன்றைய தொழில் பெருங்கூட்டமான மக்களைக் கவர்ச்சி செய்வதில் இருக்கின்றது.
*✍ ஜி. எஸ். லீ*

☆ வாணிபத்தின் ஜீவநாடி, விளம்பரம்.
*✍ கால்வின் கூலிட்ஜ்*

☆ விளம்பரம் என்பது பொதுமக்களுடன் கொள்ளும் தொடர்பின் சாரமாகும்.
*✍ கர்ட்டிஸ்*

## வினைத்திட்பம்

☆ வெற்றியின் இரகசியம் எடுத்த காரியத்தில் நிலையாக நிற்றல்.
*✍ டிஸ்ரேலி*

☆ உறுதியுள்ளவன், உள்ளத்தில் திடமுள்ளவன்; உலகைத் தனக்கு வேண்டிய முறையில் அமைத்துக்கொள்கிறான்.
*✍ கதே*

☆ தளராத நரம்பு, மாறாத பார்வை, சிதறாத சிந்தனை, தயங்காத குறிக்கோள் - இவைகளே வெற்றிக்குரிய ஆசிரியர்கள்.
*✍ பழைய வாக்கியம்*

☆ ஒரு தோல்வியைக் கண்டு, நீ நிறைவேற்றக் கருதியதைக் கைவிட வேண்டாம்.
*✍ ஷேக்ஸ்பியர்*

☆ நான் வழியைக் கண்டுபிடிப்பேன் அல்லது நானே வழியை உண்டாக்கிக்கொள்வேன்.
*✍ ஸர் பி. ஸிட்னி*

☆ பெரிய காரியங்கள் வல்லமையால் நிறைவேறவில்லை. விடாமுயற்சியாலேயே நிறைவேறியுள்ளன.
*✍ ஜான்ஸன்*

☆ எதிலும் கஷ்டமில்லை. தேடினால் அகப்படும்.
*✍ ஹெர்ரிக்*

☆ வெற்றிக்குரிய நிபந்தனைகள் எளிதானவை. நாம் ஓரளவு கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும்; எப்பொழுதும் நம்பிக்கை கொள்ள வேண்டும்; பின்புறம் திரும்பிப் போய்விடக்கூடாது.
✍ *ஸிம்ஸ்*

☆ பொறுமையோடு இடைவிடாமல் முயற்சி செய்பவனுக்கே மகுடம் சூட்டப்பெறும். ✍ *ஹெர்டர்*

☆ உன்னதமான ஒவ்வொரு வேலையும் முதலில் முடியாததாகவே தோன்றும். ✍ *கார்லைல்*

☆ வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்;
மற்றைய எல்லாம் பிற. ✍ *திருவள்ளுவர்*

☆ கலங்காது கண்ட வினைக்கண் துலங்காது
தூக்கம் கடிந்து செயல். ✍ *திருவள்ளுவர்*

☆ துன்பம் உறவரினும் செய்க, துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. ✍ *திருவள்ளுவர்*

## வீரம்

☆ வீரத்திற்குச் சிறந்த பகுதி, சாதுரியம். ✍ *ஷேக்ஸ்பியர்*

☆ உன் கடமையை எப்பொழுதும் செய்யத் துணிந்திரு; இதுவே உண்மையான வீரத்தின் உச்சநிலை. ✍ *ஸி. ஸிம்மன்ஸ்*

☆ தன்னைத்தான் நம்புதல் வீரத்தின் சாரம். ✍ *எமர்ஸன்*

இரண்டு வீரர்களுள் எதிரிகளை அதிகம் மதிப்பவனே சிறந்தவன். ✍ *பியூமெல்*

☆ மேலே உயர வேண்டும் என்ற ஆசையையும், செருக்கையும் எடுத்துவிடுங்கள். பிறகு, உங்களுடைய வீரர்களும், பக்தர்களும் எங்கே இருக்கின்றனர் என்று பாருங்கள்! ✍ *ஸெனீகா*

☆ ஒரு கொலை செய்தவன் கொலைகாரன்; இலட்சக்கணக்கானவர்களைக் கொலை செய்தவன் வீரன். ✍ *பிஷப் போர்ட்டியஸ்*

☆ விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து. ✍ *திருவள்ளுவர்*

# வெறியாட்டயர்தல்

☆ குடிகாரனாயிருப்பவன் எல்லாத் தீய நடைகளுக்கும் தகுதியானவன். ✍ குவார்லெஸ்

☆ வயது முதிர்ந்து நடக்க வேண்டியதைச் செய்து முடிக்கும்படி, நமது உலகத்தில், மரணம் மது வெறியை அனுப்பியிருக்கின்றது ✍ யங்

☆ எதுவும் மிதமிஞ்சினால் தீது. ஆனால், குடிவெறி எல்லாவற்றிலும் தீது. ✍ பென்

☆ குடிவெறியைப் போல், எல்லாப் படைகளும் சேர்ந்து மனித சங்கத்தினருள் அத்தனை பேர்களை அழித்ததில்லை; அத்தனை சொத்துகளைப் பாழாக்கியதில்லை. ✍ பேக்கன்

☆ மதுவும் இளமையும் நெருப்பின் மேல் நெருப்பாகும். ✍ ஃபீல்டிங்

☆ திராட்சை ரசம் கையை நடுங்கச்செய்யும், கண்ணில் நீர் வரச் செய்யும், இரவில் அமைதிக்குறைவை உண்டாக்கும், கெட்ட கனவுகளைத் தோற்றுவிக்கும், காலையில் மூச்சுக் காற்றை நாறச் செய்யும், எல்லா விஷயங்களையும் அறவே மறக்கவும் செய்யும் ✍ பிளினி

☆ கடலில் மூழ்கியவர்களைக்காட்டிலும் மதுவில் மூழ்கியவர்கள் அதிகம். ✍ பப்ளியஸ் ஸைரஸ்

# வெற்றி

☆ எளிதாயுள்ள வெற்றிகள் மதிப்பற்றவை. கடுமையான போராட்டத்தினால் வருபவைகளே மதிப்புயர்ந்த வெற்றிகள். ✍ பீச்சொர்

☆ கடவுளின் புன்னகையே வெற்றி. ✍ விட்டியர்

☆ வெற்றியை வெகுதூரம் தொடர்ந்து செல்ல வேண்டாம். எதிரியைப் புறமுதுகு காட்டி ஓடும்படி செய்ததே சிறந்த வெற்றி தான். ஓடுகிறவனை, இறுதியான உறுதியுடன் திரும்பி நின்று

எதிர்க்கும்படி விரட்ட வேண்டாம். அதனால் உனக்குத் தீங்கு நேரிடும்.

✍ ஹெர்பெர்ட்

## வேதங்கள்

☆ தர்ம ஸ்தானங்கள் பதினான்கில் அங்கம் ஆறு; உபாங்கம் நான்கு, வேதம் நான்கு. தமிழில் மிகவும் பிரசித்தமான நீதி சாஸ்திரமாகிய குறள் தமிழ் வேதம் என்று சொல்லப்படுகிறது.

✍ காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரியார்

☆ சில பேர், 'வேதத்தை நம்ப முடியுமா? அதற்கு ஒரு யுக்தி சொல்லுங்கள்' என்று கேட்கிறார்கள். யுக்திக்கு எட்டுமானால், அதை வேதம் சொல்லுவானேன்? யுக்திக்கு எட்டாததைச் சொல்லத்தான் வேதம் இருக்கிறது.

✍ காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராசாரியார்

☆ எதை ருசுவினால் நிரூபிக்க முடியாதோ, எங்கே புத்தி எட்டவில்லையோ, அதற்காகத்தான் வேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்திரியங்களுக்கு அகப்படாததை விளக்குவது வேதம்.

✍ காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரியார்

## வேலை

☆ எனக்கு வேலையில் பிரியம்; அது என்னைக் கவர்ந்துவிடுகின்றது. நான் அமர்ந்துகொண்டு மணிக்கணக்காக வேலை செய்வதைப் பார்த்துக்கொண்டேயிருப்பேன்.

✍ ஜே.கே. ஜெரோம்

☆ மனித சமூகத்திற்கு உண்மையாக நன்மை செய்ய வேண்டுமென்று ஒருவன் விரும்பினால், அவன் மனிதர்களை அவர்களுடைய வேலையின் மூலமாகவே அணுகவேண்டும்.

✍ ஹென்றி ஃபோர்ட்

நிலையான கருத்துடன் இருத்தல் என்பது என்னுடைய இலட்சிய வாக்கியம். முதலில் யோக்கியதை, பிறகு சுறுசுறுப்பு. பிறகு நிலையான கருத்துக்கொள்ளல். *✍ ஆண்ட்ரூ கார்னிஜி*

எனக்கு அன்பும் வேலையும் கொடுங்கள் - இந்த இரண்டும் போதும். *✍ வில்லியம் மாரிஸ்*

மனிதன் ஒரு தொழிலாளி. அவன் அப்படியில்லையானால், அவன் எதுவுமில்லாதவன். *✍ ஜோஸஃப் கான்ராட்*

முதலாளிகளால் தொழிலாளி நசுக்கப்படாமலிருக்கவும் தொழிலாளரால் மூலதனம் போட்டவர்களுக்கு இடையூறில்லாமலிருக்கவும், தொழிலாளரே தொழிலாளரை அடக்காமலும், முதலாளிகளே முதலாளிகளை நசுக்காமலும் இருக்கும் நிலையை உண்டாக்க வேண்டுமென்ற முறையில், நாம் வேலை செய்து கொண்டிருக்கிறோம். *✍ ஜான் டி ராக்ஃபெல்லர்*

## வைகறை

காலையில் அதிக நேரம் படுக்கையில் படுத்திருக்கும் எவரும், பெருமையோ புகழோ பெற்றதை நான் கண்டதில்லை.

*✍ ஸ்விஃப்ட்*

பெரிய வேலைகளை நிறைவேற்ற வேண்டியவர்கள் அதிகாலையில் எழுந்திருக்கவேண்டும். தூக்கத்தில் பற்று வைக்க வேண்டாம். வைத்தால், வறுமை வந்துவிடும். *✍ எம். ஹென்றி*

ஒவ்வொரு நாள் இரவிலும் மறுநாள் காலையில் விரைவாக எழுந்திருக்கவேண்டுமென்று நான் மனத்தில் உறுதி கொள்வேன். ஆனால், ஒவ்வொரு நாள் காலையிலும், நான் உடலைக் கட்டிலிலேயே சாய்த்துக்கொண்டிருப்பேன்.

அதிகாலையில் வீசும் மென்காற்றை அனுபவித்தவர்களுக்கு, ஒரு நாளில் மிக இனிய நேரம் அதுவே என்பதும், உற்சாகமாக வேலை செய்யக்கூடிய நேரம் என்பதும் தெரியும். ஆனால், பொதுவாக அந்த நேரத்தைப் படுக்கையிலே கிடந்து வீணாக்கு

கிறோம்; இயற்கையின் நோக்கம் நாம் அந்த நேரத்தில் மிகுந்த பயனடைய வேண்டும் என்பது.
✍ ஸதே

☆ ஒரு மனிதன் தினந்தோறும் ஒரே நேரத்தில் இரவில் படுக்கச் செல்வதாக வைத்துக்கொண்டால், காலையில் ஐந்து மணிக்கு எழுவதிலும், ஏழு மணிக்கு எழுவதிலும் உள்ள வேற்றுமையால், நாற்பது ஆண்டுகளில், சுமார் பத்து ஆண்டுகள் மனிதன் வாழ்க்கையில் கூடுதலாகும்.
✍ டாட்ரிட்ஜ்

☆ கதிரவன் உதயமாகு முன்னால் எழுந்துவிடுதல் நலம், இத்தகைய பழக்கங்கள் ஆரோக்கியத்திற்கும், செல்வத்திற்கும், அறிவு விருத்திக்கும் நல்லவை.
✍ அரிஸ்டாட்டில்

☆ அதிகாலையில் குளித்தல் பொன்மயமான ஒரு பழக்கம்.
✍ ஃபிராங்க்ளின்

☆ வைகறையில் எழுந்திராதவர்களுள் சிலரே நீண்ட காலம் வாழ்ந்துள்ளனர். அவர்களுள்ளும் சிலரே பிரசித்தியாக வாழ்ந் திருப்பவர்.
✍ ஜே. டாட்

☆ உன் கட்டிலின் திரைகளிலும் அறையின் சுவர்களிலும் இதை எழுதி வைத்தல் நலமென்று நான் கருதுகிறேன்; 'அதிகாலையில் எழுந்திராவிட்டால், நீ எதிலும் முன்னேற மாட்டாய்!'
✍ சாதாம் பிரபு

☆ ஒருவன் கட்டிலில் புரண்டுகொண்டிருக்கும் நேரமே வெளியே சென்றுகொண்டிருக்க வேண்டிய நேரம்.
- வெல்லிங்டன்

P-320
CPL595718
அலுவலகம்
1 மார் 2015
பெறப்பட்டது